
# பொழிவு

க. சட்டநாதன்



# பொழிவு

க.சட்டநாதன்

ஜீவநதி வெளியீடு

பொழிவு (சிறுகதைகள்)/ க. சட்டநாதன் / முதற்பதிப்பு: வைகாசி 2016/ ©க.சட்டநாதன்/ அட்டைப்பட வடிவமைப்பு: க.பரணீதரன் / வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய் / பக்கம்: 177/ விலை: 300.00/ அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

ஜீவநதி வெளியீடு – 60

Pozhivu (a collection of Short Stories) / K. Saddanathan/ First Edition: May 2016/ ©K.Saddanathan/ Cover Designed by K.Bharaneetharan/ Published by Jeevanathy, Kalai aham, Alvai / Pages: 177/Price: 300.00/ Printed at Baranee Printers, Nelliady

ISBN: 978-955-4676-42-8

திருஅக்காவுக்கும்
தவமக்காவுக்கும்

## நன்றி

- தி. செல்வமனோகரன்
- க.பரணீதரன்
- வீரகேசரி
- ஜீவநதி
- கலைமுகம்
- எதுவரை இணையத்தளம்
- மல்லிகை
- மகுடம்
- நங்கூரம்
- பரணீ அச்சகம்

- பொழிவு
- நனைந்த நினைவுகள்
- சிறிசுகள்
- அழுத்தம்
- நாணயம்
- தெரிந்தும் தெரியாமலும்
- வெந்து தணிந்தவை
- தவிப்பு
- மீறல்கள்
- சடங்கு
- அவரும் அவர்களும்
- அவள் நீரின் நிறம்

## பதிப்புரை

ஜீவநதியின் 60 ஆவது வெளியீடாக ஈழத்தின் மூத்த எழுத்தாளர் க. சட்டநாதன் அவர்களின் பொழிவு சிறுகதைத் தொகுதி வெளிவருகின்றது. க. சட்டநாதன் ஈழத்து சிறுகதை வரலாற்றில் முக்கியமான ஆளுமையாகத் திகிழ்கின்றார். மாற்றம், உலா, சட்டநாதன் கதைகள், புதியவர்கள், முக்கூடல் என தரமான ஐந்து சிறுகதைத்தொகுதிகளை இதுவரை இவர் வெளியிட்டுள்ளார். இத்தொகுப்புகள் பல பரிசில்களைப் பெற்றுள்ளன. பெண்மை, காதல், அன்போடு கூடிய கணவன்- மனைவி உறவு, பாலியல், சிறுவர்களின் குழந்தைப்பருவ இன்ப நாட்கள், சாதியம் சார்ந்த விடயங்கள் எனப் பலதை உள்ளடக்கித் தனது வாலாயமான மொழியில், வாசகர் தம் மனதைக் கவரும் விதத்தில், இத்தொகுதிக் கான கதைகளை இவர் படைத்துள்ளார். விஞ்ஞான ஆசிரியரான க. சட்டநாதனின் பல கதைகள் வாசகர்களை காந்தம் போல ஈர்க்கும் தன்மை வாய்ந்தவை. இத்தொகுப்பில் உள்ள பல கதைகளில் அத்தன்மை காணப்படுவது கண்கூடு. அமைதியும் தன்னடக்கமும் நட்புப்பாராட்டும் இயல்பும் கைவரப்பெற்ற எழுத்தாளர் க. சட்டநாதனின் இத்தொகுப்பு ஜீவநதியின் வாசகர் மனதில் இடம்பிடிக்கும் என நம்புகின்றோம். நூலாசிரியர் தொடர்ந்தும் சிறுகதைகள், கவிதைகள், நாவல்கள் படைத்து ஈழத்து இலக்கிய உலகிற்கு வளம் சேர்க்க வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

க.பரணீதரன்

## யதார்த்த உலகினில் உலவும் ஆத்மா

எனக்கு மிகவும் பிடித்த ஈழத்துத் தமிழ் புனைகதையாளர்களுள் திரு. க. சட்டநாதனும் ஒருவர். 'பொழிவு' அவரது ஆறாவது சிறுகதைத்தொகுதியாக வெளிவருகிறது. இந்நூலுக்கு முன்னுரை எழுதுமாறு என்னைக் கேட்டமை அவர் எனக்களித்த கௌரவமாகக் கருதுகிறேன்.

ஒற்றைப் பரிமாணமுடைய படைப்புகள், குறித்த வரையறைகளை உடையனவாய் தட்டைத்தன்மை வாய்ந்தவையாய் விளங்குவன. நல்லதொரு கலைப்படைப்பு, தனக்கேயான பல்பரிமாணங்களைக் கொண்டதாய் அமையும். சட்டநாதனுடைய புனைவுகளும் அவ்வாறே. அவை சிறந்த கலைப்படைப்புக்குரிய புனைவுத்திறனும் புனைவுத் தர்க்கமும் தனக்கேயான புனைவு வெளியும் மொழியும் உடையன.

இவரைப்போலவே இவரது புனைவுகளும் நுண்ணுணர்வும், மென்மையும் உடையவை. பெண்கள், குழந்தைகள் - அவர்களின் உலகம், காதல், காமம், சாதி எனப் பல தளங்களில் இயங்குபவை. இவரது புனைவுமொழி தெளிவும் இறுக்கமும் எளிமையும் தனக்கேயான தனித்தன்மையும் உடையதாய் இருக்கும். சிறுகதையின் அமைப்பும் அவ்வாறே. கருத்தியல் தளத்தில் இப்புனைவுகள் வாழ்வின் மீதான ஈடுபாடு, சுகிப்பு, தனது நிலம், பண்பாடு, சக மனிதர்கள் என நேரிய தன்மை வாய்ந்த யதார்த்தப் படைப்புக்களாகத் திகழ்கின்றன. வாழ்வில் செய்யும் தவறுகளும் இழப்புகளும் பிரிவுகளும் இன்பவனுபவங்களுமே இவரது கலையாக்கங்களின் ஆதார சுருதிகள். இத்தொகுதியிலுள்ள சிறுகதைகளிலும் இவற்றை நாம் அவதானிக்க முடிகிறது.

பொழிவு, சிறுசுகள், தவிப்பு, அவள் நீரின் நிறம் முதலான கதைகள் குழந்தைகளின் மனதை, அவர்களின் கபடமற்ற உலகைப் படம் பிடித்துக்

காட்டுகின்றன. சாதியத்தை முன் வைக்கின்ற சடங்கு எனும் கதை கூட, ரகு என்ற குழந்தையின் பேதமற்ற உலகை, எவ்வித எதிர்பார்ப்புமற்ற அன்பை எம்முன்னே விரித்து நிற்கிறது. அவரும் அவர்களும், நனைந்த நினைவுகள் எனும் இரு சிறுகதைகளும் காதல் மற்றும் காமத் தேடலுடைய ஆணின் மனம் அவனது திருமணம் அதன் பின் முன்னாட்காதலிகளைச் சந்தித்தல் எனக் கட்டமைக்கப் பட்டுள்ளன. முன்னாட்காதலிகளை ஆண்கள் சந்திக்கும் போது அதனை அவர்களின் மனைவிமார் எதிர்கொள்ளும் விதம் ஜெயகாந்தன், ஜானகிராமனின் பெண்களையும் விஞ்சி நிற்கிறது.

மீறல்கள், அவரும் அவர்களும் போன்ற கதைகள் திருமணத்திற்கு முன்னைய பாலியல் தொடர்புகள் பற்றிப் பேசுகின்றது. ஆண்களின் அதிகார, ஆதிக்க மனோநிலையையும் எவ்வாறு ஒரு பெண் விபசாரத்திற்கு உட்படுத்தப் படுகிறாள் என்பதையும் நாணயம் எனும் கதை சிறப்பாகப் பிரதிபலிக்கிறது. காதலின் மகத்துவத்தைத் தெரிந்தும் தெரியாமலும் எனும் கதை முன்மொழிகிறது. பருவ வயதடைந்த சிறுவர்களின் உடல், உளத்தேடல்களை வெந்து தணிந்தவை கதையூடாக ஆசிரியர் முன்வைக்கிறார். அழுத்தம் கதை தந்தை மகனுக்கிடை யிலான அன்பையும் தன்னம்பிக்கையற்ற இளந்தலைமுறையின் மனதையும் அதனடியான அழுத்தத்தையும் வெளிப்படுத்துகின்றது.

இப்பன்னிரு கதைகளும் பெண்கள், குழந்தைகள், காதல், பாலியல், அன்பு, பருவ வயதினர் படும்பாடு, சாதி என்பவற்றை உளப்பகுப்பாய்வு செய்வதோடு சமூக அக்கறையோடும் பொறுப்புணர்வோடும் அவற்றைச் சிறுகதைக்கான அழகியலோடு முன்வைக்கின்றன. சட்டநாதனின் படைப்புலகம் மகத்தானது தான்.

இவரின் நண்பர்களைப் போல எனக்கும் 'இவர் ஒரு நாவலாவது எழுதலாமே' என்ற எண்ணமுண்டு. எழுதுவார் என நம்புவோம். ஈழத்துத் தமிழ் புனைகதை வரலாற்றில் என்றைக்கும் திரு.க. சட்டநாதனுக்குத் தனியிடமுண்டு. வாழ்த்துக்கள்.

திருநெல்வேலி
18.05.2016

தி.செல்வமனோகரன்

## பொழிவு

அம்மாவுடன் மேற்குத் திண்ணையில் படுத்துக்கிடந்தவன், மழைச் சாரல்பட்டதும் விழிப்புக் கொண்டான். முதல் மழை. மழை தாரையாய் இறங்கியபோது, முற்றத்து மண் மணத்தது. முன்வாசற் பக்கமாய்ப் படர்ந்து கிடந்த பிச்சியின் பூவாசமும் சேர்ந்து மணத்தது. மனசு முட்ட முட்ட அவ்வாசனையை வாங்கிக் கொண்டவன். படி இறங்கி, தாவாரப் பக்கமாக வந்தான்.

மழை அவ்வளவு உரப்பாக இல்லை; ஆனாலும் பெய்தது. சற்றுப் பலமாக இருந்ததால் சாரல் அடித்தது. முகத்தில் திவலை திவலையாக நீர்பட்டு வழிந்தது. முகத்தைத் துடைத்தவன், தாவாரச் சரிவில் இறங்கினான். கூரையில் இருந்து நீர் வடிவதைக் கண்டான். வழியும் நீரை, மிகுந்த குதூகலத்துடன் கைகளில் ஏந்தி, வாயில் விட்டுப் பார்த்தான். நீர் கரித்தது. 'ஏன் நீர் கைக்கிறது...? கூரையின் அழுக்கு, நீருடன் கரைந்து வருவதாலா...?' முகம் சுளித்தவன், நாக்கில் காறலாய்ப் படிந்துவிட்ட உவரைப் பற்களால் அராவித் துப்பினான்.

மழைத்தூறல் நின்றபாடாய்த் தெரியவில்லை. முற்றத்தில் இறங்கியவன், எலுமிச்சை மரத்தைக் கடந்து, கிணறுவரை வந்தான். அதை எட்டிப் பார்த்தான். அடிக்கிணற்றில், பட்டைக் குண்டில் மட்டும் நீர் பளபளத்தது.

'ஏன்... ஏன் நீர் ஊறேல்லை... மழை நல்லாப் பெய்தா ஊறும்.

மழை போதாது. அதுதான்...!'

தன்னைத்தானே தேற்றிக் கொண்டான்.

மாட்டுக் கொட்டிலில், பூச்சிப் பசு படுத்தபடி அசை போட்டுக் கொண்டிருந்தது. இவன் நெருங்கி வந்ததும் பசு எழுந்து சலம் அடித்தது. விட்டை விட்டையாக எருப்போட்டது. எருப்போடும் போது, பசுவின் குதவாய் விரிந்து சுருங்குவதை அவன் வேடிக்கை பார்த்தான்.

சின்னச் சிரிப்புடன் – பசுவுக்குக் கிட்டவாக வந்தவன், அதன் மடியில் கைவைத்து அளைந்தான். விடைத்து வந்த முலைக்காம்பு களின் ஸ்பரிசம் அவனுக்கு இதமாய் இருந்தது. முலைக்காம்பை அழுத்தி இழுத்த போது, பால் அவனது முகத்தில் பீச்சியடித்தது. உதட்டோரத்தில் பட்ட பாலைச் சுவைத்தபடி எழுந்து கொண்டான்.

தூரத்தில் படுத்துக்கிடந்த கன்று, கட்டியிருந்த கயிற்றை உன்னி உன்னிப் பார்த்தபடி இருந்தது. 'கண்டு பாவம். அவிட்டு விடுவமா...? அவிட்டு விட்டால் அம்மா அடிப்பா...!' என நினைத்துக் கொண்டான்.

நடந்து வந்தவன், சீமாலைக் கடந்து, படலை வழியாக முன் வயலுக்கு வந்தான். வயலில் மூலைக்கையில் சிறிது வெள்ளம் நுரைத்தபடி கிடந்தது. நீரைக் கால்களால் எத்திப் பார்த்தான். எத்தும் அளவுக்கு வயலில் நீர் சேரவில்லை.

கிணத்தடிப் பக்கம் வந்தவன், அம்மாவுடன் முகம் அலம்பிக் கொண்டான். அம்மா பூப் போட்டுச் சூரியனை வணங்கினாள். இவனும் வணங்கினான். கிழக்கே அடிவானில் பென்னம் பெரிய மாக்குளோப் தக்காளிப் பழம் போல, சூரியக்கோளம். கண் எடுக்காமல் அதனையே பார்த்தபடி நின்றான்.

"என்ன விடுப்பு...?" குழைந்த அம்மா அவனது ஈரமுகத்தைத் தனது தலைப்புச்சேலையால் துடைத்து விட்டாள்.

அம்மாவுடன் இழுபட்டவன், "மழை விட்டிட்டுது..." என்று கவலையுடன் முனகினான்.

"இல்லை அப்பு...! இனிமேல்தான் நல்லாப் பெய்யும்... மழை காலம் தொடங்கியிட்டுது..."

அம்மா விபூதி பூசிக்கொண்டு, செம்புடன், பால் கறக்கக் கொட்டில் பக்கம் போனாள். இவன் தனது ஏழாம் வகுப்புப் பால பாடத்தை எடுத்து உரக்கப் படித்தான். கிரிசாம்பாளின் கதை. அந்தக் கதையை அவன் திரும்பத் திரும்ப வாசித்து மனசில் வாங்கிக் கொண்டான்.

•

புரட்டாசி மாதக் கடைக்கூறு. வகுப்பில் மாதாந்த மதிப்பீடு நடந்து கொண்டிருந்தது. பரீட்சையில் கவனம் கொள்ளாது, வெளியே பெய்யும் மழையையே அவன் பார்த்தபடி இருந்தான்.

"ரகு என்ன பிராக்கு..." கனகசபை வாத்தியாரின் குரல் கேட்டதும் லேசான நடுக்கத்துடன் பார்த்தான்.

"கேள்விகளுக்குப் பதில் எழுது ராசா...!"

ராசா என்ற அவரது விழிப்பில் மலர்ந்து போனவன், கேட்கப்பட்ட கேள்விகளைச் சரியாகப் புரிந்து கொண்டவனாய், விடைகளைக் கடகட என எழுதினான். எழுதியதும் அப்பியாசக் கொப்பியை வாத்தியாருடைய மேசையில் வைத்தான். கொப்பியைப் புரட்டிப் பார்த்த வாத்தியார் அவனைப் பார்த்துத் திருப்தியாகச் சிரித்தார். அது அவனுக்குச் சந்தோஷத்தைத் தந்தது. இருக்கையை விட்டு எழுந்தவன், தனது வலது கையின் சுட்டு விரலை, தனியாக உயர்த்திக் காட்டினான்.

"என்ன ஒண்டுக்கா...? மழைதூறுதடா..."

"தொப்பி இருக்கு ஸேர்!" வெளியே சத்தமேதும் வராமல் வாய்க்குள் முணுமுணுத்தவன், வெளியே ஓடினான்.

மழையென்றால் அவனுக்கு எல்லாமே மறந்துவிடுகிறது. வசியப்பட்ட பேய் மாதிரி பிரீதியும் பரபரப்பும் அவனுக்கு வந்து விடுகிறது. முற்பிறப்பில் இவன்... இவன் மழைக் கண்ணியாக இருந்திருப்பானோ? மழைத்தூறலைக் கண்டதும் ஸ்பரிசித்ததும் அவனது உடல்மொழி அந்தப் பறவையின் புளகத்தைத் தானே காட்டுகிறது.

தொப்பி கையில் இருந்த போதும் – பூவாய் உதிரும் மழையில் நனைந்த படி, பாடசாலை வளவின் தெற்குத் தொங்கலில் உள்ள

மலசலகூடத்துக்கு வந்தான். வந்த காரியம் ஆனதும், பாடசாலையின் தெற்கு மதிலுக்கும் வடக்கு மதிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் மூன்று முறை ஓடினான். அந்த ஓட்டமெல்லாம் எதிர்வர உள்ள இல்ல விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்வதற்கான அவனது பயிற்சியா என்ன...? இல்லை, எல்லாமே மழையில் நனைந்து கொள்வதற்கான அவனது மனம் ஒப்பிய ஏற்பாடுதான்.

லேசான களைப்பு அவனைத் தொட்டது. வகுப்பறையை நோக்கி நடந்தான். ‘இதென்ன கூத்து...’ என்று மனது கேட்டுக் கொண்டாலும் உடலில் திகைந்த பூரிப்பு அவனது துள்ளலில் தெரிந்தது.

வேகமாக வகுப்பறையை நோக்கி நடந்தவன், திடீரெனக் குனிந்து கொண்டான். மழையில் சிலிர்த்துக் கிடந்த புற்தரையில் ஏதோ புதையலைக் கண்டு கொண்டதான பரபரப்பு அவனில் தொற்றிக் கொண்டது. புற்தரையில், காற்சட்டையில் அழுக்குப் படாதவாகில் உட்கார்ந்து கொண்டான். கண்களில் திரட்சி கொண்ட பரவசம் முழுவதையும் வழிய விட்டபடிக்கு, அந்த அதிசயமான பூச்சியைப் பார்த்தான். அது புளியங்கொட்டையின் பாதி அளவு இருந்தது. அந்த அசையும் அழகு, சிவப்பு வெல்வெற் துண்டின் துகள் போலத் தெரிந்தது. கண்கள் மட்டும் சிறிய கறுப்புப் புள்ளிகளாய். கால்களும் சிவப்புக்கோடுகளாய். பூச்சியை மெதுவாகக் கையில் ஏந்திக் கொண்டவன், வகுப்பறைக்கு வந்தான்.

கைகளைப் பொத்தியபடி வந்த அவனிடம் மிகுந்த இரகசியப் பேணுகை இருந்தது.

வகுப்பறைக்கு வந்ததும் தனது அப்பியாசக் கொப்பியிலிருந்து ஒரு ஒற்றையை உன்னி எடுத்தான். அதனை ஒரு சிறிய பை போல மடித்தவன், அதனுள் பூச்சியை விட்டு, பக்கத்தில் இருந்த ரவியிடம் தந்தான்.

“பாரடா...! இந்தப்பூச்சி எவ்வளவு வடிவு...”

பேப்பர் மடிப்பினுள் இருந்த பூச்சி, வகுப்பறை முழுவதும் உலா வந்தது. இறுதியாக அவனது மச்சாள் மதி தான் பார்த்தாள். அவள் பூச்சியைப் பார்த்த போது அவளது கண்களில் ஒளிர்ந்த

பரவசத்தை இவன் ரசித்தான்.

இவனுக்குக் கிட்டவாக வந்த மதி அந்தப் பேப்பரை இவனிடம் தந்து, "என்ன பூச்சியடா..?" என்று கேட்டாள்.

"தெரியேல்லை...!"

"என்ன... எல்லாப் பயிற்சியளும் செய்து முடிஞ்சுதா...?" கனகர்தான் கேட்டார். இவன் அருகாக வந்தவர், "என்ன ரகு வகுப்பு முழுவதும் குசுகுசுப்பாய்க் கிடக்குது, எல்லாம் உன்ரை வேலை தானா...?"

'.........'

மௌனியாக இருந்த அவனது கையிலுள்ள பேப்பரை வாங்கிப் பார்த்தார். அவருக்கு மகிழ்ச்சி தாள முடியவில்லை. மிகுந்த ஆரவாரத்துடன், "இது... இது தம்பளப் பூச்சியடா... பாவமாயிருக்கு..." என்று கூவியவர், படியிறங்கி, அப்பூச்சியைத் தாவாரத்தில் விட்டார்.

"தம்பளப்பூச்சியா...?"

"இல்லை ரகு...! தம்பலப்பூச்சி மருவித் தம்பளப்பூச்சி யாயிட்டுது." ஆசிரியதோரணை அவரில் தொற்றிக் கொள்ள, அவர் இவனைப் பார்த்துக் கூறினார்:

"தம்பலம் என்றால் வெற்றிலைச்சாறு. ஆதி சக்தி சிவனோடு இருக்கேக்கை... அடைப்பக்காரனின் கைப்பக்குவத்துடன் அவள் மடித்துத் தந்த வெற்றிலைச் செல்லத்தை அவர் சுவைத்தார். வாயில் ஊறிய வெற்றிலைச் சாற்றைப் பக்கம் பார்த்து உமிழ்ந்தார். அந்தத் துப்பல்தான் இந்த அழகான தம்பலப்பூச்சியாக மாறியிருக்கு."

"ஊரெல்லாம் பூச்சியள் ஒடித்திரியுது... அப்ப சிவன் ஊரெல்லாமா அசிங்கமாத் துப்புவார்..."

கூறிய ரகு, 'இது கடவுள் குற்றமாய் விடுமோ...' என நாக்கைக் கடித்துக் கொண்டான்.

வகுப்பறை அமைதியாக இருந்தது. இது சுத்தப் பொய், என்பது போல மாணவர்கள் ஆசிரியரைப் பார்த்தார்கள்.

"இல்லை... இதெல்லாம் ஒரு நம்பிக்கை தான்... இதை நாங்கள் நம்ப வேணும்..."

தம்பலப்பூச்சியை நினைத்ததும் ரகுவுக்கு உடல் சிலிர்த்துக்

கொண்டது. சக்தியும் சிவனும் அவனுக்குப் பக்கத்தில் இருப்பதான ஒரு நினைப்பு. இன்னும் தொகை தொகையாக, தம்பலப்பூச்சிகளும் அவனைச் சுற்றி ஊர்வது போல... அத்துடன் மதியும் இவனது வலதுகையைப் பற்றிய படி...

பாடசாலை மணி அடித்தது. நினைவுகள் கலைய, விளையாட்டு மைதானம்வரை ஓடிச் சென்ற ரகு - அங்கு கொட்டிக் கிடந்த தம்பலப் பூச்சிகளில் சிலதை எடுத்துத் தனது புத்தகப் பையினுள் பக்குவமாக வைத்துக் கொண்டான்.

'இதையெல்லாம் அம்மாவுக்குக் காட்ட வேணும்...'

அமைதியடையாதவனாய், வீடு நோக்கி நடக்க ஆரம்பித் தான். அவனது நடையில் ஒரு வேகம் இருந்தது.

•

அந்தப் பெயர் தெரியாத பறவையின் மூர்க்கமும் கூர்மை யும் மிகுந்த குரலின் அதிர்வில் அவன் விழித்துக் கொண்டான். அந்தக் குருவியைத் தொடர்ந்து குயில்களின் கார்வை. அந்தச் சங்கீதச் சமாவில் காகங்களின் ஹரஹரப் பிரியாவும் சேர்ந்து கொண்டது. இன்னும் குக்குறுப்பான், தேன் சிட்டு, கொண்டைக் கிளாத்தியின் குரல்களும் கேட்டன.

"இது மைனாவா..?"

"ம்" சொன்ன அம்மா தொடர்ந்தாள்:

"அட... கிளி கூடக் கிர் கிர்" என்று ஆரம்பித்துச் சற்று அடர்த்தியாகக் குரல் கொடுக்குது."

"ஓம் அம்மா..."

"இதென்னகுருவி...? வாலாட்டியின்ரை சத்தமா...?"

"இல்ல. இது ஆள்க்காட்டி..."

"இது...?"

"ப்பூ... இது கூடத் தெரியேல்லையாம்மா உனக்கு... கரிக்குருவி!" திடீரெனத் தகரத்தில் மழை பொழிவது போல எல்லாப் பட்சிகளும் சேர்த்து குரல் எழுப்பின. அவ்வோசை திரட்சி கொண்டு, ஜலதரங்கத்தின் இசைப் பிணிப்பாக இறுகி ஓய்ந்தது.

"எல்லாச் சத்தமும் நிண்டு போச்சுது..." கூறிய ரகு வெளியே

வந்து பார்த்தான். மழை சிறுதூறலாய்ப் பெய்ய ஆரம்பித்திருந்தது.

"கார்த்திகை மாத மழை விடாது. தொடர்ந்து பெய்யும்..." என்றாள் அம்மா.

"நல்லாப் பெய்யுமா...?" என்று கேட்ட ரகு, வடகீழ் வானத்தைப்பார்த்தான். தூரத்தில், சுந்தர மாமாவின் பனங் கூடலுக்கு மேலாகத் திரண்டு கருமை கொண்ட மேகம் காற்றின் மூச்சிரைப்பு ஏதுமில்லாமல் கொட்டிக் கொண்டிருப்பது தெரிந்தது. திடீரென வீசிய காற்றுடன் ஓடி வந்த மழை, வடக்கு வயல்களைத் தழுவியபடி பெய்தது. குடலை தள்ளி நின்ற நெற்பயிர்கள், நிறை சூலிகளாய்த் தலை அசைத்து அழகு சிந்தின. வயற் பக்கமிருந்து வந்த மழை, வீட்டு முற்றத்துக்கு வந்தபோது இவன் குதூகலனாய்த் துள்ளிக் குதித்தான். காற்றுடன் வந்த மழையின் சாரல் பட்டதும் இவனது உடல் நடுங்கியது. அந்தக் குளிரும் நடுக்கமும் அவனுக்கு அப்பொழுது மிகவும் பிடித்திருந்தது.

சனிக்கிழமை தொடங்கிய மழை, ஞாயிற்றுக்கிழமையும் தொடர்ந்து பெய்தது. வானம் பொத்துக் கொண்டது போலக் கொட்டோ கொட்டென்று கொட்டியது. திங்கள் காலை லேசான உலர்காற்று வீசிய பொழுது, சிறிது வெளிப்புக் காட்டியது.

ஊரெல்லாம் ஒரு சுற்றுச்சுற்றி வெள்ளம் பார்க்கவேண்டும் போலிருந்தது ரகுவுக்கு. 'மதியைக் கூட்டிக் கொண்டு போவமா...? சே... வேண்டாம். அவ வரமாட்டா... தனியப் போவம்...'

நினைவுகளில் மிதந்தவன், முற்றத்தில் இறங்கி அதன் சொதசொதப்பில் சொக்கிப்போய் நின்றான்.

வெள்ள நீர் குஞ்சி வீட்டிலிருந்து வழிந்து வீட்டுமுற்றத்தால் ஓடிக்கொண்டிருந்தது. ஓடிவரும் நீருடன் அரியல் மீன் குஞ்சுகள்! இன்னும், தொகையாக வெள்ளிப் பளபளப்புடன் கச்சல் மாங்கன் சள்ளைகள்! மீன்குஞ்சுகளைக் கைகளில் ஏந்தி அவற்றுடன் ரசனை சிந்த விளையாடினான்.

ஐயாவைக் காணவில்லை. அம்மா மட்டும் மாட்டுக் கொட்டில் பக்கம் ஏதோ செய்து கொண்டிருந்தாள்.

படலையைத் திறந்து, முன்வயல் பக்கம் வந்தான்.

வயல்களை நிமிர்ந்து பார்த்தவன், திகைத்து நின்றான். தாவாடிப் பள்ளம் முழுவதும் வெள்ளக் காடாய் இருந்தது. வயல் வரம்புகளை மேவி வெள்ளம் பாய்ந்து கொண்டிருந்தது. மாமா வீட்டுப் பக்கமாகப் போய், கை ஒழுங்கையில் இறங்கினான். றோட்டுக் கரைக்கு வந்தவன், அரசடி மதவை நெருங்கி எட்டிப் பார்த்தான். மதவால் நீர் பேரோசையுடன் நவக்கைக் குளத்தில் பாய்ந்தது. நவக்கைக் குளம், நவக்கை வயற்பரப்பு என்று எல்லாமே நீரினால் மூடப்பட்டிருந்தது. விதானையார் வீட்டுத் தோட்டம் எந்த நிமிஷமும் நீரில் மூழ்கி விடுமாப்போலச்சிறுமண் திட்டாகத் தெரிந்தது.

சிறு கீறலாய்-நீரில் மூழ்கி-கோடு மாதிரித் தெரிந்த நவக்கைக் குளக்கட்டின் வழி நடந்து கிழக்குப் பக்கமாக வந்தான். குளக்கட்டுக்கு அருகாக எருக்கிலைச் செடிகள் சடைத்துக் கிடந்தன. இவனது அரவம் - முன்னாலிருந்த செடியில் ஓர் அசைவை ஏற்படுத்தியது. ஏதோ வெள்ளிக் கம்பிபோல நெளிவது தெரிந்தது.

'என்ன... என்ன பாம்பா...?' அவன் பயந்து நடுங்கினான். பாம்பு படம் விரித்துத் தன்னை அடையாளம் காட்டியது. 'நாகமா...?' பதட்டத்துடன் திரும்பியவன், குளக்கட்டில் சறுக்கி விழுந்தான். சுதாரித்துக் கொண்டு எழுந்தவன், 'பட்டவேம்பா... என்னைக் காப்பாற்றடா...!' என்று தனது இஷ்ட தெய்வத்தை மனதில் இருத்திக் கொண்டான். குளக்கட்டால் மெதுவாக நடந்து, வீதி வரை வந்தான். மில்லடி ஒழுங்கையில் இறங்கியதும் அஞ்ஞாத் தோட்டம் தெரிந்தது. தோட்டத்தில் ஐயா நின்றார். அவர் நாத்துமேடைக்குப் பந்தல் போட்டுக் கொண்டிருந்தார். அவரது கண்ணிற் படாமல் நொழுந்தியவன், தோட்டத்தின் மேற்குப் பக்கமாக வந்தான். அஞ்ஞாக் குளத்தை எட்டிப் பார்த்தான். தோட்ட வரம்பின் உயரத்துக்கு, குளத்து நீர் தளதளத்தபடி இருந்தது.

மூந்தாய்க்குளம், ஆரவயல், சிலுந்தா இன்னும் முடிந்தால் கண்ணா மடை என்று எல்லாவற்றையும் சுற்றிப் பார்க்கும் தவிப்பு அவனுக்கு இருந்தது. ஆனால், எதுவுமே இப்போதைக்கு வேண்டாமென்றும் இருந்தது. பள்ளிக்கூடம் போய் வந்த பின்னர்,

பார்த்துக் கொள்ளலாம் என நினைத்துக் கொண்டான்.

அஞ்ஞாத் தோட்டக் கட்டால் நடந்து வந்தவன், கட்டின் சரிவில் கொட்டிக் கிடந்த மக்கிக் கல்லில் சறுக்கி விழுந்தான். விழுந்த வேகத்திலேயே நீரில் மூழ்கியவன், சில கணங்களில் மேலே மிதந்தான். “ஐயா...!” என்ற அவனது அவலக்குரல் அந்தத் திக்கு முழுவதும் அப்பொழுது அதிர்ந்து பரவியது. மீளவும் நீரில் மூழ்குவதான உணர்வு அவனுக்கு. உணர்வு சழிந்த நிலையில், குளத்தின் அடியாழத்தை நோக்கி அவன் போய்க்கொண்டிருந்தான்.

குளிர்ந்த காற்றுப்பட்டு லேசாய் மலர்ச்சி அடைந்தவன், ஐயாவின் தோளில் தலை சாய்த்துப்படுத்துக் கிடப்பதை உணர்ந்தான். அவரது தொடுகையும் ஸ்பரிசமும் அவனுக்கு அப்பொழுது மிகுந்த பாதுகாப்பு உணர்வைத் தந்தது.

குஞ்சி வீட்டு வயல் வரம்பால் நடந்து வந்த ஐயாவின் குரல் கேட்டு, அம்மா அவர்களை நோக்கி விரைவாக வந்து கொண்டிருந்தாள். அவளுக்குப் பின்னால், அவனது பிரியை மதியும் ஓடி வருவது அவனுக்குத் தெரிந்தது.

•

நங்கூரம் - 2012

## நனைந்த நினைவுகள்

அவர்கள் வந்த போது ராகுலன் உள்ளே ஏதோ வேலையாக இருந்தான். அவர்களைக் கண்டதும் முகம் மலர்ந்த தேவி, உள்ளே கேட்குமாப் போல அவனுக்குக் குரல் கொடுத்தாள்.

ஹோலில் சிவம், ஈசன், தாஸ், தருமர், பலத்தார் என்று பலர் இருந்தார்கள். அவர்களுடன் அவனது தேவி அநுசரணையாகப் பேசிக்கொண்டிருந்தாள்.

"ஏதோ இலந்தை வனப் பிள்ளையார் கோயில் திருவிழா விஷயமாம்..."

கூறிய தேவி, அடுக்களைப் பக்கமாக நகர்ந்தாள்.

அவனைக் கண்டதும் சிவம் தான் முதலில் கதைத்தார்:

"புதுப்பணம் வந்ததாலை... வரதனுக்குக் கண்மண் தெரியேல்லை. ஊரே கூடிச் செய்த திருவிழாவை... இந்த வருஷம் தனியொருவனாகத் தானே செய்ய விரும்பிறான். வடுவா... புறம்போக்கு!"

"உங்களின்ரை மச்சான்... என்ரை ஒண்டவிட்ட தம்பி, அவனைப் போய் வடுவா... புறம்போக்கெண் டெல்லாம்..."

"ஏசிறது பிழைதான்... எண்டாலும் ஊரொழுங்கு ஒண்டு இருக்கெல்லா...? அதுக்குக் கட்டுப்படாமல், தான்தோன்றியா நடக்கிறது சரியா...?"

"தாவாடிப் பக்கம் வந்து, அவனோடை நானே கதைச்சுப்

பாக்கிறன்."

"உது விசர்வேலை... அந்த மசிர், ஊரிலை எவனையும் மதிக்கிறேல்லை. நீங்க வந்து அலைய வேணுமா ராசா...!"

நாலு வார்த்தை பேசினாலும் அதில் இரண்டு சொல்லாவது தூஷணையாகச் சிவத்தாருடைய வாயிலிருந்து உதிரும் என்பது அவனுக்குத் தெரியும்.

"இல்ல..." என்று அவன் இழுக்க.

"என்ன இல்ல... பொல்ல... உவன் கோயில் முதலாளி வேலாயுதமும் அவனோடை இப்ப நல்ல ஒட்டு. பணமெண்டால் பல்லிளிக்கிற பயலவன். திருவிழாவை வரதனிடமே கொடுக்க ஆயத்தங்கள் வேற செய்திட்டான். படிக்காசு அதிதெண்டு வாங்கியாச்சாம்..."

"அப்ப அதுக்கு..."

"அதுக்குத்தான் உங்கட கையொப்பத்தைப் போட்டு ஊறாத்துறைப் பொலிஸில ஸ்ரே ஓடர் வாங்கியிருக்கிறம்...!"

"கள்ளக் கையெழுத்துப்போட்டா...? எல்லாமே பிழை பிழையா நடக்குது...!"

"பிழை என்ன பிழை... ஸ்ரே ஓடர் கிடைச்சிட்டுது, அது தான் முக்கியம்."

"தில்லு முல்லுச் சிவம் எண்டு உங்களைச் சொல்லிறது முழுக்க முழுக்க உண்மை. குறுக்கு வழியில தான் உங்க புத்தி எப்பயும் பாயுமெண்டு இஞ்ச எல்லாருக்கும் தெரியும்."

"இல்லையடாப்பா..! காரியம் நடக்கவேணும். அது தான்..."

"சரி... இப்ப நான் என்ன செய்ய வேணும்."

"திருவிழா உங்கட பேரில இருக்கிறதால, ஊர் பொது நன்மை கருதி... இந்தத் தேர்த்திருவிழாவை நாம நடத்திற மாதிரிக் காளாஞ்சு வாங்க வேணும்."

தருமர், சிவத்தாரை இடைவெட்டிப் பேசினார்.

"அப்ப ஸ்ரே ஓடர்..."

"அது பாட்டில கிடக்கட்டும் எண்டு வேலாயுதம் சொல்லி றான். எதுக்கும் நாம அதைத் திரும்பப் பெற வேணும்."

இது தாஸ்.

"திருவிழா எப்ப...?"

"ஆவணி பதினேழில கொடியேத்தம், காளாஞ்சு எடுக்கிறதும் அண்டைக்குத்தான். கொடி ஏறி, கொடி மரத்துப் பூசை ஆகி... சாமி தூக்கினதும் வேலாயுதம் உபயகாரர்களுக்குக் காளாஞ்சு தருவான்."

"காளாஞ்சை வரதனுக்குத் தரத்தான் வேலாயுதம் கங்கணங்கட்டிக்கொண்டு அலையிறான். காளாஞ்சு கைதவறிப் போகப்படாது. நீங்களும் அக்காவும் கோயிலுக்கு வந்து காளாஞ்சை வாங்க வேணும். வேலாயுதத்தின்ரை சுத்துமாத்துக்கு நாம இடம் தரப்படாது."

சிவத்தாரின் குரல் தீர்மானமாய் ஒலித்தது.

"ஒண்டுக்கை ஒண்டு.... நாம ஏன் பகைச்சுக் கொள்ள வேணும்."

"அப்படி வரதன் பாக்கேல்லை... அடாவடியா நிக்கிறான். அதுக்கு நாம இடங்கொடுக்கேலுமா...?"

"சரி...சரி நானும் மனிசியும் - ஆவணி பதினேழு, கொடியேத்தத்துக்கு ஊருக்கு வாறம்..."

அங்கிருந்த அனைவரது முகத்திலும் மகிழச்சி கரை புரண்டது.

தேவி அனைவருக்கும் பசும்பால் கலந்த தேநீர் தந்து உபசரித்தாள்.

தேநீரை அருந்தியதும் அனைவரும் திருப்தியுடன் விடை பெற்றுக் கொண்டார்கள்.

அரசடி வீதியில் இறங்கி நடந்து போகும் அவர்களை, கண் மலரப் பார்த்தபடி அவனும் தேவியும் நின்றார்கள்.

'ஊர் நன்மை... பொது விஷயம்... இதுக்குப் பஞ்சிப் படேலாது. வரதன்ரை பொல்லாப்பு வந்தால் அதைப் பிறகு சரிப் பண்ணலாம்... அவனையும் வளைச்சுப் போடவேணும். எல்லாரும் செய்ய வேண்டிய கருமமிது.'

அவனது மனசு பலதையும் பத்தையும் யோசித்தது.

யோசனைகளோடு வீட்டுப் படி ஏறிய ராகுலனைப் பார்த்துத் தேவி கேட்டாள்:

"இந்தச் சிக்கலெல்லாம் எதுக்கப்பா...?"

அவளுக்குப் பதில் ஏதும் தராமல், மெலிதாக மட்டும் சிரித்து வைத்தான்.

அந்தச் சிரிப்பு அவளுக்குப் பிடித்திருந்தது. அவளது கண்களில் அது தெரிந்தது. கிட்டவாக வந்தவள் அவனது வலது கரத்தைப் பிரியமாகப் பிடித்துக்கொண்டாள்.

•

அவனும் தேவியும் இலந்தைவனப் பிள்ளையார் கோயிலுக்குப் போன போது கொடிமரப் பூசை நடந்து கொண்டிருந்தது. பூசையை குமாரசாமிக் குருக்கள் தான் செய்து கொண்டிருந்தார். ஜானகி ராமனின் 'அம்மா வந்தாள்' நாவலின் நாயகன் பாபு மாதிரி ஒரு தோற்றமும் ஆகிருதியும் அவருக்கு. அன்பு மனைவி, இரு பெண் குழந்தைகள் என்று இருந்த போதும் ஆசைக்கு ஒரு வெள்ளாளப் பெட்டையையும் - இடை சுகம் போய்வர அவர் வைத்திருப்பது அவனுக்குத் தெரியும். பருப்பும் சோறும் தயிரும் பௌருஷத்தைக் கூட்டாதா என்ன? ஒரு வேளை அவர் சாப்பாட்டுடன் முருங்கைக் காயையும் அதிகம் சேர்த்துக்கொள்வாரோ என்னவோ...!

கொடிமரத்துப் பூசையானதும் உற்சவ மூர்த்தி மூஷிக வாகனத்தில் ஆரோகணித்து வீதி உலாப்புறப் பட்டார். விநாயகரது முகம் சொல்லி மாளாத தேஜஸ்டன் இருந்தது. மலர் மாலைகளுக்குள் புதைந்து போய்க்கிடந்த அவர் பொன் போல ஒளிர்ந்தார்.

சுவாமி தெற்கு வீதிக்கு வந்த போது, தருமர் தான் சுவாமியின் கொம்புத்தடியை முன்புறமாக வந்து, தனது பலம் வாய்ந்த கரங்களால் - அழுத்தமாகப் பற்றித் தடுத்தார். "சாமி அங்குலங்கூட நகரப்படாது.." என்று வேறு சப்தமிட்டார்.

வாகனம் காவும் பக்தர்கள் வாயடைத்துப் போய் நின்றார்கள். முன்னால் வந்த ஊர் விதானையார் சிவசம்பு கொஞ்சம் அதிகார மிடுக்குக் கலந்த குரலில் சொன்னார்:

"வேலாயுதம் உபயகாரர்களுக்கு, காளாஞ்சை எடுத்துக்

கொடும்..."

கொடியேற்றம் கோயிற்பொறுப்பு. இரண்டாம் திருவிழா கொட்டப்பெட்டி மூலை. மூன்று சோளாவத்தை. நாலு பள்ளம்புலம். ஐந்து முருகமூர்த்தி கோயிலடி. ஆறு நாவலடிப்புலம். ஏழு புகை யிலைக்கடை கைலாயபிள்ளை. எட்டு சங்கரப்பிள்ளை குடும்பம். ஒன்பது சப்பறம் - மடத்தடிவளவார். ஒவ்வொரு திருவிழாக்காரரும் முன்னால் வந்து வேலாயுதத்திடம் காளாஞ்சை வாங்கிக் கொண்டார்கள்.

"பத்தாம் திருவிழா வரதராசன்..." என்று வேலாயுத்தின் குரல் ஓங்கி ஒலித்தது.

"இல்லை... இல்லை அது தாவாடிக்கார்களுடையது...!" என்று விதானையர் கூற, அங்கு கூடி நின்ற தாவாடிச் சனமும் அதை ஆரவாரத்துடன் ஆமோதித்தது. அனைவருக்கும் நடுவில் நின்ற ராகுலன் பேந்தப் பேந்த விழித்தபடி நின்றான்.

திடீரென முன் நகர்ந்த வரதன், வேலாயுதத்தை நெருங்க முயற்சித்த போது, அங்கு நின்ற தாஸன் அவனை வழிமறித்தான். அவனால் அசைய முடியவில்லை. இடையில் சிவத்தாரால் ஏற்றித் தள்ளப்பட்ட ராகுலன், வேலாயுதத்தின் பக்கமாக வந்தான், வேலாயு தத்தால் எதுவும் செய்ய முடியவில்லை. அவன் தவிர்க்க முடியாமல், ஒரு வகை அலட்சியத்துடன் காளாஞ்சை ராகுலனிடம் தந்தான். கோயில் முதலாளியின் அலட்சியம் அங்கிருந்த தாவாடிக்காரர்கள் அனைவருக்கும் மிகுந்த எரிச்சலைத் தந்தது. ஆனாலும் அவர்கள் அவனுடன் மல்லுக்கு நில்லாமல் மௌனமாக இருந்தார்கள்.

அந்த ஆழ்ந்த மௌனத்தைக் கலைப்பது போல ஓர் ஒற்றைக்குரல் கணீரென ஒலித்தது. உணர்ச்சி மயமான அந்தக்குரல் கர்ப்பக்கிரகத்திலிருந்த மூலவரைப் பார்த்து, எதையோ முறை யிட்டது:

"பிள்ளையாரப்பா.... விநாயகவள்ளலே... பிரபு...! எங்கட மானம் மரியாதை குலைஞ்சு போகாமல் காப்பாத்திப் போட்டா யடா...! வருஷம் வருஷம் நடப்பவை, ஊர் மனசு புழுங்காமல் நடக்கத்தானே வேணும்...! அதுக்கு உன்ரை திவ்விய அநுக்கிரகம்

கிடைச்சிட்டுது...!"

கண்களிலிருந்து நீர் அருவியாய்ச் சொரிய அந்தப்பெண் மெய்சிலிர்த்தவளாய் நின்றாள்.

அவள் இறைவனிடம் முறையிட்டது அங்கிருந்தவர்களுக்கு வெற்றுப் பிதற்றலாகத் தோன்றவில்லை. பொருள் பொதிந்ததாகவே பட்டது.

அவளுக்குச் சற்று அருகாக நகர்ந்த ராகுலன் அவளைக் கூர்ந்து பார்த்தான்.

அவனை நெருக்கத்தில் சுவாசித்த அவள், அவனைப் பார்த்துக்கேட்டாள்:

"இந்தப் பாவப்பட்ட சென்மத்தைத் தெரியுதா...?"

குரல் உயர்த்தாமல் கூறியவள் - ஏதோ கூறக் கூடாததைக் கூறிவிட்டதான பரிதவிப்புடன், நுனி நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

கூச்சப்பட்டவளாய் ஒதுக்கம் கொண்ட அவளது முகத்தில் லேசாகச் செம்மை படர்ந்தது.

'தொலைந்து போன நாட்களில், பிரியம் ததும்பக் காதல் வசப்பட்டு என்னுடன் இழுபட்ட பெண்ணா இவள். ரதியா..? சிறு பெட்டையாக, துருதுருவென என்னையே சுற்றி வந்தவள், இங்கு இப்படி... உருக்குலைந்து, உடைந்து போய்... மட்டுக்கட்ட முடியாத நிலையில்...'

'அட அவளது அந்த ஆழ்ந்த கண்களும் நீண்ட கழுத்தும் சற்றுக்களையிழந்து பிசங்கலாய்... இடது காதுக்குக் கீழாக திரும்பத் திரும்ப ஸ்பரிசித்துப் புளகமுற்ற, அந்தக் கறுப்பு மச்சம் கூட இருக்கிறதே...!'

மன ரசிப்புக்களை மீறி, தன்னை மறந்த நிலையில் "ரதி!" என்று அவளைப் பார்த்து அவன் முனகினான்.

அதனைக் கேட்டுக்குலுங்கியவள், "மட்டுக் கட்டியாச்சு போல..." என்று கூறினாள். கூறியவள், உற்சவமூர்த்தி நகர்ந்து செல்வதைக் கவனங்கொண்டு, முன் சென்று இரு கரங்களையும் உச்சி மேல் குவித்து இறைவனைத் துதித்தாள்.

முன்னால் அவள் நடக்க, இவன் பின்னால் நடந்தான். பின் தங்கிவிட்ட தேவி விரைந்து வந்து, அவர்களுடன் சேர்ந்து கொண்டாள்.

சுவாமி மேற்கு வீதியில் திரும்பிய போது தேவி கேட்டாள்:

"ஆர் ஆள்... உங்களையே கண் சிமிட்டாமல் பார்க் கிறவ...? உங்களோட ஏதோ கதைச்ச மாதிரியும் இருந்தது..."

"அப்படி இல்ல... தெரிஞ்சவ. ஆள் தாவாடி தான். எங்க பழைய வீட்டுக்குப் பக்கத்தில இருந்தவ. இப்பவும் அங்கதான் இருக்கிறா. கொஞ்சம் சொந்தம், தூரத்து மச்சாள் முறை. சின்னதில இருந்து தெரியும். நல்ல பழக்கம். பேர் ரதி. பார்த்து மூண்டு நாலு வருஷம் இருக்கும். அவவை ஊரிலையும் பட்டணத்திலையும் இடைசுகம் பார்த்திருக்கிறன். எங்கட கலியாணத்துக்குக் கூட அப்ப அவ வந்திருந்தவ."

மிகுந்த அக்கறையுடன் ரதி பற்றிக் கூறி வந்த விஷயங்களை தேவி கேட்டுக்கொள்ளாது, அசட்டை யாக இருந்தது போல அவனுக்குத் தோன்றியது. அது அவனுக்கு மிகுந்த வருத்தத்தைத் தருவதாயிருந்தது. கலங்கியவன், மனசின் உள் இழைகளின் பரிதவிப்பைக் கட்டுப்படுத்த முடியாதவனாய்த் தவித்தான்.

'வாழ்க்கையில் அலைக்கழிக்கப்பட்டு, எவ்வளவு அல்லல் பட்டுவிட்டாள் இந்த அருமந்தவள், இவளோடு, பழகிய நாட்கள் எவ்வளவு உவப்பும் பிரியமுமானவை. அத்துடன் எத்தனை பரவசங்களை உள்ளடக்கியவை. அவை எல்லாமே தூரத்துக் கானலாய்ப் போய்விட்டனவே.'

அவனது மன அரங்கில் அவன் அதிகம் விரும்பும் அவளுட னான அந்த இளமைக்காலமும் - மறந்து விட வேண்டுமென நினைத்து அலமந்த அந்த வக்கரிப்பு மிகுந்த வாலிபப் பருவமும் ஒன்றன் பின் ஒன்றாக அவனது மனதில் மிதப்புக் கொண்டன. அவன் அவை எல்லாவற்றையும் மீளவும் நினைவு கூர்ந்தான்.

•

அப்பொழுது அவளுக்கு பத்து வயதிருக்கும் அவனுக்குப் பன்னிரெண்டு வயதுக்கு முன் பின்னாக. வழமை போல அதிகாலை

யிலே அவனைப் பார்க்க வரும் அவள், அன்றும் வந்தாள். பாடசாலை லீவு நாட்கள் என்பதால், நாள் முழுவதையும் அவனுடனேயே கழிக்கும் பரவசம் அவளிடம் இருந்தது.

வந்தவள், பொத்தியிருந்த தனது கரங்களை விரித்து அவன் பார்ப்பதற்குத் தந்தாள். அவளது கைகளில் இரண்டு சிறிய முட்டை கள். மங்கலான வெள்ளை முட்டைகள். முட்டைகளில் கலங்கல் ஊதா நிறத்திலும் அடர்கபில நிறத்திலும் சிறு சிறு புள்ளிகள் இருந்தன.

"கொண்டைக் கிளாத்தி முட்டையளா...? எங்க எடுத்தனி...?"

ஆச்சரியத்துடன் கண்கள் பளபளக்கக் கேட்டான்.

"தோட்டத்து வேலியில... முட்கிளுவை மரத்தில கூடு இருக்குது..."

"பாவம் குருவியள். ரதி வா பெட்டை! முட்டையளைக் கூட்டில திருப்பி வைப்பம்."

அவன் கேட்டதற்கு அவள் மறுப்புத் தெரிவித்தாள். பொய்ச் சிணுங்கல் வேறு போட்டாள்.

அவன் கோபத்துடன் அவளது இடுப்பில் அழுத்தமாகக் கிள்ளினான்.

"ஆ...நோகுதடா...." என்று சிறிது துடித்தவள், அவனுடன் தோட்டப்பக்கமாகப் போனாள். முட்கிளுவையில் ஏறியவன் முட்டை களை குருவிக் கூட்டில் பத்திரமாக வைத்தான். கூட்டில் இன்னும் இரண்டு முட்டைகள் இருந்தன. முட்டைகளை நன்றாகப் பார்த்து விட்டுக் கீழே இறங்கியவன் அவளைப் பார்த்துக் கூறினான்:

"முட்டையளை அளையப்படாது. அளைஞ்சால் குஞ்சு பொரிக்காது. இனிமேல் தொடாதை..." என்று அவளது கன்னத்தை லேசாகத் தட்டினான்.

சின்னச்சிரிப்புடன் கண்களைப் புழுந்திய படி, "தொட மாட்டன்ரா..! என்று அவள் சத்தியம் செய்தாள்.

"கிளுவையில ஏறேக்க எனக்கு முள்ளுக் கிழிச்சுப்போட்டு தடா...!"

மீண்டும் ஒரு சிறு செல்லச் சிணுங்கல்.

அவளுக்குக் கிட்டவாக வந்தவன், “எங்க காட்டு பாப்பம்...” என்றான்.

பாவாடையைச் சிறிது தூக்கிக் காண்பித்தாள்.

அவளது தொடையின் கீழாக, முள் கிழித்த இடத்திலிருந்து இரத்தம் கசிந்தபடி இருந்தது. அதைத் துடைத்து விட்டவன்; “நோகுதா...?” என்று கேட்டபடி, இதமாக அதனை ஊதிவிடவும் செய்தான்.

இது நடந்து ஒரு கிழமை இருக்கும் - அவள் திரும்பவும் அவனை நாடி வந்தாள், “ராகுல் இஞ்சை வாடா...” என்றவள், அவன் அருகாக வந்து, அவனது கைகளைப் பிடித்தபடி, “குருவிக் குஞ்சு பொரிச்சிட்டுது... இறகு முளைக்கேல்லை... அவை இறைச்சித் துண்டாட்டம் கிடக்கினை. அவையிட அலகுகள் மட்டும் மஞ்சளா, பென்னம் பெரிசா இருக்கு...”

“நல்லா வளரட்டும். வளர்ந்த பிறகு பாப்பம். இப்ப வேண்டாம். அடிகடி பார்த்துத் தாய்க் குருவியைக் குழப்பக்கூடாது. அது, குஞ்சுகளுக்குத் தீனி குடுக்க வேணும்.”

“ம்...” சொன்னவள், மறுநாள் காலையில், மீளவும் ஓடி வந்தாள். ஒரு வகைப் பதகளிப்பு அவளில் தெரிந்தது.

“குஞ்சுகள் நாலும் செத்துப் போச்சடா...!”

“என்ன... என்ன செய்தனியடி...?” துயரம் கசிய அவளிடம் கேட்டான்.

நேற்றுப் பின்னேரம் கிளுவையில் ஏறிக் கூட்டைப் பார்த்தனா... பாக்கேக்க குஞ்சுப் பிள்ளையள் தலையைத் தூக்கி, மஞ்சள் அலகுகளை விரிச்சு விரிச்சுக் காட்டினவை. பசியாயிருக்கு மெண்டு, கொஞ்சம் அரிசிக் குறுனலும் பினாட்டும் தீத்தினனான்...

“விசரி... இப்படி ஆரும் செய்வினமே... குஞ்சுகள் மூச்சுத் திணறிச் செத்துப்போட்டின போல... நீ தான்ரி அதுகளின்ர யமன்”

“ஆ...ஆ...”

“என்ன ஆ....ஆ...” என்றவன். அவளது தலைமுடியை இறாஞ்சி இழுத்து, தனது வலது கை முஷ்டியை இறுக்கமாகப்

பொத்தியடி அவளது மண்டையில் "நங்" என்று பலமான ஒரு குட்டு வைத்தான். "அம்மோய்..." என்று பரிதாபமாக அலறியவள், தனது வீட்டுப்பக்கம் பார்த்து ஓடினாள்.

நாலு நாள் அவனது வீட்டுப்பக்கம் வராதிருந்த ரதி, ஒரு சனிக்கிழமை மாலை ஒரு பூனைக்குட்டியின் லாவாகத்துடன், பதுங்கிப் பதுங்கி ஒரு செல்லச் சிரிப்புடன் வந்தாள். அன்றவள் பாவாடை சட்டையில் இருந்தாள். பாவாடையின் மடிப்பு நிறைய பழங்கள்: நாவல், புல்லாந்தி, காரை, ஈஞ்சு, நாகதாளி, கொய்யா, அன்னமின்னா என்று வகை வகையான பழங்கள்! அவனிடம் தந்தவள், அவன் சாப்பிடுவதைக் கண்களைச் சுருக்கியபடி, உதடுகள் மலர்ந்த நிலையில் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவனோ, தன்னை மறந்தவனாய்ப் பழங்களைக் குதப்பிக் குதப்பி, சாறு கடைவாய் வழி வழிய, சப்புக் கொட்டியபடி சாப்பிட்டான். மருண்டு போய் இருந்த ரதி, திடீரென அவனது கடைவாயில் வழிந்த பழ ரசத்தைத் தனது சுட்டு விரலால் வழித்தெடுத்துச் சுவைத்த படி சொன்னாள்:

"நல்ல ருசியாயிருக்கடா...."

தொடர்ந்து பேசியவள்:

"முள்ளுக்கையும் பாம்புப் புதர்களுக்கையும் பயந்து பயந்து பிடுங்கின பழங்களடா... டாங்ஸ் ஒண்டுமே இல்லையா...?"

"மொக்கு...! டாங்ஸா...?தாங்ஸ்சடி..." என்றவன் அவள் எதிர்ப்பாராத வேளையில் அவளை இழுத்து வைத்து ஆசையுடன் கன்னத்தில் கொஞ்சினான்.

"கண்களிலையும் வேணும்"

"கள்ளி...!" என்று கூறியவன் அவளது கண்களிலும் முத்தமிட்டான்.

"சொண்டில வேண்டாம் வாய் நாறும்..."

"போதுமா...?"

அவனது கேள்விக்கு "ம்" சொன்னவள், எழுந்து பாவாடையின் பின்பகுதியில் ஒட்டி இருந்த மண்ணை இரு கைகளாலும் தட்டித் துடைத்துக்கொண்டு, தனது வீட்டுப்பக்கமாக நகர்ந்தாள்.

இளமை வசீகரமானது. கல்மிஷம் ஏதுமற்றது. தாரையாய் வழியும் அன்புச் சாரலில் அவர்கள் தோய்ந்து திளைத்தார்கள். இது மட்டுமோ அது மட்டுமோ என்று சொல்லி மாளாத நல்லவைகளை யும் அல்லாத தில்லுமுல்லுகளையும் இருவரும் சளைக்காமல் செய்தார்கள்.

இருவரும் சேர்ந்து படிப்பதும் மாங் கொட்டை சறுக்குவதும் கெந்தி அடிப்பதும் வீட்டுக்குத் தெரியாமல், கள்ளத்தனமாக சிலுந்தாவரை சென்று நீச்சல் அடிப்பதும் ஊரில் உள்ள காட்டுப் பூக்களையும் பழங்களையும் ரசிப்பதும் சுவைப்பதும் என்று எத்தனை எத்தனை அனுபவ நுகர்வுகள் அவர்களுக்கு! ஊரையே சுருட்டித் தங்களது காலடியில் போட்டதான உணர்வே அவர்களுக்கு எப்போதும் இருந்தது.

இத்தகைய வாழ்க்கையே நிலையானது என அவர்கள் கனவு கண்டார்கள். காலநகர்வில் எல்லாமே மாறிய நிலையில், நெருக்கம் தொலைந்து தூரப்படுதலே அவர்களது விதியானது. திகைத்துப் போய் இருவருமே நின்றார்கள். அதில் அதிக அளவு பாதிப்புக்கு உள்ளானது அந்த ஏழைப்பெட்டை ரதி தான்!

•

ரதி பத்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த போது தான் பெரியவளானாள். மனதளவில் மட்டுமல்ல, உடலளவில் ஏற்பட்ட மாற்றங்களும் அவளை அழகி ஆக்கியது. பற்றாக்குறைகளோடு அவள் வளர்ந்து வந்த போதும் அவளது வயிறு வஞ்சிக்கப்படாத அளவு பெற்றோர்கள் பார்த்துக்கொண்டார்கள்.

ராகுலனைப் பற்றிய நினைவுகளும் அவனுடனான பாலியகால நட்புமே இப்பொழுதெல்லாம் அவளது மனசு முழுவதும் நிரம்பியிருந்தது.

'சிறிசுகளாக இருந்த போது ஒரு பிடிப்போடும் லயிப்போடும் பழகி, பகிர்ந்து கொண்ட விஷயங்கள் எவ்வளவு பட்சமானவை. அந்தக் கபடமில்லாத குழந்தைமையும் அதனடியான உணர்வுகளும் எவ்வளவு பிடித்தமானவை...!'

'வளர வளர, பார்த்தோம் பழகினோம் என்பதோடு எல்லாமே

சரியாகிவிட்டதா...? ராகுலின் பிடிபட மறுக்கும் மனதை அறிவதெப்படி...? அவன் எனக்கு... எனக்கு மட்டுமே என்பது போல அவனுக்கு ஏதுமில்லையா...? அவன் மீதான ஈர்ப்பும் இசைவும் மனசு முழுவதுமே தேனடையாய் ருசித்துக் கொண்டிருக்கிறதே...!'

அவனைப் பற்றிய நினைவுகள் அனைத்துமே அவளைப் பைத்தியமாக்கியது.

மனசோடு ஆகிவிட்ட அவனது நினைவுகளோடு இருப்பவளுக்கு, அவளை ஏதேச்சையாக சந்திக்கும் சந்தர்ப்பங்களில்கூட பற்றுதல் ஏதுமில்லாமல் அவன் விலகி விலகிப் போவது அதிர்ச்சி தருவதாக இருந்தது.

இப்படி அவன் நடந்து கொள்வது அவனைப் பொறுத்த வரையில் ஒரு பாவனையே. இந்த உபாயம் அவளை அவனிடம் இன்னும் நெருக்கம் கொள்ள வைக்கும் என அவன் மனசார நம்பினான். அப்படி அவள் நெருங்கி வரும் பட்சத்தில் அவளிடம் பெற வேண்டியதை எல்லாம் சுலபமாகப் பெற்றுக் கொள்ளலாம் எனும் -Perversion- ஒரு வக்கிர புத்தியே அவனிடம் எப்பொழுதும் இருந்தது.

இது விஷயத்தில் மிகுந்த நிதானமும் பொறுமையும் அதிக பயனைத் தருமென அவன் நினைத்தான். அவன் பேணிய - இருவருக்கும் இடையிலான அந்த இடைவெளி ஏமாற்று வேலையாக இருந்த போதும் அது அவளுக்கு ஓரளவு நன்மை தருவதாகவே அமைந்தது. படிப்பில் அதிக கவனம் செலுத்த அது அவளுக்கு உதவியது.

க.பொ.த. சாதாரண தரத்தில் சிறப்பாகச் சித்தியடைந்த ரதி க.பொ.த. உயர்தர வகுப்பிலும் நல்ல பெறு பேறுகளை - இரண்டு ஏ, ஒரு பி பெற்றுக்கொண்டாள்.

தேசிய கல்வியியற் கல்லூரியில் சேர்ந்து தமிழ் அல்லது ஆங்கில மொழிப்பயிற்சியாசிரியராக வரவேண்டும் என்ற அவளது கனவு, வீட்டுக் கஜானாவின் முணுமுணுப்பால் தகர்ந்து போனது.

வசதியான குடும்பத்தில் பிறந்த ராகுலனால் எதுவும் செய்ய முடிந்தது. யாழ்.இந்துவில் கற்று வந்த அவன், பொறியியல்

படிப்பதற்கு முயற்சித்தான். உயர் தர வகுப்பில் பாதகமான வெட்டுப்புள்ளி கிடைத்தமையால், கணித பாடத்தைச் சிறப்புப் பாடமாகத் தெரிவு செய்து, யாழ்.பல்கலைக்கழகத்தில் படித்தான். அவனது பட்டப்படிப்பு முடிவதற்கு மேலும் இரண்டு வருஷங்கள் இருந்தன.

இரண்டாம் வருட ஸெமெஸ்ரர் லீவில் ஊர்ப் பக்கம் வந்த அவன், அவளைக் கண்டான். தான் மனதளவில் நினைத்ததை முடிப்பதற்கு ஏதுவாகக் காய்களை நகர்த்தவும் செய்தான்.

இளந்தளிராய்ச் சவண்டு, தடுமாறும் பெண்ணாய் இருந்தவள் இப்பொழுது விசையேற்றப் பட்ட பம்பரம் போலச் சுழன்று சுழன்று வந்தது அவனைச் சுண்டி இழுத்தது. சொரியும் அழகுடன் அதிக தைரியத்தையும் நேர் பார்வையையும் கவனம் சிதறாத தனிப்போக்கையும் அவள் புதிதாகச் சேர்த்து வைத்திருப் பதைக் கவனம் கொண்டதும் அவனுக்குத் தன்னையறியாத ஒரு பயம் வந்தது. அதே நேரம் அந்தப் பயத்துக்கு இடம் தராது அவளை அடைந்தே தீருவது என்ற மன ஓர்மம் அவனைப் பாடாய்ப் படுத்தியது.

வீட்டில் அவள் மட்டுமே தனியாக இருக்கும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தவனுக்கு, அவன் ஊர் வந்த நாலாம் நாளே அது கூடிவந்தது. சிறிது பதட்டப் பட்ட போதும் இரைதேடி அலையும் சர்ப்பத்தைப் போல, அவளது வீட்டை நோக்கி அவன் விரைந்தான். முன்விறாந்தையில் ஏறியவன்:

"அம்மா... அப்பா...?" என்றான்.

"முத்து மாரியம்மன் கோயில் தேருக்கு!"

அவளது அந்தப் பதில், அனல் காற்றாய் படர்ந்து, அவனது உடலில் ஓர் உதைப்பை ஏற்படுத்தியது.

அவள் அருகாக வந்தவன், அவளது அடர்த்தியான புருவங் களை வருடினான்.

அவனது தொடுகையில் பூரித்துச் சிலிர்த்தவள்:

"வந்ததும் வராததுமாய்... இதென்ன சேட்டை என்றாள்."

"ரதி...! உனக்கு... உனக்கு என்னிலை விருப்பமா...?"

"ம்..."

"எவ்வளவு...?"

"இவ்வளவு... இவ்வளவோ...!" என்று கூறியவள், தனது இரு கரங்களையும் அகல விரித்துக் காண்பித்தாள்.

அவளது வலது கையை வாங்கிக் கொண்டவன், அவளது நீளமான விரல்களைத் தடவிக் கொடுத்தபடி, அவளை மேலும் நெருங்கினான். அவனது அந்த நெருக்கம் அவளுக்கு அண்மையில் கிடைக்காதவொன்று. அவள் கிளர்ச்சியுற்று மிருது வாகச் சிரித்தாள். அது மதுரமாக இருந்தது. அவளது லேசான தலையசைப்பும் இசைவு கொள்ளத் துடிக்கும் உடல் மொழியும் அவனைக் கிறங்க வைத்தன.

உணர்ச்சி வசப்பட்ட ராகுலன், மிகவும் துணிவு கொண்டவனாய், கண்களில் முத்தமிட்டான், கீழிறங்கியவன், கழுத்திலும் மார்பிலும் முத்தமிட முயற்சித்த போது அவள் சற்றுத் தயக்கங் கொண்டவளாய், அவனிடமிருந்து விலகிக் கொண்டாள். அப்பொழுது அவனது கண்களில் ஜொலித்த கட்டற்ற காமம் அவளைப் பொசுக்கியது.

நடுங்கியவள், அவனைப் பார்த்துப் பலமிழந்த குரலில் கேட்டாள்:

"இது இப்ப... இப்பவே வேணுமா...?"

"ம்..."

"சின்னன் சின்னதாய்த் தொடங்கி, நடக்கக்கூடாதெல்லாம் நடந்திடும்... சடங்கு முடிச்சாப்பில இதையெல்லாம் பிறகு பார்க் கலாமே...!"

"சடங்கா...உன்னோடையா...?" அவனது குரலில் அவனை அறியாமல் நுழைந்து விட்ட ஏளனம் அவளைச் சில்லிட வைத்தது. உறைந்து போனாள். பட்டென உள்ளில் ஏதோ உடைந்து போனதான உணர்வு அவளுக்கு. தீராத வெறுப்புடன் அவனைப் பார்த்தாள்:

"போடா...நீயும் உன்ரை பீத்தல் காதலும். கழிசடைத் தனமான நினைப்புகளோட இனிமேல் என்னட்டை வராதை...! இந்த ஜென்மத்துக்கு இது போதும்... போதுமடா சாமி...!"

கூறியவள், உள் அறையை நோக்கி நகர்ந்தாள். அப்பொழுது அவளை வழிமறித்தவன் கூறினான்:

“Sorry... மன்னிச்சிடு, தெரியாத்தனமாக் கதைச்சுப் போட்டன். இதெல்லாம் உள் நோக்கம் ஏதுமில்லாமல் விழுந்த வார்த்தைகள்...”

“ஓம்...ஓம்... எல்லாமே நல்லாத் தெரியுது... இந்த ஏழைப் பெட்டையை, நீ தப்பான கண்ணோட்டத் தில பார்த்துக் கரைசேர்க்க வேண்டாம். படைத்தவன் எல்லாத்தையும் பார்த்துக்கொள்வான். அட உன்ரை டம்பமும் ஆண்தனமும் இண்டைக்குத்தான் எனக்கு விளங்கி இருக்கு. அது சரி உன்ரை மென்மையும் இரக்க குணமும் எங்க போய்த் தொலைந்துவிட்டன. புறச்சூழலும் நீ கற்றுக் கொண்டவையும் உன்ரை மனசை இப்படிச் சாக்கடையாக்கி இருக்க வேண்டாமே...!”

தனது இந்தப் பேச்சு அவனை அதிகம் அவமதித்து விடுமோ என்ற தவிப்பால் குரலை உயர்த்தாமலே அவள் பேசினாள்.

அவளது பேச்சை எதுவிதமான எதிர்வினையுமில்லாமல் கேட்டவன், தனது உணர்வுகளையும் ஆசைகளையும் கட்டுப் படுத்தியவனாய் எதுவும் பேசாது, மௌனமாக அவ்விடத்தை விட்டு, மிகுந்த கூச்ச உணர்வுடன் வெளியேறினான்.

அவன் போவதையே பார்த்தபடி நின்ற அவளுக்குத் தாள முடியவில்லை. உணர்ச்சி வசப்பட்டுக் குலுங்கினாள். கண்களில் லேசாய்த் திரண்ட கண்ணீரைத் தனது சுட்டு விரலால் தட்டியவள், ‘இனி... இனித்துயரங்களோடு வாழப் பழகிக்கொள்ள வேண்டியது தான்’ என நினைத்துக்கொண்டாள்.

அவளுக்கும் அவனுக்குமான தொடர்புகள் எல்லாமே அதன் பின் தூரப்பட்டன.

இரண்டு ஆண்டுகள் கழிந்த நிலையில், ரதியை மறந்தவனாக, எந்த விதமான மன உறுத்தலும் இல்லாதவனாக, அப்பாவின் வியாபாரப் பங்காளியும் நண்பருமான வேல்முருகுவின் மகளான தேவியைத் திருமணம் செய்து கொண்டான். அத்துடன், மாமனாரே அவன் விரும்பியது போல, தேசிய வங்கி ஒன்றில் – தன்

செல்வாக்கைப் பயன்படுத்தி - உதவி முகாமையாளர் பதவி யொன்றையும் எடுத்துக் கொடுத்தார்.

ராகுலின் திருமணத்தின் பின்னர், ரதி அவனைத் தனியாகவும் தேவியுடனும் பட்டணத்திலும் ஊர்க் கோவில் திருவிழாக்களிலும் காணவே செய்தாள். அப்பொழுதுதெல்லாம் ஒரு சின்னச் சிரிப்புடன் நகர்ந்து விடுவது அவளது இயல்பாகி விட்டிருந்தது. மன உணர்வுகளை காட்டிக்கொள்ளக்கூடாது எனச் சபதம் எடுத்தவள் போல அச்சந்தர்ப்பங்களில் அவள் நடந்து கொண்டாள்.

இப்பொழுது இந்தப் பிள்ளையார் கோவில் திருவிழா, அவனும் அவளும் ஓரளவு நெருங்கி வர உதவி இருக்கிறது. 'இது... இது... தெய்வ சங்கல்பமா?' இந்நிகழ்ச்சி பழையன எல்லாவற்றை யும் மீட்டுப் பார்க்க அவளுக்கு உதவியது. அவனுக்கும் தான்.

கசப்புக்களும் அத்துமீறல்களும் அவர்களிடையே ஏற்பட்டதென்னவோ உண்மை தான். இருந்த போதும் - அவளைப் பொறுத்த வரை அவளது இளமைக்காலம் ஒருவகையில் ஓர் அரிய பொக்கிஷமாகும். அப்படித்தான் அவள் கருதுகிறாள். ராகுலனும் தனது குற்ற உணர்வுகளில் இருந்து விடுபட்டவனாகவே தோற்ற மளித்தான். காலம் அவர்களுக்கிடையேயான எல்லாக் காயங் களையும் வலிகளையும் ஆற்றிவிட்டதாகத்தான் அவர்கள் இருவரும் நினைத்துக் கொண்டார்கள்.

•

பிள்ளையார் இருப்பிடத்துக்கு வந்து சேர்ந்த போது:

"ராகுலன் ஒரு நிமிஷம்..." என்று கூறிய ரதி, அவன் அருகாக வந்தாள்:

"ராகுல்! திருவிழாவில இழுபறியும் பிரச்சினையும் வந்திட்டுது... நீ இந்த விஷயத்தில தோத்துப் போகப்படாது எண்டதாலைதான் உன்ரை கையில களாஞ்சு வந்ததும் நான் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டிட்டன். அதாலை நீ வெக்கப்பட்ட மாதிரி இருந்தது. இது உன்ரை திருவிழா மட்டுமில்லை; எங்களின்ரை, ஊரின்ரை திருவிழாவும் தான்."

"நான் வெக்கப்படேல்லை, இயல்பான உன்ரை வெளிப்பாடு எனக்குப் பிடிச்சிருந்தது; உன்ரை நிரம்பிய பட்சம் அதில தெரிஞ்சது...!"

"அப்படியா நன்றி. அதுசரி எங்க உன்ரை தேவியைக் காணேல்லை..!"

"கோயில் முதலாளி வேலாயுதத்தின்ரை பெண்சாதியைப் பார்க்கப் போயிருக்கிறா...அவவுக்கு ஒரு வகையில என்ரை மனிசி சொந்தம்."

"அம்மா வீட்டில தனிய... பாவம் அவவுக்கு ப்பிளட் பிறெசர்... அப்ப நான் வரட்டே..."

"........."

"என்ன மூச்சுப்பேச்சைக் காணேல்லை..."

"எல்லாம் உன்னைப் பற்றிய நினைவுகளால தான். நான் செய்த துரோகங்கள்..."

"Don't be silly, அர்த்தம் ஏதுமில்லாமை கதைக்காத... துக்கப்படாத... மறந்தவை மறந்தவையாகவே இருக்கட்டும். அதுதான் உனக்கும் எனக்கும் நல்லது..."

"ம்..."

"ஊருக்கு வரும் போது வீட்டுப்பக்கம் வாடா... தேவியையும் கூட்டிக்கொண்டு... அவ உண்டாகி இருக்கிறா போல இருக்கு... முடிஞ்சால் குட்டி ராகுலையும்...!"

அவள் அடா போட்டுக் கதைத்தது அவனுக்குப் பிடித் திருந்தது. அவளது கரங்களைத் தனது கைகளில் ஏந்தியபடி, "இப்பயும் மத்திய கல்லூரியில தான் வேலையா...?" என்று கேட்டான்.

"இல்லை... அது வசதிக் கட்டணப் பணத்தில படிப் பிச்சது... பிடிக்கேல்லை. இப்ப நம்மட எம்.பி.சி.எஸ். இல கணக்குப் பிரிவில உதவிக் கணக்காளரா..."

கூறியவள், அவன் பற்றி இருந்த கரங்களை விடுவித்துக் கொண்டு, கையசைத்து அவனிடமிருந்து விடை பெற்றுக் கொண்டாள்.

அவள் போவதையே பார்த்தபடி நின்றவனை இரு குளிர்ச்சி யான கரங்கள் தழுவின:

“பாவம்... ரதியைப் பற்றிய நினைவுகளை உங்களாலை மறக்கமுடியேல்லைப் போல...!”

தேவி தான்! அவனை மேலும் இறுக்கமாக அணைத்த படி கூறினாள்.

‘இவளுக்கு... இவளுக்கு எப்படி ரதியைப் பற்றி...! பட்டும் படாமலும் தொட்டம் தொட்டமாயும் சொன்னவைகள் எல்லாவற்றை யும் சேர்த்து எடுத்து...’

கண்களில் திரண்டு வந்த கண்ணீரை, தேவிக்குத் தெரியாதபடி, மறுபக்கம் திரும்பித் துடைத்துக் கொண்டான்.

அவளுடைய அந்த இறுக்கமான அணைப்பு அவனது மனக்காயங்களுக்கு அப்பொழுது இதமான ஒத்தடமாக இருந்தது.

துயரங்களை மறக்க முயற்சித்தவன், “வாழ்க்கை இப்படியும் அப்படியும் தான்...” என்று வாய்விட்டு அரற்றினான்.

“என்ன... என்ன...?” தேவி சிரித்தபடி கேட்டாள்.

அவளது சிரிப்பை ரசித்தவன், ‘தேவியும் அழகிதான்...’ என நினைத்துக்கொண்டான்.

‘ரதியை விடவா...?’ அதில் அவனுக்கு நிரம்பிய குழப்பங்கள் இருந்தன.

•

ஜீவநதி - 2015

## சிறுசுகள்

இது எனது தம்பி ரகுவின் கதை. நான் பார்த்திருக்க வளர்ந்த பிள்ளை அவன். அவன், சிறுவயதில் அவனது வயதைத் தொட்ட, அல்லது தாண்டிய, சிறுசுகளின் மையப்புள்ளியாக எப்பொழுது மிருந்தான்.

இளஞ்சுடரின் ஒளி அவனது நிறம். பாதங்களைத் தொட்டளையத் துடிக்கும் சவளல் கைகள். நீர்வற்றிய குளத்தில் உயிர்ப்பசை அழிந்து, விடைத்த தாமரை இலைத்தண்டுகள் போலக் கால்கள். அடர்த்தியான புருவங்கள். அவற்றின் கீழாக, சிவந்து போய்க் கிடக்கும் கண்கள். பிடித்துப் பிடித்து வைத்தது போன்ற நாசி. இன்னும் இன்னும் ஏதோ எல்லாம்...!

காலில் சில்லுப்பூட்டியது போல ஓரிடத்தில் தரிக்காத ஒரு பரபரப்பு அவனிடத்தில் எப்பொழுதும் இருந்தது.

“எடி பெட்டை... இந்தப் பொடி உயரமில்லை எண்டாலும்... பேரனைப்போல... உந்தச் செப்புவாயும் சிரிப்பும் அப்படியே புலவரை உரிச்சு வைச்ச மாதிரி இருக்கு...”

குஞ்சி தான் அம்மாவைப் பார்த்து, ரகு பற்றிச் சொன்னாள்.

பேரம்பலப்புலவர் - நாங்கள் பார்த்துப் பழகாத எங்களது தந்தைவழிப்பாட்டனார். சென்ற நூற்றாண்டின் ஆரம்ப தசையின் புகழ்பூத்த புலவர். ரகு அவரைப் போல வண்ணைச் சிலேடை வெண்பாவும் விநாயகர் இரட்டை மணிமாலையும் பாடாவிட்டாலும்

நன்றாகப்படித்து, நாலு பேர் மதிக்க இருப்பான் என்பதில் எங்களுக்கு நிரம்பிய நம்பிக்கை இருந்தது.

"இவனுக்குக் குரு சந்திரயோகம்; அத்தோட சட்டராகு… ஆள் பிரபு போல இருப்பான்," அம்மா அடிக்கடி வாயூறிப் பிதற்றுவது எனக்குத் தெரியும்.

மூன்றாம் வகுப்புப் படிக்குமவன், வலு சூட்டிகையாக இருந்த போதும் அவனது திருகுதாளங்கள் சொல்லி மாளாதளவு இருந்தன. இதுவும் அவனது பிறந்த பலனோ என நான் வியப்பதுண்டு. நல்லதையும் அல்லாததையும் சம அளவில் செய்யும் வல்லபம் அவனிடம் நிரம்ப இருந்தது. சில சமயங்களில் தேவனாகவும் சில வேளைகளில் சாத்தானாகவும் அவன் நடந்து கொண்டான்.

அன்று அவனுக்கு விடுமுறை. புலரி சிரித்தபடி சிவந்து கிடந்தது. விழிப்புக் கண்டவன் புரண்டு படுத்தான். சில்லெனப் படர்ந்த காற்று மெதுவாக அவனுடன் ஏதோ பேசியது. அம்மா அவனுக்குப் பக்கத்தில் குறட்டை விட்டபடி கிடந்தாள். அம்மாவுக்கு முன்னதாக எழுந்தால் தான் அந்தக் காரியத்தை அவனால் செய்ய முடியும். தீர்மானத்தோடு எழுந்தவன், சீமால் பக்கமாக ஒதுங்கி ஒண்டுக்கு இருந்தான். ரைகர் இவனைக் கண்டதும் செல்லமாக அனுங்கியது. லேசாக் குரைத்தது. குஞ்சி வீட்டுப் பக்கம் எட்டிப் பார்த்தான். ஆள் அரவம் இல்லை. 'குஞ்சி எழும்பேல்லைப்போல… அம்பிகை அக்காவின் சிலமனும் இல்லை.' நினைவுகளோடு மேற்கு வேலிப்பொட்டால் நுழைந்து, குஞ்சியின் புதறனுக்குள் இறங்கினான். கிணற்றையொட்டிய தோட்டத்தறையில் இருநூறு பதியங்கள் வரை மரவள்ளி நட்டிருந்தார்கள். அப்பால் கத்தரியும் மிளகாயும் நடப்பட்டிருந்தன.

மரவள்ளி, குருத்தலர்த்தி முளை கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் அவனுக்கு உள்ளுக்குள் புகைந்து கொண்டு வந்தது. பத்துத் தடி வரை பிடுங்கி எடுத்தான். மீதித் தடிகளை, முடிந்த வரை கால்களால் தட்டிச் சரித்தான். பிடுங்கி வைத்திருந்த தடிகளை மார்போடு அணைத்தபடி, வீட்டுப்பக்கமாக வந்தான். தெற்கு விறாந்தையில் ஏறியவன் அங்க பாவியாது உடைந்து கிடந்த

அலுமாரியினுள் அக்கட்டைகளை மறைத்து வைத்தான்.

கிணற்றடிப் பக்கம் வந்தவன், கையலம்பி, பல்லுவிளக்கி, முகம் கழுவிக் கொண்டான்.

அந்தப் பக்கம் வந்த அம்மா, "என்ன ராசா வெள்ளணை எழும்பிற்ரை. போய்ப்படி... பிள்ளைக்குப் பால் தேத்தண்ணி ஊத்தித் தாறன்...."

வீட்டுக்கு உள்ளாக வந்தவன், சாமி அறைவரை வந்து. விபூதி பூசிக் கொண்டான்.

மூன்றாம் வகுப்புத் தமிழ்ப் புத்தகத்தைப் புரட்டியவனுக்கு, காலையில் நடந்தவை எல்லாம் ஞாபகம் வந்தது. சதுரம் நடுங்கியது. எழுந்து தெற்கு விறாந்தைப் பக்கமாகப் போனான்.

குஞ்சி வீட்டுச் சாலி வயல் பக்கமாக அம்மாவும் குஞ்சியும் குசுகுசுத்தபடி நின்றார்கள். ஒரு சில வார்த்தைகள் இவனது காதிலும் விழுந்தன.

"எடி தங்கச்சி... ! கோதாரியில போன குட்டியளாரோ, மரவள்ளித் தோட்டத்தைத் துவம்சம் செய்திருக்குதுகள். உவன் உன்ரை கடைக்குட்டியும் சிவசம்பன்ரை ஸ்ரீயும் நேற்றுப் பின்னேரம் மசிண்டி மசிண்டி புதறனுக்கை நிண்டதைக் கண்டனான். உன்ரை ரகுவை ஒருக்கால் விசாரி பிள்ளை..."

"போ குஞ்சி ஆடுகீடு பூந்திருக்கும். பிள்ளையளைத் திட்டாத..."

"இல்லையடி பிள்ளை... தோட்டத்தில சின்னக் கால் களின்ரை அடையாளம் தான் தெரியுது."

அவர்களது பேச்சைக் கேட்ட ரகுவுக்கு ஈரல் குலையில் தீச்சு வாலை படர்ந்தது. ரகு தெற்கு விறாந்தையில் இருந்த அலுமாரியைப் போய்ப் பார்த்தான். மரவள்ளித் தடிகள் அதில் பத்திரமாக இருந்தன. அவற்றை எங்கே மறைத்து வைப்பதென்று அவனுக்குத் தெரிய வில்லை. பய உணர்வில் அவனது தேகம் முழுமையும் நடுங்கியது.

"ரகு எங்கை நிக்கிற...!" தெற்கு விறாந்தை வரை வந்த அம்மா கேட்டாள்.

"காலையில குஞ்சி வீட்டுப் புதறனுக்குப் போனனியா..." தொடர்ந்து வந்த அவளது கேள்விக்கு, விக்கித்து நின்ற அவனால்

பதிலேதும் தரமுடியவில்லை.

கள்ளமாய், முட்டை முழிச்சல் முழிச்சான்.

அவனது வைப்புச் செப்பு இருக்கும் அந்த அலுமாரியை அம்மா எட்டிப்பார்த்தாள்.

அம்மாவுக்கு எல்லாமே விளங்கியது.

மரவள்ளித்தடிகள் பார்வையில் பட்டதும் குஞ்சியைக் கூப்பிட்டு, வேலியால் தடிகளை, அவளிடம் தந்தாள்.

குஞ்சி ஏதோ பொரிந்து கொட்டியது மாதிரி இருந்தது.

அம்மாவின் கண்களில் நீர்:

"நட்டா முட்டி... நட்டா முட்டி..." என்று அம்மா அரற்றுவது ரகுவுக்கு கேட்டது.

அம்மாவைப் பரிதாபமாகப் பார்த்தான். அவளோ இவனைக் கண்டு கொள்ளாத பாவனையுடன் ஒதுங்கி, அப்பால் நகர்ந்து சென்றாள்.

•

நாலு நாள் கழித்து ரகு மற்றுமொரு சிக்கலில் மாட்டிக் கொண்டான்.

சூரியன் ரகுவைப் பார்த்துச் சிரித்தபடி, படுவானில் சரிந்த போது, அவன் கொட்டு தோட்டப்பக்கமாகப் போனான்; கூடவே ஸ்ரீ யும். ஸ்ரீயை அவன் தோட்டப்பக்கமாகக் கூட்டி வந்தது ஒரு காரணத் தோடுதான்.

ஐயா தாவடித்தறையையும் அஞ்ஞாத் தோட்டத்தையும் பார்த்துக் கொண்டு, கொட்டு தோட்டத்தைச் சிவலிங்கண்ணருக்கு வாரத்துக்கு விட்டிருந்தார். ரகுவுக்கு இது சிறிதளவும் பிடிக்கவில்லை.

ஐயா பாராமரித்த தோட்டங்களில் உள்ள புகையிலைக் கண்டுகளிலும் பார்க்க, சிவலிங்கத்தாருடைய தோட்டக்கண்டுகள் செழிப்பாக இருப்பது போல ரகுவுக்குத் தோன்றியது.

இது அவனுக்கு எரிச்சல் தருவதாயிருந்தது. இயல்பான புகைச்சல் அவனது மனதில் பற்றிக் கொண்டது. மனசு அனலாகக் கொதித்தது. 'எங்கட தோட்டத்தில உவர் உந்தச் சொத்திச் சிவலிங்கம் புகையிலை நடுறதோ... அதையும் ஒருக்கால்

பார்ப்பம்...' கறுவியபடி ஸ்ரீயுடன் தோட்டக் கட்டில் ஏறினான்.

சிவலிங்கம் தோட்டத்தின் தெற்குத் தொங்கலில் கண்டு கிண்டிக் கொண்டிருந்தார். அது, ரகுவுக்கும் ஸ்ரீக்கும் வசதியாக இருந்தது.

ஏற்கனவே திட்டமிட்டபடி ஸ்ரீ புகையிலைக் கண்டுகளை நிரைநிரையாக மிதிக்கத் தொடங்கினான். ஸ்ரீக்கு வலது கண் தெரியாது. சிவலிங்கத்துக்குச் சாட்டுச் சொல்லித் தப்பித்துக் கொள்ள இது போதுமானது என இருவரும் நினைத்துக் கொண்டார்கள். திட்டத்தைச் செயற்படுத்த, ரகு ஸ்ரீயை ஊக்கப்படுத்தினான். ஸ்ரீ பதினைந்து இருபது கண்டுகள் வரை மிதித்துத் துவைத்தான்.

தூரத்தில் இருந்த சிவலிங்கத்துக்கு உள் மனதில் ஏதோ பொறி தட்டியது. பரபரப்புடன் இவர்களை நோக்கி அவர் ஓடி வந்தார். அவர் பாடுபட்டு நட்டு வளர்த்த புகையிலைச் சிறு செடிகள் மண்ணுள் புதையுண்டு கிடப்பதைக் கண்டதும் அவர் ருத்திர தாண்டவரானார். ஸ்ரீயை வசமாகப் பிடித்துக் கொண்டவர் அவனது செவிமடல்களை மாறிமாறி வாரத் தொடங்கினார். ஸ்ரீ அலறினான். ஸ்ரீயைப் பார்த்த ரகுவுக்குப் பரிதாபமாக இருந்தது. "அவனுக்குக் கண் தெரியாது, அது தான்... அது தான் உழக்கிப் போட்டான் அண்ணை... வலது குறைஞ்ச பிள்ளை... அவனை விட்டிடுங்க..." ரகு விம்மினான்.

"உவருக்குக் கண் தெரியாதோ... இப்ப நல்ல வடிவாக் கண் தெரியிற மாதிரிப் பண்ணிறன் பாரும்...!" கூவிய சிவலிங்கம் அவனது காதைப் பிடுங்கி எடுத்து விடுவது போல மென்மேலும் திருகினார்.

ஸ்ரீயின் காதுகளில் இருந்து இரத்தம் கொட்டியது. பயத்துடன் ரகு தோட்டத்திலிருந்து இறங்கி ஓடினான். வயல்வரம்பில் உருண்டு விழுந்தது கூடத் தெரியாத ஓட்டமது. ஸ்ரீயும் ரகுவின் பின்னால் ஓடிவந்தான். அவனது காதுகளிலிருந்து கொட்டிய இரத்தம் கன்னங்களில் வழிந்தபடி இருந்தது.

'கண் தெரியாத ஸ்ரீக்கு இனிமேல் காதும் கேளாதோ...?' நினைத்த ரகு ஸ்ரீயைப் பரிதாபமாகப் பார்த்தான்.

ஸ்ரீ அழுகையோடு சிரித்த சிரிப்பு இவனுக்கு ஆறுதல்

தருவதாய் இருந்தது. இனிமேல் ஏதும் இப்படிச் செய்வதில்லை என்று இருவரும் முடிவு செய்து கொண்டார்கள்.

ஐயாவுக்கு இந்தச் செய்தி தெரிய வரும்; இரவு அவர் விளக்கம் கேட்பார் என்று ரகுவுக்குத் தெரியும். ஐயாவுக்கு என்ன பதில் தரவேண்டுமென்பதை மனதளவில் முன்னதாகவே தீர்மானித்தவனாய் ஸ்ரீயுடன் சேர்ந்து நடந்தான்.

தனது சாறத்தால் ஸ்ரீயின் கன்னத்தில் வழியும் இரத்தத்தைத் துடைத்த ரகு, அவனைப் பார்த்துக் கேட்டான்:

"நோகுதாடா...? பக்காத் திட்டம் போட்டும் எங்கடை கள்ளம் பிடிபட்டுப் போச்சு..."

அவனது ஆதங்கம் ஸ்ரீயைத் தொட்டது. அவன் ரகுவின் கரங்களை ஆதரவாகப் பற்றிக் கொண்டான். இருவரும் ஒருவரை ஒருவர் அணைத்தபடி வீடு நோக்கி நடந்தார்கள்.

காலையில் எழுந்த போது ஐயா எதுவும் கேட்கவில்லை. ரகுவுக்கு அது வியப்பாக இருந்தது.

அம்மா மட்டும் ஏதோ தொண தொணத்தபடி இருந்தாள். அவளது அந்தத் தொணதொணப்பு லேசான எரிச்சலையும் படபடப்பையும் அவனுக்குத்தந்தது.

சிரமத்துடன் தன்னைச் சமனப்படுத்திக் கொண்டவன்; அந்தக் கண்டத்திலிருந்து ஸ்ரீயும் தானும் தப்பித்துக் கொண்டது, பட்டவேம்பானுடைய கிருபையால் தான் என நினைத்துக் கொண்டான்.

•

ரகு ஒரு வித ரகசியப் பேணுகையுடன், மெதுவாக நடந்து, கோழிக் கூட்டுப் பக்கமாக வந்தான். கூட்டுக்குள் நுழைந்தவன், கோழிகள் முட்டையிடும் நார்க்கடகத்தை எட்டிப் பார்த்தான். ஏழு முட்டைகள் இருந்தன; அதில், நாலு முட்டைகளை எடுத்து காற்சட்டைப் பையினுள் பத்திரப்படுத்திக் கொண்டான். பின்னர், தோட்டப்பக்கம் நகர்ந்தவன், மேற்கு வேலியோரமிருந்த மாதுளை மரங்களிலிருந்து நல்ல பழங்களாகப் பறித்துக் கொண்டான். பழங்களைத் தனது புத்தகப் பையினுள் வைத்துக் கொள்ளவும்

செய்தான்.

காலைச்சாப்பாடானதும் - பாடசாலைப் பையைத் தூக்கிக் கொண்டு, கேற்றுக்கு வெளியே வந்த போது, ஸ்ரீ ரகுவுடன் சேர்ந்து கொண்டான்.

"இதென்னடா...? காற்சட்டைப் பொக்கற் பொம் எண்டு கிடக்கு..." கேட்ட ஸ்ரீ, ரகுவின் பொக்கற்றைத் தொடப்போனான். அப்பொழுது ஸ்ரீயின் கைகளைத் தட்டி விட்ட ரகு: "முட்டை முட்டையடா...! உடைஞ்சு போகும் தொடாதை..." என்றான்.

அவனது குரலில் ஆழ்ந்த இரகசியம்.

"களவாடா...? மாமிற்றைச் சொல்லுவன்."

"போடா... போ... போய் ஆசைதீரச் சொல்லு... அம்மா வுக்கு எல்லாம் தெரியும்."

மில் ஒழுங்கை கடந்து, நகுலேசர் வீட்டடிக்கு இருவரும் வந்த போது, பட்ட வேம்படி வயிரவர் கோயில் தெரிந்தது.

கோயிலடியில் கரம் குவித்து நின்ற ரகுவைப் பார்த்து ஸ்ரீ கேட்டான்:

"முட்டை விஷயம் மாமிக்குத் தெரியக்கூடாது எண்டு கும்பிடிறயா...?"

"இல்லையடா... கண்ணாடிப் புடையன் காசி இண்டைக்கும் ரூபனுக்கு அடிக்கக் கூடாதெண்டு கும்பிட்டனான்."

கணக்குக் கொப்பியும் எழுத்துக் கொப்பியும் இல்லை என்று அந்தக் கண்ணாடிப் புடையன் காசிப்பிள்ளை வாத்தி, நேற்றைய தினம் ரூபனைப் பாய்ந்து பாய்ந்து பிரம்பால் விளாசியது அவனுக்கு அப்பொழுது ஞாபகம் வந்தது. அவனது கண்கள் லேசாகக் கலங்கின.

சிவத்தார் கடையில் முட்டைகளைக் கொடுத்து, கணக்குக் கொப்பியும் எழுத்துக் கொப்பியும் வாங்கிக் கொண்டான். மிச்சக் காசுக்குத் தோடம்பழ இனிப்பும் வாங்கிக் கொண்டான். இனிப்பு கை நிரம்ப வந்தது. அவற்றைப் பேப்பரில் மடித்துப் பொக்கற்றுக்குள் வைத்துக் கொண்டான்.

வகுப்பறையை அடைந்த ரகு, ரூபனிடம் கொப்பிகளைத்

தந்தான்.

ரூபன் இவனைப் பார்த்துக் கேட்டான்:

"மச்சான்! எனக்கா... எனக்கே வா...?"

அவனது கண்கள் பூரித்து மலர்ந்தன. அதில் நெருங்கிய நட்பின் சொரிதல் தெரிந்தது.

இவன் குளிர்ந்து போய் அவனருகாக ஒரு சில நிமிடங்கள் இருந்து விட்டு, தனது இடத்துக்கு வந்தான்.

முதல்பாடம் கணக்கு. காசி வகுப்பறைக்கு வந்து, கரும் பலகையில் கணக்குகளை எழுதிவிட்டு, அதிபர் அறைவரை போய் வருவதாகக் கூறிச் சென்றது.

ரகு கணக்குகளை விரைவாகச் செய்து முடித்தான். அவனுக்கு அருகாக வந்த ரூபன் ரகுவைப் பார்த்துக் கணக்குகளைப் போட்டுக் கொண்டான். இன்னும் - ஸ்ரீ, வரதன், வசந்தன், மகேஸ், சரஸ் என்று பெடியளும் பெட்டையளும் அவனது கொப்பியைப் பார்த்து ஈயடிச்சான் வேலை செய்தார்கள்.

காசி திரும்பி வந்து, கணக்கு அப்பியாசங்களைப் பார்த்து விட்டுக் கூவினார்:

"டேய் எல்லாரும் சரியாகச் செய்திருக்கிறியள். ரகுவைப் பார்த்துக் கொப்பியடிச்சதா? அட, ரூபனுக்கும் கணக்குகள் சரியா வந்திருக்கு. எல்லாரும் பிரகஸ்பதி தான்... சரிசரி... மேசையில கிடக்கிற கொப்பியளை வந்து எடுங்கடா..." கூறியவர், நிமிர்ந்த போது பாடசாலை மணி ஒலித்தது.

அன்று இடைவேளையின் போது ரகுவிடமிருந்த, தோடம்பழ இனிப்பும் மாதுளம் பழங்களும் வகுப்பு மாணவ மாணவியர் அனை வருக்கும் கிடைக்குமாப் போல ரகுவும் ஸ்ரீயும் பார்த்துக் கொண்டார்கள்.

கடைசிப் பாட நேரம் முடிந்ததும் மாணவ மாணவியர் குதூகலமாக வெளியே ஓடிவந்தார்கள்.

ரகு, ஸ்ரீ, ரூபன் மூவரும் பாடசாலையின் வடக்கு பக்கம் பார்த்து நடந்தார்கள்.

பாடசாலைக்கு வடக்காகக் கிடந்த ஒறு வாய்க் கிணத்தடிக்கு

வந்தவர்கள்; வியப்புடன் அவ்விடத்தில் நின்றார்கள். மாரி மழையால் கிணற்றில் நீர் நிரம்பித் தளதளத்தபடி கிடந்தது. அதன் விளிம்புகளில் வேலம் பாசி அடர்த்தி கொண்டு கிடந்தது. பாசியின் ஊதா நிறப் பூக்கள் – நீண்ட தளிர்த் தண்டுகளில் – தலையசைத்து அழகு காட்டின.

பூக்களால் கவரப்பட்ட ரூபன், யாரும் எதிர்பாராதவேளை, வேலம்பாசி மலர்களைப் பறிப்பதற்கு அடி எடுத்து வைத்தான். கால்கள் திடீரெனச் சறுக்க, அவன் கிணற்றினுள் விழுந்தான்.

ஒரு கணம் உறைந்து போன நிசப்தம் அங்கு நிலவியது. அடுத்த கணங்களில் பதைபதைப் படைந்த ரகுவும் ஸ்ரீயும் யாது செய்வதென அறியாது பெருங்குரலெடுத்து அழுதார்கள். தூரத்தில் வந்த சாந்தலிங்க மாமாவைக் கண்ட ரகு அவரிடம் விரைந்து சென்று, “மாமா... மாமோய்...! ரூபன் கிணத்துக்கை தவறி விழுந்திட்டான்...” என்றான்.

பயத்தில் அவனுக்கு, திக்கி திக்கித் தான் பேச்சு வந்தது.

மாமா வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு, கிணற்றில் குதித்தார்.

ரூபன் உயிர் பிழைத்தால் வயிரவருக்கு பொங்கலும் படையலும் வைப்பதாக ரகு வேண்டிக் கொண்டான்.

நீரில் மூழ்கிய மாமா ரூபனை வெளியே எடுத்து வந்தார். அவனது வலது கையில் ரகு கொடுத்த இரண்டு பயிற்சிக் கொப்பிகளும் இருந்தன. அவற்றை அவன் இறுகப் பற்றி இருந்தான்.

ரகுவுக்கு அக்காட்சி மிகுந்த துயரத்தைத் தந்தது. ஸ்ரீயும் பரிதவித்தபடி அங்கு நின்றான்.

ரூபனை தரையில் வளர்த்திய மாமா, நாசித் துவாரங்களில் புறங்கையை வைத்துப் பார்த்தார். மாமாவின் கண்களில் மலர்ச்சி; அந்த மலர்ச்சி ரகுவையும் ஸ்ரீயையும் ஆசுவாசப்படுத்தியது.

அப்பொழுது மழை சற்றுப் பலமாகப் பெய்யத் தொடங்கியது. பூசியது போல் வீசிய காற்றில் லேசான குளிர். அது அங்கு நின்ற மூவருக்கும் நிரம்பிய மகிழ்ச்சியை தந்தது.

•

## அழுத்தம்

புலன்கள் ஒடுங்கி உறைந்த நிலையில் அவன் இருந்தான். கலக்கமுற்றிருந்தவனை எதுவும் நிதானப்படுத்தவில்லை. பதகளிப்பு அவனுடனேயே அசையாது இருந்தது.

அவனைப்பார்த்த ஐயா, "என்ன ரமணா...! குட்டி போட்ட பூனை போல வளைய வளைய வாறை... ஏ.எல். சோதனை வெள்ளிக்கிழமை, ஏழாம் திகதி...! இன்னும் மூண்டு நாள்தான் கிடக்கு, எழுந்து படியன்ரா...!"

ஐயாவின் பேச்சு அவனுக்கு எரிச்சல் தருவதாய் இருந்தது. உயர்தரப்பரீட்சைக்கு இரண்டு முறை படையெடுத்து, அவனுக்குத் தோல்விதான் மிஞ்சியது. 'இன்னுமொருமுறை அந்தத் தொந்தரவா...?'

சலிப்புடன் அவன் புரண்டு படுத்தான்.

'அம்மா இருந்திருந்தால் என்னைப்புரிந்து கொண்டு அனுசரணையாக இருந்திருப்பாளோ...? அம்மான்ரை இதமும் பிரியமும் ஏன் ஐயாட்டை இல்லை... சரியான சுடுதண்ணி... சுடு தண்ணி...'

மீளவும் ஐயாவின் அந்த நாராசமான குரல்:

"எழும்படா தொலைவானே...! வந்து, முதுகில ஒண்டு வைச்சாத்தான் தெரியும்... தறுதலை... தறுதலை..."

அவன் அசிரத்தையுடன், மறுபக்கம் திரும்பிப்படுத்தான்.

உள்ளே வந்த ஐயா, எடுத்து வந்த வாளி நிறைந்த நீரை

அவனது தலையில் கொட்டினார்.

எருமை மாடொன்றின் அசைவுடன் அவன் எழுந்து கொண்டான்.

ஐயாவை நேர்ப்பார்வையில் சந்திக்கவிரும்பாதவனாய், அவன் தலையைக்குனிந்து கொண்டான்.

வெளியே வந்தவன், பிறஷையும் பேஸ்ரையும் எடுத்துக் கொண்டான்.

'முகம் அலம்புவதா... குளிப்பதா...?'

நூறு தடவைகளுக்கு மேலாகவே அவனது மனம் அதைக் கேட்டுக்கொண்டது.

ஷ்வரைத் திறந்து விட்டான். நீர் பூப்போலச் சிதறியது. அதன் அழகையே பார்த்தபடி பல நிமிஷங்கள் நின்றான். பல் விளக்க வில்லை என ஞாபகம் வந்ததும்; பல் விளக்கினான். வாயலம்பிய பின்னர், ஷ்வரில் நின்றான்.

குளிர்ந்த நீர் உச்சியிலும் உடலிலும் பட்டதும் குதூகலனாய் ஏதோ ஒரு பாட்டைச் சீழ்க்கை அடித்தான். மீண்டும் மீண்டும் சோப்பை உடலுக்குப் போட்டுக் கழுவிக்கொண்டான். கையிலிருந்த சோப் முழுமையாகத் தேய்ந்து காணாமல் போன பின்னர்தான் அவன் குளியலறையை விட்டு வெளியே வந்தான்.

"என்ன குளிப்போ... கூத்தோ... ஒரு 'ராங்' தண்ணி முழுதும் குளிச்சிருக்கிறான்..."

முணுமுணுத்த ஐயா, 'ராங்'குக்கு தண்ணி ஏற மோட்டாரைப் போட்டார்.

சுவாமி அறைப்பக்கம் போக வேண்டுமென்றோ, விபூதி பூசவேண்டுமென்றோ அவனுக்குத் தோன்றவில்லை. சாப்பாட்டு மேசையிலிருந்த ஃப்ளாஸ்கைச் சரித்து, ஒரு கப்பில் கோப்பியை வார்த்துக் கொண்டான். சுண்டக் காய்ச்சிய பசுப்பால் கோப்பி ருசியாய் இருந்தது. 'ஐயா கோப்பி குடித்திருப்பாரா...இல்லையா..?' அதுபற்றி அக்கறைப்படாதவனாய், கடைசித்துளிக்கோப்பி வரை வார்த்து ருசித்து ருசித்து குடித்தான். 'சாப்பிடுவமா' என நினைத்தவன், 'வண்டி முட்டிப்போய்க்கிடக்கு... இப்ப வேண்டாம்',

என்ற முடிவுடன் தனது அறைக்கு வந்தான்.

அவனது அறை அலங்கோலமாகக் கிடந்தது. பயிற்சிப் புத்தகங்கள், கொப்பிகள், முன்னைய ஆண்டுகளுக்குரிய வினாத் தாள்கள் என எல்லாமே மேசையில் சிதறிக்கிடந்தன. கட்டிலில் ஏறி உட்கார்ந்து கொண்டான். தலையணையொன்றை எடுத்து, சுவரோடு சேர்த்துத் தனது முதுகை முட்டுக்கொடுத்தவன், சுற்றிவரப் பார்த்தான். அவனது அறையின் கோலம் அவனுக்கே கூச்சம் தருவதாயிருந்தது. அழுக்காகிப்போன கதவு, ஜன்னல்திரைச் சேலைகள், தூசு படிந்த நீர் ஜாடி, அறை நிரம்பிய, கிழித்து வீசப்பட்ட கடதாசிக்குப்பைகள், குடித்து வீசிய சில சிகரெட் துண்டுகள் என எல்லாமே கால்வைக்க முடியாதளவு அருவருப்பைத்தந்தன.

முன்னர் அவனது அறை இப்படி இருந்ததில்லை. அவனளவில், எந்த வேலையைச் செய்தாலும் ஓர் ஒழுங்கும் துல்லியமும் தூய்மையும் இருக்கும். பரீட்சை பற்றிய பயமும் அதனடியான அழுத்தங்களும்தான் அவனை மட்டுமல்ல, அவனது அறையையும் மிக மிக அலங்கோலமாக்கி விட்டிருக்கிறது. ஏதோ ஒன்று பாரமாய் அவன் மீது உட்கார்ந்திருப்பது போலவும் அதை அகற்ற முடியாமல் வலு இழந்து கிடப்பது போலவும் அவனுக்கு இப்பொழுதெல்லாம் தோன்றுகிறது. முக்கியமான மூன்று பாடங்களையும் அவன் நன்றாகவே படித்து வைத்திருக்கிறான். இருந்த போதும், மனதில் எதுவுமே இல்லாது - முழுமையாகத் துடைத்து விட்டது போன்ற ஏதோ ஓர் உணர்வு அவனை ஆட்டிப்படைக்கிறது.

குப்பையாய்க் கிடந்த புத்தகக் குவியல்களிடையே ஒரு வினாத்தாளை இழுத்து எடுத்தான். அது உயிரியல் பாடத்துக்கு உரியது. முதல் நாள் பரீட்சை உயிரியலா... பௌதீகமா...? பௌதீக இயல்தான்! மனது குழம்பிய நிலையில் எதுவித முடிவுக்கும் வர முடியாமல், தலையைப் பிய்த்துக் கொண்டான். அவனுக்குப் பரீட்சை நேர அட்டவணையைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. எடுத்துப் பார்த்தான். உயிரியல்தான் முதல் பாடம். மனம் திருப்தி யடைந்ததும் கையில் இருந்த வினாத்தாளைப் புரட்டினான். அது பத்தாம் வருஷத்துக்குரிய உயிரியல் கேள்வித்தாள். முதலில் எம். சி.

கியூ. வினாக்களைப் பார்த்தான். சற்றுப் பொறுமை இழந்தவன், அமைப்பு வினாக்களுக்குத் தாவினான். முதல் கேள்வி 'மனிதக் கண்ணின் மொத்தக்கட்டமைப்பைச் சுருக்கமாக விபரிக்குக', என்றிருந்தது. கேள்வியை மட்டும்தான் அவனால் படிக்க முடிந்தது. பதிலை வாசிக்கவோ, அதனை மனதில் இருத்திக் கொள்ளவோ முடியவில்லை. கண் என்றதும் அவள்... அந்தப்பெண்...! அவனது கனவுகளில் பட்டாம் பூச்சியாய்ச் சிறகடித்து வளையவரும் அவளும் அவளது கண்களுமே அவனது ஞாபகத்துக்கு வந்தன.

எழுந்தவன், சுவரில் மேசைக்கு மேலாக இருந்த கலண்டரைப் பார்த்தான். அதில் இருந்த பெண் உருமாற்றம் அடைந்து, அவனுக்குப் பெரிதும் பிரியத்துக்குரிய அவனது கனவுக்கன்னியாகவே தோற்றம் காட்டினாள். பிரக்ஞை தவறியவன் போலத் தவித்தவன், அவளையே பார்த்தான். உதட்டோரம் தவழும் சிரிப்புடன் அவள் அழைப்பது போலிருந்தது. நெருங்கி வந்தவன், அவளது கண் மலர்களைக் கவனித்தான், அவை கருங்குவளை மொட்டுக்கள் போல இருந்தன.

செவ்வரி ஓடிய அவளது கண்களில் லேசான கலக்கம். 'ஏன்...? எதற்கு...?' என இவன் கலங்கினான்.

அவளது திரட்சியான உதடுகளில் தேன் சிந்தியது. அவளை நெருங்கி, ஆர்வத்துடன் முத்தமிட்டான். சிறிது மனக்கிலேசப் பட்டவன், தன் உணர்வடைந்து, அந்தக் கலண்டரைத் திருப்பிப் போட்டான். அதற்கு மேலாக, அதை மறைப்பது போல, முண்டாசு பாரதி இருந்த கலண்டரைப்போட்டான். பாரதியைப்பார்த்ததும் அவனது மனது பதகளிப்பு நீங்கி ஆசுவாசப்பட்டது.

மீளவும், அந்த உயிரியல் வினாத்தாளைப் பார்த்தான். அப்பொழுது ஐயா கூப்பிடுவது போலிருந்தது. அறையை விட்டு வெளியே வந்தவன், நேராகச் சாப்பாட்டு மேசைக்கு வந்தான். மேசையில் ஐயா சாப்பிட்டபடி இருந்தார். அவருக்கு அருகாக உட்கார்ந்து கொண்டவன், மேசை மீது இருந்த, எல்லாவற்றையும் தனது கோப்பையில் வழித்துப் போட்டுக்கொண்டான்.

"கோப்பி வேணுமா... போடட்டா...?"

ஐயாதான் கேட்டார்.

"இல்ல... வேண்டாம்" என்றவன், ஆர அமர இருந்து சாப்பிடத்தொடங்கினான்.

•

"மணி பதினொண்டரையாகுது. இப்ப போனால்தான் பரீட்சை மண்டபத்தில... நேரத்துக்கு நிக்கலாம்..."

ஐயாவின் குரல் யந்திரத்தனமாகத் திரும்பத் திரும்ப ஒலித்துக்கொண்டிருந்தது.

'லிங்' போல் பொயின்ற் பேனா மூன்று, வீனஸ் பென்சில், கட்டர், அடிமட்டம், ஃபைல் என்று எல்லாவற்றையும் எடுத்து, ஸ்கூல் பாக்கில் வைத்துக்கொண்டான்.

கறுப்பு நிற லோங்ஸும் வெள்ளை புஷ்சேர்ட்டும் அணிந்து கொண்டவன்; தலைவாரி, லேசாய்ப் பட்டும்படாமலும் வூடு பவுடர் பூசிக்கொண்டான்.

நெற்றியின் மேற்புறத்தில் ஏதோ வீக்கம் கண்டிருந்தது. பாக்குத்திரட்சியிலும் சின்னதாக அது இருந்தது. அதை அழுத்தி அழுத்திப் பார்த்ததில் சில நிமிடங்கள் அவனுக்குச் செலவாயின.

சாமி கும்பிடு, விபூதி பூசு. மீளவும் ஐயாவின் தொண தொணப்பு.

ஸ்கூல்பாக்கைத் திறந்தவன், அதன் உள்ளே வைத்த பொருட்களை ஒவ்வொன்றாக திரும்பவும் வெளியே எடுத்துச் சரி பார்த்தான். எல்லாம் சரியாக இருந்தன.

மனசு அலை பாய்ந்தது, 'சைக்கிளில் போவதா...? பஸ்ஸிலா...?' குழம்பினான்.

சைக்கிளை உருட்டியபடி வெளியே வந்தபோது ஐயா அவனது முதுகைத் தடவியபடி சொன்னார்:

"பேப்பரைக் கையில் வாங்கினதும் - பதட்டப்படாமல் ஒருக்கால் எல்லாக் கேள்விகளையும் நல்லாப்படி. படிச்சபிறகு, பதிலை எழுது. முதல்பாடம் உயிரியல் - பகுதி I தானே... நீ கட்டாயம் பாஸ் பண்ணுவையடா.... நல்லூரான்ரை கிருபை உனக்கு எண்டைக்கும் இருக்கும்."

சைக்கிளை ஸ்ராண்ட் போட்டு நிறுத்தியவன், வீட்டினுள்ளே போவதற்குத் திரும்பினான்.

"என்னடா இது... வெளிய வந்திட்டு அபசகுனமா திரும்பவும் உள்ள போற..."

"சைக்கிளுக்கு காத்துப்போனால் என்ன செய்யிறது....? அதுதான் காசு எடுப்பம் எண்டு..."

அவனது முன் ஜாக்கிரதை ஐயாவுக்கு எரிச்சல் தருவதாய் இருந்தது.

"சதா பயந்து பயந்து சாவாரைப்போல ஆகப்போற... இந்தா இந்தக்காசை வைச்சிரு, கன்ரீனிலை ரீ கீ வேணுமென்டாலும் குடி..." கூறியவர், ஓர் ஐம்பது ரூபாய் நோட்டை அவனிடம் தந்தார்.

ஐயாவின் அந்தப்பிரியம் அவனுக்குப் பிடித்திருந்தது.

தனிப்பட்ட மாணவர்களுக்கான பரீட்சை இந்துவில், குமாரசாமி மண்டபத்தில்தான் நடைபெறுகிறது என்பது அவனுக்குத் தெரியும்.

மண்டபத்துக்கு வெளியே, மேற்குச்சாய்வில் இருந்த பார்க்கில் சைக்கிளை நிறுத்தியவன், சைக்கிளைப் பூட்டித் திறப்பை எடுத்துக்கொண்டான்.

நாலடி நடந்தவன், குழப்பத்துடன் திரும்பவும் அவ்விடத்துக்கு வந்து, சைக்கிள் பூட்டியிருக்கிறதா என்று பூட்டை இழுத்துப் பார்த்தான்.

பூட்டியிருப்பது உறுதியானதும் வெளியே வந்து, மண்டபத்தினுள் நுழைந்தான்.

அவனது சுட்டெண் 843481. சுட்டெண்ணைச் சரிபார்த்தவன், தனது இருக்கையில் வந்து உட்கார்ந்து கொண்டான். பரீட்சை ஆரம்பமாக இன்னும் அரை மணி நேரம் இருந்தது. பரீட்சை மேற்பார்வையாளர்கள் எவரும் வந்த சிலமனில்லை. ஒரு சில பெடியளும் பெட்டையளும் தான் வந்திருந்தார்கள். அவர்களில் ஒருத்தி மட்டும் இவனைக் கவர்ந்தாள். மெலிசாக வத வத என வளர்ந்திருந்த அவள் – சற்று தூக்கலான நிறத்தையும் கொண்டிருந்தாள்.

இவன் பார்ப்பதைக் கண்டதும் – கண்கள் படபடக்க அவளும்

இவனைப் பார்த்தாள். அவளைப் பார்ப்பதில் ரசனைக் குறைவு தட்டியபோது மீளவும் அவனுக்குச் சைக்கிள் நினைவு வந்தது. 'சைக்கிள் பூட்டப்பட்டிருக்குமா...? இல்ல... இல்ல எண்டால் ஆரன் எடுத்திடுவாங்கள்.'

சந்தேகம் வலுக்க, அவன் மாடியிலிருந்து இறங்கி வந்து, சைக்கிள் பூட்டை ஒருமுறைக்கு இருமுறை இழுத்துப்பார்த்துக் கொண்டான். திறப்பை எடுத்துப் போட்டுத் திறந்து பார்க்கவும் செய்தான். மீளவும் பூட்டி, கழிசானின் பின் பொக்கற்றில் வைத்துக் கொண்டான்.

மண்டபம் மேற்பார்வையாளர்களாலும் மாணவர்களாலும் நிரம்பி வழிந்தது. பிரதான மேற்பார்வையாளரது கட்டளைக்கு அமைவாக மண்டபம் நிசப்தத்தில் ஆழ்ந்து கிடந்தது.

திடீரென ஏதோ ஒளி வெள்ளம். அவனது கனவுகளில் நிதம் நிதம் வந்து தொந்தரவு தரும் அவள்... அவனது தேவதை மண்டபத்தின் படிகளில் ஏறி, மேலே வந்துகொண்டிருந்தாள். அவளில் எல்லாமே பிடித்துப் பிடித்துச் செல்லமாய்ச் செதுக்கி வைத்தது போல இருந்தன. அவள் இள நீல நிறத்தில் சேலையும் உடலோடு ஒட்டியமாதிரி 'டீப் நெக்' ப்ளவ்ஸும் அணிந்திருந்தாள். லேசான சரும நிறத்தில் உதட்டுச்சாயம் வேறு தீற்றியது போலவும் இருந்தது. இவனுக்கு அருகாக மிதந்து, இவனைக் கடந்து போனபோது - அவளது முகமும் கண்களும் உதடுகளும் தெரிந்தன. எல்லாமே மென்மையும் பொசு பொசு தன்மையும் கொண்டவையாக இருந்தன. பொன்துகள்களில் கொஞ்சம் மஞ்சள் தூளைக் கொட்டிக் கலந்தது போல ஒரு நிறமும் தேஜஸும் அவளில் ஒளிர்ந்தன. பின் முதுகு முழுமையும் தெரிய நடந்து போகும் அவளது பிருஷ்டத்தின் திரட்சி அவனை அசர வைத்தது.

அவனது அந்தப் பிரியை தான் அவனுக்கு அருகாக வந்து வினாத்தாளைத் தந்தாள். தரும் போது, "All the best" என அவளது உதடுகள் உதிர்த்த சொற்கள் இவனுக்கு மதுரமாய் இருந்தன.

எம்.சி.கியூ. அறுபது. வினாத்தாளைப் பார்ப்பதை விட்டு, அவளையே விடுத்து விடுத்துப் பார்த்தான்.

சடாரென அவள் யாரென்பது அவனுக்குப் பிடிபட்டது. 'மடத்தடி வளவு மணியம் மாஸ்ரரின்ரை மகள்... சுகர்ணி...! ஓ.எல். படிக்கேக்க கண்டது... ஆசிரிய பயிற்சி முடிச்சு... பரீட்சை மேற்பார்வையாளரா இப்ப இங்க... எப்பவோ எங்கையோ கண்டது அடிமனதில் ஊறலாய் கிடந்து, உயிர்ப்பேழையாய்த் திரண்டு, இப்படி... இப்படித் தொந்தரவு செய்கிறாளே.... இவளுக்கு என்னை விட இரண்டொரு வயசு கூட இருக்குமா...? இருந்தாலென்ன குடியா முழுகிப்போயிடும்...!'

அவனது பதகளிப்பை நன்றாகவே புரிந்து கொண்ட அந்தப் பெண், அவனுக்குக் கிட்டவாக வந்து, கண்களால் அவனை ஒற்றி எடுப்பது போலப் பார்த்து: "கேள்வியள் கடுமையா...? படித்துப் பார்த்து விடை எழுதும்..." என்றாள்.

அவள் கேட்டுவிட்டாளே என்பதற்காக கேள்விகளை திரும்பத்திரும்ப வாசித்தான். நாப்பது கேள்விகள் வரை அவனால் புள்ளடியிட முடிந்தது. அனேக கேள்விகள் அவனது பாடப்பரப்பை மையப்படுத்தியதாகவே இருந்தன. ஒரு சில கேள்விகள் பொதுவாக இருந்தன. அவனைத் தடுமாற வைத்தன. ஐம்பது விடைகளாவது சரிவரும் என அவன் நினைத்துக்கொண்டான்.

விடை எழுதி முடிந்ததும் - மீளவும் அந்தப் பெண்ணையே விழுங்கி விடுவது போலப் பார்த்தபடி இருந்தான்.

'என்ன விண்ணாணமான பார்வையும் கொஞ்சலும்...' நுனி நாக்கு வரை வந்த வார்த்தைகளை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டவள் - ஒரு வித பசப்பலுடன்,"எழுதின விடையள் சரியா எண்டு பாருமன்....!" எனக் கூறினாள். கூறியவள், சிரித்தபடி அவன் அருகாக வரவும் செய்தாள். அப்பொழுது பரவிய அந்தப் பெட்டை வெடில் அவனை ஆட்டிப்படைத்தது. 'உயிர்க்கொல்லி... உயிர்க் கொல்லி...' என முனகுவதைத் தவிர அவனுக்கு வேறு வழி தெரிய வில்லை.

பரீட்சை நேரம் முடிந்ததும் அவளே இவனிடம் வந்து, விடைத்தாளைப் பெற்றுக்கொண்டாள். அவனது சுட்டெண்ணையும் சரி பார்த்துக் கொள்ளவும் செய்தாள்.

"மிஸ் நீங்க நல்ல வடிவு... பூங்கொத்து மாதிரி..."

அவன், ஒலி உயராமல் மெதுவாகத்தான் சொன்னான். அதை அவள் கேட்ட போது அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை. மெலிதாக மட்டும் சிரித்து வைத்தாள்.

திடீரென எதையோ நினைத்துக் கொண்டவன், அவளது கையிலிருந்த தனது விடைத்தாளைப் பறித்தெடுத்து, சுட்டெண்ணை திரும்பத் திரும்பச் சரிபார்த்தான். திருப்திப்படாத தடதடப்பு அவனில் தெரிந்தது.

அவனிடமிருந்து பேப்பரை திரும்ப வாங்கிக்கொண்ட சுகர்ணி சொன்னாள்: "எல்லாம் சரியாய் இருக்கு... பார்த்துப் போம்... எங்கையாவது முட்டிக்கொண்டு நிக்கப்போறீர்..."

"முட்டிக் கொள்ளிறது நானா இல்ல... நீங்களா பார்ப்பம்..." கூறியவன், தன்னை மறந்த நிலையில் கலீரென உரத்துச் சிரித்தபடி, படிகளில் இறங்கி நடந்தான்.

அவன் போவதைப் பார்த்தபடி நின்ற அவள் – 'இது... இது ஒரு சுவாரஸ்யமான கேஸ் போல...' உதிரத் துடித்த வார்த்தைகளை மீளவும் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

•

இரவு எட்டு மணிக்கு ஐயாவுடன் சாப்பிட்டவன், ஒரு இரண்டு மணி நேரமாவது படிக்க வேணும் எனும் நினைப்புடன் உயிரியல் வினாக்கொத்தைப் புரட்டினான்.

மனிதச் செவி, நுண்ணங்கிகள், கலங்களின் புரதக் கட்டமைப்பு, இருவித்திலைத் தாவரத் தண்டின் வெட்டுமுகத் தோற்றம், இழையங்களின் தொழில்கள் என்று பலதையும் பத்தையும் படித்தான்.

அயர்ச்சியாக இருந்தது. நேரத்தைப் பார்த்தான். பத்துமணி. 'மீதிக் கேள்விகளைக் காலையில் பார்த்துக் கொள்ளலாம்...' என நினைத்தவன் – கட்டிலை ஆயத்தம் செய்தான். படுப்பதற்கு முன்னதாக அறையை விட்டு வெளியே வந்தான்.

முன்கேற் பூட்டவில்லை என்ற ஞாபகம் வந்தது. கேற்றைப் பூட்டியவன், பூட்டை இழுத்துப்பார்ப்பதில் சில கணங்களைச்

செலவிட்டான். பின்னர், தனது சைக்கிளையும் ஐயாவின் சைக்கிளையும் முன்கூடத்தில் எடுத்துவிட்டான். வீட்டு முன் கதவை யும் பின்கதவையும் பூட்டி விட்டு வந்து, படுக்கையில் சரிந்தான். திடீரெனச் சந்தேகம் கிளர்ந்தெழ, முன்கதவைத் திறந்து கேற்வரை சென்று பார்த்தான். கேற் பூட்டிக்கிடந்தது. முன் கதவை பூட்டியவனுக்கு பின் கதவு பார்வையில் பட்டது, பின் கதவுக்குக் குறுக்குச்சட்டம் போடப் படாமல் இருப்பதைக் கண்டான். சட்டத்தை எடுத்துப்போட்டவன், கூடத்துக்கு வந்தான். தனது சைக்கிளையும் ஐயாவின் சைக்கிளையும் தொட்டுத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். சைக்கிள்கள் உள்ளே நிற்பது உறுதியானதும் - தனது படுக்கைக்கு வந்தான்.

அவனுக்கு பயமாக இருந்தது. கேற்றையும், கதவுகளையும், சைக்கிள்களையும் மறப்பதற்கு அந்தக்கனவுக்கன்னி சுகர்ணியை நினைத்துக்கொண்டான். அவளது நினைவுகள் ஊறலிப்பாக அவனோடு கிடக்க, அவன் அயர்ந்து தூங்கினான்.

தூக்கத்தில் புரண்டு படுத்தவனுக்கு, தனது படுக்கை வெதவெதப்பாக இருப்பதை உணர முடிந்தது. ஓரக்கண்பார்வையில் அவனது மார்பில் அவள்... அவனது சுகர்ணி சரிந்து கிடப்பது தெரிந்தது.

இது... இதென்ன மாயம்... இவள் இங்கே எப்படி...? அம்மணமாகக்கிடந்த அவளது அழகைப் பல கோணங்களில் அவன் ரசித்தான். அவளது பூ இதழ் போன்ற உதடுகளை வருடியவன், மென்மையாக முத்தமிடவும் செய்தான். அவனது கரங்கள் பரபரப் படைந்தன. அதனை உணர்ந்த அவள் அவனைப்பார்த்துச் சிரித்தபடி சொன்னாள்:

"ஒரு டசினடா...!"

"என்ன... பன்ரெண்டா....?

"ம்... பன்ரெண்டு முடிஞ்சுது... இப்ப நீ ஆயத்தப்படுத்திறது பதிமூண்டு..."

"எனக்கு எதுவுமே தெரியேல்லை... நினைவுகள் திசை தப்பி நழுவின மாதிரி..."

“ரமணா போதுமடா... போதும்... திரும்பத்திரும்ப ஒரே மாதிரி அலுப்பாயிருக்குது வேண்டாம்...”

“இல்ல... இல்ல... இப்ப வித்தியாசமாயிருக்கும்.” என்று கூறியவன் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான். அப்பொழுது அவள் சற்றுப்புரண்டு கொடுத்தாள்.

அவளது இடது மார்பு மடிப்புகளுக்குக் கீழாக அது ... அந்த மறு அவனுக்குத் தெரிந்தது. மைதடவியதுபோல அதுபடர்ந்து கருமையாக இருந்தது. இவனது பார்வை பட்டதும் அந்தக்கருமை நிறம் ஊதாவாக மாற்றம் கொண்டது.

அவன் பார்த்திருக்க அது சின்னஞ்சிறிய நாகதாளிப்புதராக மாறியது. சிறிதாக இருந்தாலும் கண்களால் பார்க்க கூடியதாக இருந்தது. தட்டையான தடித்த இலைகள், பூக்கள், காய்கள், கனிகள் என எல்லாமே இருந்தன. அந்த ஊதா நிறம் மட்டும் மாறாமலே இருந்தது. முட்கள் ஏதும் இருப்பதாக தெரியவில்லை. பழங்களைத் தேடித் தேடிப்பார்த்து, அவன் பறித்தெடுத்தான். பழங்கள் அவனது கிண்ணிவிரலின் அளவை விட சிறியதாக இருந்தன. சில பழங்களை நாவிலே இட்டான். நாவில் கரைந்த பழங்கள் அவனது உதடுகளையும் வாயையும் ஊதா நிறமாக்கின. சில பழங்களை அவளது உதடுகளை பிரித்து, வாயினுள் திணித்தான். அவளது உதடுகள், வாய் என்றில்லாமல், அவளது முழு உடலும் திடீரென அடர் ஊதாவாகி ஒளிர்ந்தது. திரும்பி வாகாகப்படுத்துக் கொண்டவள் இருகைகளையும் நீட்டி, அவனை வரவேற்கும் தோரணையில் கிடந்தாள். அவள் மீது படர்ந்த அவன், இயங்கத் தொடங்கினான்.

“பெண்ணே! இது... இது என்ன...? ரத்தமும் தசையுமாய்.... உயிர் உறிஞ்சும் வெதவெதப்பையும் அதே சமயம் நீரின் தளதளப்பையும் ஒருங்கே, எங்கே... எங்கே இருந்து பெற்றுக் கொண்டாய்... சுகர்ணீ...! நீ என்னவள் எனக்கே ஆனவள்...”

கலவிக் களிப்பில் கூத்தாடியவன், அவளுடன் ஆசை தீர முயங்கினான்.

அவனது குரல் ஐயாவுக்குக் கேட்டிருக்க வேண்டும்.

"என்னடா... என்ன கனவா... கனவில பிசத்திறயா...? எழும்பு... எழும்பி முகத்தைக் கழுவிப்போட்டுப் படி அப்பு..."

ஐயாவின் குரலில் இருந்த ஆதரவு அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

'கண்டது கனவா, கனவு மட்டும் தானா...?'

ஏமாற்றத்துடன் எழுந்தவன் 'இந்தக் கனவு நனவாகுமா...? சுகர்ணி எனக்குக் கிடைப்பாளா...?' என நினைத்தவன் அறையை விட்டு வெளியே வந்து ஐயாவைப் பார்த்துக் கேட்டான்:

"சுகர்ணி ரீச்சரை உங்களுக்குத் தெரியுமா...?"

"சுகரிணியா ஆரது....."

"தெரியேல்லையா...? அவ உங்களோட சரஸ்வதியில படிப்பிக்கிற மணியம் மாஸ்ரரின்ரை மகள்.... அவதான் என்ரை கனவில அடிக்கடி இப்ப வாறா..."

வெக்கத்தை விட்டு ஐயாவிடம் அவன் உளறினான்.

"உனக்கு இந்த O.C.D. யோட... உந்தப் பொம்பிளை விசரும் வந்திட்டது போல..."

"O.C.D. யா, என்ன சொல்லிறயள்..."

"சின்னதா ஒரு மன அழுத்தம்... கடுமையான வேலைப்பளு வில லேசா இருக்கிறதெல்லாம் கடுமையா உனக்குத் தெரியுது... இப்ப உனக்குப் பரீட்சை நடக்கிறதெல்லா... அதுதான் நீ இப்டிக் கசங்கிக் கிடக்கிறை... மன நல மருத்துவர் யோகனைக் கண்டு கதைச்சனான். ஒருக்கால் அவரிட்டை நாம போறது நல்லம்."

ஐயா கூறியவை அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. லேசாக முனகியவன்: "அதொண்டும் இல்லை... நீங்க சொன்ன மாதிரிப் பரீட்சைதான் இதுக்கெல்லாம் காரணம். பரீட்சை முடிஞ்சதும் எல்லாம் சரியாப் போயிடும்..."

"சரியடா... இதெல்லாம் தானா மாறக்கூடியது தான்... எண்டாலும் நாம டொக்டரைப் பார்க்கிறது நல்லம்..."

"ம்..." சொன்னவன், பிறஷ்சுடன் பாத்ரூம் பக்கம் போனான்.

"சரி ராசா... குளிச்சிட்டுக் கெதியில வா..." சொன்ன ஐயா வின் மனசெல்லாம் டொக்டர் யோகன் கூறியவை அடர்த்தியாக

ஆக்கிரமித்துக் கொண்டன.

"மாஸ்ரர் O.C.D., அது தான் இந்த Obsessive Compulsive disorder- எண்ணச்சுழற்சியும் அதனடியான அழுத்தமும் - ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு மாதிரி வரும். உங்க மகனுக்கும் இதுதான். பயப்பிடாதேங்க... இந்தப் பேதலிப்பு, வலைச்சிக்கலாய் மனசில சடைப்புக் கொள்ளேக்க.... வேண்டாத நினைப்பெல்லாம் வரும். அதால அதிக பயம், துக்கம், பதகளிப்பு, அமைதியின்மை எல்லாம் ஏற்படும். இதுகளில இருந்து தப்பிக்கிறதுக்கு, விடுபடுகிறதுக்கு அல்லது அதைக்குறைப்பதுக்கு ஒரே விஷயத்தை திருப்பத் திரும்பச் செய்யிற முனைப்பும் பழக்கமும் வந்திடும். அதோட பாலியல் சம்பந்தப்பட்ட அழுத்தங்களும் - அந்த அழுத்தங்களாலை, அது சார்ந்த கற்பிதங்களும் இருக்கும். பாதிக்கப்பட்ட ஆள் இது விஷயத்தில மூர்க்கத்தனமா மாறிறதும் உண்டு. எதுக்கும் கவனமா இருங்க. பரீட்சை முடிஞ்சதும் மகனை ஒருக்கால் என்னட்டைக் கூட்டிக்கொண்டு வாருங்களன்."

டொக்டர் சொன்னவற்றை அசைபோட்ட ஐயாவுக்கு வேறு சில சிந்தனைகளும் தொற்றிக் கொண்டன.

'இவனுக்கு ஆறுதல் தரும் என்டா அந்தச் சுகர்ணியை - மணியம் மாஸ்ரரின்ர மகளை இவனுக்கே முடிச்சுக் கொடுக்கலாம். எதுக்கும் இவன் படிச்சுக்கிடிச்சு சொந்தக் காலிலை நிக்கவேணும். மாஸ்ரரையும் கண்டு, ஒரு வார்த்தை இது பற்றிச் சொல்லி வைக்கிறது நல்லம்.'

'பாவம் அவன்...! என்ரை முசுட்டுத்தனத்தை எல்லாம் மூட்டை கட்டி வைச்சிட்டு, அவன்ரை மனசு ஆறுதல் படுற மாதிரி நான் இனி நடக்க வேணும்.'

கவலை மிகுந்தவராக ஐயா, அவனது வருகைக்காகக் காத்திருந்தார். குறைந்தது இரண்டு மணி நேரமாவது அவன் குளிப்பான் என்பது அவருக்குத் தெரியும். காத்திருப்பதைத் தவிர வேறு வழி எதுவும் அவருக்கு அப்பொழுது தெரியவில்லை.

•

## நாணயம்

அவள், அப்படியொன்றும் படு கிழம் அல்ல. இன்றைக் கில்லையென்று பார்த்தாலும் முப்பது வயதுகூட மதிக்கமுடியாத பருவ அழகு அவளுடையது. இருந்தும், அதிலொரு வரட்சி, வளமின்மை. அது அவளது வறுமை பூசிய பூச்சாகவுமிருக்கலாம். அல்லது அவளது வக்கரித்த வாழ்க்கை முறையின் சிதைவாகவு மிருக்கலாம். முதலாம் கட்டையடியில் வரும்பொழுதே அவளது கரம் அவளையறியாமலே, புருவத்தின் மீது குவிந்து கொள்கிறது. அவள் தன் பார்வையைக் கூர்மையாக்கி, 'ஆலடித்துண்டை'ப் பார்த்தாள். 'ஹூம்... ஆள்சிலமனில்லை... செக்குக்கூட ஆடேல்லை... பொடியனில்லையோ...? அதுக்கேதும் சுகமில்லையோ...?'

அவளது நினைவுகள் அவளையே வெட்கமுறச் செய்தன. சற்று முன்தான், சோமனும் சுருளியும் - அவளையும் அந்தப் பாலனையும் முடிச்சுப் போட்டுக் கேவலமாகப் பேசி விட்டுப் போனார்கள். 'சீச்சி அதற்கிடையில் இப்படியொரு நினைப்பா...' என்று அவளால் எண்ணாமலிருக்க முடியவில்லை.

அவர்கள் பேசிக் கொண்ட அளவுக்கு இவர்களிடையே அந்த 'இது' இன்னும் நடைபெறவில்லை. எனினும், அந்த 'விசேஷம்' எந்த நிமிஷமும் நடந்துவிட வேண்டுமென்ற தவிப்பு, துடிப்பெல்லாம் - அவளது மனதளவில், சில தினங்களாக ரகசியங் களாகிவிட்டதென்னவோ மறுக்க முடியாத உண்மை.

அந்தப் பாலனுக்கும் இவளைக் கண்டுவிட்டால் போதும்– ஏதோ புதுமணப்பெண்ணைக் கண்டுவிட்டது போல ஒருவகைக் கிளுகிளுப்பும், சிலிர்ப்பும் வந்து விடுகிறது.

என்ன இருந்தென்ன! அவனிடம் இவள் கோரும் அந்தப் பசிய தாள் - பத்துரூபாய். அது இல்லையே! எப்படியிருக்கும்? அவனுக்குத் தினம் கிடைப்பதே ஐந்து ரூபாய். அதில்... அதில்த்தான் அவனும், அவனது வயதான தாயும் காலந்தள்ள வேண்டியிருக் கிறது. அப்படிப்பட்டவொரு நிலைக்குட்பட்டு விட்ட அவனுக்கு இப்படியொரு செலவு கட்டுப்படியாகுமா? ஆகாது தான்!

அதனால்தான், அவள் அவனை எங்கு கண்டாலும் காணாதது போலத் தூரவிலகி விடுகின்றாள். ஆனால், இன்று மட்டும் மனம் அவனையே ஜபிப்பது அவளுக்கே ஆச்சரியமாக இருக்கிறது.

வேகமாக நடந்தவள், நாவலடியை நெருங்கியதும், வேகத்தைக் குறைத்துக் கொள்கின்றாள்.

"ஓ! எவ்வளவு பழங்கள்...!"

புழுதிமண்ணில் கரும்புள்ளிகளாய்ச் சிதறுண்டு கிடக்கும் பழங்களை வாரியெடுத்து மடியில் கட்டிவிட வேண்டுமென ஒரு குழந்தைத் தனமான இச்சையுடன் பரிதவித்தவள்; பின் தன்னை நிதானப்படுத்தியவளாய் - சில பழங்களை மட்டுமே குனிந்தெடுத்து ருசித்து, அவற்றின் சுவையில் திளைத்தபடி; மீண்டும் ஆலடித் துண்டைப் பார்த்தாள்.

அங்கே, அவன் பாலனே - முற்றத்தில் படங்கை விரித்து எள்ளுப் பரவியபடி நிற்பதென்றால்!

ஓ! அவள் மனம் அங்கு சிலிர்த்துச் சிதறுண்டு கிடக்கும் பழங்களைப் போலவே ஆகிவிடுகின்றது.

அவளைக் கண்டதும், அவனுக்கு வாயெல்லாம் பல்லாகி விடுகிறது. மின்சாரம் தாக்கியது போல ஒரு கணம் துடித்தவன், தானியங்கிப் பொம்மை போலக் கையிலிருந்த 'நார்க்கடகத்தை' தூர வீசிவிட்டு வீதிக்கே வந்து விடுகின்றான்.

"நாவல் பழம் தம்பி...! தின்னிறியா?"

அவள் குழைகின்றாள். அந்தக் குழைவில் இவன் கரைகின்றான்.

"தனம்! ஏய் தனம்...! நீ... நீயெங்கை போறை?"

அக்கா என்றுதான் அவளை அவன் அழைப்பது வழக்கம். ஆனால் இன்று அப்படிக் கூப்பிட அவனுக்கேனோ விருப்பமில்லை. அதனால், தனம் என்றே கூப்பிட்டான்.

'அக்கா' என்றழைத்து அந்த அசிங்கமான உறவை வைத்துக் கொள்வதா என்ன?

'கையில் சல்லிக் காசில்லை. ஆனால், இந்தப் பாழும் மனசிருக்கிறதே! ஓ! அது எதை எதையெல்லாமோ சுலபமாக நினைத்து விடுகிறதே!' அந்த அதிசயத்தை நினைத்தபொழுது, அவனுக்குப் 'பக்' கென்று சிரிப்பு வந்து விடுகிறது.

"தம்பி சிரிக்கேக்கையும் நல்ல வடிவு..."

"ஆங்... அப்படியே...? உண்மையா தனம்...!"

"நானும் தான் பார்க்கிறன், தம்பி எண்டைக்குமில்லாத விண்ணாணமாய்த் தனம் தனமெண்டு கரையிறார்...!"

"ஏன் பேர் சொல்லப்படாதோ...?"

"அதுக்கில்லைத் தம்பி...! நல்ல வடிவாய்ச் சொல்லும்... வாய்நிறையச் சொல்லும்... அதிலை என்ன இப்பை... நான் தம்பி, உதிலை, சந்தை வரைக்கும்தான் போறன். இரண்டு மீன் குஞ்சு வாங்கலாமெண்டு... இண்டைக்குச் சனிக்கிழமையுமதுவுமாய்ப் பிள்ளையளுக்கு முழுக்குப் பாரும் அதுதான்...! அது சரி தம்பி இண்டைக்கேன் செக்காட்டேல்லை."

"எள்ளில்லைத் தனம், அத்தோடை கிடக்கிற எள்ளும் துப்பரவில்லாமல் ஒரே குப்பையும் கூழமுமாய்க் கிடக்குது. அதுதான் செக்காட்டேல்லை." என்றவன், அவளை நெருங்கி; குரலில் இன்னும் சற்றுக் குழைவையேற்றிச் சரசத்துடன்:

"ஏது இண்டைக்கு நல்ல முழிவியளம் போலக் கிடக்குது... காலங்காத்தாலையே ஆரோ மடியிலை விழுந்திட்டான் போலை யிருக்கு...! அது தான் குளிப்பும் முழுக்குமாக்கும்!"

அவன் நமுட்டுச் சிரிப்புடனேயே விசாரித்தான்.

அவன் அந்த விஷயத்தை அப்படி அப்பட்டமாக, ஒருவகைப் பச்சைத்தனத்துடன் உடைத்துச் சொன்னவிதம் அவளுக்குப் பிடிக்கவில்லை. அவள் முகத்தைச் சுளித்தபடி:

"பச்சைப் பிள்ளையெண்டு பாத்தன்... அவற்றை பேச்சைப் பாரன் பேச்சை..."

என்றவள், அங்குமிங்கும் தன் பார்வையைச் சுழற்றி நோட்டம் விட்டபடி, "ஆச்சியில்லையே எங்கை போகிட்டுது...?" என்று கோட்டாள்.

"அது செல்லச் சந்நிதிக்குப் போகிட்டுது...!" அவன் தனது சௌகரிகமான தனிமையைப் பறை கொட்டுகிறான்.

'தனிமை ஓ! அது இருந்தென்ன பயன்... பணம்... சுகம்! அது... அது அக்கரைப் பச்சைதானா?'

அவனது நினைவுகள் அலைபாய்ந்தன. அவற்றைச் சலனப்படுத்தும் வகையில் அவளும்:

"சந்தைக்கு மீன் வந்து முடிஞ்சிடப் போகுது தம்பி... அப்ப நான் வரட்டுமே...?"

அவள் அவசரப்படுகின்றாளா? இல்லையில்லை அவசரப் படுத்துகின்றாள்!, என்பது அவனுக்குப் புரிகிறது.

'இவளை எப்படியேனும் தாமதிக்கப்பண்ண வேணும். இவள் தாமதிப்பதன் மூலம் இவளுடன் பேசியேனும் ஒருவகைச் சுகத்தைப் பெறலாம் தானே!' எனவொரு அற்ப சபலம் அவனது மனதில் சன்னம் பிளந்து சதிராடுகிறது.

"கொஞ்சம் எள்ளுக் கிடக்குது, துப்பரவாக்கித் தந்திட்டுப் போவன் தனம்!"

"அதுக்கென்னதம்பி... கொண்டாவன்," என்றவள் அவனைத் தொடர்ந்து குடிசையின் தாவாரத்துக்கே வந்து விடுகின்றாள்.

எள்ளுச்சாக்கை அவள் பக்கமாகத் தள்ளியவனுக்குப் 'பீடி' பற்றவேணும் போலிருந்தது.

காதில் சொருகியிருந்த, குறள் துண்டை எடுத்தவன் அதைப் பற்றுவதற்கு, தீப்பெட்டியை நாடி குடிசைக்குள் நுழைந்து, முருகன் படத்தடிக்கு போன போது தான், அந்த ஓவல்டின் டப்பா – உச்சியில்

துளையிடப்பட்டதால் உண்டியலாகிவிட்ட அந்த டப்பா - அவன் கண்ணில் பட்டது.

'இதிலை ஏதென் கிடக்கும்... இதை வைச்சே அவளை வளையும் பண்ணீட்டா...!'

ஓ! அந்த நினைப்பே அவனுக்கு ஒருவகைச் சிலிர்ப்பைத் தருகிறது. சிலிர்ப்பின் அடி நாதமாய் இழையும் ஒரு வகைப் பய உணர்வுடன் அவன் அந்த முருகன் படத்தையும் உண்டியலையும் மாறிமாறிப் பார்த்தான். பின் ஏதோவொரு முடிவுக்கு வந்தவனாய்:

"முருகா, முருகா என்னை மன்னிச்சிடப்பா", என்று ஏதேதோ உளறியபடி அந்த டப்பாவை எடுத்துத் திறந்து, அதிலுள்ள பணத்தை நிலத்தில் கொட்டி எண்ணினான்.

அதில் ஐந்தும் பத்துமாய், காலுமரையுமாய் சில்லறை சில்லறையாக எட்டு ரூபாய் எழுபத்து மூன்று சதம் இருந்தது.

'பத்து ரூபாய்க்கு ஒரு சதம் குறைஞ்சாலும் அவள் மசிய மாட்டாளே! அவன் சோமன் அப்படித்தானே சொன்னவன். மிச்சக் காசுக்கு என்ன செய்யிறது!'

சில தினங்களுக்கு முன் செல்லாத காசென்று குடிசையின் கிழக்குக் கப்புக்காலின் மேற்தளத்தில் வைத்த ஒரு ரூபாய் நாணயம் அவன் நினைவுக்கு வருகிறது. நிலத்தில் சிதறுண்ட கிடக்கும் பணத்தை வாரி மடியில் கட்டியவன், கிழக்குக் கப்புக்காலை அணுகி, அந்த ருபாயை எடுத்துப் பார்த்தான். அது துரு ஏறி, இருபுறமும் தேய்ந்து, தெளிவற்று, எழுத்துக்கள் மங்கிக் கோலங்கெட்டுக் கிடந்தது. அதையும் சேர்த்துக் கொண்டாலும் தேறுவது ஒன்பது ரூபாய் எழுபத்திமூன்று சதம் தான்.

இன்னும் இருபத்தியேழு சதத்துக்கு எங்கே போவது? அது கிடைக்கும் வழி அவ்வளவு சுலபமானதாக அவனுக்குத் தெரிய வில்லை. காலையில் கையிலிருந்த பணத்தில் இருபத்தைந்து சதத்தை மீதம் பிடித்துத்தான் 'பள்ளத் தான்ரை' கொட்டிலில் 'கள்ளு' வாங்கிக் கொண்டான். இருபத்தைந்து சதமும் அரை இறாத்தல் பாணுக்கும், பீடிக்கும் ஒதுங்கியது. அவனது தற்போதைய 'அவசர' தேவையை உத்தேசித்து, அவற்றை தியாகம் செய்யவும்

அவன் தயாரானான்.

அவனது உட்செவியில் ஒட்டிக் கொண்டிருக்கும் அந்த 'நாலு பணத்தைச்' சேர்த்தாலும் பற்றாக்குறை பஜட்தான். துண்டு விழுவது – இரண்டு சதம்.

"அதுக்குக் கடன் சொல்லீட்டா! சீச்சி கடனா?" என்று முனகியவன், 'இரண்டு சதம் தானே! அதை... அதை எப்படியேனும் அவளிட்டையே சுவறீற்றா...' ஓ! அந்த நினைப்பு அவனுக்கு அவளை நினைக்க வைக்கிறது. எங்கே அவள் போய் விடுவாளோ எனப் பயந்து, பரபரப்புடன் குடிசைக்கு வெளியே வந்து பார்த்தான்.

அவள், எள்ளைத் துப்புரவு செய்து விட்டு, முந்தானையை உதறியபடி எழுந்துவிட்டாள். "அப்ப என்ன தம்பி...! நான் வரட்டுமே...!"

"இஞ்சைவா தனம், உன்னட்டை ஒரு விஷயம் கதைக்க வேணும்." அவன் மீண்டும் குடிசைக்குள் நுழைந்தான். அவளும் சுற்று முற்றும் கண்களைச் சுழற்றிக் கள்ளத்தனமாகப் பார்த்து, தன்னை யாரும் கவனிக்கவில்லையென்பதை நிதானப்படுத்திக் கொண்டு, அவனைப் பின் தொடர்ந்தாள்.

குடிசையினுள் பாலன், ஏதோ தவறிய பொருளைத் தேடும் துடிப்புடன் அவஸ்தைப்படுவதைக் கண்டு அவள் "தம்பி என்ன அப்பிடித் தேடுறை", என்றாள்.

"ஒண்டுமில்லைத் தனம்" என்றவன், அங்கு அந்தக் குடிசையினுள் அடைந்து கிடந்த பொருட்கள் அனைத்தையும் – பெட்டி தொடக்கம் உறிச்சட்டிவரை எதையுமே விடாமல் எல்லாவற்றையும் குடைந்து குடைந்து தேடினான். அது, அந்த இரண்டு சதம் அவனை ஏமாற்றிக் கொண்டேயிருந்தது.

"என்ன தம்பி?" அவளது இழையும் குரல்.

"இல்லை... ஒரு ஐஞ்சு சதம்... பீடி வாங்கலாமெண்டு தேடிறன்..."

"பீடி வாங்கவே? பீடிக்குக் கூடக் காசில்லாமலே என்னை மினக்கெடுத்திறை."

அவளது குரலின் இளக்காரம், அவனைக் கூனிக் குறுகச்

செய்கிறது. அவனால் பதில் சொல்ல முடியவில்லை.

"நான் சந்தையிலையிருந்து வரையிக்க ஐஞ்சு சதத்துக் கென்ன பத்துசதத்துக்கே பீடி வாங்கிக் கொண்டு வாறன்... காசுள்ள போது தாவன் தம்பி!" என்றவள் - உதட்டைப் பிதுக்கியபடி, ஏமாற்றத் துடன் குடிசை வாசலை நோக்கி நடந்தபொழுது... அவன் அவளை எட்டிப் பிடித்தான்.

அவளது முந்தானைச் சேலை அவனது கையுடனே வந்து விடுகின்றது.

"என்ன தம்பி! காசில்லாமை..." அவள் திமிறினாள்.

"காசிருக்கு, கொஞ்சம் பொறு தனம்..." அவன் அழாக் குறையாக அவளைக் கெஞ்சினான்.

குடிசையின் ஒதுக்குப்புறமாக அவளை ஒதுக்கியவன், முருகன் படத்துக்கு நேர் மேலே, கூரையினுள் ஏதோ பழுப்பு மஞ்சளாய்த் தெரிவதைக் கண்டான். ஓ! அது மஞ்சள் பூசிய வெள்ளைத்துணி. 'இதுவும் என்ன நேத்திக் கடனோ' என ஒரு கணம் நினைத்தவன்; பரபரப்புடன் அந்தத் துணி முடிச்சை இழுத்தெடுத்து, அவிழ்த்தான். அதில் அவனது முயற்சியின் திருவினை முறுவலித்தது! அவனுக்கு வேண்டியது இரண்டு சதம். இருந்ததோ பத்துச்சதம், அளவுக்க அதிகம் தான்.

அவன் அவசர ஆர்வத்துடன் அவளைப் பார்த்தான். அவளோ அவனது செய்கைகளை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றாள். அவனது பதட்டமும், பரிதவிப்பும் அவளுக்குச் சிரிப்பையே ஊட்டுகிறது. அதை அவளால் அடக்க முடியவில்லை. அவள் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள்.

அவள் சிரிக்கும் பொழுது குழி விழும் அந்தக் கன்னங் களைக் கடித்துக் குதற வேணும் போல் ஒரு வெறி அவனுக்கு. அவளும் அதற்குத் தயார்தான்.

அந்தக் குடிசையின் ஒதுக்குப் புறத்தின் ஒடுக்கத்தில் இருவரின் 'கிசுகிசுப்பு'. தெளிவற்ற ஒலிக்குழப்பம். ஓ! அது அவர் களின் அந்தரங்க அனுபவம். இல்லை... அவனுக்கு அனுபவம். அவளுக்கு பசையுள்ள பிழைப்பு.

அவள் தன் சேலையில் பிசுபிசுத்த குடிசை மண்ணைத் தட்டியபடி எழுந்து கொண்டாள்.

அவனது மடியின் கனம் அவளது கைகளுக்கு மாறுகின்றது.

"பத்துமிருக்கு. எண்ணிப் பார்த்தெடு தனம்!"

"தம்பியை நம்பாமலே!"

இரையை 'அதக்கிய' அடைச்சாரையின் களைப்பு அவளுக்கு இப்பொழுது. அதோ! அவள் அவனிடம் விடைபெற்றுக் கொண்டு, வீதியில் இறங்கி விட்டாள். அவள் இப்பொழுது சந்தைக்குப் போகின்றாளாம்!

•

தனம் என்ற இந்தத் தனபாக்கியத்தை அந்தக் கிராமத்தில் தெரியாதவர்களே இருக்க முடியாது. பச்சைப் பிள்ளைகூடப் 'பத்து ரூபாய்' என்றதும், 'யார் தனபாக்கியமா?' என்று அர்த்தம் புரிந்தோ புரியாமலோ சிரிக்கும். அப்படி ஒரு பிரபல்யம் பெற்றுவிட்டவள் அவள். அந்தப் பிரபல்யம் வர ஒரு வகையில் காரணமானவர் கார்க்காரத் தம்பண்ணர்தான்.

மூன்று நாலு வருஷங்களுக்கு முந்தி, அந்தச் சம்பவம் நடந்திரா விட்டால் அவள் இப்படியெல்லாம் ஆகியிருக்க முடியாதுதான்! அன்று வானத்தைப் பிழந்து மழை கொட்டு கொட்டென்று கொட்டிக் கொண்டிருந்தது. நேரமோ இரவு எட்டு மணிக்கு மேலாகி விட்டது. அவள் யாழ் பஸ் நிலையத்தில் பஸ்ஸுக்குக் கால் கடுக்க நின்ற போது தான் "ஆரு பிள்ளை...? வீட்டுக்குத்தானே போறை... காரில போகலாம் வாவன்", அந்தக் குரலைக் கேட்டதும் அவள் சற்று யோசித்தவளாய் "வேறு யார் வருகினம்" என விசாரித்தாள்.

"அங்கை நாலு பேர் நிக்கினம்... நீயும் வாவன்" என்று கூட்டிக்கொண்டு போன தம்பண்ணரை நம்பித்தான் அவள் போனாள். நம்பியவளை அவர் கைவிடவில்லை. அவளது வாழ்க்கைக்கு வேண்டிய ஒரு புதிய வழியை அல்லவா அவர் காட்டிக் கொடுத்த புண்ணியத்தைக் கட்டிக் கொண்டு விட்டார்.

"தங்கச்சி முன் சீற்றில ஏறன்."

“இல்லை பின் சீற்றிலையிருக்கிறன்... ஆக்கள் எங்கை, நாலு பேரையும் காணேல்லை...?”

“அங்கை பழைய பண்ணையடியில நிக்கினம் போய் ஏத்திக் கொண்டு போவம்.”

அதை அவள் நம்பினாள்.

பழைய பண்ணையில் அந்த நாலுபேரும் ஏறவில்லை. அவர் அதற்குச் சமாதானமாக “அவன் ‘சுறுக்கற்றை’ பொடியன் எனக்கு முந்திப் போனவன் ஏத்திக் கொண்டு போயிட்டான் போலைக் கிடக்குது” என்றார்.

அதையும் அவள் நம்பினாள்.

“தங்கச்சி எங்கை போயிட்டுப் போகுது?”

“மயிலிட்டி ஆஸ்பத்திரிக்கண்ணை... அவர் கச ஆஸ் பத்திரியில தானே கிடக்கிறார்.”

“ஆரு இரத்தினமே... இப்ப எப்பிடிப்பிள்ளை?”

“பரவாயில்லை... சிவனே எண்டு உசிருக்கு ஆபத் தில்லை... ஆனால், உழைப்புப் பிழைப்புத்தான் இனி முடியாது.”

“அப்பிடியா? ச்சா... ச்சா...” என்று சூழ் கொட்டியவர், “தங்கச்சிக்கு குழந்தை குட்டி ஏதும் உண்டே...” என்று வினவினார்.

“இரண்டு குஞ்சுகள் அண்ணை மூத்தவளுக்கு நாலு வயது... தம்பிக்கு இரண்டு வயது நடக்குது.”

“அப்படியா பச்சைப் பாலாவியள்... பச்சைப் பாலாவியள்.”

அன்பாய், ஆதரவாய், கதைத்துக் கொண்டு வந்த தம்பண்ணர் பிள்ளையார் கோயிலடியில் காரை நிறுத்தி உண்டிய லுக்குக் காசு போட்டார். அவளும் ‘ஐஞ்சு சதம்’ கொடுத்தாள். அதை வாங்கிய பொழுது அவரது கரம் அவளைத் தீண்டியது. அதை அவள் பொருட்படுத்தவில்லை... ஏதோ தெரியாமல்பட்டதாக நினைத்து, மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டாள்.

இடிவிழுந்த குண்டைத் தாண்டிப் பெரிய வெளிச் சந்தியை அடைந்த கார், அராலி றோட்டால் திரும்பியபொழுது அவள் உண்மையிலேயே பயந்து விட்டாள். அவள் விக்கித்துப் போய் “எங்கையண்ணை போறை,” என்றாள்.

"அராலி றோட்டிலை கொஞ்சம் பூவரசம் குழை வெட்டச் சொன்னனான் பிள்ளை, அதைப் பார்த்திட்டுப் போவம்..."

அதைத்தான் அவளால் நம்ப முடியவில்லை.

அராலிச்சந்தியால் திரும்பும் போதே அவர் காரின் ஹெட் லைட்டை அணைத்தது அவளுக்கு இன்னும் பயத்தை அதிகப் படுத்தியது. அவள் அந்த இருட்டில் வலிமை குன்றி ஒடுங்கிப் போனாள். சிறிது தூரம் சென்ற கார், தானாக நின்றது. அவள் கார்க் கதவைத்திறந்து ஓடி விட முயற்சித்தாள். அவளால் அந்தப் பாழாய்ப் போன கார்க் கதவைத் திறக்க முடியவில்லையே...! ஆனால், அவர், தம்பண்ணர் என்ன லாவகமாக அதைத் திறக்கின்றார். அவர் தான் திறந்தாரா...? அல்லது அது தானாகத் திறந்து கொண்டதா?

எது எது நடக்கக் கூடாது என்று வேண்டாத தெய்வங்களை யெல்லாம் வேண்டினாளோ; அது அது அங்கு வரைமுறையின்றியே நடந்தது. இல்லை, நடந்து முடிந்தது.

அவளை நொச்சிக் காட்டிற்கு அப்பால், பட்ட வேம்பு வயிரவர் கோவிலடியில் விட்டுவிட்டு அவர் – தம்பண்ணர் போய் விட்டார். அவள் அந்தப் பட்ட வேம்படியில் தனிமைப்பட்டு நின்றாள். அவளுக்கு இந்த உலகமே சூனியப்பட்டு விட்டது போன்ற பிரமை. அவள் அந்தப்பட்ட வேம்படியை வெறிக்க வெறிக்கப் பார்த்தபடி நின்றாள். அவள் கரத்தில் கசங்கிய பத்து ரூபாய் நோட்டு, அதை அந்தப்பட்ட வேம்படி வயிரவ சூலத்தடியில் விட்டெறிந்துவிட்டு, அவள் அங்கு மண்ணில் விழுந்து கிடந்து, குமுறிக் குமுறி அழுதாள். அவளின் புனிதச் சிதைவுக்கு அங்கு அந்த முச்சூலம் இரங்கி இனி என்ன பயன்...

அன்று அப்படிக் குமுறியவள்; இன்று எப்படியெல்லாமோ நடந்து கொள்கிறாளே என்று விசனிப்பதில் பயனில்லை. அந்த அனுபவத்தின்பின் ஒரு ஆறுமாத காலத்திற்குள்ளாகவே, அவன் இரத்தினம் கசத்தின் கொடுமை தாளாமல் இறந்த பொழுது அவளால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. தம்பண்ணர் காட்டிய அந்த வழி அவளுக்குச் சௌகரிகமாக இருந்தது. 'இடைசுகம்' தம்பண்ணரின் உதவி கிட்டிய பொழுதிலும், அவரால் புதிய புதிய வாடிக்கையாளர்கள் அவளுக்குக் கிடைத்தனர். அதற்கு அவர்

கமிஷன் வாங்குவதில்லை. அந்த அளவிற்குப் பெருந்தன்மை வாய்ந்தவர் அவர். அந்தப் பெருந்தன்மையை மதித்து அவளே, ஏதோ தானே முன் வந்து உதவ நினைத்தாலும் அவர் பச்சை நோட்டொன் றுடன் தான் அவள் உதவியை, தயவைப் பெற்றுக் கொள்வார். அப்படியொரு நாணயஸ்தர் அவர்.

•

'இன்று இதோ காலையிலேயே ஒரு புதிய வாடிக்கை. அதுவும் நாணயமானதுதான்...' என நினைத்தவள் மடியில் கனக்கும் பணத்தை மகிழ்ச்சியுடன் அவிழ்த்தாள். அதில் முழித்துக் கொண்டு கிடந்த அந்தச் செல்லாத ஒரு ரூபாய் நாணயம் அவள் கண்களை உறுத்தியது. "அட பாவி ஏமாத்திப் போட்டானே" என்று பதறியவள் அந்தச் செல்லாத ரூபாயை எடுத்துத் திருப்பித் திருப்பிப் பார்த்தாள். அவளுக்குக் கண்ணீர் வந்துவிடும் போலிருந்தது.

நொச்சிக் காட்டடியில் வரும் பொழுதே பட்ட வேம்பு வயிரவர் கோவில் தெரிகிறது. அன்று அந்தப் பத்து ரூபாயை ஒருவகை வெறுப் புணர்ச்சியுடன், வெறியுடன் விட்டெறிந்தவள்; அதன் பின் ஒவ்வொரு உழைப்பிலும், பட்ட வேம்பானுக்கு ஒரு ரூபாய் காணிக்கை செலுத்தத் தவறுவதில்லை. அதை வழக்கப்படுத்திக் கொண்டு விட்டாள். எங்கிருந்தாலும் வந்து செலுத்தித் தன் பாவங்களை அவரது பாதங்களில் கரைத்து விடுவதாக ஒரு நினைப்பு அவளுக்கு.

இன்றும், அதே நினைப்புடன் அவள், தன் கையிலிருந்த செல்லாத அந்த நாணயத்தைத் திருப்பித் திருப்பிப் பார்க்கின்றாள். பின் என்ன நினைத்தாளோ ஏது நினைத்தாளோ! அந்தப்பட்ட வேம்பை மும்முறை வேகமாக வலம் வந்து வணங்கியவள், அந்த செல்லாத ரூபாயை உண்டியலில் காணிக்கையாக்க நினைத்தவள்; ஒரு கணம் தயங்கி, நல்ல ரூபாய் குற்றியொன்றை எடுத்து, உண்டி யலில் இட்டாள். அது அவளுக்கு மிகுந்த மனநிறைவைத் தந்தது.

அவளது நடையில் அவசரம். அவள் இப்பொழுது இரண்டு மீன்குஞ்சுகள் வாங்குவதற்குச் சந்தைக்குப் போகிறாள்!

•

வீரகேசரி 1970(முதற் படைப்பு)

## தெரிந்தும் தெரியாமலும்...

சப்பழிந்த தோற்றத்துடன், அவன் ஒல்லித்தேங்காய் மாதிரி இருந்தான். உலர்ந்து போய்க் கிடந்த அந்தக் குட்டையான உருவம் - அசைந்து அசைந்து, அரை விழிப்புடன் எதிரே வந்தபோது அவனது ஜீவிதச்சிலிர்ப்புத் தெரிந்தது.

உருவ அமைப்பில் அவன் மனிதப் பிறவியாகத் தோன்றிய போதும் - மனித இயல்புகள் தப்பியவனாகவே நடந்து கொண்டான். தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த அவனை அணைப்பதற்கும் ஆதரவு தருவதற்கும் யாரும் அங்கு இருப்பதாகத் தெரியவில்லை.

ஊர் முழுவதும் சுற்றித்திரிவதும் - கையில் கிடைப்பதை யெல்லாம் வாயில் போட்டு, முன்துருத்தியபடி இருக்கும் வயிற்றை ஆசுவாசப்படுத்துவதும்தான் அவனது தொழிலாக இப்பொழு தெல்லாம் இருக்கிறது.

அவனது ரிஷிமூலம் யாருக்கும் தெரியாது. ஊரில் உள்ள முதியவர்களுக்கு மட்டும் அவனைப் பற்றிக் கொஞ்சம் கொஞ்சம் தெரிந்திருந்தது. அவனது அடி ஊற்று என்னவோ இலந்தையடிப் பக்கம்தான் என்பது அவர்கள் கசிய விட்ட செய்தி. இலந்தையடிப் பெண் ஒருத்தி வந்தான் வரத்தான் ஒருவனோடு கூடிப் பெற்ற பிள்ளைதான் இந்த முத்தன் என்ற முத்துராசு.

அவன், தகப்பன் பெயர் தெரியாதவன் என்பது ஊர் அறிந்த ரகசியம். இந்த வசை ஊர் முழுவதும் கொட்டிச் சிந்தப்பட்டிருந்தது.

அதுபற்றி அவன் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. மானரோசம் பார்த்து நடக்க அவனக்குத் தெரியாதிருந்தது. அவனுக்குத் தெரிந்த தெல்லாம் பசி; அடிவயிற்றைக் கிழித்துப் புரட்டும் அகோரபசி; அது மட்டும்தான்!

அவனது அம்மா, அவனைப் பெற்றுப்போட்டு விட்டு மோசம் போனபோது, அவனது அம்மாச்சிதான் அவனுக்கு எல்லாமென்று ஆகியது. பதினாறு வருஷங்களுக்கு மேலாகவே அவளது ஆதரவு அவனுக்கு இருந்தது. அவள் தன்னை ஒறுத்து இவனை ஆளாக் கினாள். அவள்கூட போன மார்கழியில் - ஒரு கனத்த மழைநாள் - நெஞ்சுவலி என்று சுருண்டு படுத்தவள் எழும்பாமலே பொசுக் கென்று போய்விட்டாள்.

அவளது மரணவீட்டில் விழிபிதுங்கி, புலம்பி அழுவதற்குக் கூடத் தெரியாமல் அவன் விட்டேத்தியாக நின்றான்.

சாவீட்டில் தொட்டகை பட்டகையாக நின்று உதவியது அக்கம்மை என்ற அவனது இரத்த உறவு தான்.

அம்மாச்சியின் சடலத்தைச் செம்மணிவரை ஊர் எடுத்துவர, அவனும் கூடவே சென்றான். ஆச்சிக்கு கொள்ளி போட்டது அவன் தான்.

ஆச்சி இருந்த போது கால்வயிறு அரைவயிறு எனக் கழுவியவனுக்கு, செல்லும் திசை தெரியவில்லை. பசி பசி என்று அலைவதே அவனது திருவினையாகியது.

பசிப்பிணியைப் போக்க எதையும் செய்யும் துணிவும் களவாணித்தனமும் அவனிடம் இருந்தது.

சின்னச் சின்னத் திருட்டு. ஊர்வன, நகர்வன, பறப்பன என்று எதைக் கண்டாலும் தனது கையிலிருக்கும் 'கெற்றப்போல்', துணை கொண்டு அவற்றை அடித்து, துடிதுடிக்க நெருப்பில் வாட்டிப் புசிப்பான்.

கடந்த இரண்டு நாட்களாக எதுவும் கிடைக்காது தவித்த வன், இலந்தையடி வயிரவர் கோயில் குருக்கள் தந்த புளி யோதரை யையும் சக்கரைப் பொங்கலையும் சாப்பிட்டான். அவனது ஆனைப் பசிக்கு அது சோளப்பொரி போட்டது போலத்தான் இருந்தது.

அப்பொழுது அக்கம்மையின் நினைவுவர, அவளிடம் போவதற்கு அவன் தீர்மானித்தான்.

முன்னர் இரண்டொருமுறை அவளிடம் போன அனுபவம் அவனது அடிமனதில் ஊறலாய்க் கிடந்தது. அவர்களிடம் உள்ளதைத்தான் அக்கம்மையும் அவளது ஆசை மகளும் இவனுடன் பகிர்ந்து கொள்வார்கள். ஒருவகையில், அவன் அங்கு வேண்டாத விருந்தாளியாகத்தான் இருப்பான். அக்கம்மையின் முகம் திரிந்த நோக்கைக் கண்ட மறுகணமே அவன் சுறுக்காக இலந்தையடிப்பக்கம் வந்துவிடுவான்.

அவனுக்கு எது தெரியுதோ இல்லையோ அக்கம்மையின் ஒதுக்குதலும் முகச்சுளிப்பும் நன்றாகவே தெரிந்திருந்தது.

அக்கம்மையிலும் பார்க்க அவளது சின்ன மகள் தவமணி யிடந்தான் அவனுக்கு ஒரு வசீகரமும் ஈர்ப்பும் இருந்தது. அது கூடத்தன்னிச்சையானதல்ல. ஒருவகை இயல்பூக்கம் தான்!

குச்சி குச்சியான கால்கள், கைகள், பென்னம் பெரிய படபடக்கும் கண்கள். உலர்ந்து பொருகு தட்டிய உதடுகள். எண்ணெய் காணாத பரட்டை பற்றிய தலைமுடி. கன்னங்கரே லென்ற நிறம் எனத் தவம் இருந்தபோதும் அவனுக்கு அவள் அழகி யாகவே தெரிந்தாள். செறிவான பிரியம் அவளில் எப்பொழுதும் வழிந்துகொண்டே இருந்தது.

அவர்களது வீட்டுப்பக்கம் போகும் போதெல்லாம் அந்தக் கரும்பட்டுப் போர்த்திய அழகியுடன் அவன் உலா வந்தான். கை ஒழுங்கைகளில் நடக்கும் போது அதன் கிளையொழுங்கைகள் அவனைத் திகைக்க வைத்து விடும். தடுமாறும் அவனைத் தவம் தான் – அவனது கரங்களைப் பரிவுடன் பற்றியபடிக்கு – அழைத்துச் செல்வாள்.

அவர்கள் இருவரும் காலை புறப்பட்டால் மதியம் தான் வீடு திரும்புவார்கள். அப்பொழுதெல்லாம் அவனது கரங்களில், தப்பாமல் இரண்டொரு அணிற்பிள்ளையாவது இருக்கும். அத்துடன் கர்ணனின் கவசகுண்டலம் போல அவனது கெற்றப்போலும் அவனுடன் இருக்கும்.

இரத்தம் சொட்டச் சொட்டக் கொண்டு வரும் அணிற் பிள்ளைகளை வறுத்து, அவனுக்கும் அவளுக்கும் அக்கம்மை விருந்து வைப்பாள்.

அப்படியொரு விருந்தை உண்ண வேண்டும் என அவன் மனம் அவாவியது. அதுமட்டுமல்ல, தவமணி பற்றிய நினைவுகளும் அவனை அலைக்கழித்தன. அவளது பென்னம் பெரிய கண்களில் தேங்கி நிற்கும் ஈரலிப்பான கனிவும் மிகுதியான எதிர்பார்ப்பினை வழியவிடும் அவளது உடல்மொழியும் அவனுக்குப் பெரிதும் பிடித்திருந்தன. அதே சமயத்தில் அக்கம்மையை நினைத்ததும் - அவளது கரகரப்பான குரலும் அதட்டும் பார்வையும் அவனுக்கு ஒரு வகை நரநரப்பையே தந்தன.

இவை யாவும் அவனைப் பொறுத்தவரை கணநேர அனுபவங்கள் தான். பசியின் அடிவயிற்றுச் சுரண்டல் அவனுக்கு எப்பொழுதும் தொந்தரவு தருவதாகவே இருந்தது.

அக்கம்மை வீட்டுக்குப் போக வேண்டுமெனத் தீர்மான மானதும் - தாயும் மகளும் மனங்குளிரும்படியாக ஏதாவது கைநிரம்ப எடுத்துச் செல்ல வேண்டும் என அவன் நினைத்துக் கொண்டான்.

எப்பொழுதுமே இலந்தையடி வயிரவர் கோயில் முன் மண்டபத்தில் சோம்பிக்கிடந்து, தாமசதவம் இயற்றம் அவன் அன்று பின் இரவில் ஒரு துர் மிருகத்தின் சுறுசுறுப்புடன் இயங்கத் தொடங்கினான். இருட்டும் இருண்மையும் அவனுக்கு நிரம்பப் பிடிக்கும். அந்த அடர்ந்த இருளில் அவன் இறங்கி நடந்தான்.

கோயில் வீதியால் நடந்து வந்தவன், சிவன் கோயில் பின்வீதியில் மிதந்து, மணல்தறை ஒழுங்கையில் இறங்கினான். மேற்குப் பார்த்துத் திரும்பியவன், ஒழுங்கையின் முச்சந்தியில் தரித்து நின்று, முன்னாலிருந்த வளவை எட்டிப் பார்த்தான். அதனுள் அந்தப் பண்ணை இருந்தது; கோழிப்பண்ணை. கொஞ்சம் தூரமாக உள்ளொடுங்கி இருந்தது. பண்ணையின் சொந்தக்காரார் சிவசம்பு வின் வீடு, வளவின் தென்கோடியில் தெரிந்தது.

பாற்கிளுவையும் சீமைக்கதியாலும் நெருக்கமாக போடப் பட்டு, வேலி வரியப்பட்டிருந்தது. மடியில் எப்பொழுதும் தயாராக

இருக்கும் வில்லுக்கத்தியை எடுத்தவன், வேலி வரிச்சை வெட்டினான். ஓராள் புகுந்து போகக்கூடிய பாதையை ஏற்படுத்தி, கோழிக்கூட்டுக்குக் கிட்டவாக வந்தான். கூட்டின் வடக்குச் சாய்வில் இருந்த கம்பி வலையைக் கத்தியால் கிழித்தான். தூக்கக் கலக்கத்துடனிருந்த கோழிகள் மெதுவாகக் கொக்கரித்தன. கோழிக் கூட்டுக்குள் நுழைந்தவன், தாவிப்பாய்ந்து ஒரு கோழியை அமுக்கினான். கோழி கனமாக இருந்தது. கோழியின் குரல்வளையை இறுக்கமாகப் பற்றினான்; அதைத் திருகினான்.

கோழி கொக்கென்ற ஒலியுடன் தலைசாய்த்தது. கூட்டில் இருந்த பறவைகள் ஒரு கணம் சிறகடித்துப் பறந்தபோதும் – பெரிய அளவு சலனம் ஏதும் அங்கு ஏற்படவில்லை.

தொலைவில் கிடந்த சிவசம்பருடைய பெட்டை நாய் மட்டும் லேசாக முனகிவிட்டு அமைதி கொண்டது.

'கிழடா இருக்க வேணும்... இயக்கம் கெட்ட சென்மம்...!' நினைப்பு அவனுக்கு லேசான சிரிப்பையும் வரவழைத்தது.

கோழியுடன் இலந்தையடிப் பக்கம் வந்தவன், வீதியோரம் குப்பை, கூளங்களுடன் கிடந்த போறைப் பையை எடுத்து, குப்பையைக் கொட்டிவிட்டு, அதனுள் கோழியைத் திணித்தான். பின்னர், தனது தலைமாட்டில் வைத்தபடி படுத்துக் கொண்டான்.

கோயில், கடவுள், புனிதம், பவித்திரம், அமானுஷ்யம் என்பதெல்லாம் அவன் தெரிந்திராத ஒழுக்க விதிகள். அவன் தெரிந்து கொண்டதெல்லாம் பசி... பசி மட்டும்தான். அதைத் தீர்த்துக் கொள்வதற்கு எந்த வழிமுறையையும் அவன் கைக் கொண்டான். அதில் தளர்ச்சி ஏதும் ஏற்படாதவாறு பார்த்துக் கொண்டான்.

ஏலவே தீர்மானித்தது போல அக்கம்மையிடம்தான் அக்கோழியை எடுத்துச் செல்ல வேண்டும் என நினைத்தவன், தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்தான்.

'உதவாக்கரை... எதுவுமே செய்யமுடியாத சோம்பேறித் தனம்... மந்த புத்தி... இந்த தறுதலைத்தனம் உன்னிலை எப்ப இல்லாமல் போகுதோ அப்பதான் நீ நிமிரேலும்...'

அவனைக் காணும்போதெல்லாம் வசைபாடும் அக்கம்மை யின் தோற்றம் அவனை அப்பொழுது நடுங்க வைத்தது.

'இந்தக்கோழி அக்கம்மையை மட்டுமல்ல, ஆன தீன் இல்லாது வற்றலாய்க் கிடக்கும் தவத்துக்கும் பிடிக்கும். மூண்டு பேருக்கும் அச்சா விருந்தா இருக்கும்... அக்கம்மையிடம் அரிசி இருக்குமா...? அதுவும் மொட்டைக் கறுப்பனெண்டா சோக்கா இருக்கும்.'

வாயை சப்புக் கொட்டிக் கொண்டு கிடந்தவன், கோழிச் சூட்டின் வெதவெதப்பில் சிறிது அயர்ந்து தூங்கினான்.

•

நல்லூர் கந்தனின் உதய பூசை மணியடித்தபோது அவன் விழித்துக் கொண்டான். காற்றில் இருந்த லேசான குளிர் அவனை நடுங்க வைத்தது. கோயில் பின்புறமாக இருந்த கிணற்றில் முகம் அலம்பியவன், கொக்குவில் பக்கமாக நடக்கத்தொடங்கினான்.

'அங்கு என்ன மாதிரி வரவேற்புக் கிடைக்கும்... அக்கம்மை என்ன சொல்லுவாள்... தவத்துக்கு இது சந்தோஷம் தருமா...?'

சிந்தனை வசப்பட்டவனாக நடந்தவன், அக்கம்மை வீடு வந்து விட்டதை உணர்ந்து, படலையைத் தட்டினான்.

தவந்தான் வந்து படலையைத் திறந்தாள். அந்தப் புலரி ஒளியில் அவளது கருமை நிறம்கூட வெண்சாம்பல் நிறமாகத் தெரிந்தது. அது அவனுக்கு வியப்பைத் தந்தது. முன்னைக்கு இப்போது அவள் கொஞ்சம் தசைப் பிடிப்போடு இருப்பது போலத் தோன்றினாள். மொழு மொழுப்பு இல்லாத அவளது குமரித்தன்மை அவனைக் கிறங்க வைத்தது. ஓரக்கண் கொண்டு அவனை அவள் பார்த்தாள். அந்தப் பார்வையை ரசிப்புடன் பார்த்த அவன் அவள் அருகாக வந்தான். அவனைப் பொறுத்தவரையில் இது இயல்பாக நடந்த ஒன்றல்ல... ஒரு கணநேர மனச்சுளிப்புத்தான்.

ஏறக்குறைய ஆறுமாதங்களின் பின்னர் அவளைக் கண்டதால், தாபம் மீதூர, அவளது கரங்களை அவன் இறுக்கமாகப் பற்றிக் கொண்டான். அவளது கரங்களில் இருந்த இளம் சூடு அவனை உணர்ச்சி வசப்படுத்தியது. அவன் அவளது காதோரம்

முத்தமிட முயன்றான்.

"சிணி... இப்ப இந்தவேலையுமா...? கழிசடை... கழிசடை...!" கூறியவள், தனது கைகளால் பலம் கொண்ட மட்டும் அவனது முகத்தைப் பிடித்துத் தள்ளினாள். சற்று நிலை தடுமாறி விழப்போனவன், சமாளித்துத் தன்னைச் சமனப்படுத்திக் கொண்டான்.

'அட இவளுக்கு இவ்வளவு பலமா...?'

திடீரென முகக்குறி மாறச் சிரித்தவள், அவனது கண்களைப் பார்த்தாள். அவற்றில் கவலை படிந்த ரேகைகள். அதைத்தாளாத வளாய் "எல்லாமே ஒரு விளையாட்டுக்குத் தான்,"என்றாள்.

அவள் கிடுகிடுவென வளர்ந்து விட்டது போலத் தோற்றங் காட்டினாள். பதினைந்து வயதுக்கு - அவளது வளர்ச்சி அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. உதடுகளின் உலர்வுடனான திரட்சியும் மார்பகங்களின் குழைவும் அவனைத் திணறடித்தன.

அவளை விழுங்கிவிடுவது போலப் பார்த்தபடி உள்ளாக வந்தான். வந்தவன்: "தவம் மச்சச் சட்டியைக் கொண்டா...?" என்றான்.

அவள் சட்டியை நன்றாக அலம்பி எடுத்து வந்து அவன் முன்னால் வைத்தாள்.

அவன் குடிசையின் தெற்குப் பார்த்து நடந்து, கோடிப்பக்கம் போனான். போனவன், "ஒரு வாளி தண்ணி வேணும்", என்று கூறினான்.

அவள் தண்ணியுடன் வந்தபோது அவன் கோழியை உரிக்கத் தொடங்கியிருந்தான்.

அவனது கை லாவகமும் சுறுசுறுப்பும் அவளுக்குப் பிடித்திருந்தது.

"என்ன கள்ளக்கோழியா...? இந்த வேலையளை எப்பதான் நீ விடப்போறையோ தெரியேல்லை... அம்மாட்டை கவனப் பிசகாச் சொல்லிப்போடாதை... அது சமைச்சுத்தராது..."

"அவ மாட்டன் எண்டா நீ சமையன்...!"

"போடா... உன்ரை மனிசி எண்ட நினைப்பு இப்பயே உனக்கு

வந்திட்டுதா...? கள்ளப்பயல், முடிச்சுமாறி...! உந்த வேலையள எல்லாம் நீ விட்டால் தான் என்ரை காத்து உன்னிலை படும்...!"

"நீ இல்லாட்டில் என்ன... இலந்தையடிப் பக்கம் இன்னொண்டைப் பார்த்தால் போச்சு..."

போடா போய்ப் பார்...! சின்னச் சிரிப்புடன் நடந்து சென்ற தவம் தாயிடம் ஏதோ முறையிட்டாள்.

வீட்டுக்கு வெளியே வந்த அக்கம்மை, "கோழியா...? சோத்துக்கு அரிசிகூடக் கிடக்குது... மொட்டைக் கறுப்பன்...!" என்று கூறினாள்.

உள்ளே வந்த தவம், இறைச்சி நிறைந்த சட்டியை அடுப்பில் வைத்தாள்.

"அட இந்தக் கோழிக் கறிக்கும் சோத்துக்கும்... ஒரு அரைப்போத்தல் சரக்கு இருந்தால்..."

வாயைச் சப்புக் கொட்டியவன், அக்கம்மையைப் பரிதாப மாகப் பார்த்தான். அவளிடம் இருந்து எதுவும் பெயராது என்பது தெரிந்ததும் குடிசை ஓரத்தில் இருந்த மரக்குற்றியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்து கொண்டான்.

கோழிக் குழம்பு கொதித்துவர அதன் குணமும் மணமும் அவனது மூக்குவரை வந்து மோதியது. வாயில் திரண்ட உமிழ் நீரைக் காறித் தூரமாகத் துப்பியவன், பொறுமையாகக் காத்திருந்தான்.

'காலையிலேயே சோறும் மச்சக் கறியும்... இரண்டு நாள் பட்டினி கிடந்ததுக்கு இது பெரிய விருந்துதான்...'

மனதில் குமிழிடும் எண்ணங்கள்.

அக்கம்மை தட்டுவத்தில் கொண்டு வந்து தந்த சோற்றையும் கறியையும் வேகமாக விழுங்கினான். குழம்புக்கறிக்கு தோதாகக் கத்தரிக்காய் வெள்ளைக்கறியும் அக்கம்மை வைத்திருந்தாள். ருசித்து ருசித்துச் சாப்பிட்டவன், தவத்தின் கரங்களைப் பிடித்திழுத்து, "நீயும் சாப்பிடு பிள்ளை..." என்றான்.

"திண்டால் எனக்குச் செமிக்காது... உந்தக் கள்ளக் கோழி முழுவதையும் நீயே விழுங்கு...!"

"கள்ளக் கோழியா...? சிவசம்பரிட்டை கடனா வாங்

கினது... காசு கொடுக்க வேணும்..."

"போடா புழுகுண்ணி...! காசு கொடுப்பாராம் காசு... உழைப்பு பிழைப்பு இல்லாமல் சோம்பலே துணையா இருக்கிற உனக்கு களவைத்தவிர வேறென்ன தெரியும்."

"இல்ல... உண்ணாணை இது கள்ளக் கோழியில்லை..."

"ஏன்ரா துடிக்கப் பதைக்க பொய் சொல்லிறை..."

அக்கம்மையும் அவனை அதட்டுவது போலப் பேசினாள்:

"இஞ்சை, குணத்தார் கிணறடிக்கிறார் போலக் கிடக்கு... நாள் கூலியா ஐந்நூறு அறுநூறு கிடைக்கும்... நான் சொல்லி விடுறன், போய் வேலை செய்..."

முகத்தை அஷ்டகோணமாக வைத்துக் கொண்டவன்:

"இப்ப ரெண்டு நாளாய் நாரிப்பிடிப்பும் அதுவுமாய் கஷ்டப் படுறன்... பிறகு பாப்பம்..."

கூறியபடி எழுந்து கொண்டவன், கையையும் வாயையும் அலம்பிவிட்டு வந்து, திண்ணையில் படுத்துக் கொண்டான். படுத்த மறுகணமே குறட்டை விட்டபடி அயர்ந்து தூங்கினான்.

ஆபாசமாக விலகிக் கிடந்த அவனது அரைத்துண்டை, "மானங்கெட்டவன்..." எனப் புறுபுறுத்தபடி தவம் தான் ஒதுக்கி விட்டாள்.

மதியம் கண்விழித்தவன், தவத்தைப் பார்த்துக் கேட்டான்:

"பிள்ள சோறு சாப்பிட்டனியா...? கறி, நல்லா அச்சாவா இருந்தது. அக்கை சாப்பிட்டவவா...?"

"போடா...! இஞ்ச ஒருத்தருக்கும் உன்ரை துளவாரம் வேண்டாம்... உன்ரை கோழிக்கறியை நீயே திண்டுதொலை..."

மதியம், இரவு எனக் கோழிக்கறி முழுவதையும் - இருந்த சோத்தோடு சேர்த்துச் சாப்பிட்டவன், விடியலில் இலந்தையடிப் பக்கம் புறப்பட்டான்.

"உழைச்சு, உன்ரை காசிலை ஏதாவது கொண்டு வந்தால் தான் இனி உனக்கு இஞ்சை சாப்பாடு... கண்டதையெல்லாம் களவெடுத்துக் கொண்டு, தவம்... அக்கம்மை எண்டு இனிமேல் இஞ்சை அலையிறதை விட்டிடு..."

தவம்தான் அவனைப் பார்த்துக் கண்டிப்பது போலச் சொன்னாள்.

"………"

மௌனத்தையே பதிலாகத் தந்தவன், எழுந்து நடந்து போவதையே தவம் பார்த்தபடி இருந்தாள். அவனது அந்த உடைந்துபோன உடம்பில்கூட ஏதோ ஒரு கவர்ச்சி இருப்பதை அவள் கண்டு கொண்டாள். அவனது முகத்தில் அடர்த்தியாகப் படர்ந் திருந்த தாடியிலும் ஏதோ அதீத ஈர்ப்பு இருப்பதாகவும் நினைத்துக் கொண்டாள்.

'இந்தக் கவர்ச்சியும் ஈர்ப்பும் ஒரு ஆண் மகனுக்கு இருந்து விட்டால் – அவன் எவ்வளவு தான் உலர்ந்து போனவனாக இருந்தா லும் – ஒரு பெண் அவன் பின்னால் பிச்சியாக அலைய வேண்டிவரும். அந்த அலைசல்தான் இனி எனது விதியாகி விடுமா…?'

மனதில் கிளரும் தாபத்துடன் அவள் படலை வரை வந்து, அவன் தொலைவில், புள்ளியாகத் தெரிந்து மறையும்வரை பார்த்தபடி நின்றாள்.

அவன் பக்கமாகச் சிலிர்ப்புடன் சாயும் தன் மனதைக் கட்டுப்படுத்திக்கொண்டு, அவள் திரும்பி நடந்தாள்.

அவளது மனசு லேசாகப் படபடத்தது.

'இவன் ரோசம் பார்த்து இங்க வராமல் விட்டுவிடு வானோ…? இவனுக்கு அப்படி மானரோசம் எண்டு ஏதாவது இருக்கிறாதா என்ன…? எல்லாம் நாலுநாள் செல்ல, வயிறு கடித்ததும் தானாக வந்து நிற்பான்…!'

அந்த நினைப்புத் தந்த திருப்தியில், லேசான சிரிப்பைச் சிந்தியபடி குடிசையை நோக்கி அவள் நடந்தாள்.

•

"அக்கம்மைக்கு உயர் இரத்த அழுத்தமாம். பொசுக் கெண்டு அவவின்ரை சீவன் போயிட்டுதாம். தவம் தனிச்சுக் கிடந்து தவியாத் தவிக்கிறாளாம். ஒருக்கால் தவத்தை… அந்தப் பெட்டையைப் போய்ப் பாரனடா…!"

இடக்கு முடக்குச் செல்லர்தான் முத்தனுக்கு இந்தச்

செய்தியைச் சொன்னார்.

முத்து எதுவித எதிர்வினையும் காண்பியாது, "போனாப் போச்சு..." என்று ஒரு வார்த்தையில் பதில் தந்துவிட்டு, இயல்பான தனது சோம்பல் தனத்துடன், சாறத்தை இழுத்துப் போர்த்தியபடி, கோயில் முன் மண்டபத்தில் படுத்துக் கொண்டான்.

ஒரு கிழமைக்கு முன்னதாக இலந்தையடி பரபரப்படைந்தது. அக்கம்மையின் சாவீட்டுக்கு அக்கம்மையின் சொந்த பந்தங்கள் போனது இவனுக்கு லேசாக ஞாபகம் வர, எழுந்து உட்காந்து கொண்டான். ஏழுச் செலவுக்குக் கூட அவன் போகவில்லை. 'போயிருந்தால் ஏதாவது சாப்பிட்டிருக்கலாம்...!' நினைவு தந்த அழுத்தத்தில் சிறிது திரும்பிப் படுத்தவன் ஏதோ நினைவுகளுடன் எழுந்து, கொக்குவில் பக்கமாக நடந்தான்.

தவம் அழுத கண்ணீரும் சிந்திய மூக்குமாய் இருந்தாள்.

முன்னைக்கு, அவள் இப்போது தளர்ந்து போய் உடல் இளைத்துக் கோலங்கெட்டுக் கிடந்தாள்.

அருகாகச் சென்று அவளது கரங்களை ஆதரவாகப் பற்றினான்.

"என்ன சென்மமடா நீ...! உன்ரை அக்கம்மையை சாவீட்டிலை யாவது வந்து பார்த்திருக்கலாம்...!"

"........."

அவனது இயல்பான மௌனம் அவளுக்கு எரிச்சலூட்டியது. அருகாக வந்து நின்றவனை அவள் பலங்கொண்ட மட்டும் தனது கரங்களால் பிடித்துத் தள்ளினாள். அவனது தலை முடியை பிடித்து உலுப்பியவள், அவனது மார்பில் முஷ்டிகளால் குத்தினாள். புளி மூட்டை மாதிரி உருண்டு திரண்டு நிலத்தில் கிடந்தவன், எழுந்து உடலில் ஒட்டி இருந்த மண்ணைத் தட்டித் துடைத்தபடி, 'இவளோட... இந்தக் காளியோட எதுவும் முடியாது...' என முனகிய படி, வெளித்திண்ணைக்கு வந்தான்.

திடீரென ஏதோ நினைவு வர, 'நேற்றுத்தான் செலவு... ஏதாவது அடுப்படியில் கிடக்கும்...' என்று நடந்தவன், அங்கு கிடந்த பானை சட்டிகளை உருட்டினான்.

பழஞ்சோறு மட்டும் கொஞ்சம் கிடந்தது. அதில் நீர் ஊற்றிக் கலக்கி, உப்பிட்டு, ஒரு பச்சை மிளகாயைக் கடித்தபடி வாயில் ஊற்றிக் கொண்டான்.

சாப்பாடானதும் மீளவும் திண்ணையில் வந்து படுத்துக் குறட்டை விட்டான்.

செக்கலில் ஆரோ அவனை ஸ்பரிசித்து உலுக்குவதை உணர்ந்தான்.

'தவம்!'

தவத்தைக் கைளால் ஒதுக்கிவிட்டு, மீளவும் படுத்துக் கொண்டான்.

"எழும்படா...! ஏதாவது சமைச்சுச் சாப்பிடவேணும்... காலையில இருந்து அன்ன ஆகாரமில்லாமல் தவிக்கிறன்... கையில மடியில ஏதாவது இருக்கா...?"

"ம்"..." கொட்டியவன், எழுந்து உட்கார்ந்து கொண்டான். மடியில் இருந்து நூறு ரூபாய்த் தாளொன்றை எடுத்தவனைப் பார்த்து அவள் சொன்னாள்:

"போடா... போய் அரிசியும் ஏதாவது கறிபுளியும் வாங்கிக் கொண்டா..!"

தவம் சமைத்து வைக்க, இவன் வந்து, அவளருகாக உட்கார்ந்து கொண்டான்.

"நான் பிறகு சாப்பிடுறன்... நீ முதலில சாப்பிடு பிள்ளை... சரியான பசி உனக்குத்தான்."

கண்கள் பனிக்க அவனைப் பார்த்தவள்:

'ஆள் பரவாயில்லை... இவனுக்குத் தெரியாத விசயங்கள் கனக்க இருந்தாலும் இப்பையெல்லாம் விபரமாய்த்தான் இருக் கிறான்... கதைக்கிறான். இவன்ரை அசட்டையும் முசுட்டுத்தனமும் விலக இந்த இனிமையும் இங்கிதமும் இவனுக்கு எப்படி... எப்படி...'

மனசு இளகிய நிலையில் அவனையே பார்த்தபடி இருந்தவள், சோற்றையும் நெத்தலிக் கருவாட்டுக் குழம்பையும் இரு தட்டுவங்களில் நிரப்பினாள். இவனிடம் ஒன்றைத் தந்து, மற்றதைத் தான் எடுத்துக் கொண்டாள்.

"முத்து...! நான் தனிச்சுப்போட்டன்ரா... எங்கையும் போகாதை... போகாமல் என்னோட இரடா...! மசிண்டி மசிண்டி... அங்க திருடி...இஞ்ச திருடி... எதுவும் கொண்டராத... நல்ல பிள்ளையாய்க் கூலி வேலைக்குப் போ. நானும் தம்பற்றை மிளாகாய்த் தறையில வேலை செய்யலாம்... இரண்டுபேரும் உழைச்சால் கையில மடியில ஏதன் சேரும்... அது எங்களுக்குப் போதும். இந்த அழுக்கு மூட்டையை, கருவண்டை எனக்குப் பிடிக்கும். நீ என்ரை மணிமுத்தடா...!"

மலர்ந்த சிரிப்புடன் அவள் கூறக்கூற "ம்", கொட்டிய முத்து, அவளுக்கு அருகாக வந்து அவளது கைகளைத் தனது கரங்களில் ஏந்தி அவளை அன்புடன் உச்சி முகர்ந்தான். அவளது பிசாண் அப்பிய தலைமுடி வாசம் அவனுக்குப் பிடித்திருந்தது. அவன் மிகுந்த பிரியத்துடன் அவளைப் பார்த்து முறுவலித்தான்.

அவனது அந்தச் சிரிப்பில் ஆயிரம் ஆயிரம் வண்ணத்துப் பூச்சிகளின் படபடப்பையும் சிறகு விரிப்பையும் அவள் கண்டாள். கிளர்ச்சியுற்ற அவள் மிகுந்த வேட்கையுடன் அவனை அணைத்துக் கொண்டாள்.

•

இப்பொழுதெல்லாம் முத்து சோம்பிக் கிடக்காமல் கூலி வேலைக்குப் போய் வருகிறான். எந்த வேலையையும் அவனால் செய்ய முடிகிறது. வேலியடைப்பு, விறகு பிளத்தல், கிணறு கலக்கி இறைத்தல், ஜெயம் ரீச்சர் வீட்டுப் பூமரங்களுக்கு நீர் வார்த்தல், வீடு வளவு சுத்தம் செய்தல் என்று எதையுமே அவனால் செய்ய முடிந்தது.

அவனது திருட்டு வேலை எல்லாமே ஏதோ முன் ஜென்ம நினைவாகவே அவனுக்கு ஆகிவிட்டது.

தவத்துக்கு அவனது உடனிருப்பும் அரவணைப்பும் பிடித்த துடன். மிகுந்த தெம்பைத் தருவதாயும் இருந்தது. ஆண் துணை, அதுவும் அவள் மறுகி மறுகி விரும்பியவன் அவளோடு இருப்ப தென்றால்! அவள் தேன் சுவைபட்ட சித்தெறும்புபோல அவனைச் சுற்றிச் சுற்றி வந்தாள்.

அவனும் அவளிடம் கேள்விகள் எதுவும் இல்லாத ஒரு வித

அங்கீகரிப்புடன் செயற்பட்டான். அது அவளுக்கு மிகவும் பிடித் திருந்தது. காலம் ஸ்தம்பிதம் அடையவில்லை. அது நகரவே செய்தது. அவனது அசட்டுத்தனமான உறவு தந்த சுகத்தில் அவள் கருவுயிர்த்தாள். ஏழு மாதங்கள் கடந்த நிலை... அவள் நிறை சூலி ஆனாள்.

தனக்குக் கிடைப்பதை எல்லாம் அவளுக்கே அவன் தந்த போதும் - அரைகுறையாகவே அவள் சாப்பிட்டதான பிரமை அவனுக்கு.

'இத்தனை அக்கறை இவனிடம் எப்படி வந்தது...? தன்னை ஒறுத்து எல்லாமே உனக்குத்தான் என்பது போல் இருக்கும் இவனது இந்தப் புதிய போக்கும் நடத்தையும். எங்கிருந்து வந்து ஒட்டிக் கொண்டது...? கல்லுளி மங்கனான இவனது குணக்கூறுகள் இப்படி மாறுவதென்றால் அது எதனால்...?'

அவனது செயல்கள் அவளுக்கு அதிக வியப்பைத்தந்தன. அத்துடன் ஒரு வித மரியாதை உணர்வும் அவனிடத்தில் அவளுக்கு எற்பட்டது.

ஐப்பசி மாதம் தொடங்கிவிட்ட நிலையில் மழை கொட்டோ கொட்டென்று கொட்டியது. கடந்த மூன்று நாட்களாக தொடர்ச்சி யான மழை பெய்து கொண்டிருந்தது. அதனால் அவன் கூலி வேலைக்குக் கூடப் போகாமல் குடிசையிலேயே முடங்கிக் கிடந் தான். அன்றாடங்காய்ச்சிகளான அவர்களுக்கு எதுவும் உண்பதற்கு கிடைக்காததால் இருவரும் பட்டினி கிடந்தார்கள். பசியுடன் அவன் இருந்தபோதும் - அவளது நிலையே அவனை அதிக அளவு வருத்தியது.

குடிசையின் உள்ளாக எட்டிப்பார்த்தான். அவள் இயக்கங் கெட்டு, கந்தலாய்க் குவிந்து கிடந்தாள். இடைக்கிடை அவளது முனகல் சத்தம் வேறு கேட்டது. அவளை அணுகியவன் அவளை அணைத்துத் தூக்கினான். சோர்ந்து துவண்டு போய்க் கிடந்த அவளது கரங்களை எடுத்து முத்தமிட்டான். கரங்கள் காய்ப்புக் கண்டு, சொரசொரப்பாக இருந்தன.

'கடும் உழைப்பாளியான இவளது... இந்தப்பெட்டையின்

கைகள் அப்படி என்ன பஞ்சுபோலவா இருக்கும்...!'

அவளை ஆசுவாசப்படுத்தும் நோக்குடன் அவளது உதடு களில் முத்தமிட்டான். அவளது உதடுகளில் இருந்த செந்தணல், அவனுக்குப் பிடித்திருந்தது. அதைவிட அவளது முகத்தில் படர்ந்த நாணம் அவனுக்கு இன்னும் அதிகமாய்ப் பிடித்தது.

'உணர்ச்சி எதையுமே சுலபமாக வெளிக்காட்டாத இவனுக்கு, இதெப்படி... எப்படி...? தாம்பத்திய உறவென்று வரும்போது சில வேளைகளில் இவன் சிலிர்த்துப்போய்ச் சுறுசுறுப்படைவதும் சில சமயங்களில் பாரம் இழுக்கச் சுணக்கங்காட்டும் கள்ளமாடு மாதிரி முழிபிதுங்கி விடுவதும் எதனால்...?'

அவள் அவனை மிகுந்த பட்சமாகப் பார்த்தாள்.

"இண்டைக்கு நீ ஏதாவது சாப்பிடவேணும்... பசி கிடந்தால் உனக்கும் உன்ரை வயித்தில வளர்ற குழந்தைக்கும் கூடாது..." கூறியவன், அவளை ஆதரவாகத் தழுவியபடி கிடந்தான்.

லேசான குறட்டை ஒலியிலிருந்து அவள் அயர்ந்து தூங்கி விட்டதை உணர்ந்து கொண்டவன், எழுந்து வெளியே வந்தான். தேய்பிறை நிலவு வழிகாட்ட, கால்போன போக்கில் நடந்தான். நடந்தவன், இலந்தையடிப்பக்கம் வந்துவிட்டதை உணர்ந்தான். நவத்தார் வீட்டுப்பக்கம் வந்தவன் அதை எட்டிப் பார்த்தான். அந்தப்பகுதியில் ஆடு வளர்ப்பது அவர் மட்டும்தான். ஆடுகளின் சிலமனில்லை. கொட்டில் பக்கம் ஒருமறி ஆடு மட்டும்... அதுவும் நிறைசூலியாய் உழன்று உழன்று படுத்துக்கிடந்தது. உள்ளே சென்றவன், அடுக்களைப்பக்கமாக எதையோ தேடினான். தேடியது அவனுக்குக் கிடைத்தது. 'கொடுவாக்கத்தி' நீர்வேலி இரும்புப் பட்டறை வார்ப்பு. கத்தியை எடுத்தவன், கூர் பார்த்தான். நன்றாகவே இருந்தது. இலந்தையடியானை மனதில் இருத்தியபடி அந்த ஆட்டை நெருங்கி, அதன் பின் தொடையொன்றை வெட்டி எடுத்தான். வெட்டிய வேகத்திலேயே, ஆட்டுக்காலுடன் அவன் வெளியே ஓடினான். முடமாவடிவரை வந்துவிட்டவனுக்கு அந்த ஆட்டின் தீனமான அலறல் கேட்டபடியே இருந்தது. ஆட்டுக்காலில் இருந்து இரத்தம் கொட்டுவதைக் கண்ட அவன், மண்தரையில் அதனை

நன்றாகத் தேய்த்து எடுத்து, தனது சாறத்தினுள் மறைத்தபடி நடந்தான்.

விடியலில், ஆட்டுக்கறி மணத்துடன் விழித்த தவம், "என்ன... என்னப்பா... செய்யிறியள்... அடுப்படியில நெருப்பெரியுது...?"

"பொறு பிள்ள... நீ முகத்தைக் கழுவு..." கூறியவன், கறியை இறக்கி, ஒரு தட்டுவத்தில் - பெரிய துண்டுகளாகப் போட்டு, அவளிடம் தந்தான்.

ஒரு துண்டை எடுத்து வாயில் வைத்தவள், "ருசியா இருக்கப்பா..." என்றாள்.

திடீரென அவளது முகம் கருமை கொண்டு இறுகியது: "என்ன... என்ன இது கள்ள ஆடா...? வேதாளம் மீளவும் முருங்கை மரத்தில ஏறீற்றா...?"

"இல்லை... இல்லை... தின்னவேலியில ஆடடிக்கிற இடத்தில வாங்கினது..."

"பொய்... உன்னட்டை ஒரு சல்லிக்காசு கூடக் கிடை யாதே... இது...இது எப்படி...?"

"உன்ரை பசியைப் போக்க எனக்கு வேறவழி தெரியேல்லைப் பிள்ளை... உன்னோட உன்ரை வயித்தில வளர்ற சீவனும் பட்டினி அதுதான்...!"

"அதுக்கு இப்படியா...?"

கையில இருந்த தட்டுவத்தைத் தூர வீசியவள், அடுப்படிப் பக்கம் எழுந்துபோய், சட்டியில் இருந்ததையும் வெளியே கொட்டினாள்.

"என்ன தவம் இது...? நீ பாவம் எண்டுதான இந்த வேலையைச் செய்தனான். இது களவா...? இல்ல."

"உந்த வேலையள... கன்னக்கோல் வைக்கிற புத்தியை... விடவேமாட்டையா... விடவே மாட்டையா...?"

புலம்பியபடி குலுங்கி அழுதவள், குடிசையின் உள்ளாகச் செல்ல முற்பட்டபோது அவளுக்குக் குறுக்காக வந்து, மிகுந்த துயரத்துடன் - கண்ணீர்ச் சாரலினூடே அவளை நிமிர்ந்து பார்த்தான்.

அவளது அந்தக் கண்களின் தீட்சண்யமான பார்வை அவனை நிலைகுலைய வைத்தது. அந்தக் கண்களின் உள்ளோளியும் ஜ்வாலையும் அவனைச் சுட்டெரித்தன.

பதை பதைத்து, உயிர்பழிந்து நின்றவனின் கண்கள் மடை உடைந்ததுபோலக் கொட்டின. அவன் குலுங்கிக் குலங்கி அழுதான். தலைதாழ்த்தி, சகலதையும் இழந்துவிட்டதான நினைப்புடன் நின்ற முத்தன் – ‘இந்தப் பெட்டை விரும்பாததை இனியும் தொடர்வதா… தொடர்ந்து செய்வதா…? கூடவே கூடாது…’

இளகிக் கிடந்த அவனது மனம் அரற்றிக் கொண்டது.

அவனுக்குக் கிட்டவாக வந்த தவம், அவனது முகத்தைச் சிறிது தூக்கிப் பார்த்தாள். அப்பொழுது அவனும் அவளைப் பார்த்த படி…

அவனது கண்களில் துளிர்த்த ஆதுரம் அவளைப் புளகமுற வைத்தது.

இருவரும் தமது கரங்களை மாறி மாறி இறுக்கமாகப் பற்றிக் கொண்டார்கள். அவர்களது அந்தத் தொடுகையும் நெருக்கமும் அப்பொழுது இருவருக்குமே இதமாக இருந்தது.

•

ஜீவநதி -2013

## வெந்து தணிந்தவை

"பெட்டையளில பெடியளுக்குச் சரியான விருப்பம்..." சொன்ன வசந்தன், "உன்னிலையும் எனக்கு...!" என்று சேர்த்துச் சொன்னான்.

"என்னிலையா... உனக்கா...?"

"முளைக்க முந்தி என்ன முத்தல் கதையள்... பதிமூண்டு, பதினாலு வயசில சாய்ச்சு மேய்க்கிற கதையளே..."

அஞ்ஞாவில் மிளகாய் பிடுங்க வந்த நாகாத்தையின் குரல் அவளை நிதானப்படுத்த, விசுக்கென எழுந்து, வீட்டினுள்ளே சென்றாள்.

அவள் வெளியே வருவாளென, ஒரு சில நிமிஷங்கள் காத்து நின்ற வசந்தன் ஏமாற்றத்துடன் திரும்பி நடந்தான். ஜன்னலில் அவளது நிழல் தெரிந்த மாதிரி இருந்தது. 'ஆள் எதுக்கும் சுளுவாய்ப்படிவாள் போலக் கிடக்கு...' நினைவுகள் ததும்ப, வீட்டுப் பக்கமாக நடந்தான்.

தொலைவில் போய்க்கொண்டிருந்த அவனுக்கு, "ஸ்கூலுக்கு வருவ தான...." என்ற அவளது குரல் மெலிதாகக் கேட்டது.

திரும்பி ஜன்னலைப் பார்த்தான். அவளைக் காணவில்லை. கேற்றுக்கு வெளியே வந்து, கையசைத்த படி அவள் நிற்பது தெரிந்தது. இவனும் கையசைத்து அவளிடம் விடை பெற்றுக் கொண்டான்.

வசந்தனுக்கு அவளைப் பிடித்திருந்தது. அந்த ஒடிசலான உடம்பு, பூசி மெழுகிய வயிறு, லேசான திரட்சி காட்டும் மார்பு, பூப்போன்ற கீறலான உதடுகள், கண்களில் வழியும் உயிர்ப்பு, காணும் போதெல்லாம் - பாந்தமாய் ஒட்டிக்கொள்ளும் இயல்பு என்று எல்லாமே அவனை மருளவைத்தன.

கோவியப்பெட்டை என்ற தயக்கம் இருந்த போதும் அவளை அளைந்து பார்க்கவேண்டும் என்ற தவிப்பு அவனுக்கு இருந்தது.

'சாமத்தியப்படாத பெட்டை, பிசக்கினாலும் பிழையேது மில்லை... இந்தத் தறுதலைத்தனத்தைக் காதல் கீதல் எண்டு அவள் மயங்கி மிதப்புக் கொண்டு விடுவாளோ... மிதக்கிற வரைக்கும் மிதக்கட்டும்... தொட்டுப் பார்க்க வேணுமெண்டால் தொட்டுப் பார்க்க வேண்டியதுதான்...! அதற்குக் காலநேரம் பார்க்கேலுமா என்ன...?'

மனதில் திரளும் எண்ணங்களை அவனால் தடை செய்ய முடியவில்லை.

அவள், அவனை நெருங்கிவந்த சந்தர்ப்பங்கள் தான் எத்தனை! நெருங்கி வரும்போதெல்லாம் அவளது காந்தும் உடலும் குப்பெனச் சிவக்கும் முகமும் - அவனது கள்ளப்பட்ட மனசை என்னமாய் அலைக் கழிக்கிறது. 'தொட்டுப்பார்ப்போமா என்று நெருங்கும் போது மனசு சோர்வுகொண்டு, பதகளித்து விடுகிறதே. படபடப்பும் இனிமையும் மிகுந்த அந்தச் சந்தர்ப்பங்களை இனி மேலாவது தவறவிடாமல் வசமாக்கிக் கொள்ளவேணும்'

தளர்ச்சி ஏதுமில்லாத நம்பிக்கையுடன் வெளியே பார்த்தான்.

மாலை மயங்கிக் கிடந்தது. இறுகிக் கிடந்த காற்றில் லேசான குளிர். மழைத்தூறலும் இருந்தது; பன்னீர் தெளிப்பது போல.

வாழைத் தோட்டப் பக்கம் ஏதோ பளிச்செனத் தெரிந்தது. திரும்பிப் பார்த்தான். கவிதா தான் வந்து கொண்டிருந்தாள். அவளது நடையில் இயல்பான துள்ளல். நெருங்கி வரும்போது, மணிப்புறா வின் மொடமொடப்பும் சிறகுவிரிப்பும் அவளிடம் இருந்தது.

"சமூகக்கல்வி நோட்ஸைத் தாரும் பள்ளிக்கூடத்திலை கொண்டுவந்து தாறன்."

"பக்கத்திலை, மகேஸிட்ட வாங்கலாமே...."

"அவளின்ரை எழுத்து, கோழி கிளறின மாதிரி இருக்கும். படிக்கேலாது. உம்மடை எழுத்து வடிவு...."

"எழுத்து மட்டுமா, நான்.... நானும் வடிவு தான....?" நுனி நாக்கில் வந்த வார்த்தைகளைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

உள்ளே படி ஏறி வந்தவளின் அருகாக வந்தவன்:

"என்ன தலையெல்லாம் நனைஞ்சுபோய்க் கிடக்குது"

கூறியவன், அவளது தலையைத் துடைத்துவிடக் கைகளைத் தூக்கினான். அப்பொழுது அவனது கைகளை அவள் வேகமாகத் தட்டிவிட்டாள்.

'ஏன்' என்பது போல அவனது பார்வை இருந்தது.

"வசந்தன் கெட்ட பழக்கம்....!"

"கெட்ட பழக்கமா....?"

"ஓம்.... தொடிறதெல்லாம் எனக்குப் பிடிக்காது."

"போடி ஒல்லிப்பாச்சான்... பெரிய அழகி எண்ட கெப்பர் இவவுக்கு. 'கோ' வன்னாத்தானே நீ... உன்னை ஆர் தொடுவின"

அவளது நானைக் கீறியதான உணர்வில் திளைத்தவன், சற்று உரக்கவே சிரிக்கவும் செய்தான்.

மனதில் விழுந்த அடி தாங்காது தவித்தவள், அவனது சமூகக்கல்வி நோட்ஸைக்கூட வாங்கிக் கொள்ளாமல், வாழைத் தோட்டப் பக்கமாக ஓடினாள். அவள் ஓடுவதையே பார்த்தபடி நின்ற அவன்:

'இவளை... இந்த வாழைப்புதருக்குள்ள மடக்கி, விழுத்தி, ஆசைதீர அணைத்து... அளைந்து...'

பீறிட்டு வந்த காம உணர்வு அவனது உடலின் அணுக்கள் தோறும் பிரவகித்து அவனைச் சதிராட வைத்தது.

தூரத்தில் அம்மா வந்து கொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் இறுகிக் கிடந்த அவனது உடல், தளர்ச்சி கொண்டு லேசாகியது. உணர்வுகளும் உடலும் குளிர்ந்த நிலையில் அம்மாவைப் பார்த்து அவன் மெலிதாகச் சிரித்தான்.

"என்ன... என்னடா வடுவா... என்ன கள்ளம் பண்ணிப்போட்டு

நிக்கிற...?"

அம்மாவுக்குக் கிட்டவாக வந்தவன், அவளை அணைத்த படி: "ஒண்டுமில்லையம்மா...!" என்று கூறினான்.

அம்மாவின் அணைப்பும் தொடுகையும் அவனுக்கு அப்பொழுது இதமாக இருந்தது.

•

இரண்டு வருஷகாலமாக - சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் - அவன் செய்யும் சின்னச் சின்ன சில்மிஷங்கள் அவளுக்குக் கூச்சம் தருவதாய் இருந்தபோதும் - கூடவே, உடலில் ஒரு மலர்ச்சியையும் வெதவெதப்பையும் தரத் தவறவில்லை.

அப்படியான ஒரு சந்தர்ப்பத்தில்தான் அவளைப் பார்த்ததும் அவன் கேட்டான்: "வித்தியாசமான புது விளையாட்டொண்டு விளையாடுவமா....?"

அந்தக் கேள்விக்கு "ம்" சொன்னவள், அவனுக்குப் பின்னால் இழுபட்டுச் சென்றாள்.

இதுக்கெல்லாம் ஸ்ரோர் ரூம் தான் வசதி என்று நினைத் தவன், ரூமுக்குள் வந்து, லேசாகக் கதவைச் சாத்திக் கொண்டான். ஓரளவு இருள் அடர்த்தி கொண்டிருந்த அந்த அறையில் அவளையே விழுங்கிவிடுவது போல விடுத்துவிடுத்துப் பார்த்தான்.

"என்ன....?" என்று அவள் சின்னச் சிரிப்புடன் கேட்டாள்.

"என்ரை கவிதா நல்ல வடிவு...."

"வடிவோ...."

அவளை மேலே பேசவிடாமல் அவளது உதடுகளை விரல் களால் கசக்கி நெரித்தான்.

"நோகுதடா...!"

நோகாதென்றவன், மெதுவாக அவளது உதடுகளை தனது விரல்களால் வருடினான்.

"இப்ப உன்ரை விரல்கள் வெல்வெற் மாதிரி சோக்கா இருக்கு"

"இப்படியெல்லாம் சேட்டை விடுறை.... என்னைச் சடங்கு முடிப்பையாடா...?"

"சடங்கோ...?"

அவனது கேள்வியில் இழையோடிய கேலி அவளைக் கலங்க வைத்தது.

"ஸ்ரோர் ரூமில என்னடா நடக்குது...?"

அவனது அம்மாவின் குரல் தொலைவில் கேட்டது.

நடுங்கியவன், ரூமைவிட்டு வெளியே வந்தான். கவிதாவும் அவன் பின்னால் மசிண்டியபடி வந்தாள்.

"கெட்ட பழக்கம்... குமராகப்போற பெட்டையை ஏனடா கூட்டிக் கொண்டு திரியிற..."

"இல்லை... ஒண்டுமில்லை அம்மா! கவிதாவுக்குப் பொரிஅரிசிமா எடுத்துக் கொடுத்தனான், அதுதான்...."

"என்னடா புலுடாவிடுறை... அவளின்ரை வாயில மாவையும் காணேல்லை ஒரு மண்ணையும் காணேல்லை...."

கவிதா கண்கலங்கியபடி, வாழைப்புதர்ப் பக்கமாக நழுவி, அவளது வீட்டைப் பார்த்து ஓடினாள். அவளைத் தடுத்து நிறுத்துவதற்கு வழி ஏதும் தெரியாமல் தவித்தவன், அவள் போவதையே பார்த்த படி நின்றான்.

நாலு நாள் கழித்து, ஒரு மாலை நேரம் இவன் கவிதாவின் வீட்டுப் பக்கமாகப் போனான். கவிதா மட்டும்தான் வீட்டில் இருந்தாள். அவளது அம்மா ஆரவயல் பக்கம் போயிருக்கவேணும் – ஆள் சிலமனில்லை. கவிதா ரீ.வி. பார்த்துக் கொண்டிருந்தாள்.

"என்ன பார்க்கிற....? இன்னும் சின்னப் பிள்ளையாட்டம் சுட்டியும் சித்திரமும்தான் பார்ப்பையா...?"

கேட்டவன், அவளது கையில் இருந்து ரிமோட்டைப் பறித்து 'ஸ்ரார் மூவீஸ்' வைத்தான்.

ரீ.வி. திரையில் ஒரு இளமையான நீக்ரோத் தேவதையும் வெள்ளை வெளேரென்ற செம்பட்டைத் தலையனும் நின்றார்கள். மிக நெருக்கம் பேணிய அவ்விருவரும் எக்கணத்திலும் முத்தமிடக் கூடுமென அவன் எதிர்பார்த்தான். அவனது எதிர்பார்ப்பை மெய்ப்பிப்பது போல அந்தச் செம்பட்டைத் தலையன் அவனுக்கு அருகாக நின்ற அந்தக் கறுப்புத் தேவதையை, அணுகி...

திரையில் காட்சி தந்த அந்த இருவரையும் அதிர்ச்சியுடன் பார்த்தபடி இருந்த கவிதா உடலைச் சிறிது நெகிழ்த்தி, செற்றியில் சரிந்து படுத்துக் கொண்டாள். வாகாகக் கிடந்த அவளை நெருங்கிய வசந்தன், அவள் எதிர்பாராத வேளை அவளது உதடுகளை லேசாகத் தனது உதடுகளால் வருடி முத்தமிட்டான்.

ஒரு கணம் சிலிர்த்த கவிதா, அடுத்த கணம் உள்ளுணர்வின் அழுத்தத்தால் உந்தப்பட்டு, அவனது மார்பில் தனது கைகளைப் புதைத்துத் தள்ளினாள். அவளது இடது காலும் அவனை உதைக்கத் தவறவில்லை. எதிர்பாராத அவளது அந்தத் திடீர்த் தாக்குதல் அவனை அலக்க மலக்க நிலத்தில் விழுத்தியது.

சுதாரித்துக் கொண்டு எழுந்தவன், அவளது முகத்தைக் கூடப் பார்க்க விரும்பாதவனாய், அவளது வீட்டைவிட்டு வேகமாக வெளியேறினான்.

தூரத்தில், கவிதாவின் அம்மா தலையில் புல்லுக்கட்டோடு வந்துகொண்டிருந்தாள்.

அவளது பார்வைப்புலத்தினுள் அகப்படக்கூடாது என்ற கவனத்துடன், அவன் தாவாடி வயலில் இறங்கி வேகமாக நடந்தான்.

அந்த நிகழ்ச்சியின் பின்னர் ஒரு மாத காலத்துக்கு மேலாகவே அவர்கள் பேசிக் கொள்ளவில்லை. பள்ளிக்கூடத்தில் கூட ஒருவரை ஒருவர் அதிகம் கண்டுகொள்ளாமலே இருந்தார்கள்.

கணித பாடத்தில் ஏதோ சந்தேகம் கேட்க வேண்டும் என்ற சாட்டில் அவளை அவன் மீளவும் அணுகினான். அவனைக் கண்டதில் அவள் சிறிது மகிழ்ச்சியடைந்தாள். அவனுடன் அளவோடு பேசியவள், கணக்குப் பாடத்தில் உள்ள சிடுக்குகளை மட்டும் நீக்க உதவினாள்.

'எல்லாப் பாடத்திலும் இவள் கெட்டி... என்றாலும் கணித பாடத்தில் புலி...' நினைப்பதோடு நில்லாது, அவளை மனந்திறந்து பாராட்டவும் செய்தான். குலைந்து கிடந்த அவர்களது நெருக்கம் மீளவும் துளிர்ப்புக் கொண்டது. இருவருக்குமிடையிலான சரச சல்லாபம் திரும்பவும் தீவிரம் கொண்டது.

உடலோடு உடல் ஒட்டிக்கிடப்பது. மலர்ச்சியடைந்து

நெகிழ்ந்து போய்க் கிடக்கும் அழகை ரசிப்பது, கண் இமைகள், காதுச் சோணைகள், உதடுகள் என எல்லா இடங்களிலும் விரல் நுனியால் ஸ்பரிசிப்பது என்று அவர்களது சேட்டைகள் தொடரவே செய்தன. ஒரு நிதானமும் கவனமும் அவனைவிட அவளிடம் அதிகம் இருந்தது. கட்டுப்பாடுகளை மீறிவிடக்கூடாது என்ற எண்ணம் அவனிடமும் இருந்தது. ஆனாலும், தன்நிலை மறந்த அவன், அவளது மார்புகளில் முத்தமிட்டான். பரபரத்த அவனது கரங்கள், அவளது அடிவயிறுவரை சென்று தடவியது. அதற்குக் கீழாக அவனது கரங்கள் இயங்க முற்பட்டபோது அவள் அவனது கரங்களைத் தட்டிவிட்டதோடு, மனம் கூசியவளாய், அவனைவிட்டு விலகவும் செய்தாள்.

அந்த விலகல் மிக நீண்டதாகவே இருந்தது. பொசுபொசு பூனைக்குட்டிகளது அந்த ஒட்டுதலும் உரசுதலும் ஒரு முடிவுக்கு வந்தது போல ஆகியது.

அதன் பின்னர், அவள் அவனது வீட்டுப் பக்கம் மட்டுமல்ல, பாடசாலைப் பக்கமும் வரவில்லை. இரண்டு கிழமைக்கு மேலாகவே அவளைக் காணாத வசந்தன் கவிதாவின் சிநேகிதி மகேஸ்வரியைப் பார்த்துக் கேட்டான்:

“கவிதா பள்ளிக்கூடம் வரேல்லை.... என்ன விஷயம்....”

கொடுப்புக்குள் குமிழிட்ட சிரிப்பைப் பதுக்கி வைத்தபடி, மகேஸ் அவனுக்குக் கிட்டவாக வந்து, ரகசியம் பேசுவது போலச் சொன்னாள்:

“கொஞ்சநாள் அவள் பள்ளிக்கு வரமாட்டாள். அவள் இப்ப பெரியவள்.”

“பெரியவள்...?”

“அவள் சாமத்தியப் பட்டிட்டாள்...! சடங்கெல்லாம் முடிஞ்சுதான் பாடசாலைப் பக்கம் வருவாள்...”

தனியாக விடப்பட்ட வசந்தன், காற்றில் மிதந்து, மேலே மேலே பறப்பதான உணர்வில் திளைத்தான். ஏதேதோ கற்பனையின் சடைவு அவனுள் படர்ந்தது.

‘உலர்ந்து போய்க் கிடந்தவள், இனி... இனித் தேன் சொரியும்

மலராய்...! மலரை நெருங்கவிடாத முட்கள் இருக்கவே செய்கின்றன. அவற்றைக் கெல்லி எடுத்து விட்டால் போகிறது. அவளது உடலை, அந்தப் பொன்பூவை வளைத்து, மடித்து, பிழிந்து... சாறாய்... அட, அதெல்லாம் முடியுமா... முடியும். இந்தப் பித்தந் தெளிய அவள்... அவள்தான் மருந்து...!'

ரசமாய்த் துளிர்க்கும் எண்ணங்களால் அவன் அலைப் புண்டான். அதே சமயம் மூன்று மாதங்களுக்கு மேலாகவே விடு பட்டுப் போன அவளுடனான தொடர்புகள் அறுபட்டுவிடக் கூடா தென்ற பரிதவிப்பும் அவனிடம் இருந்தது.

காலம் கனியும் என அவன் காத்திருந்தான். ஆனால், அப்படி இல்லாமல் – நாட்கள் அசமந்தமாக, சாலங் காட்டியபடி நகர்ந்தன.

•

கவிதா ஊரில் உள்ள மத்திய மகா வித்தியாலயத்தில் தான் உயர்தர வகுப்புவரை படித்தாள். பின்னர், யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு. பட்டதாரியானதும் – மறு வருஷமே, பயிலுநர் ஆசிரிய ராக நியமனம் பெற்றாள். ஊரோடு உத்தியோகம். எல்லாமே அவளுக்கு மகிழ்ச்சி தருவதாய் இருந்தன.

புதிய நம்பிக்கைகளுடன் ஆசிரியத் தொழிலை ஆரம்பித்த வளுக்கு, கடந்து போனவை கடந்து போனவையாகவே ஆகி விட்டன. வாழும் முறையிலும் ஒரு ஒழுங்கும் நிதானமும் அவளது முயற்சி ஏதுமில்லாமலே கூடிவந்தது.

உடலையும் உள்ளத்தையும் கருகவைத்த வசந்தனின் தொந்தரவு, அவன் மலைநாட்டுப் பக்கம் உத்தியோகம் என்று போனதனால் இல்லாமல் போனது. அவன் எப்பொழுதாவது ஊர்ப் பக்கம் வந்தால், அவளை எட்டிப் பார்க்கவே செய்தான். அந்தச் சமயங்களில் அவள் பிடிகொடாமலே நடந்துகொண்டாள்.

அவள் ஏ.எல்.இல் இருந்தபோதுதான் அந்த சம்பவம் நடந்தது. மிகவும் நம்பிக்கை தரும் வார்த்தைகளை அவன் பேசிய போதும் – ஓரோர் சமயம் அவளது சாதி பற்றிய இழிநிலையைச் சுட்டிக்காட்டியதோடு, அவளது உடலைத் துய்க்க சகல அதிகாரமும் தனக்கு உண்டு என்பது போலவும் நடந்துகொண்டான். அத்துடன்

அவள் இணங்கிவராத பட்சத்தில் அவனுக்கும் அவளுக்கு மான அந்த உறவை, ஊர் முழுவதும் கொட்டிச் சிந்திவிடுவதாக வேறு அச்சுறுத்தினான்.

அவனது அந்தப் பிதற்றல்களை அவள் உள்வாங்கிக் கொண்டபோதும் – மனசின் உள்ளோரத்தில் ஒருவகைக் கவர்ச்சியும் கசிவும் அவன்பால் இருந்ததை அவள் அறிந்திருந்தாள். அதனை அவனும் உணர்ந்திருந்தான். எல்லாமே அச்சொட்டாகப் பொருந்தி வர, சாதகமான ஒரு சூழ்நிலையில் 'அது' அவர்களிடையே அரையும் குறையுமாக நடந்தது.

ஓரளவு பிரக்ஞை தப்பியபோதும் – லேசான விழிப்பு நிலையில் அவள் அவனைப் பார்த்துக் கேட்டாள்:

"இதெல்லாம் இப்ப வேணுமா...? சடங்கு முடிச்ச பிறகு பார்க்கலாமே... ஆசையா இருந்தாத் தொடுங்க... கிஸ் பண்ணுங்க... அது போதும்."

"போதுமா....? போதாது. இண்டைக்கு ஒரு எல்லை வரை போகவேணும். தப்பொண்டுமில்லை. இப்படி இருக்கேக்கை பாதுகாப்பா மட்டும் இருந்தாப் போதும்...."

"பாதுகாப்பா.... அது இருக்கா...."

"ம்..." கொட்டியவன், அவசர அவசரமாக அவளை நெருங்கி வந்து, அவளது கண்களிலும் உதடுகளிலும் முத்தமிட்டான். அவளது மார்புச் சட்டையை நெகிழ்த்திய போது அவன் சற்றுத் தடுமாறியது போலத் தெரிந்தது.

"என்ன?" என்பது போல அவள் அவனைப் பார்த்தாள்.

இறுக்கம் கொண்டிருந்த அவனது உடல் தளர்ச்சி கொண்டதை அவள் சடுதியாக உணர்ந்தாள். விழிகள் பிதுங்கிய நிலையில், ஆழ்ந்த பெருமூச்சு விட்டவனாய்; சோர்வுடன், அவளை விட்டுச் சற்று விலகிநின்று கொண்டான். அது அவளுக்கு வேடிக்கையாக இருந்தது. லேசான சிரிப்புடன் கேட்டாள்:

"என்ன... என்ன மூச்சுப்பறிஞ்சு போச்சுபோல..."

கண்களைச் சிமிட்டியவளின் உதட்டோரம் ஓடிய சுளிப்பும் நெளிப்பும் அவனைக் கூனிக்குறுக வைத்தன.

"நீயும் ஒரு ஆம்பிளை...! உனக்கெல்லாம் உந்த ஆசையள்... உன்னாலை எதுவுமே முடியாதடா... you are impotent..."

ஓசை எழாத வண்ணம் முனகினாள். அந்த முனகல் அவனுக்குக் கேட்டிருக்க வேண்டும். செத்தபாம்பு போலக் கிடந்தவன், "இல்லை... இல்லைக் கவி...! கொஞ்சம் பொறும்... திரும்பவும் பார்க்கலாம்..." என்றான்.

"nonsense... உன்னாலை எதுவுமே ஏலாதடா...." கூறியவள் - தளர்ந்து கிடந்த தனது மேல் சட்டையைச் சரிசெய்தபடி, அறையை விட்டு வெளியே வந்தாள்.

அவள் பின்னால், வெளியே வந்த வசந்தன், அடிபட்ட மிருகம் போல நெடுமூச்செறிந்தான். அவளை நிமிர்ந்து பார்ப்ப தற்குக் கூடத் திராணியற்றவனாய்க் கூச்சத்துடன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டான். அவமானப்பட்ட அந்த நிலையி லும் அவனது கண்களில் படர்ந்திருந்த வன்மமும் குரலில் இழைந்த குரோதமும் அவளை அச்சுறுத்தின. அது அவளுக்கு மிகுந்த பய உணர்வை தந்தது. ஒரு கணம் திடுக்கிட்டவள், தன்னை ஓரளவு நிதானப்படுத்திக் கொண்டாள்:

'இனிமேல்... இவனோடு இந்த இரண்டும் கெட்டானோடு... எந்த சங்காத்தமும் வேண்டாம்... ஏதோ மயக்கத்தில் இப்படிக் கிறுக்குத்தனமாக நடந்து கொள்ள வேண்டி வந்துவிட்டது... இது பிழையா... அவனிடத்திலான பயமா...? அல்லது... அல்லது அவனது துஷ்டத்தனமான தூண்டுதலால் இப்படி அள்ளுண்டு இழுபடும் நிலை வந்ததா...?'

அவளது மனம் இது விஷயத்தில் அதிக அளவு அலட்டிக் கொள்ளவில்லை. ஏதோ, இந்தச் சிக்கலில் இருந்து, விடுபட்டதான உணர்வே அவளுக்கு அப்பொழுது ஏற்பட்டது.

•

ஆசிரிய அறையில் இருந்தபடி, மாணவர்களது பயிற்சிக் கொப்பிகளைத் திருத்திக் கொண்டிருந்தவள், எல்லாவற்றையுமே உதறித்தள்ளியதான உணர்வுடன் நிமிர்ந்தாள். லேசாகச் சிரித்துக் கொள்ளவும் செய்தாள்.

"என்ன கவிதா.... மௌனமும் சிரிப்புமாய் இருக்கு.... எதை நினைச்சு....?"

அகிலா ரீச்சர்தான் அவளை அணைத்தபடி கேட்டாள்.

தொடர்ந்து அகிலா சொன்னாள்:

"நான் கேட்டதுக்கு இன்னும் பதில் இல்லை. இன்னும் யோசிக்கேல்லையா...? அம்மாட்டக் கேட்டுப் பாரும். பரந்தாமனுக்கு உம்மில ஒரு கண் விழுந்திட்டுது. "அந்தப் பெட்டை எவ்வளவு வடிவு..." எண்டு வாயூறி ஊறிச் சொல்லிக் கொண்டு திரியிறார்"

"சாதி சனம் இல்லாத பெடியன்; இருந்தாலும் நல்ல பிள்ளை. ஆள் வன்னிப் பக்கம். பயமா....? வன்னியை விட்டு வந்தவர், இஞ்ச யாழ்ப்பாணத்திலதான் செற்றிலாகப் போறார்...."

"உம்மைக் கேட்டுப் பார்க்கச் சொன்னவர். உம்மடை இறுக்கமும் பிடிகொடாத போக்கும் ஏன் எண்டு எனக்குத் தெரியும். ஆனால், அவருக்குத் தெரியாது. உம்மை நேரடியாகக் கேக்கக் கொஞ்சம் தயங்கிற மாதிரித் தெரியுது. ஆள் உமக்கு நல்ல பொருத்தம். அவற்றை மனம் குளிர்ர மாதிரி ஏதென் யோசிச்சுச் சொல்லுமன்...."

முதிர்ச்சியும் காலம் கற்பித்துத் தந்த பாடமும் அவளைத் தீர்க்கமாகச் சிந்திக்க வைத்தது.

"யோசிக்கிறன் ரீச்சர்....! எதுக்கும் நான் ஒருக் கால் அம்மாவோடை கதைக்கவேணும். பரந்தாமனிட்டையும் பேசிப் பார்க்கிறது நல்லம். சின்ன வயசில "செக்ஸ்" விஷயத்திலை கொஞ்சம் பலவீனமாக இருந்தாலும் - வயசு வந்து உசார பின்னர் எந்த ஆம்பிளையையும் முழுசா நம்பிறதில எனக்குத் தயக்க மிருக்கு ரீச்சர். இந்த ஆளும் பத்தோட பதினொண்டு அத்தோட இதொண்டென்று இல்லாமல் இருந்தால் சரி...."

மறுநாள், பாடசாலையில் கடைசிப் பாடவேளை மணி அடித்தபோது, பக்கத்து வகுப்பிலிருந்த அந்த நெடிதுயர்ந்த உருவம் அவளுக்கு அருகாக வந்தது. அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

ஒரு ஆணுக்குரிய தோற்றமும் பொலிவும் அவனிடம் தொகையாகவே மண்டிக் கிடந்தன. அவனது கண்களில் ததும்பி

வழிந்த கருணையும் பட்சமும் அவளை ஈர்த்தன.

உட்கார்ந்திருந்தவள், மரியாதை கருதி எழுந்துகொண்டாள்.

"இருங்க ரீச்சர்...!" என்று கூறிய பரந்தாமன், பக்கத்தில் இருந்த கதிரையை இழுத்துப் போட்டபடி, தானும் உட்கார்ந்து கொண்டான்.

"அகிலா உங்களைப் பார்க்கச் சொன்னவ... அதுதான்...!"

"பார்த்தாச்சு... பிறகென்ன...?"

"பார்க்க மட்டுமா...? கதைக்க வேணும்...!"

"கதைச்சாப் போச்சு..."

"இல்ல... நீங்க ஒரு முற்றுச் சொல்ல வேணும் ரீச்சர்... வாற ஆவணியில நல்ல நாளாப் பார்த்து, எளிமையாச் சடங்கை வைச்சிடலாம்.... நீங்க அதை விரும்பேல்லை எண்டா, திருமணப் பதிவோட முடிச்சிடலாம்."

"என்ன அப்படி அவசரம்... ஆளைப் பார்க்கேக்க அவசரக் குடுக்கை மாதிரித் தெரியேல்லை... இது விஷயத்தில கொஞ்சம் நிதானமாயிருந்தால் என்ன...? அம்மாட்டை கதைச்சனான், அவ முடிவேதும் சொல்லேல்லை. இதுக்கெல்லாம் அவவின்ரை முடிவு அவசியம்..."

"அப்ப உங்களுக்கு விருப்பமெண்டு சொல்லுங்க..."

சிரித்தபடி பரந்தாமன் எழுந்துகொண்டான்.

"இன்னுமொரு விஷயம் ரீச்சர்...! வசந்தனைப் பற்றியது..."

"உங்களுக்கு அவனைத் தெரியுமா...?"

"தெரியுமாவா...?இஞ்ச... இந்தப் பள்ளிக் கூடத்துக்கு வரமுந்தி, கட்டுகஸ்தோட்டை தமிழ் மகா வித்தியாலயத்தில.... ஒரு வருஷம் வரையில அவனோடதான் படிப்பிச்சனான்."

"ஏதாவது தொணதொணத்திருப்பானே என்னைப் பற்றி. தனது கையாலாகத்தனத்தை மறைக்கிறதுக்கு - காதடைக்கிற வரைக்கும் விளக்கம் தந்திருப்பானே....!"

"உங்களைப் பற்றி அசிங்க அசிங்கமா திட்டினான் ரீச்சர்....! அவன்ரை பேச்சில நிதானம் தப்பின... பயமுறுத்திற ஒரு தொனிதான் இருந்தது.

‘வசந்தன் தொட்டது... முத்தமிட்டது... சந்திச்ச கடைசிச் சந்தர்ப்பத்தில அடிச்ச கூத்தென்று எல்லாமே இவனுக்குத் தெரிஞ்சிருக்குமோ...! தெரிஞ்சுமா என்னை இவன்...!’

நினைவுகளால் அலைப்புண்டவளுக்குக் கண்கள் கலங்கிவிடுகின்றன.

“என்ன ரீச்சரிது... அழுறயளா...? ஸிலி.... வளரிளம் பருவத்தில.... சின்னன்சின்னதாய் ஏதென் இப்படி நடக்கத்தான் செய்யும். இதெல்லாம் ஒரு வகையில infatuation தான்... இந்த நவீன வாழ்க்கைக்கு முகங் கொடுக்கிற எந்த ஒரு இளம் பெண்ணும் ஆணும் தளம்பத் தான் செய்வின... இதையெல்லாம் தாண்டி வர வேணும்... அப்படி வாறதுதான் எல்லாருக்கும் நல்லது.”

‘இப்படிக் கதகதப்பாய் அணைத்துக் கொள்வது போலப் பேசும் இவன்... இந்தப் பரந்தாமன் வித்தியாசமானவன். சராசரிகளைப் புறம்தள்ளி மேலே மேலே நிமிரக் கூடியவன். இவன் பெண்ணை, பெண்மையை அதனதன் தாற்பரியங்களோடு புரிந்து வைத்திருப்பவன். அவளைப் படுக்கையறைப் பதுமையாக மட்டும் பார்க்காமல், அவளிடம் ஆத்மார்த்தமாயும் சற்று ஆழமாயும் பகிர்ந்து கொள்ள நிறைய விஷயங்கள் உள்ளன என நினைப்பவன். இவன் நல்ல துணையாக மட்டுமல்ல, நல்ல தோழனாகவும் இருக்கக் கூடியவன்...!’

இனிய நினைவுகளில் திளைத்தவள், அவனை நெருங்கி வந்து, அவனது இரு கரங்களையும் தனது கைகளில் ஏந்தி அழுத்தமாகப் பற்றிக் கொண்டாள்.

அவளது கொந்தளிக்கும் வாழ்க்கை சமனப்பட அவனது அந்த ஸ்பரிசமும் இதமும் அவளுக்கு அப்பொழுது தேவையாக இருந்தது.

•

ஜீவநதி - 2012

## தவிப்பு

இளங்காற்றில், வெண்பஞ்சுக் குவியலாய் உருண்டு வந்தவள், எங்கள் வீட்டுப் படி ஏறினாள்.

"மாமோய்... அன்ரி...!"

அவளது அழைப்பிலிருந்த குதூகலம் அவளுக்கு முன்னதாக எங்களை வந்தடைந்தது.

கதம்பமலர்க் கொத்தாக அழகு காட்டும் அவளை வாரி எடுத்து எனது மனைவி உச்சி முகர்ந்தாள். எனது முத்தமும் அவளுக்கு வேண்டும். நான் அவளது நெற்றியிலும் கண்களிலும் முத்தமிட்டேன்.

திருப்தியாகச் சிரித்தவள், ஏதோ ரகசியம் பேசுவதுபோல, உதடுகளை எனது காதோடு உரசினாள்.

"என்னம்மா...?" என்று அவளைப் பார்த்தேன். அவளது அன்பு மிதக்கும் கண்கள் பனித்துவிடுகின்றன. அவள் மெதுவாகச் சொன்னாள்:

"கௌசி அண்ணன்...கனவில வந்தவன்...!"

'மூன்று வயதுச் சிறுமிக்கு – மூன்றா...? வரும் சித்திரையுடன் அவளுக்கு நாலு வயசு... கனவெல்லாம் வருமா...?'

அதிகம் வியாபகம் கொள்ளாத, அவளது சின்னஞ்சிறு உலகத்தில், கௌசிகன் தான் முழுவதுமாக இருந்தான். கொஞ்சம் அம்மா, அப்பா; இன்னும் பெரியம்மா, மாமா, அன்ரி என்றும்

இருந்தார்கள்.

மழலை முறியாத குரலில் அவள் என்னைப் பார்த்துக் கூறினாள்:

"கௌசி அண்ணன்... பச்சைப் புள்ளி போட்ட கறுப்புப்புஷ் சேர்ட்டும் கறுப்பு லோங்ஸ்ஸும் போட்டிருந்தான் மாமா. கனவில உயரமா, இன்னும் வெள்ளையா இருந்தான். ஆள் நல்ல வடிவு. என்னைக் கண்டதும் ஓடிவந்து, குஞ்சு, செல்லக்குட்டி, இராசமலர், எங்கடை இராசாத்தி, திரவியம், தங்கப்பவுண் எண்டு என்னை அணைச்சுத்தூக்கிச் செல்லங் கொஞ்சினான். அதோட, என்னை மேல மேல உசரத்துக்குத் தூக்கிப்போட்டுப் பிடிச்சான். உள்ள... வயிறெல்லாம் எறும்பு ஊருற மாதிரி கிசுகிசு எண்டு கூச்சமா இருந்தது. நா... நான் கக்களம் கொட்டிச் சிரிச்சன்... அவனும் கண்களை அகலமாத் திறந்து என்னைப் பார்த்துச் சிரிச்சான்."

"கண் முழிச்சுப் பார்த்தா, அவனைக் காணேல்லை. அம்மா தான் பக்கத்தில படுத்துக் கிடந்தா. எழுந்து. உங்களிட்ட இதச் சொல்ல ஓடியாறன்."

"அப்ப... எங்கட பிள்ள; பல்லுவிளக்காமல், வாய் நாற நாற வந்திருக்கிறா போல..." எனது மனைவி தேவி.

"இல்ல அன்ரி! இப்ப, வீட்ட போட்டு உடன வாறன்..." என்று கூறியவள் - எங்களது வீட்டுக்கிழக்கு மதிலில், அவள் வந்த போவதற்கென்றே வைத்த பாதையால் வழிந்து போனாள்.

பக்கத்தில் அவளது குரல் ஓங்கி ஒலித்தது: "பிறஷ் எடம்மா...! பேஸ்ற்... ஹேபலா?"

"கக்கா எல்லாம் இருக்கேல்லையா...?" அவளது அம்மா கேட்டாள்.

"அதெல்லாம் பிறகு பாப்பம்... இப்ப அன்ரீற்ரைப் போக வேணும்..."

"முகம் கழுவியாச்சு... சாமி கும்பிடேல்லையா...? பூ வைக்கேல்லையா...?"

அம்மா கேட்ட கேள்விகளுக்கெல்லாம் ஏதோ சாக்குப் போக்குச் சொல்லிச் சமாளித்தவள், மீளவும் எங்கள் வீட்டுப்பக்கம்

ஓடி வந்தாள்.

வந்தவள், தனது கைகள் நிரம்பி வழிய, எதையோ அள்ளி எடுத்துக் கொண்டு வந்தாள்.

புகைப்பட அல்பங்கள் சில. அவளது அரிச்சுவடி மட்டை, ஆரம்பப்பிரிவுப் புத்தகமெனத் தூக்க முடியாமல் தூக்கி வந்தாள். கொண்டு வந்தவற்றை, செற்றிக்கு முன்பாக இருந்த ரீப்போவில் பரத்தி வைத்தாள்.

நானும் தேவியும் அருகாக வந்த போது அல்பங்களை எடுத்துப் பிரித்தாள்.

"இது என்ரை முதலாவது பேர்த்டே படங்கள் அன்ரி...! கௌசி அண்ணனைப் பாருங்க... என்னைத் தூக்கி வைச்சிருக் கிறான். தலை மயிரில நெளியல் எல்லாம் இருக்கு. சீப்பால அமத்தி அமத்தித்தான் அந்த நெளி அவனுக்கு வந்தது. அவன்ரை சிரிப்பு... கண்களின்ரை பளிச்செண்ட வடிவு... கழுத்து, கையெல்லாம் நீளம் நீளமாய்... ராசா மாதிரி இருக்கிறான்."

கூறியவள், திடீரென அல்பத்தைத் தனக்கு அருகாக எடுத்து, கௌசியின் படத்துக்கு முத்தம் கொடுத்தாள்.

"அன்ரி...! அண்ணையை நீங்களும் கொஞ்சுங்க..." கூறியவள், தேவியிடம் அல்பத்தைத் தந்தாள்.

தேவியும் முத்தம் கொடுத்தாள்.

திருப்தியாகச் சிரித்துக் கொண்டவள், அடுத்த அல்பத்தைப் புரட்டினாள். அதில் கௌசி அவளது உயரத்துக்குக் குனிந்து வந்து கேக் தீத்திய படி இருந்தான்.

"இரண்டாவது பேர்த்டே படம் மாமா இது... நீங்க, அன்ரி, அப்பா, அம்மா, அண்ணை எல்லாரும் நிக்கிற அச்சாப்படம்."

மூன்றாவது பேர்த்டே அல்பத்தை எடுத்தவள் அதைப் புரட்டிப் புரட்டிப் பார்த்த படியே இருந்தாள். அவளது கண்கள் பனித்து விடுகின்றன; லேசான விம்மலும் கேட்டது.

அவளது கண்களைத் துடைத்த தேவி ஏதோ பசப்பினாள்:

"என்ரை செல்லம் அழாதையடா! அண்ணன் படிக்கத்தானே கொழும்புக்கு போனவன்... உன்ரை அடுத்த பேர்த்டேக்கு வருவான்..."

"வருவானா...?"

"கட்டாயம் வருவான்."

போலியான எனது சமாதானம்.

சஞ்சலமும் தவிப்பும் இழைய என்னைப் பார்த்துச் சிரித்தவள், எழுந்து கொண்டாள். அல்பங்களையும், தனது ஆரம்ப பிரிவுப் புத்தகத்தையும் அரிச்சுவடியையும் எடுத்துக் கொண்டவள், தங்களது வீட்டை நோக்கி மிதந்தாள்.

அன்று வெள்ளிக்கிழமை. கொண்டலடி வயிரவர் கோவில் வரை போய் வருவோம் எனப் புறப்பட்ட போது "மாமா நானும் வாறன்" என்று தாரணியும் சேர்ந்து கொண்டாள்.

கோயில் முன் மண்டபத்தில் ஆடுகள் சில கிடந்த படிக்கு, அசை போட்டுக் கொண்டிருந்தன.

மண்டபத்துள் வந்ததும் தாரணி "ச்சூய்.. ச்சூய்.." என்று ஆடுகளை விரட்டினாள். எழுந்த கொண்ட ஆடுகள், புழுக்கை போட்டன. சல சல என மூத்திரமும் பெய்தன.

"நாத்தல் ஆடுகள்..." என்று கூறியவள், சற்று விலகி நின்றபடி மூக்கைப் பொத்திக் கொண்டாள்.

"என்னம்மா மூக்கைப் பொத்திக் கொள்ளிற..."

"ஆடுகள் குசுவிடுகின, அது தான்..." ஓரக்கண்ணால் என்னைப் பார்த்துச் சிரித்தாள்.

"பிள்ளை பொய் சொல்லிறா...!"

"இல்லை உண்மை..."

மறுப்புச் சொன்னவள், தூரத்தில் ஐயர் வருவதைக் கண்டு கொண்டவளாய்:

"மணி ஐயர் வாறார்..." என்றாள்.

ஐயர் வந்து பூசை முடித்து நிமிர்ந்த பொழுது; நான் பத்து ரூபாய் கொடுத்து, எனது பெயருக்கும் தேவியின் பெயருக்கும் அர்ச்சனை செய்தேன். எங்களது பெயருடன் தாரணியின் பெயர், நட்சத்திரத்தைச் சேர்த்துக் சொன்ன போது அவள் கண்கள் படபடக்க என்னைப் பட்சமாய்ப் பார்த்தாள்.

தனது வலது கையில் வேர்வை ஊற ஊறப்பொத்தி

வைத்திருந்த, ஐந்து ரூபாய்க்குற்றியொன்றை எடுத்து ஐயரிடம் தந்தவள்:

"கௌசிகன்... சதயம்" என்றாள்.

"அண்ணை சதயமா அம்மா! சதயமெண்டா பூக்குவியல். அவன் பூக்குவியல் போல அச்சாவா இருப்பான்" – இது ஐயர்.

எனது கண்கள் பனித்து விடுகின்றன. உயிர் ஓடிந்த பறவை போல, நெஞ்சு படபடத்துக் கொண்டது.

"அண்ணை நல்லாப் படிச்சு... பாஸ் பண்ணி... எங்களிட்டை வரவேணும். சுறுக்கா வர வேணும். அதுக்குத்தான் மாமா இதெல்லாம்..."

அவளது குரலில் லேசான கரகரப்பு.

அவளை வாரி அணைத்துத் தூக்கியபடி, வீட்டை நோக்கி நடந்தேன்.

ஐயர் தந்த பிரசாதத்தில் சிறிதளவு விபூதி எடுத்து எனது நெற்றியில் பூசியவள், சந்தனமும் இட்டு விட்டாள். தனது நெற்றியிலும் பிஞ்சு விரல்களால் இட்டுக் கொண்டாள்.

அவளது மனசோடு கிடந்த கௌசியின் நினைவுகள் என்னையும் ஆக்கிரமித்துக் கொண்டன.

•

புதிதாக வீடு கட்டிய நாங்கள், கொண்டலடிக்கு வந்த போது, அவர்கள் பக்கத்து வீட்டில் தான் இருந்தார்கள். "நல்ல சனம்..." என்று தேவி அவர்களைப்பற்றிச் சொல்லி மாய்ந்து போனாள்.

அவளது கணிப்பு எப்பொழுதும் பிழைபோனதில்லை. பக்கத்து வீட்டுச் சற்குணம், மனைவி லக்சுமி, அவளது அக்கா வனஜா, குழந்தை கௌசி என்று எல்லாரும் எங்களுடன் மிகுந்த வாரப்பாட்டோடு நடந்து கொண்டார்கள். பிரியமான அந்தச் சனங் களுடன் தேவி வலுவாகவே ஒட்டிக் கொண்டாள். சுக துக்கங்களை, வலிந்து சென்று அவர்களுடன் பகிர்ந்து கொண்ட தேவிக்கு, சொந்த பந்தங்களுக்கு மேலான உறவாக, அவர்கள் இருந்தார்கள்.

அந்த அன்பான அயலவர்களுடன் எங்களது உறவு உறுதியாக இறுக்கம் கொண்டது. இரண்டு வயதுப் பாலகனான

கௌசி, அதற்கான காரணமாக இருந்தான்.

குழந்தை, வயதுக்கு மீறிய வளர்த்தி கண்டி ருந்தான். மொழு மொழு என்றிருந்த அவன் எங்களிருவரிடமும் தயக்கமேதும் இல்லாமல் பழகினான்.

குழந்தையிடத்தில் துல்லியமான கவனமோ, சுறுசுறுப்போ இல்லாமல் இருந்தது. கண்களில் லேசான கீறலாய் ஒரு துயரம் படிந்து கிடந்தது. எதைப்பற்றிப் பேசினாலும் எப்பொழுதும் மலர்ச்சி யான சிரிப்பொன்றையே பதிலாகத் தந்தான். இடைக்கிடை இரண் டொரு வார்த்தைகளையும் கிளிப்பிள்ளை மாதிரி உதிர்க்கவும் செய்தான்.

இதைப் பார்க்கும் போதெல்லாம் அவனது தாய் லக்சுமி, தேவியிடம் கூறுவாள்: “அக்கா இவன் ஊமைக் கோட்டான்... இவனிட்ட உங்களுக்கென்ன கொஞ்சலும் குலாவலும்...”

அப்பொழுதெல்லாம் அவளது குரலில் ஓர் ஆழ்ந்த துக்கம் மண்டிக்கிடக்கும்.

நானும் தேவியும் ஆசிரியர்களாக இருந்தபடியால், பாட சாலை நேரம் தவிர, பெரும்பாலான பொழுதைக் கௌசியுடனேயே செலவு செய்தோம்.

இந்திய அமைதிப்படை தமிழ் மண்ணில் கால் பதித்த காலமது. அவர்களுக்கும் போராளிகளுக்குமிடையிலான யுத்தம் - தமிழரது முகவிலாசத்தையே துடைத்து அழித்துவிட்ட நிலை. இருந்த போதும் மக்களால் சிறிது மூச்சு விட முடிந்தது. போக்கு வரத்து வசதி எளிதாகியது. மின்சாரவசதியும் தொட்டம் தொட்ட மாகக் கிடைத்தது.

கால நகர்வில், புறச்சூழல் சற்று இலகு தன்மை கொண்டது போலப் பொய்த்தோற்றம் காட்டியது. அந்த வேளையில் தான் சற்குணம் தனியார் நிறுவனமொன்றில் வாகன ஓட்டுநராகத் தனது பணியைத் தொடங்கினார். வாகன ஓட்டுநராக அவர் பெற்ற வேதனம் அப்படி இப்படி என்பதால், சீவியத்துக்கு மேலதிகமாக ஏதாவது கிடைக்குமென்ற எதிர்பார்ப்பில், வீட்டோடு ஒரு வெல்டிங் பட்டறை யும் வைத்துக் கொண்டார்.

தொண்ணூறுகளின் ஆரம்பத்தில், இந்திய அமைதிப்படை இலங்கை மண்ணைவிட்டு - இழப்புகளையும் அவமதிப்புகளையும் சுமந்த வண்ணம் - வெளியேறியது. ஆனால் காலைச்சுற்றிய நஞ்சுப் பாம்பு போலக்கிடந்த இலங்கை இராணுவம் மீளவும் சனத்தைத் தொந்தரவு செய்யத் தொடங்கியது.

தமிழ்மண்ணில் ஷெல்களும் விமானக் குண்டுகளும் கண்ணிவெடிகளும் விதைக்கப்பட்டன. நிலைகுலைந்த மக்கள், பாரிய நெருக்குதலுக்கு உள்ளானார்கள்.

தொண்ணூறுகளின் நடுக்கூறில், யுத்தம் உச்சத்தைத் தொட்டது. குடாநாட்டு மக்களின் ஒரு பகுதியினர் - உயிரிழந்து, பொருளிழந்து ஏதிலிகளாய் வடமராட்சி, தென்மராட்சி, வன்னிப் பெருநிலப்பரப்பு என இடம் பெயர்ந்தார்கள். அதேசமயம் கௌசிகனும் அவனது குடும்பத்தினரும் தென்மராட்சியில் உள்ள அல்லாரையில் - அவனது அப்பம்மா வீட்டில் ஒதுங்கினார்கள். நாங்கள் மீசாலையில் இருந்த எங்களது சித்தப்பா வீட்டில் தஞ்சமடைந்தோம்.

யாழ்குடா நாடு இலங்கைப் படையினர் வசம் வீழ்ந்த பின்னர், தொண்ணூற்றாறில், புதுவருஷத்தை அடுத்து வந்த நாட்களில், தென்மராட்சியிலிருந்து யாழ் வந்த சனங்களோடு நாங்களும் ஊர் திரும்பினோம். ஆனால் கௌசியின் குடும்பம் திரும்பவில்லை. அவர்கள் இரண்டாண்டுகளுக்குப் பின்னரே ஊர்ப்பக்கம் வந்து சேர்ந்தார்கள்.

அல்லாரையில் நல்ல பாடசாலை ஏதுமில்லாத நிலையில், கௌசியின் படிப்புப் பாதிப்படைந்தது. அவன் ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சையிலும் தேர்ச்சி அடையவில்லை.

யாழ் வந்த கௌசி, மத்திய கல்லூரியில் சேர்ந்து கொண்டான். எட்டாம் வகுப்பில் கற்ற அவன், நல்லூரிலுள்ள தனியார் கல்வி நிறுவனமொன்றிலும் மாலை வகுப்புகளில் படித்தான். சிறுகச்சிறுக அவனுக்குக் கல்வியில் ஈடுபாடும் ஈர்ப்பும் ஏற்படத் தொடங்கியது.

அவன் பத்தாம் வகுப்பில் இருந்தபோது தான் அவர்களது

வீட்டில் அந்த அதிசயம் நடந்தது. மீளவும் கருவுயிர்த்த லக்சுமி பெண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள்.

குழந்தை, மூக்கும் முழியுமாய் அழகாக இருந்தாள். அவளுக்குப் பவதாரணி என்று பெயர் வைத்தார்கள். ஜாதகம் கணித்த ஐயம்பிள்ளைச் சாத்திரி மூக்கில் விரல் பதித்து அதிசயித்தார். "குழந்தைக்கு குருசந்திர யோகம். நல்லா இருப்பாள். அரசாளப் பிறந்த பெண் இவள்..." என்று பொச்சடித்தார்.

அந்தச் சின்னஞ்சிறு மலரை, கருவிலே திருவுடையவ ளென்று ஊர் பேசியது. பேசியது போல, வயதுக்கு மீறிய போத முடையவளாக அவள் வளர்ந்து வந்தாள். அவள் இரண்டு வயதுக் குழந்தையாக இருந்த பொழுது, அவளது புலன்களின் மலர்ச்சி அவளைப் படிகம் போல பளிச்சிட வைத்தது. அவளது உதடுகளில் இருந்து உதிரும் சொல் ஒவ்வொன்றும் ஓராயிரம் அர்த்தம் தருவதாய் எமக்கு இருந்தது. அவளது செயல்களில் தெய்வாம்சம் ஒளிர்ந்தது.

அன்று நாங்கள் பாடசாலைக்குப் போகவில்லை. லீவு எடுத்திருந்தோம். அதனை மோப்பம் பிடித்து அறிந்து கொண்ட தாரணி, காலையிலேயே எங்கள் வீட்டுப் பக்கம் வந்தாள்.

வந்தவள் தேவியின் குரல் கேட்டதும் எட்டிப் பார்த்தாள்.

"நான்... நான் சாமிக்குப் பூ எடுத்துத் தரட்டா அன்ரி...?" கேட்டவள், தேவிக்கு அருகாக வந்த பூ எடுத்துக் கொடுத்தாள்.

ஒரு கணம் ஏதோ தீவிரமான யோசனையில் ஆழ்ந்தவள், "ஹோலிலை இருக்கிற பாபா படத்துக்கு பூவைக்க வேணும்", என மெலிதாக முனகினாள். முனகியதோடு நில்லாது, கைநிறையப் பூக்களை அள்ளி எடுத்து வந்து, பாபா படத்துக்கு வைத்தாள். பின்னர் கண்களை மூடிய வாகில் ஏதோ முணுமுணுத்தாள்.

எல்லாமே பாவனைதான்!

அதனைப் புரிந்து கொண்ட நான் - அவள் அருகாக வந்து, அவளது தலையை அன்பாக வருடியபடி: "என்ன தேவாரமா...?" என்று கேட்டேன்.

"குழப்பாதேங்க...! நான் சாமி கும்பிடுறன்..." கூறியவள், என்னை ஓரக்கண்களால் பார்த்து ஒரு குறுஞ்சிரிப்புச் சிரித்தாள். அது

சாரலின் தெளிப்பாயிருந்தது.

"சாமிற்றை பிள்ளை என்ன வரம் கேட்டவ...?"

"கௌசிக்குப் படிப்புத்தா... எனக்கு... எனக்குப் பட்டுச்சட்டை தா... அப்பாவுக்கு காசு தா... அன்ரி பாவம்... அவவின்ர கால் நோ மாற வேணும்... எண்டு கேட்டனான்."

அந்த மழலை சிந்தும் அதிசயத்தை வாரி எடுத்து அழுத்தமாக அணைத்துக் கொண்டேன்.

அவள் நெளிந்து, என்னிடமிருந்த இறங்க முயற்சித்தாள்.

"என்ன நோகுதாம்மா...?"

"இல்லை" என்றவள் – தனது புலன்களை ஒருமுகப்படுத்திக் காதுகளைக் கூர்மைப்படுத்திக் கொண்டாள். அவளது அந்த அபிநயம் எல்லாம் சற்குணத்தின் வாகனம் வந்த சத்தத்தைக் கேட்டுத்தான் என்பது எனக்கு விளங்கியது. திடீரென எழுந்து கொண்டவள், "அப்பா வந்திட்டார்", என்று கூவியபடி , தங்களது வீட்டுப் பக்கம் ஓடினாள். அப்பொழுது அவளது மின்னும் கண் களிலும் மிருதுவான முகத்தி லும் பரவிய பரபரப்பை என்னால் பார்க்க முடிந்தது.

வீட்டுப்பக்கம் போனவள் – தகப்பனிடம் ஏதோ முறைப்பாடு வைத்துக் கொண்டாள். குளித்துக் கொண்டிருந்த கௌசியைக் கண்டதும் அவனிடம் வந்து, முத்து உதிரும் ஓசையில் பேசுவது கேட்டது:

"நானும் பள்ளிக் கூடம் போகவேணும்..."

"பிள்ளை இன்னும் கொஞ்சம் வளர வேணும்"

"உன்ரை சைக்கிளிலை தான் போவன்..."

"போனால் போச்சுது,"

"கிளி மாமான்ரை கடையில கொப்பி... பென்சிலெல்லாம் வாங்கவேணும்"

"வாங்குவம்"

"இன்னும் சொக்லேற், சுவிங்கம், ரிப்பி ரிப்பி..."

"எல்லாம் வாங்கலாம்..."

கௌசி குளித்து விட்டு, ஹோல் பக்கமாக வந்தான். உள்ளே

ஓடிய தாரணி அவன் தலைவாரும் சீப்பை எடுத்து வந்து தந்தாள். தலைவாரிய கௌசி தலைமுடியைச் சீப்பால் அழுத்தி அழுத்தி நெளிவைத்துக் கொண்டான். சீப்பை அவனிடம் இருந்து வாங்கிக் கொண்டவள், அவனைப்போல தனது தலையிலும் நெளிவைப்பது போல அழுத்தி அழுத்திப் பார்த்தாள்.

சீப்பை அவளிடமிருந்து வாங்கி கௌசி: "அப்படி இல்லைக் குஞ்சு! இப்படி இப்படி அழுத்த வேணும்..." என்று அவளது தலையில் அழுத்திக் காட்டினான்.

அவனைப் பார்த்துப் பூரிப்புடன் சிரித்தவள், சாமி அறைவரை சென்று, விபூதி எடுத்து வந்து அவனுக்குப் பூசி விட்டாள். பூசும்போது விபூதி அவனது கண்களில் விழுந்து விடக்கூடாது என்ற கவனம் அவளிடம் இருந்தது.

சாப்பாடானதும் - கௌசி உடுத்திக் கொண்டு, ஸ்கூல் பாக்குடன் தனது சைக்கிளில் தொற்றிக் கொண்டான். அவளுக்கு 'பை' சொன்னவன், சைக்கிள் பெடலை அழுத்தி மிதித்தான். அவன் வீதி முடக்குத் திரும்பும் வரை அவனையே பார்த்தபடி அவள் நின்றாள். அவளது கண்கள் கலங்கிவிடுகின்றன. அந்தக் கலக்கமும் சொரிதலும் அவன் பாடசாலையில் இருந்து வரும்வரை அவளிடம் இருக்கும்.

•

கௌசி சாதாரணதரப் பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்தான். மூன்று பாடங்களில் சிறப்புச் சித்தி. வர்த்தகப் பாடத்திலும் "சி" இருந்தது. அவன் உயர்தரவகுப்பில், வர்த்தகப் பிரிவில், சேர்ந்து படிக்கத் தொடங்கினான்.

படிப்பில் ஒரு வகை ஒழுங்கும் அக்கறையும் அவனிடம் ஆரம்பத்தில் இருந்தது. ஆனால். அவனைப் பொறுத்தவரை எல்லாமே முதலாம் தவணையோடு முடிவுக்கு வந்தது போலாகி விட்டது.

அவனது பேச்சிலும் நடத்தையிலும் வெளிப் படைத்தன்மை இல்லாமல் போனதை நாம் அவதானித்தோம். ஒரு வகையில் அது ஆச்சரியம் தான்! உள் நுழைந்து, அவனது மனசை உரசி உரசிப்

பார்க்க எங்களால் முடியவில்லை. வீட்டைப் பொறுத்தவரையிலும் ஒரு வெளியாளாகவே அவன் நடந்து கொண்டான். 'இது ஏன்...? எதற்கு...?' எல்லாமே எங்களுக்குக் குழப்பமாக இருந்தது. அவனது இந்தப் புதிரான நடத்தை, ஓர் ஆழ்ந்த துயரத்தைச் சூழலில் கசிய விட்டது. பேச்சிழந்து போன எங்களுக்கு, அவனைவிட்டு விலகி, ஒதுங்குவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

தாரணியிடம் மிகுந்த வாஞ்சையுடனிருந்த கௌசி அவளிடமிருந்தும் விலகியே நின்றான். அவனது அந்த விலகல் அவளை மிகவும் பாதித்தது.

இப்பொழுதெல்லாம் அவளது விம்மல் ஒலி பக்கத்து வீட்டில் சதா கேட்டபடி இருந்தது. சிலவேளைகளில் அவளது அந்த விம்முதல், வீறிட்ட அழுகையாக மாறி விடுவதையும் நாம் அவதானித்தோம்.

'யாருமற்ற அநாதையா அந்தப் பிஞ்சு...? இல்லையே...!' நினைப்பு வந்ததும் மனசு முட்டி முட்டி மறுகுவதை எம்மால் தடைப்படுத்த முடியவில்லை.

கௌசியின் நாளாந்த நடவடிக்கைகளிலும் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. அதிகாலையில் ரியூசன் என்று புறப்படும் அவன் - இரவு வெகுநேரம் கழித்தே வீடு திரும்பினான். எங்குபோய் வருகிறான் என்பது தெரியாமலே இருந்தது. 'பாடசாலைக்கா...? ரியூசன் சென்ரருக்கா...? அல்லது... அல்லது வேறு எங்காவது...?' எதிலுமே தெளிவில்லாத குழப்பமே மிஞ்சியது. வீடு திரும்பியதும், லக்சுமி அவனுக்கென எடுத்து வைத்திருக்கும் இரவுச் சாப்பாட்டைக் கொறித்து விட்டுப்படுத்துக் கொள்வதோடு அன்றைய பொழுது அவனுக்கு ஆகி விடுகிறது.

இரண்டு நாட்களுக்கு முன்னர் தான் அந்தச் செய்தி, சற்குணத்தின் காதுகளுக்கு எட்டியது. மைத்துனர் இராசையா தான் அதை அவரிடம் கூறினார். அதை அவர் நம்பவில்லை. ஆனாலும் அடிபட்ட மிருகத்தின் வேதனையுடன் அன்று முழுவதும் அவர் முனகிய படியே இருந்தார்.

'மாணவ அமைப்பா...? இயக்கமா...? தொடர்பா...? அப்படி

எல்லாம் இருக்காது... இருந்தாலும் அவனால் அவர்களோடு இணைந்து இழுபட முடியுமா...?' முடியாதென்றே நினைத்துக் கொண்டார். மனதைத் தேற்றிக் கொள்வதைத்தவிர, அவருக்கு வேறு வழி ஏதும் தெரியவில்லை. வீட்டிலும் இது விடயத்தைப் பேசாமல் விட்டு விட்டார்.

திடீரென ஏதோ நினைத்துக் கொண்டவர், கௌசியின் வைப்புச் செப்பை ஆராய்ந்தார். அவன் உடுப்பு வைக்கும் அலுமாரி யின் அடியிற் பாடல்கள் அடங்கிய கசெற்றுக்கள் சிலவும் – இயக்கம் சார்ந்த துண்டுப்பிரசுரங்களும் கைநூல்களும் இருந்தன. ஆச்சரியப் பட்ட அவர், கசெற்றுக்களை எடுத்துப் பிறிதோரிடத்தில் மறைத்து வைத்தார். துண்டுப் பிரசுரங்களையும் நூல்களையும் தீயிட்டு அழித்தார்.

அவரது அந்தச் செயல் அவனுக்கு மனக் கசப்பையும் துன்பத்தையும் தந்தது. இருப்புக் கொள்ளாமல் தவித்தவன், எதையுமே கண்டு கொள்ளாதவன் போல நடந்து கொண்டான். அதே நேரம், ஒரு தீர்மானமான முடிவுக்கு வந்தவன் போலவும் அவனது செயல்கள் இருந்தன.

கௌசி வழமைபோல அன்று காலை ரியூசனுக்கு புறப்பட்டான். புறப்படும்போது, தாரணியிடம் அவன் கரைந்து கரைந்து கதைப்பது கேட்டது. அவளது குரலில் நிரம்பி வழியும் குதூகலம் 'பிணங்கி நின்ற அண்ணனும் தங்கையும் இணங்கி விட்டார்களா...? இது... இது எப்படிச்சாத்தியமாகியது...'

வியப்புடன் வெளியே வந்து பார்த்தேன். தேவியும் கூடவே வந்தாள்.

கௌசி தனது அன்புத்தங்கையை கைகளில் ஏந்தி அவளது கன்னக்கதுப்புக்கள் பிதுங்கப் பிதுங்க - ஒரு வகை வெப்பியாரத் துடன்... எதையுமே இழந்து விட வேண்டாமே என்ற பதகளிப்புடன்- ஆசை தீர முத்தமிட்டான்.

அவனது கரங்களில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்ட தாரணி, அண்ணனுக்கு "பை" சொல்லி விடை தந்தாள். குமைந்து போய்க் கிடந்த அவனது முகத்திலும் கண்களிலும் கவலையில்

ஆழ்ந்த ரேகைகள்.

அந்த உணர்ச்சி மிகுந்த விடை பெறுதலின் போது தான் நாம் கௌசியை கடைசியாகப் பார்த்தோம். அது இறுதியான பிரிவு என்பது எங்களுக்கு அப்பொழுது தெரியாது.

அன்று மாலை கௌசி வீடு திரும்பவில்லை. அடுத்தநாளும் வரவில்லை. அவனது குடும்பம் கண்ணீரும் கம்பலையுமாக ஆகியது. எங்களிருவரது துயரமும் எல்லை மீறிய ஒன்றாகவே இருந்தது. நாலு நாள் கழித்து ஒரு பெடியன் சற்குணத்தின் வீடு பார்த்து வந்தான். வந்தவனிடம் உதடுகள் பிரியாத ஓர் இறுக்கம் இருந்தது. விடுத்து விடுத்து சற்குணம் விசாரித்தபோதும் கௌசியைப் பற்றி எதுவித தகவலையும் அவனிடம் இருந்து பெற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனால், ஒரு துண்டுக் கடிதத்தை மட்டும் அவரிடம் அவன் தந்தான். அக்கடிதத்தில், கௌசி எழுதிய விபரம் இப்படி யிருந்தது:

'அப்பா...! இரண்டு கிழமையில, வீட்டுப் பக்கம் நான் வருவன். றெயினிங் இரண்டு கிழமைதான். எல்லாம் எங்கடை பாதுகாப்புக்கும் தமிழ்த்தேசத்தின் பாதுகாப்புக்கும் தான்... அம்மாவையும் தாரணிக் குட்டியையும் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். பெரியம்மாவையும் கேட்டதாகச் சொல்லவும்.'

சிறு குறிப்புத்தான். அதில் எங்களைப் பற்றி ஏதும் இல்லை. எங்களுக்கு அது துயரம் தருவதாய் இருந்தது.

வெடித்துக்குலுங்கிய சற்குணம் - லக்சுமியையும் தாரணியை யும் இறுக அணைத்தபடி, குமுறிக்குமுறி அழுதார்.

இரண்டு கிழமை என்று சென்ற கௌசி இரண்டு மாதமாகி யும் வீடு திரும்பவில்லை. அது, இன்று வரை எங்களால் அறிந்து கொள்ளமுடியாத புதிராகவே இருக்கிறது.

'போராளிகள்...! அவர்களது இலட்சியம், ஈகம், தியாகம் என்பன குடும்ப பந்தங்களிலும் பார்க்க மேலானதாக அவனுக்கு இருந்திருக்குமோ!' குழப்பங்களுடன் நமது காலம் கழிந்தது.

சரியாக ஒரு வருஷம் கடந்த நிலையில், கௌசி எங்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டான். அவனது குரலைக்

கேட்டதும் தேவியின் கண்கள் பனித்த விட்டன. என்னுடனும் சற்குணத்துடனும் அவன் கதைத்தான். தன்னைப்பற்றி எதுவும் பேசாத ஒரு இறுக்கம் அவனிடம் இருந்தது. தாரணியைப் பற்றியே அதிகம் விசாரித்தான். லக்சுமியும் வனஜாவும் கூட அவனுடன் பேசினார்கள்.

அதன் பின்னர், அவனது இருத்தல் பற்றி எதுவித தகவலும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. காற்று வாக்கில் அவன் அரசியல் பிரிவில் இருப்பதாகச் செய்திகள் சில வந்தன. மேலதிக விபரம் எதனையும் எங்களால் அறிந்து கொள்ள முடியவில்லை.

வன்னியில் நடந்த இறுதியுத்தத்துக்கு ஓரிரு மாதங்களுக்கு முன்னதாக, அவனது குரலை நாம் மீளவும் கேட்டோம். அவனைச் சூழ இருந்த தொல்லைகளில் இருந்து அவன் மீண்டு விட்டதாகவே நாம் நினைத்துக் கொண்டோம். ஆனால், அப்படி அல்ல என்பதை, அவனைப் பற்றிப் பின்னர் வந்த செய்திகள் உறுதிப்படுத்தின.

கௌசி எங்களோடு கதைத்து சரியாக ஒரு மாதத்தின் பின்னர். தலையிலும், மார்பிலும் காயப்பட்ட நிலையில் - புதுக் குடியிருப்புக்கும் மாத்தளனுக்கும் இடைப்பட- பாதையோரம் அநாதரவாகக் கிடப்பதாகத் தகவல் வந்தது. அதை நாங்கள் நம்ப வில்லை. துயரம் ஒன்றே துணையாக, கொண்டலடியான் மீது பாரத்தைப் போட்டு விட்டு, அவனது வருகைக்காக காத்திருக் கிறோம்.

தெய்வம் கண் திறக்குமா? திறக்குமென்ற நம்பிக்கை பல வீனமான ஒளிக் கீறலாய் எம்முன் இருந்து கொண்டே இருக்கிறது.

அரசு புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்யும் போராளி களில் ஒருவனாக, என்றாவது ஒருநாள் அவன் வருவான். எங்களுக் கென்று இல்லாது விட்டாலும் அவனை எதிர்பார்த்திருக்கும் அவனது அருமைத் தங்கை தாரணிக்காகவேனும் அவன் வரவேணும். வருவான்.

•

ஜீவநதி - 2013

## மீறல்கள்

அவன் பஸ்ஸை விட்டு இறங்கிய பொழுது அவளைப் பார்த்தான். எப்பொழுதும் போல, அவள் எதுவித உணர்ச்சியையும் வெளிக்காட்டமாட்டாள் என அவன் நினைத்தான். ஆனால், அவன் நினைத்ததுக்கு மாறாக, அவளது கீறல் விழுந்த உதடுகளில் சிரிப்பு இருந்தது.

அவள் அருகாக வந்தவன், அவளைப் பார்த்துக் கேட்டான்: "ஏன் லேற்...?"

ஏதோ சொல்லுவதற்கு வாயுன்னியவள், பேசாமல் மேலே நடந்தாள்.

'பத்து நாள் பழக்கத்தில், பார்த்த முகத்துக்கு எந்த யாழ்ப்பாணத்துப் பெட்டை கதைப்பாள்...!'

மனசோடு நனையும் நினைவுகள்.

'சிவாஸ் மெடிக்கல்ஸ்' வரை அவளோடு வந்தவன், அவள் படி ஏறியதும் திரும்பி நடந்தான்.

'தரணி ரெக்ஸ்' – அவன் வேலை செய்யுமிடம்.

'மெடிக்கல்ஸில் வேலை பார்க்கும் அவளுக்கு ஒரு பத்துக் கொடுப்பார்களா...? பெரிய மெடிக்கல்ஸ் இல்லை... ஆறு ஏழுதான் கிடைக்கும்...'

'எனக்கு எட்டாயிரம் கிடைக்கிறது. இருவருக்கும் பதினாலு பதினைஞ்சு வரும்...' என்ன மாதிரி மனசு வேக வேகமாக

முடிவெடுத்துவிடுகிறது. மீளவும் நினைவுகளின் மிதப்பு.

‘அவளுக்கு அப்பா, அம்மா, சகோதரங்கள் என இருப்பார்கள்... எனக்கு அம்மாவும் சகோதரியும். அவளுக்கு ஏதாவது நடந்த பிறகுதான் இந்தக் கூத்தெல்லாம் சரிவரும்... கண்டதும் காதல் வந்தால் என்ன செய்வது...’

மனசு வருட லேசாகச் சிரித்துக் கொண்டான்.

தரணி ரெக்ஸில் அவன் கால்வைத்ததும், “என்ன மகாராசாவின்ரை தேர் இப்பதான் அசைஞ்சதா...?”

கடை முதலாளி சரவணமுத்து அவனை முறைத்துப் பார்த்தபடி கேட்டார்.

“...........”

மௌனமாக, மன்னிப்புக் கேட்கும் தோரணையை முகத்தில் தேக்கியவன், உடனடியாகவே வேலையில் மூழ்கினான்.

சுடிதார் வாங்க வந்த பெண்ணின் பேரம் பேசுதலுக்கு மசியாமல், தான் சொன்ன விலைக்கே ‘பில்’ போட்டான்.

பம்பரமாக அவன் வேலை செய்வதைப் பார்த்த முதலாளிக்கு அவன் மீது அளவுக்கு மீறிய பரிவு ஏற்பட்டது.

வாஞ்சையுடன் அவனைப் பார்த்தபடி இருந்தார்.

மதிய உணவுக்கு ஒரு அரை மணிநேர ஓய்வு அவனுக்குக் கிடைத்தது. அந்த இடைவெளியில் அவளைப் பார்க்க வேண்டும் போல அவனுக்கு இருந்தது.

‘உலர்ந்து போயிருந்தாலும் அவளது அந்த அழகான உதடுகள், சின்னச் செப்புவாய், நேர் கோட்டில் விழும் மூக்கு, மூக்கின் கீழாகச் சிறு பள்ளம், பள்ளத்தில் இருக்கும் கடுகளவு மச்சம், மச்சத்தில் முளை கொண்டிருக்கும் கறுத்த முடி, அதில் துளிர்த்திருக்கும் வியர்வை...!’

எல்லாமே மனசு கொள்ளை போகும் அழகு!

சிலிர்ப்புடன் சிவாஸினுள் நுழைந்தான். உள்ளே வந்தவன், அவளைக் காணாது தவித்தான். ஏமாற்றத்துடன் திரும்பயிருந்தவனை, அந்த மணிக்குரல் தடுத்தது. பார்மஸியின் பின்புறமாக இருந்த அவள், முன்பக்கமாக வந்தாள். வந்தவளது கண்களில்

கொஞ்சம் பிரியமும் வியப்பும் இருந்தது.

அவளைப் பார்த்ததும் அவன் கேட்டான்:

"டிஸ்பிறின்... டிஸ்பிறின் ஒரு காட் வேணும்...!"

"டிஸ்பிறினா...? தலை வலிக்குப் பனடோல் போடுங்க... டிஸ்பிறினை விடப் பனடோல் நல்லம்..."

பளிச்சென்றிருந்த அவளது விரல்களில் விழுந்த, அவனது பார்வை; மார்பில் படர்ந்து, பின்னர் முகத்தில் மொய்த்தது.

'போதுமே...', அவளது கண்கள் அவனை ஆதுரத்துடன் அதட்டின.

பனடோல் வில்லைகளை அவளது கரங்களை ஸ்பரிசித்தபடி பெற்றுக் கொண்டவன், திரும்பிய பொழுது அவளது குரல் மெலிதாக ஒலித்தது.

"உண்மையில தலையிடியா...? இல்ல... என்னைப் பார்த்துப் பேச... இது ஒரு சாட்டா...?"

வியப்பு மேலிட, அவளையே பார்த்தபடி அவன் வெளியே நடந்தான். ஒரு கணம் திரும்பிப் பார்த்தான். அவனது கள்ளம் பிடிபட்டு விட்டதை அவளது கண்கள் காட்டிய மாதிரி இருந்தது.

அந்தப் பார்வையும் சொரிதலும் தன்னில் அவள் பிரியப்பட்டு, சிறைப்பட்டு விட்டதையே அவனுக்கு உணர்த்தியது.

இருவரும் – தம்மளவில் காதலர்கள் தான் என மனம் ஒப்பிய போதும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவில்லை, ஓரிரு நிமிஷங்கள் கூட, தனியாகச் சந்திக்கவில்லை, பேசித் தெளிவு பெறவில்லை என்பதில் அவர்களுக்குத் திருப்தியின்மை இருக்கவே செய்தது.

ஒரு சமயம் அவர்கள் இருவரும் ஒரே பஸ்ஸில் பயணம் செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. அந்தப் பயணம் ஒரு வகையில் ஒருவரை ஒருவர் நெருங்கி வருவதற்கும் – ஓர் ஆணின் துணை எப்பொழுதும் தேவை என்பதை உணர்ந்து கொள்வதற்கும் அவளுக்கு உதவியது.

தனது வேலை முடிந்து, இரவு ஏழு மணியளவில் பஸ் நிலையத்துக்கு வந்த போது; அவளுக்குப் பின்னால் வந்து, அவனும் அவளுடன் சேர்ந்து கொண்டான். அச்சுவெலி மினிபஸ் ஒன்று

நின்றது. பஸ் சன நெரிசலில் பிதுங்கி வழிந்தது. இருவரும் பஸ்ஸில் ஒருவாறு தொற்றிக் கொண்டார்கள். சற்று முன் நகர்ந்து அவள் நின்று கொண்டாள். அவளை அணைந்தபடி - லேசாக மீசை அரும்பிய, ஒரு விடலை நின்றது. பஸ்ஸில் பொதுவாக நடக்கும் சில்மிஷங்கள் அங்கு அரங்கேறின. அவளது பிருஷ்டத்தை தொடுமாப்போல அந்த விடலை நின்றான். அவனது சேட்டைகளை ஓரளவுக்குப் பொறுத்துக் கொண்டு நின்றவள், அவனது வலது கரம் அவளது இடையில் ஊர்ந்து தொந்தரவு செய்ய, அவனைக் கோபத்துடன் பார்த்தாள். பின்னர் பின்புறமாக நகர்ந்து இவனுடன் நின்று கொண்டாள். அவனுடன் நின்ற பொழுது ஏதோ மிகுந்த பாதுகாப்புக் கிடைத்துவிட்டதான உணர்வு அவளுக்கு. திரும்பியவள், மிகுந்த திருப்தியுடன் அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

“நல்லூர் தானே...?” அவன் கேட்க,

“நீங்கள் இருபாலை டச்றோட்டா...?” அவளும் கேட்டாள்.

“ம்...”

என்றவன், தொடர்ந்து பேசாது மௌனமானான். நல்லூரடி யில், பெல் அடித்து அவள் இறங்க அவன் உதவி செய்தான். அவள் இறங்கியதும் பஸ் மேலே நகர்ந்தது. அவனுக்கு அவளுடன் இறங்கி, அவளது வீடு வரை தோளோடு தோள் உரசப் போக வேண்டும் போலிருந்தது.

•

ஓர் ஆறு மாத காலப் பழக்கத்தில், மனதில் மறைத்து வைத்திருக்க எதுவுமே இல்லை என்ற அளவுக்கு ரமணனும் பிரணவியும் பல விஷயங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். நிரம்பிய போதாமைகளுடன் வாழ்ந்து வந்த அவர்களிடையே துளிர்விட்ட அந்தக் காதல் ஓரளவு மகிழ்ச்சி தருவதாகவே அவர்களுக்கு இருந்தது.

இந்தக் காதலும் மன அவசமும் யதார்த்த நிலைமைகளில் இருந்து விலகிய, ஒரு வகையில் தப்பியோடும் மனோ நிலையுடன் கூடிய, உலர்ந்த தந்தக் கோபுரக் கனவுகள் தானென அவர்கள் உணர்ந்தபோது, பெரிதும் உடைந்து போனார்கள். அந்த உடைவு

அவர்களுக்கு மிகுந்த கவலையைத் தந்தது. இருந்தபோதும் அவர்கள் இருவரும் அடிக்கடி சந்தித்துக் கொண்டார்கள். அதை அவர்களால் தவிர்க்கமுடியவில்லை. அவர்களை மீறித்துளிர்த்த அந்த ஈரலிப்பான உறவை, கடவுள் தந்த வரமாகவே பிரணவி நினைத்துக் கொண்டாள். இதனை... இந்தக் காதலை எக்காரணம் பற்றியும் இழந்து விடக் கூடாதெனும் தவிப்பு அவளுக்கு இருந்தது. அவனுக்கும் தான்.

இப்பொழுதெல்லாம் இருவரும் வேலை முடிந்ததும் - வீட்டுக்குப் போவதற்கு முன்னதாக - பட்டணத்துக்குப் பக்கத்தில் இருக்கும் சுப்பிரமணியம் பூங்காவில் சந்தித்துக் கொண்டார்கள். அந்தச் சந்திப்புகளில் காதலுக்கு அப்பால் சென்று, மனம் தோயத்தோய அவர்களால் பேசமுடிந்தது. அந்தப் பேச்சுக்களில் ஒழிப்பு மறைப்பு ஏதும் இருக்கவில்லை.

அரைகுறை மருத்துவ வசதியுடன் அல்லாடும் இதய நோயாளியான அம்மா, பல்கலைக்கழகப் படிப்பைத் தொடர முடியாமல் தவிக்கும் தங்கை, வாடகைவீடு, சம்பளம் எட்டா யிரத்தைத் தவிர அடியூறல் ஏதுமில்லாத அவனது வரட்சியான நிலை, என்று எல்லாவற்றையும் அவளுடன் அவன் பகிர்ந்து கொண்டான்.

அவளும் தன் பங்குக்கு, ஒட்டுதல் ஏதுமில்லாத உலர்ந்த குரலில், தனது மனக் கிடக்கை முழுவதையும் அவனிடம் கொட்டித் தீர்த்தாள்:

"ரமணா! நானும் உன்னைப் போல அன்றாடம் காய்ச்சி தான். எனக்கெண்டு வந்து வாய்த்த ஊதாரியான அப்பா... கீழ்க் கண்டுகளான எனது இரண்டு தங்கைகள். அவையின்ரை படிப்பு... தேவையளெண்டு எனக்கு எவ்வளவோ பார்த்துப் பார்த்துச் செய்யவேண்டியிருக்கு. உன்னைவிட என்ரை நிலமை கொஞ்சம் பரவாயில்லை. சொந்தக் காணியில குடியிருக்கிறன். சின்னதா ஒரு வீடும் இருக்கு. சாராயப் போத்திலும் கையுமாய்த் திரிஞ்சாலும் அப்பா சுருட்டுச் சுத்தப் போறார்... மாதா மாதம் இரண்டோ மூண்டோ என்ரை கையிலையும் தாறார்... அதோட என்ரை சம்பளமும் சேர்ந்து

எங்களைக் கையேந்த வைக்கேல்லை..."

"உன்ரை ஏழும்... என்ரை எட்டும் சேர்ந்து ஒரு பதினைஞ்சாவது தேறும்... அதில மிச்சம் கிச்சம் பிடிச்சு நம்மட வாழ்க்கையை நாம அமைச்சுக் கொள்ளிறது நல்லம்..."

"வாழ்க்கை! அப்படி ஏதாவது இந்தத் தரித்திரங்களுக்கு இருக்காடா என்ன...?

"நம்பிக்கை இழக்காதை பிரணவி!"

"ஓம்... ஓம்... நம்பிக்கை தான் வாழ்க்கை...! நம்பிக்கை மட்டும் போதுமா...? கடவுளும் மனசு வைக்கவேணும்..."

"எங்களைப் போல பஞ்சப்பட்ட ஜென்மங்களை உன்ரை கடவுள் கூடக் கவனிக்கிற மாதிரித் தெரியேல்லை..." -

"கடவுளைப் பற்றிப் பொல்லாப்பு ஏதும் சொல்லாமலிருக்க உன்னாலை முடியாதா...? உன்ரை வாய்க்கொழுப்புக்கு இசக்குப் பிசக்காய் ஏதென் நடந்திடப்போகுதடா...!"

"ஒண்டும் நடக்காது... நீ கும்பிடற தெய்வம் என்னையும் காப்பாத்தும்..."

கூறியவன், லேசாகச் சிரித்துக்கொள்ளவும் செய்தான்.

"காப்பாத்தவேணும்... காப்பாத்தும்... அதுதான் என்ரை பிரார்த்தனை." கூறிய பிரணவி அவனுடன் இன்னும் நெருக்கமாக உட்கார்ந்து கொண்டாள்.

இருள் படர்ந்து, அடர்த்தி கொண்டது. மறைப்புத் தேடி அவர்கள் பூஞ்செடிகளுக்குள் ஒதுங்கிக் கொண்டார்கள்.

அவளது வலது கரத்தைப் பிரியமாகத் தனது கரங்களில் ஏந்திக் கொண்டவனை அந்தப் பெட்டையின் மணமும் ஸ்பரிசமும் வெதவெதப்பும் உணர்ச்சி வசப்படுத்தின.

பரபரப்படைந்தவன் அவளது பூ இதழ்களை விரல்களால் வருடினான். அதைத் தாளாத அவள் - சிறு சிணுங்கலுடன் அவனது கரத்தைத் தட்டிவிட்டாள்.

"என்ன இது... தொட்டால் சிணுங்கி மாதிரிச் சுருண்டு கொண்டாலெப்படி...? இன்னும்... இன்னும் எவ்வளவோ இருக்கே பிரணவி...!"

"இல்லை... வேண்டாம்... இஞ்சை இப்பவேண்டாம்...!"

அவளது சளசளப்பைப் பொருட்படுத்தாதவனாய் அவளது உதடுகளில் சற்று முரட்டுத்தனமாக முத்தமிட்டான்.

"இதென்ன... இதென்ன முரட்டுத்தனம்... எப்பையும் இல்லாத கூத்தாயிருக்கு...!"

அவசரம் அவசரமாகக் கூறியவள், சிறிது பதட்டத்துடன் எழுந்து கொண்டாள்.

"நல்லா இருண்டு போச்சு... வீட்ட போவம். அப்பா தேடப் போறார்..."

அவளது பேச்சுக்கு எதிர்ப்பேச்சு ஏதுமில்லாமல் அவளுடன் அவன் இணைந்து நடந்தான்.

சிறிது கசங்கிய மனதுடன் வந்த அவன் அவளைப் பார்த்துக் கேட்டான்.

"என்ன கோவமா...?"

"இல்லையடா... உன்னை நினைக்கத்தான் எனக்குப் பாவமா இருக்கு..."

"..............."

அவனது மௌனத்தைக் கலைத்தபடி அவள் தொடர்ந்து பேசினாள்:

"நாலுபேர் மதிக்கிற மாதிரி நாம நடக்கவேணும். தரவை மாடுகள் மாதிரி சேமறியில திரியேலுமா...? என்ரை கழுத்தில ஒரு தாலிச் சரடு ஏறவேணும்... அதுக்குப் பிறகு தான் இந்தப் பூராயம் எல்லாம்... அது தான் வடிவு."

"அரைப் பவுண் போதும். அதில தாலி செய்து... கொடி யில்லை எண்டா என்ன...? மஞ்சள் கயித்திலையாவது கட்டலாம். அதோட இன்னொரு விஷயம் - உன்ரை ஆத்திரம் அவசரம் எனக்கு விளங்குது...! வெக்க துக்கம் பார்க்கேலுமா... சொல்லிறதை கேளடா...! என்னைப் பொசுக்கிற இந்தத் தீயும் அணைய வேணும். மொண்ணைத்தனமா இனியும் நாம சும்மா இருக்கேலாது. ஏதாவது கையில மடியில சேர்க்கவேணும். அதுக்கொரு இருபதாவது இருப்பது நல்லம்..."

வாழ்வின் மலர்ச்சியை எதிர்பார்த்தபடி - உலர்ந்து, கருகிய மனதுடன் அவர்கள் இருவரும் வழக்கத்துக்கு மாறாக அன்று, சற்றுத் தாமதமாகவே பஸ் நிலையத்தை நோக்கி நடந்தார்கள்.

•

ஆரம்பத்தில் நாள் தவறாது சந்தித்துக்கொண்ட ரமணனும் பிரணவியும் - பின்னர் கிழமைக்கு ஒருதரம் எனச் சந்திக்கத் தொடங்கினார்கள். இப்பொழுதெல்லாம் அவர்களது சந்திப்பு மாதம் ஒரு முறை அல்லது இருமுறை என்று ஆகியிருந்தது. சந்திக்க வேண்டும் என்ற ஆர்வம் அவர்களிடம் இல்லை என்று கூறிவிட முடியாது. ஆர்வம் இருந்தாலும் கூடவே ஒருவித தயக்கமும் ஒதுக்கமும் அவர்களிடம் இருந்தது. அவர்கள் சந்தித்த அடுத்த கணமே - தாலி, கூறை, திருமணம் என்று பேசத் தொடங்கி விடுவதால், 'இதெல்லாம் வேணுமா...? வேண்டாமே...' என இருவருமே மனதளவில் சலித்துக் கொண்டார்கள்.

வாழ்க்கையை, 'அதன் போக்கிலேயே வாழ்ந்தால் என்ன...' என மனதளவில் அவர்கள் நினைத்தாலும். 'அப்படியெல்லாம் வாழ்ந்துவிட முடியுமா...?' என்ற கேள்வியும் அவர்களிடம் இருந்தது.

அவர்கள் திட்டமிட்டது போல எதுவும் நடந்துவிடவில்லை. ஒரு வருட காலத்தில் அவர்களால் ஆறாயிரம் ரூபாய்க்கு மேல் மீதப்படுத்த முடியவில்லை. 'இந்த அரைகுறைப் பணத்தில் தாலி அது இதென்று என்னதைச் செய்து விடமுடியும்...! கழுத்தில் தாலி ஏறும் என்ற கனவு கானலாகவே ஆகிவிடுமா...? போதாமைகளின் மத்தியில் வாழ்க்கையின் ருசிகளைப் பகிர்ந்து கொள்ள நினைப்பது எவ்வளவு அர்த்தமில்லாத விஷயம்...!'

மன அதிர்வுகளில் இருந்து அவளால் மீளமுடியவில்லை.

இப்பொழுதெல்லாம் அவன் இது விஷயத்தில், அதிக ஆர்வம் காட்டாமல், ஏனோ தானோ என்று நடந்து கொள்வதாகவே அவளுக்குத் தோன்றியது. அவனது நடத்தை அவளுக்கு மிகுந்த வருத்தம் தருவதாய் இருந்தது. அதை அவனுக்கு உணர்த்திவிட வேண்டும் எனத் தீர்மானமாக நினைத்துக் கொண்டாள். கால தாமதமானாலும் அது நடைபெறவேண்டும் எனும் எதிர்பார்ப்பு

அவளுக்கு நிரம்ப இருந்தது.

பங்குனி மாத வெயில் நெருப்பு மழையை வர்சித்துக் கொண்டிருந்தது. வழமையாக மதிய உணவு கொள்ளும் உணவகத்துக்கு அவள் அரக்கப் பரக்க வந்தாள். அங்கு அவளுக்கு ஓர் அதிசயம் காத்திருந்தது. ஏறக்குறைய இரண்டு மாதங்களுக்குப் பின்னர் அவனை அங்கே கண்டாள். தற்செயலான அந்தச் சந்திப்பு அவளுக்கு அதிக அளவு மகிழ்ச்சியைத் தந்தது. சாப்பாட்டை முடித்துக் கொண்ட அவன் - கையையும் வாயையும் அலம்பிவிட்டு, அவளுக்கு அருகாக வந்து உட்கார்ந்துகொண்டான்.

பிரணவி, இடியப்பத்துக்கு ஓடர் கொடுத்துவிட்டுக் காத்திருந்தாள்.

"சோறு சாப்பிட்டால் என்ன...? அதிலையும் இப்ப மிச்சப் பிடிப்பா...? கழுத்து எலும்பெல்லாம் தெரியுது... முகமெல்லாம் உலர்ந்து கருமை படர்ந்து கூலிவேலை செய்யிற பெண்டுகள் மாதிரி இருக்கு..."

அவனது பேச்சுக்கு அசுவாரஸ்ஸியமாக "ம்" கொட்டியவள், அவனைப் பார்த்துச் சொன்னாள்:

"நெருக்கமா உன்னோட இருந்து பேசி எத்தனை நாளாய்ப் போச்சு... வாரமுடிவில... ஞாயிற்றுக்கிழமை மட்டில வீட்டுப் பக்கம் வாவன். பேசுவம், பேசி ஒரு முடிவு எடுப்பம். வந்தா உனக்கு ருசியாய்ச் சமைச்சுப் போடுவன்."

"ருசி நாக்குக்கு மட்டும் தானா... இல்ல இன்னும் ருசியள் இருக்கே அதுகளுக்கும் சேர்த்து ஏதாவது...?" லேசான சிரிப்புடன் கேட்டான்.

"போடா வடுவா! வா. வந்து பார். பார்த்தா எல்லாம் தெரிஞ்சு போகுது..."

"உன்ரை அப்பர் ஒண்டும் சொல்ல மாட்டாரா...?"

"அந்தக் குடிகார மட்டியைப் பற்றி இப்ப என்ன பேச்சடா..." அவற்ரை விருப்பத்தை இஞ்ச ஆர் கேக்கினம்..."

"..........."

சாப்பாடானதும் அவளும் அவனும் மௌனமாக அந்த

உணவகத்தை விட்டு வெளியே வந்தார்கள்.

அவனுக்கு அவள் பீடா வாங்கித் தந்தாள். தானும் ஒரு பீடாவை கொடுப்பினுள் அதக்கியவள், பிரியத்துடன் அவனது வலது கரத்தைப் பற்றியபடி நடந்தாள். அவனது ஸ்பரிசம் அவளுக்கு மிகுந்த நிம்மதியைத் தந்தது. பிரிக்கமுடியாத அழுத்தமான ஒரு பந்தத்தை உணர்த்தியது.

எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பற்றிய நினைப்புடன் அவ்விருவரும், பிரியமன மற்றுப் பிரிந்து நடந்தார்கள்.

•

பகல் பன்னிரெண்டு மணி அளவில் ரமணன் செட்டித் தெருவிலுள்ள பிரணவியின் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். அவனைக் கண்ட பிரணவி தேன் சிட்டுப் போல ஓடி வந்து அவனது கரங்களைப் பற்றி உள்ளே அழைத்துச் சென்றாள். நன்றாகத் தோய்ந்து காற்றில் உலர்ந்து பறக்கும் கூந்தலை - அவனைப் பார்த்த மாத்திரத்தில் - அள்ளி எடுத்து, கொண்டை போட்டுக்கொண்டாள். அவளது கண் களில் துளிர்த்த கசிவையும் உதடுகள் உதிர்த்த முறுவலையும் அவனால் தாளமுடியவில்லை. உணர்ச்சி வசப்பட்டவனாய் அவளது கரங்களை அழுத்தமாகப் பற்றியபடி நடந்தான்.

வீட்டுத் தாவாரத்தில் சைக்கிளை நிறுத்தியவன், படி யேறினான். முதலில் அவன் பிரணவியின் தங்கையைத்தான் பார்த் தான். அவளும் உலர்ந்து போய்த்தானிருந்தாள். வரட்சியான முறுவல். கண்களில் மட்டும் உலகத்து அழகெல்லாம் கொட்டிக் கிடந்தது. அசப்பில் அவள் பிரணவி மாதிரியே இருந்தாள்.

'கடைக்குட்டித் தங்கை எங்கே...?அவளும் பிரணவி, மாதிரித் தான் இருப்பாளா...? இன்னும் சற்றுக் குண்டாய்... வடிவா...?'

அலைபாயும் மனதைக் கட்டுப்படுத்தியபடி, முன் விறாந்தையில் உட்காந்து கொண்டான்.

அவனைக் குதூகலமாக வரவேற்றபடி, பிரணவியின் அப்பா, உள்ளறையில் இருந்து விறாந்தைக்கு வந்தார்.

'கிளாஸ்ூம் கையுமாக வரும் இவருக்கு, குடிப்பதற்கு காலநேரம் என ஏதும் இல்லையா...? கிளாஸில் கலங்கலாய்,

கருமஞ்சள் நிறத்தில் என்ன திரவமது... கசிப்பா...?'

அவரையே பார்த்தபடி இருந்தவனை, ஓர் அலட்சிய பாவத்துடன் நோக்கியவர், கூறினார்:

"தம்பி சாப்பிட வாறதெண்டதால... வெள்ளைப் போத்தில்... மெண்டிஸ் ஸ்பெஸல் வாங்கியிருக்கிறன்..."

எனக்கா...? நான் டிறிங்ஸ் பாவிக்கிறேல்லை அங்கிள்..."

"சாப்பிட முந்திக் கொஞ்சம் எடுத்தா நல்லம் ராசா...! சாப்பாடு இறங்கும். உடம்புக்கும் நல்லது. இப்பவே கொண்டு வரட்டா...?

உள்ளே எழுந்துபோனவர்; வெள்ளைப் போத்தலுடனும் ஒரு கிளாஸுடனும் வந்தார்.

புதிதாகக் கொண்டு வந்த கிளாஸில் மதுவை வார்த்தவர், அத்துடன் அதிக அளவு கிறீம் சோடாவையும் கலந்தார்:

"புதுப் பழக்கம்... சாராயம் கசப்பாய் இருக்கும்... அது தான் சோடாவைக் கொஞ்சம் கூடக் கலந்தனான்..."

தனது கிளாஸிலும் ஊற்றிக்கொண்டவர், 'சியர்ஸ்' சொன்னபடி, சோடாக் கலக்காத அந்த திரவத்தை லபக்கெனத் தனது வாயில் ஊற்றிக் கொண்டார். உள்ளே கேட்கிற மாதிரி "பிரணவி!" என்று குரல் கொடுத்தார். பிரணவி ஒரு பீலிஸ் நிரம்பிய கோழி வறுவலைக் கொண்டுவந்து வைத்தாள்.

ரமணன் பிரணவியைப் பரிதாபமாகப் பார்த்தான்.

"எடுங்க... ஒண்டும் செய்யாது... எல்லாம் அப்பாவின்ரை ஏற்பாடு தான்... ஒரு கொம்பனிக்குத் தான்... கொஞ்சமா எடுத்தா நல்லம்... பழக்கமில்லாமல் கூட வேண்டாம்."

"ம்" சொன்னவன் –

தனது கிளாஸை எடுத்துக் குடிக்கத் தொடங்கினான். அவனது உதடுகளில் ஓடிய சுளிப்பு பிரணவிக்குச் சிரிப்பை வரவழைத்தது.

"அதிகம் மினக்கெடுத்தாதேங்க அப்பா, அவர் சாப்பிட வேணும். சாப்பாடு ரெடியா இருக்கு..."

கூறிய பிரணவி உள்ளே போனாள்.

இறைச்சித் துண்டுகளை வாயில் போட்டவனுக்கு அதன் சுவை பிடித்திருந்தது. நெய்யில் வறுத்தெடுத்த இறைச்சித் துண்டுகள்!

"இந்த விருந்து ஏழைகளுக்குரிய விருந்தில்லை..." என ரமணன் நினைத்துக்கொண்டான்.

"அப்பா நீங்களும் வாருங்க..." என்றாள் பிரணவி.

"இல்லை நீ அவரோட சாப்பிடு பிள்ளை...! நான் பிறகு சாப்பிடிறன்..."

"மென்டிஸ் போத்தில் முடிஞ்சால்தான் கிழடு எழும்பும்..." என்று புறுபுறுத்த பிரணவி, இவனுக்கு இலை போட்டாள்.

பிரணவியின் தங்கை சங்கரி பரிமாற, இருவரும் சாப்பிட்டார்கள். ஊர் புளுங்கல் அரிசிச் சோறு, கோழி வறுவல், குழம்பு, அவித்த முட்டை, கரும் பறட்டைப் பொரியல்... என்று சாப்பாடு தடல் புடலாக இருந்தது.

பிரணவியும் சங்கரியும் அவனைப் பட்சமாக உபசரித்தார்கள்.

சாப்பாடானதும் பிரணவி தனது அறைக்கு அவனை அழைத்துச் சென்றாள்.

"இண்டைக்கே வேணுமா...? இல்ல கொஞ்சம் பொறுக்கலாமா...?

சிரித்தபடி ரமணன் "பகலிலையா...? வெக்கமில்லாத பெட்டை...!" என்றான்.

"உரியவனுடன் பகிர்ந்துகொள்ள... வெக்கப்பட வேணுமா...?"

"இது கொஞ்சம் அதிகம்... துணிவு... அசாத்தியமான மீறல்... தாலிகட்ட முந்தி இதெல்லாம்...?

"அதுக்கு ஆறுமாசமோ... ஒரு வருஷமோ ஆகும் போல... அதுவரைக்கும் பொறுக்கேலுமா...? கலியாணம் முடிக்காமலே இப்ப சிலர் ஒண்டா இருகினம்... ம்... அதுக்கு இங்கிலிஸிலை ஏதோ சொல்லிவினம்..."

"எனக்குச் சொல்லத் தெரியேல்லை..."

"அதை விடுங்க... கழுத்தில தாலி ஏற முந்தி என்ரை

வயித்தில கரு உயிர்க்கிறதுதான் பிராப்தம் எண்டால் நான் என்ன செய்யேலும்..."

அவன் "பேய்ப் பெட்டை... பேய்ப் பெட்டை..." என்று கூறியபடி குலுங்கிச் சிரித்தான்.

அவனைச் சிரிக்க விடாமல், அவனது உதடுகளில் அவள் அழுத்தமாக முத்தமிட்டாள். அந்த முத்தத்தில் கிறங்கிப் போய்க் கிடந்த அவனைப் பார்த்து அவள் சொன்னாள்:

"நாலுபேர் நாலுவிதமாக் கதைப்பினை... நாக்கு வழிப்பினை... அதுக்கு நான் பயப்பிடேல்லை..."

"உன்ரை துணிவு எனக்கு எப்பவும் பிடிக்கும். எல்லாத்திலையும் நீ நல்ல உசார்..."

"ம்... அப்படியா...? எது வேணுமோ அதைத் தயக்கம் ஏதும் இல்லாமல் செய்யவேணும்... அடையிறத அடையவேணும்... அதில ஒரு திருப்தி... நிறைவு இருக்கு இல்லையா...?"

அவளது பேச்சு அவனை அசரவைத்தது.

"முந்தி இருந்த பிரணவி மாதிரி இப்ப இவ இல்ல... வித்தியாசம், சரியான வித்தியாசம்...!"

முறுவலுடன் இணக்கமாக அவளை அணைத்துக் கொண்டான்.

மனத்தடைகள், கூச்சங்கள் என்று எதுவுமே இல்லாமல் - அவனுக்காக வேண்டி அவளும் அவளுக்காக வேண்டி அவனும் இணைந்தார்கள். அவனும் அவளும் பகிர்ந்துகொண்ட நிறைவான அந்த இன்பம் பரிசுத்தமானது. கருணை கசிந்து கரைபுரள, அவர்கள் மீண்டும் மீண்டும் முயங்கினார்கள். அந்த ஆனந்த முயக்கத்தில் பட்டென ஏதோ திறந்து கொண்டதுபோல ஓர் உணர்வு...

இருவரிடையேயும் ஒரு பெரு வெளிச்சம் லபிதமாகி நிறைந்து வழிந்தது. ஆத்ம ஒன்றிப்புடனான அந்த அனுபூதி நிலை அவர்களைக் கடவுளர்களாக்கியது. இணைந்து, உறைந்து, உயிர்ப்புக் கொள்ளும் கடவுளர்கள்.

புரண்டு படுத்த பிரணவி அவனைப் பார்த்துக் கேட்டாள்:

"என்ன பயமா இருக்கா...? இந்தத் துடை நடுங்கித் தனத்தை

விட்டிடு... பதிவுகாரர் தவமணியை நாளைக்குச் சந்திப்பம். சந்திச்சுக் கதைப்பம். நொத்தீஸ் போட்ட உடனை, திருமணப் பதிவு அது இதெண்டு எதையும் இப்ப செய்ய முடியும்...”

“அதை முதலிலை செய்திருக்கலாம்...”

“போடா பெட்டையா... இதெல்லாம் ஊருக்குப் பயந்திலலை... எல்லாமே நம்பிக்கை... ஒருவரில ஒருவர் வைத்திருக்கிற நம்பிக்கை. நம்பிக்கைக்கு மேலா எதுவுமில்லை... அதுதான் நமக்கு... நம்ம வாழ்க்கைக்கு ஆதாரம்...”

“ம்...ம்... தெரியும்...”

அந்த ஞாயிறு மட்டுமல்ல, அடுத்து வந்த ஞாயிற்றுக் கிழமைகளிலும் அவர்கள் சந்தித்துக் கொண்டார்கள். அந்தச் சந்திப்புக்கள் இறுக்கமான நெருக்கத்தையும், பாந்தமான உறவையும் அவர்களிடையே சிலிர்ப்புடன் முகிழவைத்தது.

•

மகுடம் - 2013

## சடங்கு

அம்மன் கோவில் உதயகால மணியோசை நல்லதம்பியை விழிப்புக்கொள்ள வைத்தது. திண்ணையில் கிடந்தவர் எழுந்து, தடுக்கைச் சுருட்டி வைத்தார். மாணிக்கம் கிழக்குச் சாய்வில் படுத்துக் கிடந்தான். அவன் குளிர் தாங்காமல், குறண்டியபடி கிடந்தது அவருக்குச் சிரிப்பை வரவழைத்தது. 'இளந்தாரி இரெண்டொரு வருஷத்தில குடும்பம் நடத்தப் போறான், இப்படியா குழந்தைமாதிரி...!' அரும்பிய சிரிப்பு மாறாமலே அவனைத்தட்டி எழுப்பினார்.

அரைச் சுவர் வைத்து, பனை மட்டைகளால் வரிந்த அறையை - வாசல் தட்டியை நகர்த்தி - எட்டிப் பார்த்தார். அவரது செல்லமகள் சிவகாமி இருட்டோடு இருட்டாகப்படுத்துக் கிடப்பது தெரிந்தது. ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் அவளைக் குழப்பாமல், வெளியே வந்தவர், மேற்கு நோக்கி நடந்தார்.

தெற்குப் பக்கமாக, அவரது குலதெய்வம் ஞானவைரவரது பீடம். கோயில் முன்பாக வந்து, வைரவரை மனமுருகி வணங்கினார். வணங்கியவர், மேலே நடந்தார்.

கிழக்கே இருக்கும் பொதுக்கிணத்தில் அவர் குளிப்ப தில்லை. முத்து மாரியம்மன் கோயில் தீர்த்தக் குண்டுக்கு அப்பால், வடகிழக்காக உள்ள திருவடியில் தான் அவர் தினமும் நீராடுவது வழக்கம்.

நீரில் கால் பட்டதும் குளிர் தெரிந்தது. ஐப்பசி மாதக் குளிர்;

அவரை லேசாக நடுங்க வைத்தது. கையோடு எடுத்துவந்த சாம்பலைப் புற்று மண்ணோடு கலந்து – கோவணத்தோடு நின்றபடி– தனது ஆடைகளைச் சுத்தம் செய்தார். அவரது ஆடைகளென்பது; ஒரு நாலு முழ வேட்டி, அரையில் கட்டிக் கொள்ளும் காடித்துண்டு, அவர் அணிந்திருக்கும் கோவணம் அவ்வளவுதான். என்னதான் துவைத்தபோதும் நீர்க் காவியேறிய அவ்வாடைகளின் பழுப்பு நிறம் போன பாடாயில்லை.

துவைத்த ஆடைகளைக் குளக்கட்டில், உலர விட்டார்.

சாம்பல் எடுத்துப் பல் விளக்கியவர், நீரில் இறங்கி முக்குளித் தார். ஆரச்சோர நீராடியவர், சிறிது உலர்ந்த நாலுமுழத்தை அரையில் சுற்றிக் கொண்டு, வீடு நோக்கி நடந்தார்.

இளஞ் சூரியனின் ஒளித்திரள் அவரைத் தழுவியது; அது அவருக்கு இதமான வெதவெதப்பைத் தந்தது.

அம்மன் கோயிலை நெருங்கியவர், சந்நிதிக்கு முன்பாக சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி எழுந்தார்.

அப்பொழுது அந்தக் குரல் கேட்டது:

"நல்லான் நில்லும். பெட்டை சிவகாமின்ரை ருதுசாந்தி எப்ப....? பெட்டை சமைஞ்சு மூண்டு மாசமிருக்குமா...? அம்மனைப் போல ஆடிப்பூரத்தில சமைஞ்ச பெட்டை... ஆச்சியின்ரை கிருபை அவளுக்கு இருக்கும். அசப்பில அவளைப் பார்க்கிற மாதிரி வேற இருக்கிறாள். வாற திங்கள் நல்லநாள்; விசாக நட்சத்திரமும் சித்த யோகமும் கூடுது. காலமை ஏழுமணிக்கும் பத்து மணிக்குமிடையில சடங்கைச் செய்யலாம். மாப்பிளை கையுக்கை இருக்கேக்க உனக்கென்ன கவலையடா. ஆனாலும், சாந்தி கழியாமல் கன்னிகா தானம் அது இதெண்டு ஏதும் கூடாது..."

'இந்தத் தீண்டத் தகாத குடிமையை, புலையனை என்ன மாதிரி மதிச்சு இந்த மனிசன் கதைக்குது... இதுகள் எல்லாம் கடவுள் மாதிரி. காலில பூப்போட்டுக் கும்பிடவேண்டிய பிறவியள்...'

மனதில் அடர்ந்து பரவும் பரவசம் நல்லதம்பியின் முகத்தில் தெரிந்தது.

"தாவாடிப் பக்கமும் தாழிபுலப் பக்கமும் உன்ரை

கமக்காரர்களைப் போய்ப்பார். அதுசரி ஆரோடை தோட்டப்பங்கு... கனகரோடையா...? நல்லது பொல்லாதது தெரிஞ்ச மனிசரவர்."

"உங்களைப்போல அவரும் தங்கப்பவுண். மனிசரை மனிசராமதிக்கிறவர். அவரோடை இப்ப இல்ல. போன வருஷத்தில இருந்து மூத்தையர் வளவு முருகேசரோட. மருமோன் மாணிக்கம்தான் கனகரோட..."

"சிடுமூஞ்சி முருகேசனா...? கருமி, ஏதாவது தருவானா...?"

"மரியாதைக்கு அவரைத்தான் முதலில பார்க்கப் போறன்."

"சரி உன்ரை விருப்பம். அதோட கனகர், அவற்றை சகலன் மணியத்தார். சிவசம்பு வாத்தியாரையும் பார்."

"தாழிபுலத்தில வைத்தியர் இரத்தினத்தார், கொழும்புக் கடை வல்லிபுரத்தாரையும் பார்க்கப் போறன்."

"சரியடா...! மனக்கிலேசப்படாமல் எல்லாரையும் போய்ப் பார். இது உன்ரை கடமை மட்டுமல்ல, அவங்கட கடமையுந்தான். நாட்டுக்குச் சுதந்திரம் கிடைச்சு மூண்டு வருசமாகியும் ஏழை பாளையள் வல்லவனில சார்ந்துதான் நிக்க வேண்டியிருக்கு..."

"மெய்... மெய்யான வார்த்தை சாத்திரியாரையா...!"

"எல்லாருக்கும் இந்தப் பெருங்குளத்து முத்துமாரி வழிகாட்டுவாள். போடா... போய் ஆக வேண்டியதைப் பார்."

சாத்திரி கந்தசாமியரிடம் விடைபெற்றுக் கொண்ட நல்ல தம்பி வீட்டைப் பார்த்து நடந்தார்.

•

"மாப்பிளை கையுக்கை இருக்கேக்க உனக்கென்னடா கவலை..."

'சாத்திரியார் கூறினது நூற்றிலொரு வார்த்தை...'

நல்லதம்பி மனம் குளிர்ந்து போனார்.

மச்சான் சங்கரலிங்கத்துக்கும் அவருக்கும் மாற்றுச்சடங்கு தான் நடந்தது. சங்கரலிங்கமும் பாறுப்பிள்ளையும் அகாலத்தில் போனதால் அவர்களது மகன் மாணிக்கத்தின் பாடுகள் இவருடைய தாகியது.

நாப்பதுகளின் ஆரம்பத்தில் சரஸ்வதியில் மருமகனையும்

மகள் சிவகாமியையும் சேர்த்துப்படிக்க வைத்தார். தாழ்த்தப்பட்ட பிள்ளைகளென அவர்களும் அவர்களது வயதையொத்த உறவுகளும் இன்னும் சில ஒடுக்கப்பட்ட சாதிப்பிள்ளைகளும் வெறும் தரையில் இருந்துதான் கல்வி கற்றார்கள். மாறாக, உயர்சாதி வெள்ளாளப் பிள்ளைகள் வாங்கு மேசைகளில் இருந்து படித்தார்கள். அந்த இளம் வயதிலேயே கீறலாய் விழுந்து விட்ட, சாதி ஒடுக்கு முறைக்கு எதிரான உணர்வு, மாணிக்கத்துக்கு மிகுந்த எரிச்சலைத் தந்தது. அவன் தனது எதிர்ப்பினை - மூன்றாம்வகுப்புடன் பாடசாலைக்குப் போவதை நிறுத்திக் கொண்டதன் மூலம் காட்டிக் கொண்டான். காரணத்தை அறிந்த நல்லதம்பி, சகலதையும் புரிந்து கொண்டவராய்ப் பேசாமல் இருந்தார். முதலாம் வகுப்பில் கல்வி பயின்ற சிவகாமி மட்டும் மேலும் மூன்றாண்டுகள் தொடர்ந்து படித்தாள்.

'ஏதோ இந்த மட்டிலாவது இந்தப் பிஞ்சுகள் படிக்க முடிந்ததே...!'

நல்லதம்பி தன்னளவில் திருப்திப்பட்டுக்கொண்டார்.

அந்தத் திருப்திக்கு மேலாக, மாணிக்கமும் சிவகாமியும் வயிறு காய்ந்துவிடக் கூடாது என்ற கவனமே அவருக்கு எப்பொழுதும் இருந்தது. அவரும் அவரது துணைவி நாகாத்தையும் தங்களை ஒறுத்துப்பிள்ளைகளைப் பார்த்துக் கொண்டார்கள்.

தோட்டச் செய்கையில் பங்குக்கூலிமுறை வராத காலமது. குடிமை முறை உழைப்புத்தான் நடைமுறையில் இருந்தது. செய்த வேலைக்குக் கூலியாக வரகோ, குரக்கனோ, மொண்டியோதான் கிடைத்தது. அதுவும் இரண்டொரு கொத்துத்தான் தேறும். கமக்காரர்கள் நெல்லைக் கண்ணில் காட்டமாட்டார்கள். சில சமயம் வருஷக் கூலியாக கால் பறை கிடைக்கும். அல்லது, அதன் பாதியான நாலு கொத்துக் கிடைக்கும்.

சிறங்கையளவு தானியமெடுத்து, நாகாத்தை கஞ்சி காய்ச்சி, பிள்ளைகளுக்குத் தருவாள். அவளும் நல்லதம்பியும் கிடைக்கக் கூடிய முசுட்டை இலை, குப்பைக்கீரை, அறக்கீரை என ஆய்ந்தெடுத்து, உப்பிட்டு இலைக்கஞ்சி காய்ச்சிக் குடிப்பார்கள்.

பிள்ளைகளுக்கும் அதில் பங்கு இருந்தது.

மாசி முடிந்து, பங்குனி மாதம் ஆரம்பித்த கையோடு, வயல் அரிவு வெட்டு முற்றுப் பெற்றுவிடும். அப்பொழுது பூதன் கிணத்தடி ஏழைகள் தாவாடி, கெம்மில், மடத்தடி, சிலுந்தா என வயல் வெளியை நாடுவார்கள். குறிப்பாகப் பெண்களும் சிறுவர்களும் தான் அங்கு கூடுவார்கள். வயல்களில் சிறு மணிகளாய் சிந்திக் கிடக்கும் நெல்லைப் பறவைகளின் பரபரப்புடன் சேகரித்து, தம்முடன் எடுத்து வந்த வட்டப்பெட்டிகளில் நிரப்புவார்கள். தசை உருக்கும் வெயில் அவர்களை எதுவும் செய்து விடுவதில்லை. கால் வயிற்றுக்கும் அரை வயிற்றுக்கும் இப்படி ஆலாய்ப் பறப்பதைத்தவிர அவர்களுக்கு வழி ஏதும் தெரியவில்லை. எலிப்புற்று ஏதாவது கண்ணில் பட்டுவிட்டால், அவலாதிப்பட்டு, புற்றை நோக்கிப் பாய்ந்து செல்வார்கள். பக்கம் பக்கமாய் இருந்து புற்றைக் கிளறி, அகப்படும் நெற்கதிர்களை எடுத்துப் பெட்டிகளில் போட்டுக் கொள்வார்கள்.

அப்படி ஒரு சந்தர்ப்பம் - நெல் பொறுக்க வந்த நாகாத்தைக்குக் கிடைத்தது. அவசரம் ஏதுமில்லாமல் நிதானமாக, புற்றுவாயில் கைவைத்து நெற்கதிர்களை அவள் எடுத்தாள். புற்றை வெட்டுவதற்கு ‘புத்துவெட்டி’ ஏதும் கைவசம் இல்லாதலால், சற்று ஆழமாகவே தனது வலது கரத்தை புற்று வாயினுள் நுழைத்தாள். சுரீரென, முள்ளின் நெருடலாய் அவளது புறங்கையை ஏதோ பதம் பார்த்தது. கையை வெளியே எடுத்துப்பார்த்தாள். அரை அங்குல இடைவெளியில் இரு இடங்களில் இரத்தக்கசிவு ‘எலிகிலியா இருக்குமோ...?’ என அவள் அசட்டையாக இருந்து விட்டாள்.

சேர்த்த நெல்மணிகளுடன் பெட்டியைத் தூக்கியபடி நடந்த நாகாத்தைக்குத் தலை சுற்றுவது போல இருந்தது. பக்கத்தில் வந்த மகள் சிவகாமியை இறுகப் பற்றியபடி நிலத்தில் சரிந்தாள். மூச்சு முட்ட, நெஞ்சு அடைத்துக் கொண்டது. லேசாக வாயில் இருந்து நுரை தள்ளியது. இரத்தக் கசிவும் இருந்தது. “என்ரை... என்ரை ஆச்சி...!” என்று சிவகாமி அலறினாள். புதறன் வேலிக் கரையில் நின்ற கனகருக்கு அவளது அலறல் கேட்டது.

வயல் பரப்புக்கு விரைந்து வந்த கனகர், நாகாத்தை மயங்கி

விழுந்து கிடப்பதைக் கண்டார். அவளது வலது கரத்தைப் புரட்டிப் பார்த்தார். விஷ ஜந்து தீண்டிய இடத்தைப் பார்த்ததும் அவருக்குப் பெரிசு தான் என்று தோன்றியது:

"செட்டி நாகம் பிள்ளையள்..." என்று நின்ற பெண்களுக்கு கூறியவர் தனது இடுப்பில் செருகி இருந்த வில்லுக்கத்தியை எடுத்துப் பாம்பின் பல்லுப்பட்ட இடத்தைக் கீறினார். விஷம் கலந்த இரத்தம் நிலத்தை நனைத்தது.

"கூப்பிடு தூரத்திலதான் விஷகடி வைத்தியர் தம்பிமுத்து இருக்கிறார். இவளை அவரிட்ட கொண்டு போங்க... விஷம் தலையில ஏறப்போகுது."

கனகர் கூறியதைக் கேட்ட பூதன் கிணத்தடிப் பெண்கள், பதகளிப்புடன் நாகாத்தையை வைத்தியர் வீட்டுக்குத் தூக்கிச் சென்றார்கள்.

வெளியே வந்த வைத்தியர், அப் பெண்கள் படலை திறந்து வருவதைக் கண்டு, ஒரு வகை எதிர்ப்புணர்வுடன் அவர்களைப் பார்த்தார்.

'நாளும் கிழமையுமாய் இந்த சாதி கெட்ட நாத்தலியள் இஞ்ச இப்ப ஏன் வாறாளவை. ஆரத்தூக்கிக் கொண்டு வாறாளவை. நல்லான்ரை பெண்டிலையோ... விஷ கடியா...?'

முத்தர் உணர்வெதனையும் வெளிக்காட்டாது மௌனமாக நின்றார்.

வந்த பெண்கள் நாகாத்தையை நடுமுற்றத்தில் கிடத்தினார்கள்.

கிட்டவாக வந்த வைத்தியர், உறைந்துபோன முகத்துடன், மயங்கிக் கிடந்த நாகாத்தையைப் பார்த்தார். அவளைத் தொட்டுப் பார்வை பார்க்கும் எத்தனம் ஏதும் அவர் செய்யவில்லை. அங்கு நின்ற பெண்களைப் பார்த்துக் கூறினார்:

"சோமவார விரதம்... உவளைத் தொட்டுப் பார்வை பார்த்துத் தீட்டுப் படேலாது. அவளின்ரை நாடி விழுந்திட்டுது போலக் கிடக்கு... என்னாலை ஒண்டும் செய்யேலாது. கடவுளில பாரத்தைப் போட்டிட்டுத்தூக்கிக் கொண்டுபோங்க..."

விஷயம் அறிந்து அங்கு ஓடோடிவந்த நல்லதம்பி, தனது அருமை மனைவி உயிருடன் போராடுவதைக்கண்டு, வைத்தியரின் காலில் விழுந்து மன்றாடினார்.

"சடலத்தை எடுத்துக் கொண்டு போ நல்லான். என்னால ஒண்டும் செய்யேலாது."

'சடலமா... சடலமா...? உயிரோட இருக்கிற என்ரை நாச்சியாரைச் சடலமாக்கிப் போட்டானா இந்த வைத்தியன்...'

முத்தருக்கு எதிராக மனதளவில் கிளர்ந்த குரோதத்தை கட்டுப்படுத்தியவராய், நாகாத்தையைச் சுமந்தபடி, பூதன் வளவு நோக்கி நடந்தார். உறவுப் பெண்கள் இழுபட்டபடி அவர் பின்னால்...

வளவில் அவர் காலடி எடுத்து வைத்த பொழுது, தனது அருமந்த மனைவியின் உயிர்பிரிந்து விட்டதை உணர்ந்து கொண்டார்.

நாகாத்தையின் மரணச்சடங்கு, மிக எளிமை யாக நடந்தது. அவளுக்குக் கொள்ளி போட்டபோது, சிதையில் பற்றிப் படர்ந்த தீ நாக்குகள் அவரையும் பொசுக்கி அவரது உயிர் ஒளியையும் அழித்தது.

•

தாரையாய் கண்களில் நீர். விக்கித்து நின்றவர்,மூப்பன் இராமன் வருவதைக் கண்டு, மரியாதையாய் ஒதுங்கி நின்று கொண்டார்.

"நல்லதம்பி! பிள்ளையின்ரை சடங்கு எப்ப... எங்களுக்கும் விருந்து உண்டா..?"

"விருந்தா...! வயிறாறச் சாப்பாடு போட்டாலே எனக்கு மகிழ்ச்சி மூப்பனார். கையில மடியில சேரட்டும். சொந்தம் பந்தம் எண்டு ஆரையும் விடாமல் அழைத்துத் தான் அவளின்னர சாமத்தியச் சடங்கு நடக்கும்..."

"நல்லது, நல்லது..." கூறிய மூப்பன் அவரைக் கடந்து செல்ல, அவர் வீட்டை நோக்கி நடந்தார்.

வீட்டில் அவர் கண்ட காட்சி அவர் மனதைக் குளிர வைத்தது. முகத்தில் அடர்ந்த மகிழ்ச்சியுடன், முன்னால் விரிந்த

நாடகத்தை ஒதுக்கமாக நின்று ரசித்தார்.

"இஞ்சவா பிள்ளை..."

மாணிக்கத்தின் பரவசம் மிகுந்த அழைப்பு.

குடிசையின் வெளியே, மேற்காக நின்ற சிவகாமி 'என்ன?' என்பது போலப் பார்த்தாள்.

"கிட்டவாருமன்..." எனக் குழைந்த மாணிக்கம் தனது மடியிலிருந்து எடுத்த, கடதாசிப் பொட்டலத்தை விரித்தான். அவனது கரங்களில் செட்டான வேலைப் பாடுடன் கூடிய இரண்டு பாத சரங்கள்.

சிவகாமியின் கண்கள் மலர்ந்து, பட்டாம் பூச்சியாய்ப் படபடத்தன. உதடுகளில் உடைந்த சிரிப்பில் இசைவான கனிவும் பரவசமும்.

"நீயே காலில் கட்டிவிடு." பட்சமுடன் கூறியவள், அவன் காற்சங்கிலிகளைக் கட்டுவதற்கு வாகாகத் தனது கால்களைத் திண்ணையில் தூக்கி வைத்துக் கொண்டாள்.

அவளது பாவாடையை நீவி, லேசாக மேலே தூக்கிய மாணிக்கம் கணுக்கால்களை நன்றாகத் துடைத்தான். அவனது ஸ்பரிசம் பட்டதும் அவள் சின்னதாய்ச் சிலிர்த்த மாதிரி இருந்தது. சிறிது உணர்ச்சி வசப்பட்ட அவனும் தன்னைச் சமனப்படுத்திக் கொண்டு அவளது கால்களில் சங்கிலிகளை அணிவித்தான்.

வலது காலை லேசாகத்தூக்கி உதறிய சிவகாமி, சங்கிலி யின் ஒலி கேட்டுக் கலீர் எனச் சிரித்தாள்.

"கள்ளப் பெட்டை... இதென்ன குதிப்பும் கும்மாளமும்"

அவனில் விழுந்த கண்களை எடுக்காமலே அவள் "என்ன வெள்ளியா...?", என்று கேட்டாள்.

"இல்ல. முலாம்பூசினது."

"ப்பூ. இவ்வளவுதானா." உதட்டைப் பிதுக்கியவள், அவனது முகமாற்றத்தைக் கண்டதும் அவனது கரங்களை ஆதரவாகப் பற்றிக் கொண்டாள்.

அவளது தொடுகை அவனைப் பொங்க வைத்தது. லேசாகக் குலுங்கினான். அதைக்கண்டு மாளாத சிவகாமியின் கண்களில் நீர்!

தனது புறங்கையால் கண்ணிரைத்துடைத்துக் கொண்டவள், துயரம் கரைந்த குரலில் சொன்னாள்:

"இது... இது போதும் அத்தான். ஏழைப்பட்டதுகளுக்கு இதுக்குமேல எதுவுமே வேண்டாம்..."

தொடர்ந்து பேசவிடாது, அவளது உதடுகளை தனது விரல்களால் அழுத்தமாக மூடியவன், நெருக்கமாக இழைந்த அவளை இழுத்து அணைத்துக் கொள்ளவும் செய்தான்.

நெருக்கத்தில் அவளது வதங்கிய உடலும் வட்ட முகமும் பூசியது போன்ற சிறிய உதடுகளும் வெளிறிய பூமொட்டு மூக்கும் அரும்பத் துடிக்கும் மார்பின் விம்மலும் அகலித்த கண்களும் அவனுக்கு வெறியூட்டின.

'இந்த ஒல்லிப்பாச்சானை, சவளல் தண்டை நாலாக மடித்து, கக்கத்தில் வைத்துக் கொண்டு, நாலிடம் போய் வரலாமா...?'

நினைத்தவனுக்குச் சிரிப்புப் பொத்துக்கொண்டு வந்தது. குலுங்கிச் சிரித்தான்.

"என்ன...? என்னசிரிப்பு.... என்னைப் பிடிக்கேல்லையா...?"

"எல்லாமே பிஞ்சு பிஞ்சாய்... அழுத்தித் தொட்டாலே கையோட வழிஞ்சு வாறமாதிரி இருக்குது... இருந்தாலும் பிடிக்காமலா உனக்குப் பின்னாலை இப்படி இழுபடுறன்..."

குழைந்து நின்ற மாணிக்கத்தை நல்லதம்பியின் செருமல் நிதானப்படுத்தியது.

"அப்பு..." என்று நுனிநாக்கைக் கடித்த சிவகாமி, குடிசைக்குள் ஓடினாள்.

அவள் வெளியே வந்தபோது, இரண்டு தகரப் பேணிகளில் வெறுந்தேத்தண்ணி எடுத்து வந்தாள்.

நல்லதம்பியும் மாணிக்கமும் தேநீரை வாங்கிக் கொண்டார்கள்.

தேநீரைப் பருகியதும் எழுந்த நல்லதம்பி "தாவாடிப் பக்கம் போயிற்று வாறன்.." என்று துண்டை உதறி இடுப்பில் இறுக்கிக் கட்டிக் கொண்டார்.

"ஏன்... எதற்கு...?" வாயுன்னி வந்த கேள்வியைச் சிவகாமி கேட்காமலேயே அடக்கிக் கொண்டாள்.

"முருகேசரையும் கனகரையும் பார்க்கப்போறார் போல... நேற்று முழுதும் இதே நினைப்பில பிசத்தியபடி இருந்தவர்."

மாணிக்கம் உரத்துக்குரல் தராமல் சிவகாமிக்கு மட்டும் கேட்கிறமாதிரிச் சொன்னான்.

படலை வரை வந்த மாணிக்கமும் சிவகாமியும் அவர் வடக்குப் பார்த்து நடப்பதைப் பார்த்தபடி நின்றார்கள்.

•

அம்மன் கோவிலுக்கு மேற்குப்பக்கமாக வீதியால் வந்த நல்லதம்பி, பெருங்குளத்தில் இறங்கி, ஆழம் குறைவான பகுதியால் நடந்து, கட்டுவயல் பக்கம் ஏறினார்.

அழகரின் கட்டுவயல் பச்சைப்பசேல் என்று இருந்தது. மடல் வெடித்து, குடலை தள்ளிக்கிடந்த நெற்பயிர்கள் காற்றில் அசையும் அழகு அவர் மனதை வருடியது. அவரது அந்த அழகுணர்ச்சியை மழுங் கடிப்பது போல வயிற்றைப் பிசையவைக்கும் விஷயம் அவரை அலைக்கழித்தது.

'அரிசிச் சோறு சாப்பிட்டு எத்தனை மாதம்...! சிவகாமி யின்ரை சடங்கிலாவது நாலு பேருக்குச் சோறு போட்டு, நானும் பிள்ளையளும் வயிறுகுளிரச் சாப்பிட வேணும்...'

நெருடலான நினைவுகள் அவரை விடுவதாயில்லை.

உயரப்புலப் பக்கம் போகாமல், புளியடிப் பக்கமாக நகர்ந்தார். வங்களாவடியில் சிற்றம்பலத்தார் கடையில் - பவ்வியமாக ஒதுங்கி நின்று - சில்லறை தந்து வெற்றிலை பாக்கு, மஞ்சள் என வாங்கிக் கொண்டார்.

'முருகேசரையும் கனகரையும் சந்திக்கும்போது, வெத்திலை வைத்து மரியாதை செய்யவேணும். சின்னத்தனமா கையேந்தி நிக்கப்படாது. அது வடிவில்லை...'

தொடர்ந்து நடந்தவர், பட்டவேம்படி வயிரவர் கோயில் வந்ததும் கரம்குவித்து வயிரவரை நெக்குருக வணங்கினார்:

"அப்பு...! என்ரை செல்வதிக்கு நல்லது நடக்க வேணும்.

அவளின்ரை காரியம் தடங்கலேதுமில்லாமல் ஒப்பேறவேணும்."

அருவியாய் வழிந்த கண்ணீரைத் துடைத்தபடி, நொச்சிக்காட்டு ஒழுங்கையில் இறங்கினார்.

முருகேசருடைய வீடு, ஒழுங்கையின் தொங்கலில் இருந்தது.

'முருகேசர் ஏடா கூடமாய் நடந்துவிடுவாரோ...' பயந்தபடி அவரது வீட்டுச் சங்கடப் படலையை அண்மித்த நல்லதம்பி:

"செல்ல உடையார். அம்பலவாணயுடையார். ராச உடையார். அப்பு...!"என்று மென்குரல் எடுத்து அவரை அழைத்தார். அழைப்பு முருகேசருக்குக் கேட்ட மாதிரித் தெரியவில்லை.

படலையைத் திறந்த நல்லதம்பி, ஒரு வகைப் படபடப்புடன் முருகேசரது வளவினுள் கால்வைத்தார்.

இடுப்பில் இருந்ததுண்டு இயல்பாகவே அவரது கக்கத்துக்கு வந்தது.

அவரது அரவம் கேட்டதும் சடையன்தான் குரைத்துக் கொண்டு முதலில் அவரைநோக்கிப் பாய்ந்து வந்தது.

தொடர்ந்து வந்த முருகேசரின் குரலில் இருந்த மிருகம் அவரை நடுங்க வைத்தது.

"ஆரடாஅது...? வெள்ளணை வந்து கழுத்தறுக்கிற கழிசடை! தெற்கு காட்டானா...?" பற்களை நறும்பியபடி தடதட என நடந்து, முருகேசர் முன்னால் வந்தார்.

ஒதுக்கமாக நின்ற நல்லதம்பிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. எண்சாண் உடம்பை ஒரு சாணாக ஒடுக்கிக் கொண்டார்.

"என்ரை பெட்டை சிவகாமி சமைஞ்சிட்டா... அதுதான் ஐயாவைப் பார்த்து..."

கூறிய நல்லதம்பி வெற்றிலை பாக்குடன், மஞ்சள் துண்டையும் பொதிந்து முருகேசரிடம் தருவதற்கு அவரை நெருங்கினார். முருகேசர் உருவேறியவர் போல சன்னதங்கொண்டு, நல்லதம்பியின் கையில் இருந்த வெற்றிலைச் செல்லத்தைத் தனது புறங்கையால் தட்டி விட்டார். அடுத்த கணம், அவரது பலமான

கைமுஷ்டி, நல்லதம்பியின் முகத்தில் உரமாக, இறங்கியது. பின் கழுத்திலும் பலமான அடிகள் விழுந்தன. நிலைதடுமாறிச் சரிந்த நல்லதம்பியை தலைமயிரில் பிடித்து உலுப்பிய முருகேசர், அவரது இடது நாரியில் உதைக்கவும் செய்தார். தூரப்போய் அலக்க மலக்க விழுந்த நல்லதம்பியை அவர் விடுவதாயில்லை. விசர் நாயின் வெறியோடும் வேகத்தோடும் ஓடிச்சென்று, இடதுகையையும் வலது கையையும் பின்பக்கமாக வளைத்துப் பிடித்தபடி, முதுகில் இன்னொரு உதை தந்தார். காய்ந்து, கலடு தட்டிய தரையில் முகம் கவிழ விழுந்த நல்லதம்பியின் மூக்கு உடைபட்டு, ரத்தம் அருவியாய்க் கொட்டியது. நெற்றியிலும் சிராய்ப்பு ஏற்பட்டு இரத்தம் வடிந்தது. உதடுகள் கிழிந்து இரத்தக் கசிவு ஏற்பட்டது.

வலது கையை அசைக்கமுடியாது அவஸ்தைப்பட்ட நல்லதம்பி, இடதுகையை ஊன்றி, மெதுவாக எழுந்திருக்க முயற்சித்தார். அவரால் முடியவில்லை.

நெஞ்சு கருகித் துடித்தபடி கிடந்த நல்லதம்பி,தனது ஈன நிலைக்குத் தான் வணங்கும் தெய்வங்களும் காரணமா எனக் கவலை கொண்டார். அதைத் தாங்க முடியாதவராய்ப் பெருங் குளத்தாளையும் பட்ட வேம்பானையும் கூவி அழைத்தார். அழுதார்.

பக்கத்தில், அஞ்ஞாத் தோட்டத்தில் புல் அறுத்துக் கொண்டிருந்த கனகருக்கு அந்த அவலக்குரல் கேட்டது. முருகேசருடைய வீட்டுப் பக்கமாக ஓடிவந்த கனகர், செய்வதறியாது ஒரு கணம் திகைத்து நின்றார்.

துண்டுவேறு துணிவேறாக் கிடந்த நிலையிலும் நல்லதம்பியை விடாக்கண்டரான முருகேசர் உருட்டி உருட்டி உதைப்பது கனகருக்கு மிகுந்த துயரைத் தந்தது. அடி உதைபட்ட நிலையில், அந்த ஐப்பசி மாதக் குளிரில் நல்லதம்பி தரையில் கிடந்து அரைந்து அரைந்து நடுங்கியது கனகரை உசுப்பியது. அவரது மனிதம் அழுத்தமாய் அப்பொழுது விழித்துக் கொண்டது.

"என்னடா இது சண்டாளத்தனமா இருக்கு. அவனைக் கொலை செய்யப்போறயா...? அப்பிராணி, அவனைப் போய் அடிக்க உனக்கு... உனக்கு அதிகாரம் தந்தது ஆர்? பாவபுண்ணியமெண்டு

எதுவுமில்லையா..? கடவுளுக்கு அடுக்காத செயலைத்தான் உன்னாலை எப்பொழுதும் செய்ய முடியுமா..? நல்லது கெட்டதுதெரிஞ்சு நடப்பதுதானே மனிசனுக்கு அழகு! அவன்ரை வீட்டில விஷேசமெண்டால் அவன் எங்க போவான். தலைமைக் கமக் காரனெண்டு உன்னட்டைதான வருவான். வந்தால் சந்தோஷமாக ஐஞ்சோ, பத்தோகொடுக்க வேண்டியதுதானே...! அதைவிட்டிட்டு, கொடுக்குக் கட்டிக் கொண்டு மல்லுக்கு நிண்டால்..! சாதிக் கொழுப்பும் தடிப்பும் இப்படிச் சீலையால வடிய வடிய நீ நிக்கிற கோலத்தை எதில சேர்ப்பது. எங்களைச் சார்ந்து நிக்கிற இந்தச் சீவன்களை அந்தரிக்க விடப் படாது முருகேசு...!"

முருகேசரைப் பிடித்துத் தள்ளிய கனகர், அவரது எதிர்வினை எதனையும் கவனம் கொள்ளாது நல்லதம்பிக்குக் கை கொடுத்தார். நிமிர்ந்து பார்த்த நல்லதம்பிக்குக் கனகரது கண்களில் இருந்த கனிவும் கருணைப் பொழிவும் அவரது துயரமனைத்தையும் துடைத்தெறிந்து விட்ட தெம்பைத் தந்தது. எழுந்தவர்,கிழிந்து கிடந்த நாலு முழ வேட்டியை எடுத்து, நாரியில் சுற்றிக் கொண்டார். கனகரின் பின்னால் நடந்தார்.

கனகரோடு அவரது வீடுவரை வந்த நல்லதம்பிக்கு, முதல் வேலையாக அவர் தனது பழைய நாலு முழ வேட்டியொன்றைத் தந்து உடுத்திக் கொள்ளச் செய்தார். அடுப்படியில் இருந்த மனைவி பவளத்துக்கும் – நல்லதம்பி வந்து இருப்பது பற்றித் தகவல் தந்தார்.

இயக்கம் கெட்டு அயர்ந்து போய் குத்துக்காலில் இருந்த நல்லதம்பியை, பிஞ்சுக்கரமொன்று ஸ்பரிசித்தது. 'யாரது...?' என்று திரும்பிய நல்லதம்பிக்குக் கண்கள் பனித்துவிடுகின்றன. அருகாக நின்ற குழந்தையை ஒரு வகைப் புல்லரிப்புடன் பார்த்தார். அது ரகு, கனகருடைய மகன். ஏழுவயதுகூட நிரம்பாத பாலகன்.

நல்லதம்பியின் நாடியை நிமிர்த்திய ரகு "மாமாவா அடிச்சவர்...?" என்று கேட்டான். பின்னர், ஏதோ நினைத்துக் கொண்டவனாக குடுகுடு என அடுக்களைப் பக்கமாக ஓடினான். வெளியே வந்தபோது, இலையில் இரண்டு கோதம்பை ரொட்டியும் தொட்டுக்கொள்வதற்குச் சம்பலும் அவனது கைகளில்...

"சாப்பிடுங்க..." என்று தந்தவன், "ரகு!" என்று குரல் கேட்டதும் மீண்டும் உள்ளே ஓடினான்.

உள்ளே இருந்து வந்தவனின் கைகளில் இருந்த சிறு செம்பில், பால் தேத்தண்ணி!

தட்டியில் செருகி இருந்த தகரப்பேணியை நல்லதம்பி எடுத்தபோது ரகுவின் அம்மா செம்பிலிருந்த தேநீரைப் பேணியில் ஊற்றினாள்.

"செம்போட குடன் அம்மா..."

ரகுவின் பேச்சுக்கு உடன் ஏதும் சொல்லாத அம்மா, "நீ அங்கால போடா. முகாந்திரம் பண்ணாமல்... எனக்கு எல்லாம் தெரியும்." என்று கூறினாள். கூறியவள் இன்னுமொரு ரொட்டியைக் கொண்டுவந்து நல்லதம்பி யின் இலையில் வைத்தாள்.

"மகராசி நல்லாயிருக்க வேணும். உங்களைப் போல உங்க அண்ணர் இல்லையே..." நல்லதம்பி கூறியதற்கு அம்மாவின் பதில் ஏதுமில்லை. மௌனமே பதிலா..?

அம்மா ஊற்றிய நீரால் கைகளை அலம்பி, வாய் கொப்பொளித்த நல்லதம்பி, மெதுவாக எழுந்து கனகரைப் பார்த்தார்.

கனகர் தனது மடியில் இருந்து இருபது ரூபாயை எடுத்துத் தந்தார். அதைப்பெற்றுக் கொண்ட நல்லதம்பி குவித்த கரம் விலகாமல் நின்றார்.

"பொறு நல்லதம்பி, கைமாத்தா இன்னும் கொஞ்சக் காசுதாறன். மகளின்ரை சடங்குக்கு உதவியா இருக்கும். கைமாத்துக் காசை கையில மடியில இருக் கேக்கை திருப்பித்தா... அது போதும்."

கூறிய கனகர், உள்ளே சென்று ஐம்பது ரூபாய்த்தாளுடன் வந்தார்.

அப்பணத்தையும் மிகுந்த மரியாதையுடன் பெற்றுக் கொண்ட நல்லதம்பியிடம் கனகர் சொன்னார்:

"மகளின்ரை சாமத்தியச் செலவுக்கு இது போதும். அங்க இங்க கையேந்தாமல் நேரா வீட்டுக்குப்போ..."

"கண்மண் தெரியாமலா அடிப்பது... இவன் என்ரை தம்பி

இல்லை... எங்கட வம்சத்தில இப்படி ஒரு சென்மமா...!"

அடுப்படியில் இருந்து பவளத்தின் புறுபுறுப்புக்கேட்டது.

அவளது மௌனம் கலைந்துவிட்டதா என்ன...?

கனகரிடம் விடைபெற்றுக் கொண்ட நல்லதம்பி, "நாச்சியார்... அப்ப நான் வரட்டுமே..." என்று பவளத்துக்கும் குரல் கொடுத்தார். அப்பொழுது அவள் சொன்னாள்:

"பார்த்துப்போ நல்லதம்பி, அந்த அறுவான் கொம்பன் யானை மாதிரி கறள் வைச்சு மீண்டும் உன்னைத் தாக்க வந்தாலும் வருவான். சாதித் தடிப்பும் தாவாடிக்காரனெண்ட குட்டி மிதப்பும் அவனைப் பாடாய்ப்படுத்தும் போது யாரென்ன செய்யேலும்..."

நல்லதம்பி கையில் இருந்த எழுபது ரூபாயையும் துணியில் இறுக முடிந்தபடி நடந்த பொழுது, வீட்டுக்கு உள்ளே இருந்து ஓடிவந்த ரகு, அவரது கையில் இரண்டு கப்பல் வாழைப்பழங்களைத் தந்தான்.

குழந்தையின் நினைப்புத் தந்த பூரிப்பில் நனைந்த நல்லதம்பி, எல்லா வலியையும் சிறுமையையும் மறந்தவராய்த் தாவாடித் திட்டில் இறங்கி, கையொழுங் கையைத் தொட்டு நடந்தார்.

அருமைமகள் சிவகாமியின் சாமத்தியச் சடங்கின் சோபனம் மட்டுமே அப்பொழுது அவரது மனதை முழுமையாக ஆக்கிரமித்திருந்தது. அந்த லயிப்பில் கவலைகள் ஓரளவு நீங்க, முகத்தில் லேசான மகிழ்ச்சி ரேகை படர, அவர் அடி அளந்து நடந்தார்.

பூதன் வளவு வெகு தொலைவில் இருப்பது போல அவருக்கு அப்பொழுது தோன்றியது.

•

கலைமுகம் - 2010

## அவரும் அவர்களும்

சிவதாசன் மிகுந்த சோர்வுடன், சற்று அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். மெதுவாக நடந்து வந்த மங்களம் அவரை நெருங்கி, அவரது குழிவிழுந்த, பொருக்குத் தட்டிய கன்னங்களை மிகுந்த பரிவுடன் வருடினாள்.

விழித்துக் கொண்டவர் அவளைப் பார்த்து, லேசாகச் சிரித்தார். அந்தச் சிரிப்பு உயிர்ப்பு ஏதுமில்லாமல் இருந்தது.

'இந்த ஆஜானுபாகுவான மனிதர்...தசை கரைந்து, எலும்பும் தோலுமாய், பழசாய்ப் போன கந்தல் துணி மாதிரி... வற்றாத அன்பை மட்டுமே வர்சித்த இவர்... இவர் எனக்கு முன்பாகவே போய்ச்சேர்ந்து விடுவாரோ...? முதுமை எவ்வளவு கொடுமையானது. இளமையில் பெண்மையின் அகமலர்ச்சிகள் அனைத்தையுமே தொட்டு, அளைந்து உசுப்பிய இவர்... இன்று இப்படி... வாழ்வின் ஈரலிப்புக்களை, சுகங்களை மட்டுமே காண்பித்து, துக்கங்கள் அனைத்தையுமே தனதாக்கிக் கொண்ட இந்தப் பெருமிதம் ஒரு முடிவை நோக்கி நகர்கிறதா...? இவர் இல்லாத இந்த வாழ்வு எப்படி... எப்படி சாத்தியமாகப் போகிறது...!'

துயரம் தாழாதவளாய் ஒரு கணம் குலுங்கி அதிர்ந்தாள்.

அவரை மிகுந்த பரிவுடன் பார்த்த மங்களம் அவருக்குக் காலையில் தரவேண்டிய மருந்துகள் எதையுமே தரவில்லை என்று ஞாபகம் வர – விதம்விதமான வர்ணங்களில் இருந்த மருந்து வில்லை

களை எடுத்து, அவர் படுத்திருந்த கட்டிலில் பரத்தினாள். அவருக்கு இரத்த அழுத்தம், கொலஸ்ரோல், நீரிழிவு என்று ஒன்றோடொன்று தொடர்புடைய நோய்கள் பல இருந்தன. வில்லைகளை எடுத்து அவள் தர, அவர் வாயில் போட்டு, நீர் அருந்தினார்.

கட்டிலில் லேசாக எழுந்திருந்தவரை, அருகா இருந்த சுவரில் சாய்த்து உட்கார வைத்தாள். தலையணை ஒன்றையும் அவரது முதுகுக்கு வாகாக வைத்துவிட்டாள். பால் சேர்த்துக் கரைத்து வைத்திருந்த குவாக்கர் ஓட்ஸ்சை - சூடுதணிந்து விட்டதா எனப் பார்த்தவள் - கரண்டியால் அவருக்கு புகட்டினாள். அப்பொழுது தளர்ந்து போயிருந்த கை நடுங்குவதை கவனித்தவர் சிரித்தார். அவரை புரிந்து கொண்ட அவள்:

"உங்களை விட நாலு வயது தானே நான் சின்னவள் நானும் உங்களோடு வந்திடுவன் போலக் கிடக்குது..."

அவளது குரல் கரகரத்தது. அதைக் கேட்ட அவரது கண்கள் பனித்து விடுகின்றன.

ஓட்ஸ் குடித்ததும் - வாயலம்பி, அவள் ஏந்தி நின்ற, குவளையொன்றில் துப்பினார். துப்பிய பொழுது அவளது கைகளில் எச்சில் நீர் தெறித்து விடுகின்றது. அதைப் பார்த்ததும் பொறுக்காதவராய் "வெரி ஸொரி டியர்" என்று முனகினார்.

"பரவாயில்லை..." என்ற மங்களம் அவரை மெதுவாக அணைத்தபடி, கட்டிலில் படுக்க வைத்தாள்.

அவர் ஏதோ தயக்கத்துடன் சொல்ல வாயுன்னியதைக் கண்ட அவள் :

" என்ன ... என்ன வேணும்... ?" என்று கேட்டாள்.

உள்குழிந்து விழுந்துகிடந்த அவரது கண்கள் லேசாய் மின்னின.

"வசந்தா... அவதான் உன்ரை ஃப்ரண்ட் வருவாவா...? சாக முன்னம் அவவை ஒருக்காப் பார்க்க வேணும் போலக் கிடக்குது."

அவரது வார்த்தைகளில் இருந்த தாபத்தை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

"உங்களுக்கு வருத்தம் எண்டு தெரியும். வருவா...!"

அதற்குமேல் அவரால் எதுவும் பேச முடியவில்லை. குரல் கரகரத்தது.

கண்களில் இருந்து நீர் வடிந்தது. கண்களை வாஞ்சையுடன் துடைத்து விட்டவள்:

'உந்தக் கள்ளமெல்லாம் என்ன? அவளிலை ஒரு சாய்வு உங்களுக்கு இளமையில இருந்தது எனக்குத் தெரியும், பட்டும் படாமலும் அப்ப என்னாலை இருக்க முடிஞ்சது... எல்லாம் உங்களுக்காகவும் அவளுக்காகவும் தான்...!'

அவளது மன ஓட்டங்களைப் புரிந்து கொண்டவர் போல "ம்..." கொட்டியவர் – தொடர்ந்து, "எல்லாம்... எல்லாமே உனக்குத் தெரியுமா...?" என்று கேட்டார்.

"இல்ல... வசந்தா பாவ மன்னிப்புக் கேக்கிற மாதிரி ஏதேதோ உளறினாள். எல்லாமே பூடகம்தான்...! எனக்கு விளங்கேல்லை ஆனால் அவளிலை ஒரு வெறுப்பும் அசூயையும் அப்ப எனக்கு ஏற்பட்டதென்னவோ உண்மை".

"பாவம்அவள்" நுனிநாக்கில் வந்த வார்த்தைகளைக் கசிய விடத் தயங்கியவர், ஏதோ நினைவுகளில் அமிழ்ந்து போனார். நாகரிகம் கருதி மேலும் அவரை எதுவித தொந்தரவும் செய்யாமல் மங்களமும் ஒதுங்கிக் கொண்டாள்.

•

வெள்ளவத்தை நெல்சன் பிளேசில் தான் சிவதாசன் இருந்தான். இருபதாம் எண் வீடுதான் அவனது வாழ்க்கையில் பல மாற்றங்களை கொண்டு வந்தது.

இறைவரி திணைக்களத்தின் வரி மதிப்பீட்டு உத்தியோகத்தராக இருந்தவன், உதவி ஆணையாளராகப் பதவி உயர்வு பெற்றது அந்த வீட்டுக்கு வந்தபின்னர் தான். தன்னை அதிகம் வெளிக்காட்டிக் கொள்ளாத அழுத்தமான பேர்வழியவன். பெண்களை அவனுக்குப் பிடிக்கும். அவர்களது அசைவில் உதிரும் அழகை இழைஇழையாகப் பிரித்துப் பிரித்து ரசிப்பான். அவர்களது காதலையும் வெருட்டும் காமத்தையும் குலுங்கி வழியும் அழகையும், சின்னச் சின்னச் சிணுங்கல்களையும் அவன் முதன்முதலாக நெருக்கத்தில்

கேட்டது, பார்த்தது எல்லாம் அந்த வீட்டில் தான்!

மிஸ்ஸிஸ் விக்கிரமசிங்க என்ற வயோதிப மாதின் வீட்டில், அவனது அறைக்கு நேர் அறையில் தான் அந்த இரு இளம் பெண்களும் இருந்தார்கள். அவனைப் போல அவர்களும் வாடகை அறையில் தான் இருந்தார்கள்.

மிக நெருக்கமாக இருந்த அந்தப் பெண்கள் தொட்டளைந்து, சுவாசித்த காற்றையே அவனும் சுவாசித்தான்.

வத வத என்று வளர்ந்து உயரமாக இருந்த பெண் மங்களம். தசைப்பிடிப்பு ஏதுமில்லாமல், பூசியது போல் இருந்தாள். நீண்ட கை களும் நளினமான விரல்களும் அவளது பிளஸ். மணிப்புறாவின் கெந்தலுடன் அவள் குறுக்கும் நெடுக்குமாகப் போய் வரும் போதெல்லாம் அவனது இதயம் சிலிர்த்து உறையும். அவளது பேச்சு அருவி கொட்டுவது போல ஓய்ச்சல் ஒழிச்சலில்லாமல் இருக்கும். அதன் சாரல் அவனைத் தோயத் தோய நனைக்கும்.

அத்துடன், அந்தப் பெண்ணின் நீண்ட கழுத்து, கண்கள், உதடுகள், சிறிய மார்பு என்று எல்லாமே அவனிடம் ஓராயிரம் முத்தங்களைக் கோரி நிற்பதான பிரமை அவனுக்கு.

நல்லூர் செட்டித் தெருவை சேர்ந்த அவள், கொழும்புப் பல்கலைக் கழகத்தில் பொருளியலைச் சிறப்புப் பாடமாக எடுத்துப் பயின்று வருகின்றாள்.

'காதல்... கலியாணம் என்று வந்தால், அது இவளுடன் தான் இருக்க வேணும்...' என அவன் நினைத்துக் கெண்டான். முகம் பார்த்துப் பேசும் அப் பெண்ணின் மீதான பிரியம் காதலாக மாற அதிக காலம் எடுக்காதென அவன் முழுமையாக நம்பினான்.

மற்றப் பெண் இவளுக்கு நேரிடையாக இருந்தாள். கரண வாய் குஞ்சர் கடைக்குப் பக்கத்தில் உள்ளாகச் செல்லும் கை ஒழுங்கையில் இருப்பவள். கொஞ்சம், நிறம் இப்படி அப்படித் தான். மாநிறம். என்றாலும் அந்தப் பெண்ணின் இளம் பருவ மொழுமொழுப்பும் பளபளப்பும் அவனை அதிகம் கவர்ந்தன. உயரமில்லாத அவள், செதுக்கிச் செதுக்கிச் செப்பனிடப்பட்ட செப்புச் சிலை போல இருந்தாள். அலங்காரம் ஏதுமில்லாத எளிமை.

மூக்கில் மட்டும் சிவப்புக்கல் மூக்குத்தி. கன்ன வகிடு வைத்து, கூந்தலை வாரி விட்டிருந்தாள். அடர்த்தி காட்டும் அவளது கூந்தல் கொழுத்த குதிரைக்குட்டியின் வால் போல்தழையும். அவளது அழகு அந்தக் கூந்தலிலா...? அல்லது... அல்லது உயிரோட்ட முள்ள பெரிய கண்களிலா...? அவன் எப்பொழுதுமே இது விஷயத்தில் பெரிதும் குழம்பினான்.

அவள் பேசுவது மிக மிகக்குறைவு. அப்படி ஏதாவது பேசினாலும் கண்கள் கீழாக விழுந்து விடும். எதேச்சையாக நேர் பார்வை படும்போது அவளது பார்வையில் ஏதேதோ இருப்பதை அவன் கவனங்கொண்டான். அந்தப் பார்வை அவனை ஒரு வகைக் குறுகுறுப்புடன் அலசும். மனசைப் பிசையும்.

அவளும் பொருளியலையே சிறப்புப் பாடமாகத் தேர்ந்து, மங்களத்துடன் படித்து வந்தாள். சிவதாசனும் பொருளியல் சிறப்புப் பட்டதாரி என்பது அவர்களுக்குத் தெரியும். மங்களமும் வசந்தாவும் அப்பாடத்தில் வினோதமான சந்தேகங்களுடன் அவனை அணுகுவார்கள். மங்களம் இல்லாத சமயங்களில் கூட வசந்தா அவனிடம் போவதுண்டு. அவள் நெருக்கமாக இருக்கும் போது, அவளைப் பார்த்தபடியே அவன் பாடம் சொல்லித் தருவான்.

‘இவளை... இந்த குட்டி அமுதத்தை... எதிலும்... எந்த இடத்திலும் தொடலாம்; தொட்டால் இளகி இசைவாள்...! தன்னையே எனக்குத் தந்து நிற்பாள்’.

மனசின் இனிய ஊறல்கள் அவனைப் பாடாய்ப்படுத்தின.

ஆனால் அந்தப் பெண் அவனது மனோவோட்டத்துக்கு மாறாக, ஒரு வித அலட்சியத்துடன், அவனைக் கண்டு கொள்ளாத பாவனையுடன் நடந்து கொள்வாள். அது அவனுக்கு மிகுந்த எரிச்சல் தருவதாயிருக்கும். அவனது நானைக் காயப்படுத்தும். காயப்பட்ட அவன் இவளை ஒரு கை பார்த்து விட வேண்டும் என மனதளவில் கறுவிக் கொள்வான்.

அவர்களுக்கிடையிலான அந்த ‘இது’ எந்த நிமிஷமும் நடந்து விடக் கூடிய சாத்தியக் கூறு இருப்பதாக அவன் நினைத்துக் கொண்டான். எந்த அளவு ஒதுக்கங் கொண்டது போல அவள்

பாவனை பண்ணினாலும் சூசகமாக அவளது கண்களும் உடல்மொழியும் உணர்த்தியவை அவனுக்குப் போதுமானதாய் இருந்தன. அதே நேரத்தில் 'இந்தக்கள்ளத்தன மெல்லாம் மங்களத்துக்குத் தெரியவந்தால் என்னவாகும்...' என்ற பயமும் அவனுக்கு இருந்தது.

அந்த நினைப்பே அவனுக்கு ஒருவகை உதறலைத் தந்தது.

வசந்தா பற்றிய நினைவுகளைப் புறந்தள்ளியவன், மங்களத்தைத் தனியாகச் சந்தித்துத் தனது காதலை அவளுக்குத் தெரியத் தர வேண்டும் என நினைத்துக் கொண்டான்.

ஒரு விடுமுறை நாள்... வசந்தா பல்கலைக்கழக நூலகத் திற்குச் சென்றிருந்தாள். அந்தச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தனி யாக இருந்த மங்களத்திடம் தனது காதலை அவன் தெரிவித்தான். அதற்கு அவளது தரப்பி லிருந்து எதுவிதமான எதிர்ப்பும் வரவில்லை. ஆனாலும் அவள் அதிகம் பிடிகொடாமலே பேசினாள். அது அவனுக்கு சிறிது ஏமாற்றமாய் இருந்தது.

அந்த ஏமாற்றத்தைப் போக்குவது போல, மங்களம் அடுத்துப் பேசியவை, அவனுக்கு இதமாக இருந்தன.

"பரீட்சை முடியட்டும்... அதுவரை கொஞ்சம் பொறுங்க... அப்பாற்ரை எங்கட காதலைப் பற்றிக் கதைக்கிறன்... கதைச்ச பிறகு என்ரை முடிவைச் சொல்லுறன்..."

ஓரளவு சாதகமான அந்தப் பேச்சு அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது.

எல்லாமே தான் விரும்புகிற மாதிரி நடக்குமென அவனது மனம் ஆறுதல் பட்டுக் கொண்டது. அத்துடன் ஒரு நிதானமும் அவனிடத்தில் கூடிவந்தது.

அவன் எவ்வளவு நிதானமாக இருந்த போதும் வசந்தாவைக் காணும் போதெல்லாம் அவன் பரிதவித்தான். அவளது குறிப்புணர்த்தும் அழைப்பை, அவன் வெட்கம் கெட்டதனமாக, ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்திருந்தான். 'ஒரே ஒரு முறை- அது எவ்வளவு தவறானதாக இருந்த போதும் - அவளுடன் இருக்க வேண்டும்; அவளை ஆசை அவிய அளைந்து உறவு கொள்ள

வேண்டும்' என நினைத்தான். அந்தச் சந்தர்ப்பமேதும் ஏற்படாத பட்சத்தில் அச்சந்தர்ப்பத்தை தானாகவே ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற அவா அவனைப் பிசாசுத்தன மாகத் துரத்தியது. அந்த வாய்ப்பு அவனது எதிர்பார்ப்புக்களுக்கு மாறாக மிகச்சுலப மாகவே கிட்டியது. அதுவும் அவளுடைய பூரண விருப்பத்துடன்.

•

மங்களம் ஏதோ அவசர அலுவலாக யாழ்ப்பாணம் போயிருந்தாள். சிவதாசனும் வசந்தாவும் தனித்து விடப்பட்டார்கள். அதை அவன் ஒரு வரப்பிரசாதகமாகவே நினைத்துக் கொண்டான். ஆனால் அவளோ எதையுமே பொருட்படுத்தாத மனோபாவத்துடன் இருந்தாள். அத்துடன், அவனை அதிகம் கண்டுகொள்ளாதவளாக வும் இருந்தாள். அடுத்து வந்த மூன்று இரவுகளும் அவனைப் பொறுத்தவரை உறக்கமில்லாத கொடுமையான இரவுகளாகவே கழிந்தன. அவளைப் பற்றிய நினைப்பே அதிக அளவு அவனை ஆக்கிரமித்திருந்தது.

இரவு வேளைகளில், ஆழ்ந்த நிசப்தத்தில் அவளது ஒவ்வொரு அசைவும் அவள் எழுப்பும் ஓசைகளும் அவனது புலன்களை உசார்ப்படுத்தின; இதமாகவருடி, அதிக அளவில் அவனை வசியப்படுத்தின.

மண் ஜாடியிலிருந்து அவள் நீர் அருந்தும் ஓசை. அவளது அறையிலுள்ள கடிகாரத்தின் டிக்டிக் ஒலி. ஜன்னல் திரைச்சேலை களைக் காற்று உதறும் படபடப்பு. அவளது மென்மையான பாதங் களின் அழுத்தமான காலடி ஓசை. சாருகேசி ராகப் பாடலொன்றின் மிருதுவான முணு முணுப்பு. தொடர்ந்து வந்த அவளது பெரு மூச்சுக்கள்... எல்லாமே அவனைத் தொந்தரவு செய்தன.

திடீரென வெளியே வந்த வசந்தா முன் விறாந்தை விளக்கை அணைத்து விட்டு, அவனது அறை வரை வந்து 'குட்நைற்' வேறு சொன்னாள். அவளோடு வந்த 'இன்ரிமேற்றின்' வாசனை அவனைக் குப்பெனத்தாக்கியது.

இவன், அவளை ஆசையுடன் பார்த்தவேளை, "வேணுமா...?" என்ற ஒற்றைச் சொல் வினா மட்டும் அவளிடமிருந்து

வந்தது. மீதியெல்லாம் அவளது கண்களில் இருந்தன. அதற்கு எதுவித பதிலும் தராது நின்ற அவனைப் பார்த்து அழுத்தமாகச் சிரித்தவள், விசுக்கென விலகிச்சென்று, தனது அறைக் கதவைச் சாத்திக்கொண்டாள்.

அவளது அறை விளக்கு, நீண்ட நேரம் எரிந்து கொண்டிருப்பது அவனுக்குச் சூசகமாக எதையோ உணர்த்துவது போலிருந்தது. தனது அறை விளக்கை அணைத்தவன், கதவை இழுத்து மூடிவிட்டு, மெதுவாக நடந்து, அவளது அறைக்கதவுவரை சென்று, காது கொடுத்துக் கேட்டான். சலனம் ஏதும் இல்லை. ஆனால், அவளது ஆழ்ந்த மூச்சு மட்டும் கேட்டது. அவன் அறைக் கதவை மெதுவாகத் தொட்டான். கதவு தானாகத் திறந்து கொண்டது.

'எல்லாமே எதிர்பார்ப்புடனான முன் ஆயத்தமா..? அவளே கதவைத் திறந்து வைத்திருப்பாளா...? அல்லது...அல்லது இது தற்செயலான நிகழ்ச்சியா...?'

அலைபாயும் மனதுடன் எட்டிப் பார்த்தான்.

உள்ளே, வசந்தா கட்டிலில் அமைதியாகப் படுத்துக் கிடந்தாள். அவளைச் சூழ அழகிய ஒளிவட்டம் ஒளிர்வதான பிரமை அவனுக்கு. அவள் தடவி இருந்த இன்ரிமெற் மணத்துடன் ரோசாப்பூவின் தூக்கலான வாசமும் அங்கு கலந்திருந்தது.

'என்ன...என்ன இவள் அறை முழுமைக்கும் ஃப்றெஷ்னர் அடித்திருப்பாளோ...?'

பிரகாசமான அறை விளக்கை அணைத்து விட்டு, டிம் லைற்றைப் போட்டான். அப்பொழுது வசந்தா விழித்துக் கொண்டாள்.

"அட சிவாவா...? விடமாட்டியள் போல..!" என்றவள், இரு கைகளையும் உயர்த்தி வரவேற்கும் வாகில் கிடந்தாள்.

அதிக வேட்கையுடன் அவளை நெருங்கியவன், அவளது கரங்களுள் நுழைந்து, அவள் மீது புதைந்தான்.

அவனது உதடுகள் அவளது உதடுகளை மென்மையாக ஸ்பரிசித்தன. பின்னர் கண்கள், காதுகள், கழுத்து என

முத்தமிட்டான்.

அவள் போர்த்தியிருந்த போர்வையை உருவியபோது அவள் பிறந்த மேனிக்கு உறையிடப்படாத திறந்த புத்தகமாகக் கிடந்தாள். அதுவும் புத்தம் புதிய புத்தகம். அச்சுமை உலராத வாசனையும் கூட இருந்தது. புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டி, அதன் உள்ளிழையும் அற்புதங்கள் அனைத்தையும் நீவிநீவி ரசித்து, சுவைத்துப் படித்தான். சுவை குன்றா அந்த மாயவலையுள் சிக்குண்டவன், வேடிக்கையான ஒலிகளை எழுப்பியபடி அவளை அணைத்து முயங்கினான். அவர்களது அந்த முயக்கம் விட்டு விட்டு விடியும் வரை நீடித்தது.

சல்லாபித்த களைப்பில் சற்றுச் சரிந்து கிடந்தவனைப் பார்த்து அவள் கேட்டாள்:

"போதுமா...?"

"இப்போதைக்குப் போதும்..."

"எனக்கு இந்த ஜென்மத்துக்கு...!"

"............"

"மங்களம் தான் பாவம்... இது தெரிய வந்தால் துக்கப் படுவாள்."

எழுந்து கொண்டவன், அவளது இதழ்களில் ஆழ்ந்த முத்த மொன்றைத் தந்தவனாய் அவளைப் பிரிந்து வெளியே நடந்தான்.

மறுநாள், நடுச்சாமத்தில், விழித்துக் கொண்டவன், வசந்தாவின் அறை வரை சென்று, கதவைத் தள்ளிப் பார்த்தான். கதவு உள்பக்கமாக தாழிடப்பட்டிருந்தது. அன்றுமட்டுமல்ல, அடுத்து வந்த நாட்களிலும் அவளது அறைக்கதவு பூட்டப்பட்டே இருந்தது.

அவளது அந்த இறுக்கம் அவனுக்கு மிகுந்த எரிச்சலைத் தந்தது. அதே நேரத்தில், அவளைப் புரிந்து கொள்ளவும் அது உதவியது.

•

"மங்களம்.. பிள்ளை மங்களம் இஞ்ச வாம்மா... அவ... வசந்தா வருவாவா...? அவவை ஒருக்கால் பார்க்க வேணும் போல கிடக்கு...!"

"சும்மா தொணதொணக்காதேங்க... பேசாமல் கிடவுங்க...

வருவா... நாளைக்குக் காலையில வாறதெண்டு ஃப்போனில சொன்னவ."

"வரட்டும்...வந்தா அவவிட்ட நிறையக் கதைக்க வேணும்."

அவரது குரலில் இழைந்த திருப்தி மங்களத்தை வியப்பில் ஆழ்த்தியது.

நெல்சன் பிளேஸ் அனுபவங்களுக்குப் பின்னர், வசந்தாவை ஒரு சில சந்தர்ப்பங்களில் தான் அவர் சந்தித்திருக்கிறார்; சந்தித்தது மட்டுமல்ல, நெருக்கத்தில் நின்று பார்க்கவும் பேசவும் அவரால் முடிந்திருக்கிறது.

அவரது திருமணநாள். மங்களத்தின் கழுத்தில் அவர் தாலி கட்டியபோது, தாலிக்கொடியின் கோர்க்கியில் பின் இட்டது வசந்தா தான். நாலாஞ் சடங்குவரை - வீட்டிலிருந்து கவனிக்க வேண்டியதைக் கவனித்தது அவள்தான்.

'மங்களத்தை விட அவள்... அந்த வசந்தா ஏன், மனசு பளிச்சென... படிகம் போல இருக்கிறாள். அவளுடனான எல்லாமே பசுமையாக...! காதலையும் காமத்தையும் ஒரு சேர அனுபவித்தது அவளிடம் தான். மங்களம் மனைவி..! மனைவி மட்டும் தான். செக்ஸ் எண்டு வரும் போது அவள் பச்சைத் தண்ணி. அதற்கு மேல் அவளிடம் எதுவுமில்லை. வசந்தாவுடன் ஒரே ஒரு சமயம் தான் உறவு கொண்டனான். அந்த காமம் முற்றிய முயக்கம் வாழ்நாள் முழுமைக்குமே போது மானதாய்...!'

"இவ்வளவு மென்மையாகவா.. கொஞ்சம் முரட்டுத்தனம் வேண்டாமா...?"

அந்த இரவு அவள் முனகியது இப்பொழுதும் அவரது காதில் தேனாய்..!

ஆரோகண ஸ்தியில் அவளும் கொஞ்சம் முரட்டுத் தனத்தைக் காட்டியது அவருக்கு ஞாபகம் வர "வம்புப் பெட்டை வம்புப் பெட்டை..." என்று தன்னை மறந்து அரற்றியவர். தொடர்ந்து புலம்பினார்:

"மங்களம்... பிள்ளை மங்களம்...! வசந்தா வருவாவா..?"

"..........."

"எங்கபோய் தொலைஞ்சனி...வா பிள்ளை... இஞ்ச வாணை..."

மங்களம் அங்கு வந்த பொழுது அவர் தானாகவே எழுந்து சுவருடன் சாய்ந்திருப்பதைப் பார்த்தாள். அவளுக்கு அது ஆச்சரியமாக இருந்தது.

"ஆளுக்கு உசார் வந்திட்டுது போல... அவள்...அவள் வசந்தா தான் உங்களுக்கு எல்லாமெண்டு எனக்குத் தெரியும். என்னை முடிக்காமல் அவளையே நீங்க முடிச்சிருக் கலாம்..."

அவரைப் பார்த்து முணுமுணுத்தவள் அவருக்கு இரவு உணவு தந்து படுக்க வைத்தாள். உண்ட களைப்புடன், வசந்தா பற்றிய நினைவுகள் அலைக்கழிக்க, அவர் அயர்ந்து தூங்கினார்.

மங்களம் கருவுயிர்த்து, நாலாவது மாதத்தில் குறைப்பிரசவமாகி, கரைத்து வடித்துக் கிடந்த போது, வசந்தா ஒரு மாதம் வரை லீவு எடுத்து வந்து அவளுக்கு ஒத்தாசையாக இருந்தாள். அவளது பராமரிப்பில் தேறிய மங்களம் எழுந்து மனுஷியாக நடமாடத் தொடங்கினாள். வசந்தாவும் திருப்தியாக உத்தியோகம் பள்ளிக் கூடம் என மீளவும் அவர்களைப் பிரிந்து வன்னிப் பக்கம் போனாள்.

உயர் இரத்தஅழுத்தத்தால் வசந்தாவின் அம்மா மோசம் போன போது, கிளிநொச்சி யிலிருந்த அவள் இடம்மாற்றம் பெற்று வந்தாள். கரணவாயில் இருந்த அவள், இடைசுகம் மங்களத் திடமும் வந்து போனாள்.

தனியாக, துணையேதும் இல்லாது இருந்த அவளைத் தங்களுடன் வந்திருக்குமாறு பலதடவைகள் அவர்கள் வற்புறுத்திய போதும் அவள் ஏதேதோ காரணம் சொல்லி அதைத் தட்டிக் கழித்தாள். அது அவருக்குப் பெருத்த ஏமாற்றமாய் இருந்தது.

அவளுடன் உடல்ரீதியான உறவென்று அப்பொழுது அவருக்கு இல்லை, என்றாலும் - அவளது பிரசன்னமும் அந்த அதிர்ந்த நடையும் குழைவான சிரிப்பும் ஒசிந்த பார்வையும் ஒரு சொல் இரு சொல் வார்த்தைகளுமென்று அவள் படைத்த விருந்து அவருக்கு இல்லாமலே போனது.

தன்னளவில் கழிவிரக்கம் கொள்வதைத் தவிர வேறுவழி

எதுவும் அவருக்குத் தெரியவில்லை. முதிர்ந்து, இன்றோ நாளையோ உதிரக்கூடிய பழமாய் இருந்த அவரால், வசந்தா பற்றிய நினைவு களில் இருந்து மீள முடியவில்லை. அவளது நினைவுகள், நிழலாய் அவரைத் தொடரவே செய்தன.

புலரியில் ஒற்றைக் குயிலொன்றின் விரக ஒலிகேட்டு அவர் விழித்துக் கொண்டார்.

"வசந்தா ...வசந்தா..."

மீளவும் அவரது முனகல்

அருகில் படுத்துக்கிடந்த மங்களம்:

"என்னப்பா... உங்களுக்கு விசரே.. அவ பத்து மணிக்கு மேல தான் வருவா..." என்றவள் சிவதாசனின் காலைக்கடன்களைக் கவனித்து, இளஞ்சூட்டில் வெந்நீர் எடுத்து அவரது உடல் முழுவதை யும் துடைத்து விட்டாள். காலை உணவு, மருந்து எனத் தந்தவள்; தனது வேலைகளில் மூழ்கி இருந்த போது கேற் விடும் ஓசை கேட்டது.

எட்டிப்பார்த்த மங்களம் "வசந்தா..." என்று கூவினாள். கேற்வரை சென்றவள், அவளை அணைத்தபடி அழைத்து வந்தாள்.

"என்ன வாம் உன்ரை ஆள்... பலவீனமா இருக்கிறாரா...?"

கேட்ட வசந்தாவுக்கு "ம்..." சொன்ன மங்களம் அவளைப் பார்த்து, தீர்க்கமான குரலில் "என்ரையாளா... உன்ரையாளும் தான்" என்றாள்.

"என்னடியிது விசர்க்கதையா இருக்கு..." முகம் கறுத்து நின்ற அவளைப் பார்த்து, "சும்மா சொன்னனான்.." என்று கூறிய மங்களம் அவளை இழுத்துத் தன்னுடன் அணைத்துக் கொண்டாள்.

கால், கை, முகம் அலம்பி வந்த வசந்தா, சிவதாசனின் அறையை எட்டிப் பார்த்தாள். அவர் அயர்ந்து தூங்கியபடி... மெல்லடி எடுத்து வைத்து வந்தவள், அவர் அருகாக வந்து, கட்டிலில் அமர்ந்து, அவரது நெற்றியை ஆதுரத்துடன் ஸ்பரிசித்தாள்.

விழித்துக் கொண்ட அவருடைய விழிகளில் உறைந்து கிடந்த தாபம் அவளைத் துணுக்குற வைத்தது.

"நா... நான் கனகாலம் உயிரோட இருக்க மாட்டன் போலக்

கிடக்கு பிள்ளை... போறதுக்கு முன்னாலை... உன்னைக் காண வேணும்... கண்டு கதைக்க வேணும்... நடந்த பிழைகளுக்கு உன்னட்டை மன்னிப்புக் கேட்க வேணுமெண்டு இருந்தனான்."

"எதுக்கு...?"

"அதுக்குத்தான்...!"

"இன்னும் மறக்கேல்லையா...?"

"மறக்கேலுமா அந்த வக்கிரமான பேர்வேர்ஸனை ..."

"இல்ல... உங்களுக்கு என்னில விருப்பம் இருந்தது. எனக்கும் உங்களில... தப்பா எதையுமே நான் நினைக்கேல்லை. அது தொடர்ந்திருந்தா ஒருவேளை தப்பா இருந் திருக்கும்... உங்கட வேகமும் விருப்பமும் எனக்குத் தெரியும்... தெரிஞ்சிருந்தும் தவ றெண்டுதான் நான் உங்களுக்கு இடம் தராமல் ஒதுங்கினனான்..."

"ம்..."

"அந்த ஒரு இரவே எனக்குப் போதும் போதுமெண்டு இருந்தது. அதுக்குப் பிறகு மங்களத்தை நினைச்சு இறுக்கமாய், நெகிழ்ச்சி ஏதுமில்லாமல் இருந்திட்டன். அதோட இன்னொரு ஆம்பிளையை என்னாலை நினைச்சுப் பார்க்க முடியேல்லை. இதை லட்சியம் அது இதெண்டு குழம்பத் தேவையில்லை. எல்லாமே இயல்பா நடந்தது தான்."

"என்ரை மனம் உன்னை நினைச்சு தவிச்சபடி தான்... தவிப்பேதுமில்லாமை என்ரை ஆவி அடங்க வேணும்... அது தான்..."

"சும்மா அசட்டுப் பிசட்டெண்டு பேசாதேங்க... நடந்தது நல்லது... நடவாததும் தான்...!"

அப்பொழுது உள்ளே வந்த மங்களம், "என்னவாம் மாப்பிள்ளை...?"என்று கேட்டாள்.

"மாப்பிளையோ... ஆருக்கு...?" லேசாகச் சிரித்தபடி மங்களத்தைப் பார்த்த சிவதாசன்; பின்னர், வசந்தாவையும் பார்த்தார். அவளது கண்களில் ஒளிர்ந்த ஒளி அவரது மார்பைப் பிளந்து, உள்ளே...இன்னும் உள்ளே தொங்கல்வரை செல்வது போல இருந்தது. அவர் பரிதாபமாக மங்களத்தைப் பார்த்தபடி

வசந்தாவின் வலது கரத்தை இறுகப் பற்றிக் கொண்டார்.

மூவருடைய கண்களிலும் அப்பொழுது கசிந்து நின்ற கண்ணீர் அந்த அறை முழுமையையும் அசாத்தியமாகக் குளிர்மைப்படுத்தியது.

•

ஜீவநதி - 2013

## அவள் நீரின் நிறம்

விழித்ததும் பக்கத்தில் பார்த்தான். அம்மாவைக் காண வில்லை. 'கொல்லைப் பக்கமாகப் போயிருப்பாள்...' என நினைத்தவன், எழுந்து வெளியே வந்தான். அம்மா கிணற்றடியில் நிற்பது தெரிந்தது. பிச்சி மரத்தைத் தாண்டி, முற்றத்தின் மேற்கு விளிம்பில் ஒண்டுக்கிருந்தான்.

லேசான குளிர் காற்றிலிருந்தது. நடுங்கியவன், வானத்தை நிமிர்ந்து பார்த்தான். வெளிப்புக் காட்டத் தொடங்கிய வானில், திட்டுத் திட்டாகக் கருமுகில்கள் சில ஒட்டிக் கிடந்தன.

'மழை வருமா...? வந்தால் நல்லது. மழையில் நனைந்தபடி பள்ளிக்கூடம் போகேலுமா...?'

அம்மாவுக்குச் சாட்டுச் சொல்ல, ஏதோ கிடைத்தது போல இருந்தது அவனுக்கு.

கருமுகில்கள் செறிவடையாமல் அய்தாகக் கிடந்தன. அது அவனுக்குக் கலக்கமாக இருந்தது. மழை பெய்ய வேண்டுமெனப் பட்ட வேம்பானிடம் - பொங்கல் வைப்பதாக வேண்டிக்கொண்டான். அவனது நிறைவேற்றப்படாத வேண்டுதல்களில் இதுவும் ஒன்றா!

நினைப்பு வந்ததும் அவனுக்குச் சிரிப்புச் சிரிப்பாய் வந்தது.

இடது கன்னக் கதுப்பில் ஒரு துளி விழுந்தது. தடவிப் பார்த்தான். மழைத்துளிதான்!

அவன் திரும்பிப் பார்த்த போது அம்மா வந்து கொண்டிருந்

தாள். அம்மா முகம் கழுவி வந்திருந்தாள். முகத்தில் முத்து முத்தாக நீர்த்துளிகள். நெருங்கி வந்த அம்மா, அவனை அணைத்தபடி உச்சி முகர்ந்தாள். அவளில் இருந்த நீர் அவனை ஈரமாக்கியது. சந்தர்ப்பம் பார்த்திருந்தவனுக்கு அவளது சொரிதல் சாதகமாகி விட, அவளைப்பார்த்துச் சொன்னான்:

"இண்டைக்குப் பள்ளிக்கூடம் போகேலாது, மழை வரும் போலக்கிடக்கு..."

"கள்ளமா...?வடுவா...!அடி போட்டால் எல்லாம் போவார்..."

"இல்ல, வேண்டாம்..." என்ற போதே அவன் விம்மிக் கரைந்தான். கண்களில் நீர் திரண்டு துடித்தது.

அவனது கண்ணீரைத் துடைத்த அம்மா, 'ஏனடா...?' என்பது போலப் பார்த்தாள்.

"அந்தக் கண்ணாடிப் புடையன், தம்பு வாத்தி அடிக்கும். ஆத்திசூடியும், கொன்றை வேந்தனும் சொல்ல வேணும். கணக்குப் பிழையெண்டு நேற்றுக் கை புளிக்கப் புளிக்க அது அடிச்சது..."

அவன் கைகளை விரித்துக் காட்டினான். அவனது உள்ளங்கைகள் நீலம் பாரித்து, சிவந்து கிடந்தன.

"படிப்பிக்கிற வாத்தியாரை அப்படியெல்லாம் சொல்லப் படாது ராசா...!" என்ற அம்மா, தொடர்ந்து: "இரவு படிச்ச, ஆத்திசூடி உனக்குப் பாடந்தானே...?" என்று கேட்டாள்.

"இல்ல... கொஞ்சம் தடக்குது...கொன்றைவேந்தன் சுத்தமாப் பாடமில்லை..."

"நீ பள்ளிக்கூடம் போற..." அம்மா முடிவாகக் கூறிவிட்டு, நகர்ந்தாள்.

பள்ளிக்கூடம் போக அருக்காணியம் காட்டிய ரகு, தனது வளர்ப்புப் புறாக்களுக்குத் தானியங்களை விசிறி விட்டு, தண்ணீரும் மாற்றி வைத்தான்.

அப்பொழுது அம்மாவின் குரல் கேட்டது. அவளைப் பார்க்க அடுப்படிப் பக்கம் போனான்.

"முகம் கழுவினனி, ஏன் விபூதி பூசேல்ல..?"

அம்மாவின் அதட்டல்.

ஆத்திசூடியும் கொன்றைவேந்தனும், கண்ணாடி வாத்தியாரின் கைப்பிரம்பும் தான் அவனை இப்பொழுதெல்லாம் முழுமையாக ஆக்கிரமித்துக் கொள்ளுகின்றன. அதனால், அவனுக்கு எதுவுமே ஞாபகத்தில் தங்குவதாயில்லை.

வாத்தியாருடைய பிரப்பம் பழம், கைகளோடு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருப்பது அவனுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. முதுகிலும் குண்டியிலும் சிலருக்குக் கிடைப்பது, அவனுக்குத் தெரியும்.

மனதளவில் குழப்பங்களோடு இருந்த அவன், அம்மா சுட்டுப் போட்ட, கோதுமை ரொட்டிகளை ஏனோதானோ எனக் கொறிந்து விட்டு, எழுந்தான்.

அம்மா சொன்னதற்காக சாமியறைவரை வந்தவன், விபூதி பூசிக் கொண்டான். சரஸ்வதி தேவியை மனதில் நிறுத்திக் கண்களை மூடியபடி மௌனமாக வணங்கினான்.

அவன் கண்விழித்துப் பார்த்த போது அங்கு அந்த அதிசயம் நடந்தது.

சட்டமிடப்பட்டு, கண்ணாடியினுள் அடைபட்டுக் கிடந்த சரஸ்வதி அவனைப் பார்த்துச் சிரித்தாள். அந்தச் சிரிப்பு, அவனுக்குப் பவளத்துண்டுகளுக்கிடையே முத்துக்கள் சிதறின மாதிரி இருந்தது. படத்தை விட்டு வெளியே வந்த தேவி, கையில் இருந்த ருத்திர வீணையைப் பக்கமாக வைத்தாள். வெற்றிலைப் பெட்டியுடன் இவனருகாக வந்தவள், இவனை அணைத்துக் கொண்டு, முன் திண்ணையில் உட்கார்ந்தாள். அவளது பொன்னொளிர் மேனியின் தொடுகை அவனைப் பரவசம் கொள்ள வைத்தது. சொல்லிழந்து சொக்கிப் போன அவன், தேவியைப் பார்த்தபடி இருந்தான்.

வெற்றிலைப் பெட்டியை திறந்த தேவி, தளிர் வெற்றிலை யாகப் பார்த்தெடுத்து, தனது இடது தொடையில் துடைத்துக் கொண்டாள். வெற்றிலையின் நுனியையும் அடிக்காம்பையும் அகற்றியவள், தனது சுட்டு விரல் நகத்தால் சிறிதளவு சுண்ணாம்பை எடுத்து, வெற்றிலைச் செல்லத்தில் நீவினாள். கொஞ்சம் வாசனைப் பாக்கு, குங்குமப்பூ, கராம்பு, கறுவாப்பட்டை என்று ஏதேதோ

சேர்த்து, மடித்து எடுத்துக்கொண்டாள்.

"தாம்பூலம் தரிக்கிறாயா...?"

"தாம்பூலம்...?"

"பிள்ளைக்கு விளங்கேல்லையா...?"

கேட்டவள், மடித்த வெற்றிலைச் செல்லத்தை ஒரு கடி கடித்து விட்டு, மிகுதியை இவனது வாயில் இட்டாள்.

வெத்திலையின் தித்திப்பில் மயங்கியவன், அவளுடன் சாய்ந்து, இன்னும் நெருக்கமாக உட்கார்ந்து கொண்டான்.

வெற்றிலையை குதப்பிச் சாப்பிடுவதைக் கண்ட தேவி, அவனைப் பார்த்துச் சொன்னாள்:

"பயப்படாத.. நானிருக்கிறன், வாத்தியார் இனி அடிக்க மாட்டார்... படிப்புத் தானா வரும்..."

உடல் சிலிர்த்து, ரோமாஞ்சனம் கொண்டவன், இன்னும் நெருக்கமாக வந்து, தேவியின் மடியில் படுத்துக் கொண்டான்.

அம்மாவின் குரல் கேட்ட மாதிரி இருந்தது. அவன் சுதாரித்துக் கொண்டான்.

"ஏது வெத்திலை..? சின்னப் பிள்ளையள் வெத்திலை போடலாமா..? கெட்ட பழக்கமெல்லாம் உனக்கு இப்ப தண்ணிபட்ட பாடாய்ப் போச்சு..."

அம்மா சத்தம் போட்டாள்.

'சரஸ்வதி தரிசனம் பற்றி அம்மாவுக்குச் சொல்லலாமா...?' என ஒரு கணம் நினைத்தவன். 'இதையெல்லாம் அவள் நம்புவாளா...?' என விட்டு விட்டான்.

களிசானும் சேர்ட்டும் போட்டுக்கொண்டு, புத்தகப் பையுடன் அவன் பள்ளிக்கூடம் புறப்பட்டான்.

வெய்யிலின் காங்கை உள் நாக்குவரை வந்து சடவியது. தொண்டை வரட்சியால் நாக்குப் புரள மறுத்தது. பேச்சிழந்த நிலையில் அவன் மௌனமாக நடந்தான்.

மூந்தாய்க்குளம் வரண்டு, பொருக்குத் தட்டிக் கிடந்தது. ஆலடி வைரவர் கோவிலைக் கடந்தவன், குளத்தின் குறுக்காக இறங்கி நடந்தான், கலடு தட்டிக் கிடந்த குளத்தின் தரையில் தீ

நாக்குகள். தீ அவனது கால்களைப் பற்றிப் படர்ந்து எரிந்தது. இடது கால் பாதத்தைப் பார்த்தான். அது அவன் கண் முன்னாலேயே மெழுகு போல உருகி வடிந்தது. வலது காலால் தெத்தித் தெத்தி நடந்தவன், சிரமத்துடன் குளத்தின் மறுகரையை அடைந்தான்.

மதவடி வயல்வெளி, ஈரக்கசிவு ஏதுமில்லாது பாழ் பட்டுக் கிடந்தது. அது உவர்நிலம், உவர் நிலப் பரப்புக்கே உரிய கோரை, சிறு அறுகு, முள்ளி, காரை, காட்டுச் செவ்வந்தி என வரண்ட தாவரங்கள் எங்கும் விரவிக் கிடந்தன. வயல் வெளியின் தெற்குக் கரையோரமாக, சதுரக்கள்ளியும் சப்பாத்துக்கள்ளியும் எருக்கிலையும் உள் உயிர் அழிந்து உலர்ந்து கிடந்தன.

அவனது கால்கள் வயற்தடத்தின் ஒற்றையடிப்பாதையில் பட்டபோது, மீளவும் தீ நாக்குகளின் சட சடப்பு, தீயின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த வயற்தாவரங்கள் எல்லாமே பொசுங்குவதை அவன் கண்டான். 'பள்ளிக்கூடம் போகாமல் திரும்பி விடுவமா...?' என ஒரு கணம் மறுகியவன். நெருப்புப் படராத இடைவெளிகளைப் பார்த்து நடந்தான்.

நவக்கைக்குளமும் வரண்டு கிடந்தது. குண்டில் மட்டும் சிறிதளவு நீர் தளதளத்தது. பாதரசம் மாதிரி ஒரு மினுமினுப்பும் பளபளப்பும் இருந்தது. குண்டை நெருங்கியவன், நீரை எடுத்து உள்ளங்கையில் விட்டுப்பார்த்தான். நீர் சிறுசிறு கோள வடிவ உருக்களாக மாறி, அவனது கையில் உருண்டது.

'இது பாதரசம் தான்...!'

வியந்தவன்! குளத்தின் மறுகரை வந்து, நவக்கை வெளியில் நடந்தான்.

அவன் இதுவரை கண்ட புலக் காட்சிக்கு மாறாக இருந்தது நவக்கை வெளி. வெளியை அடுத்து உயரப்புலம், புலவர் மேடு, பனங்கூடல் என்று விரிந்த நிலப்பரப்பு; எல்லாமே பசுமை போர்த்திக் கிடந்தன. லேசான குளிருடன் ஒரு வெதவெதப்புமிருந்தது.

'இந்த நிலப் பெருவெளிக்கு, குளிரூட்டியது யார்...? இது யாருடைய கொடை...?'

அவனது கால் தடங்கள் பதிந்த இடமெல்லாம் இப்பொழுது

நீர் கசிந்தது. முன்னர், நெருப்பில் வெந்து போன அவனது பாதங்களுக்கு அந்த நீர் ஒத்தடம் இதமாயிருந்தது. தீக்காயங்கள் - அவன் பார்த்திருக்க, சடுதியாக ஆறுவதை அவன் அவதானித்தான்.

'இது எப்படி...எப்படி நடக்க முடியும்...!'

வியப்புடன் கூடிய பரபரப்பு அவனுக்கு.

வயல் வெளியில், மொட்டைக் கறுப்பன் நெற்பயிர்கள் மடல் வெடித்துக் கதிர் எறிந்திருந்தன. வரம்பு மட்டத்துக்கு வெள்ளநீர் தளதளத்தபடி... அதில் நீர்ப்பூக்களும் தவளைகளும்...! அவனுடன் அவை சல்லாபமாகப் பேச முற்பட்டன. அவற்றின் கதையாடல் அவனுக்குப் புரிந்தும் புரியாமலும் இருந்தது. சடைத்து வளர்ந்த பயிரொன்றின் குடலையை உருவி எடுத்தவன், அதனை வாயிலிட்டுச் சுவைத்துப் பார்த்தான். தேன் குடத்தை நாக்கில் சரித்தது போலொரு சுவை அவனைக் கிறங்க வைத்தது.

வாய் பிசுபிசுக்க, சப்புக் கொட்டியபடி மேலே நடந்தான்.

உயரப்புலத்தைக் கடந்து, பனங்கூடலை அண்மித்தான். அங்கு, அவனுக்கு இன்னும் பல அதிசயங்கள் காத்துக்கிடந்தன.

கூடலில் உள்ள பனைகள் அனைத்திலும் பனங்கத்தாளை மலர்கள்! அவை, அவனை இழுத்து வைத்துச் சிலிர்ப்பூட்டின. கரும் ஊதா மலர்களின் உள் வளைவுகளில், குட்டிக்குட்டி கபில நிறக் கோடுகள். இன்னும் கரும்புள்ளிகள். அம்மலர்கள் தொகையாய்த் தேன் சொரிந்தபடி இருந்தன. தரையில் விழுந்த தேன்துளிகளின் தடத்திலிருந்து பல நூறு வண்ணத்துப்பூச்சிகள், சிறகு அசைத்துப் பறந்து விந்தை காட்டின.

அங்கு குப்பை கொட்டியது போல பறந்த வண்ணத்துப் பூச்சிகளில் தான் எத்தனை வகைகள், வண்ணங்கள்!

கருமையும் வெண்மையும் கலந்தவை. ஊதாவில் கரும் புள்ளிகள் மட்டும் உள்ளவை. மென்சிவப்பு. குங்குமத்தில் பொன்னிழைகள் ஊடு பாவியவை. மஞ்சள் புள்ளிகளுடனான இலைப் பச்சை. தயிர் வெள்ளை. மஞ்சள் வண்ணத்தில் குங்குமம் பூசிக் கொண்டவை. மரகதக்கோடுகளுடனான கருநீலம், பவளச்சிவப்பு. இன்னும் கணிதக் குறியீடுகளையும்; தமிழ்

எழுத்துக்களை - அதுவும் நெடுங்கணக்கு முழுவதையும் தாங்கிய சில பூச்சிகளையும் அவன் கண்டான்.

அங்கு பறந்த வண்ணத்துப்பூச்சிகள் எல்லாமே ஒன்றுதிரண்டு, உருமாறி, ஒரு பெரிய பூச்சியாக வடிவெடுத்தது. அவனை நோக்கி அது பறந்து வந்தது. அதன் பறத்தலினால், அவனைச் சூழ ஆழமான இருள் கவியத் தொடங்கியது. எதுவுமே தெளிவாகத் தெரியாததால், அவன் அவஸ்தைப் பட்டான்.

அந்த மையிருட்டில், அவன் எதிர்பாராத தருணத்தில், அந்தப் பூச்சி அவனது தோளில் வந்து அமர்ந்து கொண்டது.

அமர்ந்த அந்தப் பூச்சி, அவனது காதுகளுக்கு அருகாக தனது பாரிய உணர்கொம்புகளை நகர்த்தி, உரசி உரசி, கிச்சுக் கிச்சு மூட்டியது. அத்துடன் அவனது காதில் ஏதேதோ புதினமும் சொல்லியது.

பூச்சியின் குரல் உரத்தும், சில வேளைகளில் விட்டு விட்டும் தொடர்பறுந்தும் ஒலித்தது:

"ஏய்! உன்னைத்தான், நில். ஏன் சழிந்து பழைய துணி மாதிரி இருக்கிறாய்...! உனக்கு ஒரு தோழியா...? உதவி செய்ய அவள் ஏன் கங்கணக் கட்டிக் கொண்டு வருகிறாள்? கிழிஞ்சுது போ..! அவளைச் சிக்கனெப் பிடித்துக் கொள். பிடித்துக் கொண்டால், எப்பொழுதும் உனக்கு முன்வரிசை தான். அவளது இருப்பும் இசைவும் தான் இனிமேல் உனது சீவியம்... உனக்குச் சுக்கிர திசையடா..! இது நியதி. இந்த நியதியை யாராலும் மாற்ற முடியாது..."

எதிர்வு கூறிய அந்தப்பூச்சி, விர்ரென்று பறந்து சென்றது. அது பறந்து சென்ற போது, அதன் சிறகுகளின் உதைப்பு விசை அவனைச் சரித்து வீழ்த்தியது. அடிபட்ட நிலையில் அவன் மயங்கித்தரையில் சாய்ந்தான்.

அவன் விழித்த போது அவனுக்கு அருகாக ஒரு சிறுபெண்- அவனுடனான ஜென்ம ஜென்மாத்திரப் பிணைப்பை உறுதி செய்வது போல- இருந்தாள். அவளின் நிறம் நீரின் நிறத்தை ஒத்திருந்தது. அவள் ஓரோர் சமயம் வதங்கிய குருத்திலை போலவும் காணப் பட்டாள். அவளது கண்கள் ஈரமாயும் மிகுந்த ஜீவக்களையுடனு

மிருந்தன. இத்தனை இருந்தும் மொத்தத்தில் அவள் சோர்வாதம் வந்தவள் போல சவலை தட்டிக்கிடந்தாள்.

அவனது முகத்தைத் தனது கரங்களில் ஏந்தியவள்; அதை நன்றாகத் துடைத்து விட்டாள். அவனுக்குக் கைலாகு கொடுத்தவள், அவன் எழுந்து உட்கார்ந்து கொள்ளவும் உதவினாள்.

அவளது கைபட்ட இடமெல்லாம் வாச மல்லிகையின் தீண்டுதலாய் அவனுக்கு இருந்தது.

அவளது உதடுகளில் மலர்ந்த புன்னகையில் அவன் தெய்வத்தைக் கண்டான்.

தூரத்தில் வீசப்பட்டுக் கிடந்த அவனது புத்தகப்பையை எடுத்தவள், அவனிடம் தந்தபடி, அவனைப் பார்த்துக் கேட்டாள்:

“சரஸ்வதியிலயா படிக்கிற...? நானும் அங்கதான் புதிசாச் சேர்ந்திருக்கிறன்... வா போவம்...” கூறியவள், அவனது இடது கரத்தைப் பற்றிய படி நடந்தாள். அவளது வலது கரத்தில் சில புத்தகங்களும், பயிற்சிக் கொப்பிகளும் இருந்தன.

“எந்த வகுப்பு...?”

“மூண்டாம் வகுப்பு...?”

“நானும் மூண்டுதான்.”

“பேர்..?”

“ச. தமிழ்ச்செல்வி.”

“வேலணை தானே...?”

“ம்...”

அவளது ‘ம்’ இல் ஏதோ ஒரு தயக்கமும் மறைப்பும் இருந்தது.

பேச்சொழிந்த நிலையில் பாடசாலை நோக்கி இருவரும் நடந்தார்கள். அப்பொழுது அவர்கள் இருவரது கரங்களும் தாமாகப் பிணைந்து கொண்டன.

சிறிது தூரம் அவளுடன் நடந்தவன், கூச்சப்பட்டவனாய்த் தனது கரத்தை அவளிடம் இருந்து விடுவித்துக் கொண்டான்.

அவனோடு இணைந்து நடந்து வந்தவளிடம் ஏதோ வாசனை!

'காற்றில், விரவி வந்ததா... இல்லை, அவளிடமிருந்து வந்ததா...?'

அவன் சிறிது குழம்பினான்.

வனங்களில் இருந்தும் வனதேவதைகளில் இருந்தும் இத்தகைய வாசனை வருவதுண்டு என்பது அவனுக்கு தெரியும். அம்மா சொன்ன கதைகளும்- இன்னும் அவன் படித்த தேவதைக் கதைகளும் அவனுக்கு இவற்றைக் கற்றுத் தந்திருக்கின்றன.

அடர்ந்த காட்டுப்புதர்களில் குலுங்கிச் சிரிக்கும் மலர்களில் இருந்து, ஈரலிப்புடன் வரும் வாசனை தான் அது என்பதை அவன் அறிந்திருந்தான். அதே நேரத்தில் 'வனங்களுக்கும் அவளுக்கும் அப்படி என்ன ஒரு நெருங்கிய ஒரு உறவு இருக்க முடியும்...?' எனும் கேள்வியும் அவனிடம் இருந்தது.

பள்ளிக்கூடத்தை நெருங்கிய அவர்கள் அது புதுப்பொலி வுடன் இருப்பதை அவதானித்தார்கள்.

பாடசாலை வெளி மதில், புதிதாகப் பெயின்ற் அடிக்கப் பட்டிருந்தது. அதன் முன்பாக, வாசல் வரை பூப்பந்தல் வளைவு; அதில் போகன் விலா மலர்கள், வகை தொகையில்லாமல் கொட்டிக்கிடந்தன.

பள்ளிக்கூட நடைபாதைக்கு தெற்காக, நீர்த்தொட்டி. அதில் அழகிய கருநீல அல்லிமலர்கள், இன்னும் சில வெள்ளை மலர்களும்.

வடக்குப் பக்கமாக விஸ்தாரமான விளையாட்டு மைதானம். மைதானத்தின் கிழக்குச் சாய்வில், தொங்கலில் திரைச்சீலையும் குஞ்சலங்களும் அசைந்தாடும் திறந்த வெளி அரங்கு.

நேற்று வரை இல்லாத எல்லாமே இன்று உருவாகி இருப்பதை அவனால் நம்ப முடியவில்லை.

கூடவரும் செல்வியைத் திரும்பிப் பார்த்தான். 'இதெல்லாம் உனது சித்து வேலையா...?' எனக் கேட்பது போலிருந்தது அவனது அந்தப் பார்வை.

அவள் மலர்ந்து சிரித்தாள். அந்தச் சிரிப்பில் பிடிபட மறுக்கும் அர்த்தங்கள் அதிகமிருந்தன.

இதுவரை பராக்குப் பார்த்தது போதும் என நினைத்தவர் களாய் - இருவரும் அவர்களது வகுப்பறையை நோக்கி நடந்தார்கள்.

வகுப்பறையில் கண்ணாடி வாத்தியார் ஏதேதோ சளசளத்த படி நின்றார். இவர்களைப் பார்த்ததும்:

"ஆரது புதுப்பெட்டை...?" என்று கேட்டார்.

"தமிழ்ச்செல்வி... புதிசா வகுப்பில சேர்ந்திருக்கிறன் ஸேர்..." கூறிய செல்வி, "ரகுவுக்குப் பக்கத்தில இருக்கட்டா...?" என அவரிடம் கேட்டாள்.

"இருந்து தொலை..."

சலித்துக்கொண்ட ஆசிரியர், மாணவ, மாணவிகளிடம் முறை வைத்து ஆத்திசூடி, கொன்றை வேந்தன் கேட்டார். கேட்டு வந்தவர், ரகுவைப் பார்த்தார்.

அவனும் ஆத்திசூடி சொன்னான்.

"சரி... கொன்றை வேந்தன்...?"

"கொஞ்சம் தடக்குது, ஸேர்"

பிரம்புடன் அவனுக்குக் கிட்டவாக வந்தவர், அவனது தோள் களைப் பற்றி இறுக்கமாக அழுத்தினார்.அவரது இரும்புக்கரம் பட்ட இடம் வலித்தது.

"சொல்லு... தடங்காமல் வரும்..."

அன்னையும் பிதாவும் எனத் தொடங்கியவன், மூச்சு விடாமல் 'சூதும் வாதும் வேதனை செய்யும்' வரை அவருக்கு ஒப்புவித்தான்.

"இருபத்தைஞ்சு போதும்... நீ முப்பது வரை சொல்லிற... நல்லது... நல்லாப்படியடா...!" கூறியவர் அவனது முதுகை தட்டிக் கொடுத்தார்.

ஆசிரியரின் பாராட்டு அவனைக் குளிர்வித்தது.

ஆத்திசூடியும் கொன்றை வேந்தனும் சொல்லும் போது 'வரி தவறுமோ...?' என அவன் தயக்கம் கொண்ட சந்தர்ப்பங்களில் எல்லாம் செல்வியின் குரல்தான் அசரீரி போல ஒலித்து அவனுக்கு உதவியது.

செல்வியை நன்றியுடன் திரும்பிப் பார்த்தான்.

இணக்கமாக, மிகுந்த பிரியத்துடன் சிரித்த செல்வி சொன்னாள்.

“பயப்படாத... நானிருக்கிறன். வாத்தியார் இனி அடிக்க மாட்டார்... படிப்புத் தானா வரும்...”

‘காலையில், தேவி சரஸ்வதி சொன்ன மாதிரி இவளும் சொல்லிறாளே.. தேவிதான் கூடவந்திருக்கிறாளோ...? வெளிறிய நீலப் பப்ளீன் சட்டையில... ஒல்லிப்பாச்சானா இருக்கிற அவள் எப்படி தேவியாக இருக்க முடியும்...!’

அவனது குழப்பங்கள் தீராமல் தொடரவே செய்தன.

புது மாணவி என்று செல்வியை எதுவும் ஆசிரியர் கேட்க வில்லை. அவள் அங்கு நடப்பவைகளுக்கு மௌன சாட்சியாக மட்டும் இருந்தாள்.

பாடவேளை முடிந்து மணி அடித்தது.

“அடுத்த பாடம் என்ன...?” செல்விதான் கேட்டாள்.

“கணிதம்..”

அவனது பதிலில் சிறிது பதட்டமிருந்தது.

“என்ன பயமா இருக்கா...? பயப்படாத...”

அவள் அவனுக்கு ஆறுதல் சொன்னாள்.

கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் கணக்குகளுடன், சில வசனக்கணக்குகளையும் ஆசிரியர் கொடுத்தார்.

எல்லாக் கணக்குகளையும் அவன் சுலபமாகச் செய்தான். இத்தகைய அநுபவம் அவனுக்கு முன்பின் இருந்ததில்லை.

செல்வியின் உடனிருப்பின் அவசியத்தை அந்தக் கணங் களில் அவன் அழுத்தமாகவே உணர்ந்து கொண்டான்.

“மூண்டாங்கணக்குப் பிழை; ஒண்டில சைவர் போனால் சைவரா...?”

“........”

“விடை ஒண்டு...” ரபராலை அழிச்சுத் திருத்து...”

“நீ இப்ப செய்யிறது வசனக் கணக்கு. பிரித்தல். கேள்வியை நல்ல வடிவாப் படி... படிச்சுப் பாத்துச் செய்... அவசரப்படாத...”

‘எனது பயிற்சிக் கொப்பியைப் பார்க்காமலே, எப்படி...

எப்படிச் செல்வியால் எனக்கு வழிகாட்ட முடியுது...?'

எல்லாமே அவனுக்குப் புதிராய் இருந்தது.

அன்றைய தினம் எல்லாப் பாடங்களையும் பிழை ஏதுமில்லாமல் அவனால் செய்ய முடிந்தது. அவன் பயந்தது போல, எதுவும் நடக்கவில்லை. பிரம்புக்கும் ஆசிரியர் ஓய்வு கொடுத்தது அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அவரிடம் கெட்டிக்காரன் என்ற பெயரும் வாங்கிக் கொண்டான்.

அன்று மட்டுமல்ல, தொடர்ந்து வந்த நாட்களிலும் செல்வி அவனுக்குத் துணையாக இருந்தாள். அவனைப் பொறுத்தவரையில் இது ஒரு தேவ அநுக்கிரகம் ஆகும்.

அவனது இந்த அநுபவத்தையெல்லாம் வீட்டில் அம்மாவுக்கு - அவள் நம்புவாளா மாட்டாளா என்பதிலெல்லாம் அக்கறைப்படாது-சொல்லிச் சொல்லி மாய்ந்து போனான்.

•

செல்வி பாடசாலையில் சேர்ந்து இரண்டு மாதங்களுக்கு மேலாகி விட்டது. ஒருநாள் பாடசாலை விட்ட பின்னர், மைதானத்தின் தென்புறமாக உள்ள வேப்பமர நிழலில், இருவரும் கெந்தியடித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவள் தனது ஆளுமையின் முழுமையான விகசிப்பை அவனுக்குக் காட்டினாள்.

அருகாக நின்றவளை, கண் அகற்றாது அவன் பார்த்தான். ஆரம்பத்தில் கோட்டுச் சித்திரம் போலக் கோலங் காட்டியவள், இரத்தமும் தசையும் கொண்ட மனித ஜீவியாகத் தோற்றம் கொண்டாள்.

அவளது முகத்தின் இடது பக்கக் கன்னத்தில், விநோதமான ரேகைகள் திடீரெனப் பரவின. கிட்டப் பார்வையில், அவை ரேகைகள் அல்ல, இரத்த நாடிகள் என்பது புலனாகியது. அவை வெடிப்புற்று, பிளவு பட்டு விரிந்தன. முப்பரிமாண விசாலிப்புடன் விளங்கிய அந்த இரத்தம் சொரியும் பிளவுகளில், விதம் விதமான காட்சிகள், ஒன்றன் பின் ஒன்றாக அவனது கண்களுக்குத் தெரிந்தன.

அவளது வசீகரத்துக்கும் ஆளுகைக்கும் உட்பட்டு, வசமிழந்த அவன்:

'இது எந்த இடம்...? காட்டு மரங்களும் தறப்பாள் கூடாரங்களும்... இடிபாடுகளுடனான ஒரு பாடசாலைக் கட்டிடமும் தெரியுது... குப்பை குப்பையாச் சனங்களும் கொட்டிக்கிடக்கினம்...!'

மலைப்புடன் நின்ற அவனுக்கு அவள் விளக்கம் தந்தாள்:

"இது வள்ளிபுனம், எங்கட ஊர்"

"அட நான் உன்னைக் காட்டுப்பெட்டை எண்டு நினைச்சது சரி... வன்னியில இருந்து தான் நீ இஞ்ச யுத்தத்தோட இடம்பெயர்ந்து வந்திருக்கிற போல...."

"ம்..." சொன்னவள் தொடர்ந்து பேசினாள்:

"பள்ளிக்கூடத்துக்கு முன்னாலை இருக்கிறது எங்கட வீடு..."

"வீடா...? குடிசை மாதிரிக்கிடக்குது."

"சரி சரி... குடிசையாகவே இருந்திட்டுப்போட்டும்... அந்தக் குடிசைக்கு முன்னால நிக்கிறது எங்கட குடும்பம். அம்மா, தங்கச்சி, அடுக்க நிக்கிற பெரிய பெட்டை நான்..."

பெரிய பெண்ணை உன்னிப்பாகப் பார்த்த ரகு அவள் கூறுவதை ஆமோதித்தான்.

"அது சரி... உங்கட ஐயா...?"

"இரண்டு மாதத்துக்கு முந்தி, ஷெல்லடியில செத்துப் போட்டார். பள்ளிக்கூடத்தடியில தான் ஷெல் விழுந்தது. அவரைக் கூழாய் அள்ளித்தான் அடக்கம் செய்தனாங்கள்"

அவளது குரல் கரகரத்தது. கண்ணீர் மல்க நின்றாள்.

பேசிக்கொண்டிருக்கும் போதே, காட்சியின் பிம்பங்கள் கரைந்து போவதை அவதானித்தான். கரைந்து கொண்டிருக்கும் போது ஏற்பட்ட சில மாற்றங்களால் பிறிதொரு காட்சி புலனாகியது.

காட்டாற்று வெள்ளத்தின் வேகத்துடனும் உதைப்புடனும் மக்கள் திரள் அலைபுரண்டு போகிறது. பெண்கள், ஆண்கள், சிறுவர்கள் என... திடீரென ஓசை அழிந்த பேரமைதி. வானத்தில் பொம்மர்கள் அதே சமயத்தில் ஷெல் மழையும் பொழிகின்றது. அள்ளுண்டு சென்ற சனம் தரையில் விழுந்து படுத்துக் கொள்கிறது. தலைகுத்தி, குண்டு மாரி பொழிந்த பிணந்தின்னி விமானங்கள் விலக

ஷெல் வீச்சும் ஓரளவு ஓய்வு கொள்கிறது.

தலைதூக்கிப் பார்த்த சனங்களின் மத்தியில், சுருண்டு போய்க் கிடந்த செல்வியின் அம்மா, அருகில் கிடந்த செல்வியையும் அவளது தங்கையையும் அணைத்துத் தூக்கியபடி எழுந்து கொள்கிறாள்.

ரகுவின் கண்கள் அந்தக்காட்சிகளில் நிலைத்தபடி இடதும் வலதுமாய் அசைந்து கொள்கின்றன. சிதறுண்டு கிடந்த சடலங்கள் மீது மிக நெருக்கமாக அவனது கண்கள் மொய்க்கின்றன.

அங்கு அவன் கைகால்கள் இழந்த உடல்களை, தலை யில்லாத முண்டங்களை, குண்டடிபட்ட நிலையில் துடிதுடித்த படி கிடக்கும் மனிதர்களைத் தழுவிய நிலையில் மரித்துக்கிடப்பவர் களை, தலை பிளந்து 'க்ளுக்' கெனக்கோழை வடிய வடிய வெளித்தள்ளிக் கிடக்கும் மூளைகளை, மார்பு பிளந்துவிட்ட நிலையில், வெளித் தெரியும் - துடிப்பு அடங்காத இதயங்களை, சரிந்து, வெளித் தள்ளிக்கிடக்கும் குடல்களை அவன் பார்த்தான். இன்னும் கருமையாக, களித்தன்மையுடன் உறைந்தும் உறையாமலும் படர்ந்து கிடக்கும் இரத்தப்பிசுபிசுப்பும் அவனை அசரவைத்தன.

"இது எந்த இடம் செல்வி...?"

"புதுக்குடியிருப்புச் சந்தி..."

"இந்தச் சனசந்தடிக்கை உன்னை இப்ப காணேல்லை... அம்மாவும் தங்கச்சியும் தான் போகின போல..."

"வடிவாப் பார்... அம்மான்ரை வலது கைப் பக்கமாக நான் நடந்து வாறன்..."

அவன் உற்று உற்றுப் பார்த்தான்.

"நீர்க்கோடுகளால் கீறின மாதிரித்தெரியிற... வள்ளிப் புனத்தில் ரத்தமும் தசையுமாய் வடிவாத்தெரிஞ்ச உன்ர உடம்பு உரு அழிஞ்சு தெரியுது... இப்ப இஞ்ச எனக்குப் பக்கத்தில நிக்கேக்க கூட அப்படித்தான் உன்ர உருவம் தெரியுது. இது நூதனமாயிருக்குது... இந்தக் கள்ளமெல்லாம் எதுக்கு...?"

"இதெல்லாம் ஒரு காரணத்தோட தான். நான் எதுவும்

சொல்லாமலே, கால முதிர்வு எல்லாத்தையும் உனக்குச் சொல்லித் தரும்."

கூறிச்சிரித்தவள்: "பார்...நல்லாப்பார்... அது நானெண்டு தெரியேல்லையா...?" எனக் கேட்டாள்.

அவளுக்குப் பதிலாக "ம்" என்றவன். - திடீரெனக் காட்சி மாறியதை அவதானித்தான். மனம் பேதலித்த நிலையில், அக்காட்சியில் அவனது பார்வை தடைப்பட்டது.

"இது எந்த இடம்...?"

"புது மாத்தளன். அரசு அறிவிச்ச கடைசிப்பாதுகாப்பு வலயம்... பக்கத்தில அம்பலவன், பொக்கணை, வலைப்பாடு, வலைஞர் மடம் எண்டெல்லாம் இடங்கள் இருக்கு...! இஞ்ச தான் இயக்கப்பெடியளுக்கும் அரச படையளுக்குமிடையில இறுதி யுத்தம் நடந்தது."

அவன் அந்த இடத்தை மிக நெருக்கத்தில் பார்த்தான். அங்கு அவன் உயிருள்ள மனிதர்களைக் கண்டான். அது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அங்கு தெரிந்த மனிதர்கள் அனைவரது முகங்களும் உலர்ந்து உறைந்து போய்க்கிடந்தன. உதடுகள் வெடிப்புக்கண்டு இரத்தப்பெருக்குடன் காணப்பட்டன. எதையோ இழந்து விட்டது போலத் துடிக்கும் விழிகள் சூனியத்தைத் துழாவிய படி...

"நல்லாய்ச் சனம் செறிஞ்சு போய்க்கிடக்குது... இந்தச் சனத்துக்குச் சாப்பாடு, தண்ணி எண்டு ஏதும்இல்லைப் போல..."

குரல் உடைய அவன் கரைந்தான்.

"கந்தக நெடியோட கூடிய காத்து மட்டும்தான் அங்க அப்ப இருந்தது. அந்தக் காத்தைக்குடிச்சுக் குடிச்சு உயிர் வாழிற கதைதான் அப்ப அங்கு நடந்தது..."

துயரப்பட்ட செல்வி தொடர்ந்து சொன்னாள்:

"கண்ணைத் திருப்பிக் கொஞ்சம் கிழக்குப் பக்கமாகப் பார் ரகு...!"

"இதென்ன கிபிர் வருகுது, குண்டு வீசப்போகுதோ...? ஷெல்லும் விழுகுது...அதோட கொத்துக் குண்டுகளும்..."

"ம்...ம்..."

"அங்க பார் செல்வி... சனம் பயத்தில உயிரைப்பிடிச்சுக் கொண்டு ஓடுறதை, சில ஆக்கள் சடலங்களுக்கு மேலால ஏறி மிதிச்சுக் கொண்டும் ஓடுகினம்..."

"எல்லாம் தெரியுது..."

"சனங்களோட சனங்களாக சாறத்தை மடிச்சுக் கட்டிக் கொண்டு, ஒட்டவெட்டின தலையோட சில பெடியங்களும்... இறுக்கமாய்ச் சட்டையும் ஜீன்சும் போட்டுக்கொண்டு, இரட்டைப் பின்னலோட பெட்டையளும் போகினம்... அவையின்ர கையில துப்பாக்கி இருக்கு... சில பேர் வாழைப் பொத்தி மாதிரி ஏதோ ஆயுதத்தையும் தோளில தொங்கப் போட்டபடி போகினம்..."

"அது வாழைப் பொத்தியில்லை... கையில லேசா எடுத்துச் செல்லக் கூடிய ஆர்.பி.ஜி. ரொக்கட் லோஞ்சர்..."

அவள் திருத்தம் சொன்னாள்.

"சில பெடியளின்ர கையில பச்சை மட்டையளும் இருக்கு...!அதேன்...? பென்னாம் பெரிய ஆயுதங்களோட வாற ஆமிக்காரரைப் பச்சை மட்டையால அடிச்சு விரட்டேலுமா...?"

அறியாப் பிள்ளையாய் அவன் கேட்டான்.

"இந்த மட்டையளுக்குப் பின்னால ஒரு பெரிய கதையே இருக்கு ரகு! எல்லாத்தையும் சொல்லேலுமா...? சொல்லாமலிருக்கிறது தான் எனக்கு நல்லது... உனக்கும் நல்லது..."

கூறியவள், உதடுகளைச் சுளித்துக் கொண்டு மர்மமாகச் சிரித்தாள்.

"நீர் சொல்ல விரும்பாததையெல்லாம் சொல்லாமல் சிரிச்சுச் சமாளிச்சுப் போடுறீர்..."

"சொல்ல முடியாததை மட்டுமல்ல... காட்ட முடியாத சிலதை யும் நான் உனக்குக் காட்டேல்லை..."

"நீ சொல்லாட்டிலும் எனக்குக் கொஞ்சம் கொஞ்சம் தெரியும். அரசபடையின்ர இரக்கமில்லாத கொடுமையை... வசதியள் ஏதுமில்லாத நிலையில மல்லாடின சனங்களுக்குச் சேவை செய்த டாக்குத்தர்மார், நேர்ஸ்மார், அரச உத்தியோகத்தர்,

தொண்டு நிறுவன ஆக்கள் எண்டு எல்லாருமே நல்லது செய்திருக் கினம். பேப்பர் பார்த்து அம்மா சொல்லச் சொல்ல நான் இதைக் கேட்டுமிருக் கிறன்."

"இவை மட்டும்தானா...?"

"இல்லை இன்னுமிருக்கு... எங்கட வீடு வாசலை, உசிரை, மரியாதையை எல்லாம் இயக்கப் பெடியள் தான் காப்பத்தினவை எண்டு அம்மா சொல்லிறவ..."

"இதுகள் மட்டுமில்ல... எங்கட உரிமை, தேசம் எண்டு கதைச்சு உண்மையா நடந்தவை. இப்ப அவையளுக்கு இறங்கு முகம். அவையிட கனவுகளெல்லாம் கலைஞ்ச நிலையில, அவையளும் அழிஞ்சு... நாமளும் அழிஞ்சு... மிஞ்சியிருக்கிற சில ஆக்கள் மட்டும் வேரும் விழுதும் இழந்து அலையிறம்..."

கொப்பளிக்கும் துயருடன் சொல்லி வந்த செல்வி, அவனை விட்டு, தூர விலகி போவது போல அவனுக்குத் தோன்றியது. பனி மூட்டத்தின் அடர்த்தி அவளைச்சூழ ஓர் ஒளிப் பொட்டாய் மாறி விட்ட அவள், நகர்ந்து நகர்ந்து போய்க் கொண்டிருந்தாள். அவளைத் தொடர்ந்து, விரைந்து சென்ற ரகு, அவளை அடைய முடியாத திகைப்புடன் நின்றான்.

'செல்வி...இனி...இனி...எனக்காக வரமாட்டாளா...?'

படரும் துயரமும் ஏக்கமும் அவனுள் கவிந்து அவனை வருத்தியது.

•

கடந்த சில மாதங்களாக, அவனது இருப்புக்கும் உயிர்ப்புக் கும் ஆறுதலாயிருந்த செல்வி, காணாமலே போய் விட்டது போன்ற பிரமை அவனுக்கு. அது அவனுக்கு மிகுந்த துயரத்தைத் தந்தது.

இப்பொழுதெல்லாம் கணக்குப் பாடவேளைகளில் செல்வி தந்த ஆட்டுப் புழுக்கைப் பென்சில் தான் அவனுக்கு உதவியாக இருக்கிறது.

அந்தப் பென்சிலால் அவன் போடும் கணக்குகளெல்லாம் சரியாக வந்து விடுகின்றன. ஆனால், அவனது பென்சிலைத் தொட்ட மாத்திரத்தில் அவன் போடும் கணக்குகள் பிழைத்து விடுகின்றன.

அதனால், கண்ணாடிப் புடையனின் பிரப்பம் பழங்கள் அவனுக்கு இப்பொழுது தாராளமாகக் கிடைக்கின்றன.

சரஸ்வதி மாலையில் சில பாடல்களை, நாளைய தினம் அவன் ஒப்புவிக்க வேண்டும். 'அது முடியுமா?' செல்வி வந்தால் தான் எதுவும் முடியும் போல அவனுக்கு இருந்தது.

அவளுடைய வீடு எங்கு இருக்கிறது என்பதை அவன் முன்னரே தெரிந்து வைத்திருந்தான். சாட்டி மணக்கும்பான் வீதியில், பிரசவ ஆஸ்பத்திரிக்கு அப்பால், அழகருடைய பனங்காணியில் போடப்பட்ட கொட்டிலில் இருப்பதாகத்தான் அவள் இவனுக்குச் சொல்லி இருந்தாள். அழகர் அவளுக்குத் தூரத்து உறவு, யுத்தத்தின் பின்னர், வன்னி, இராமநாதன் முகாமிலிருந்து இடம் பெயர்ந்து வந்தபோது... 'இந்த இடமாவது கிடைத்ததே...' என்ற திருப்தி செல்வியின் அம்மாவுக்கு.

பாடசாலை மணி அடித்ததும் புளியடியைக் கடந்து, ஆஸ்பத்திரியடிக்கு வந்தபொழுது: 'செல்வி வீட்ட போனாலென்ன... அவளைப் பள்ளிக்கூடத்துக்கு வரச் சொன்னாலென்ன...' என்று அவனது மனத்துக்குத் தொன்றியது. அவள்தான் அவனுக்கு எல்லாம் என்ற நிலையில் அவளது உடனிருப்பு அவனுக்கு அவசியமாக இருந்தது.

வீதியால் நடந்து, கிழக்கே திரும்பிய பொழுது அழகருடைய வீடு தெரிந்தது. வீட்டுக்குத் தெற்குப் புறமாகப் பனந்தோட்டம், பனந் தோட்டத்தை நோக்கி நடந்தான். திறந்த கிடந்த வளவில், கிழக்குப் பக்கமாக பனை ஓலையால் வேய்ந்த குடிசை இருந்தது. முன்பக்க மறைப்பாக ஒரு சீமால்! சீமாலுக்கும் பனை ஓலைதான் பயன் படுத்தப்பட்டிருந்தது.

குடிசைக்குக் கிட்டவாக வந்தவன், "செல்வி!" என்று குரல் கொடுத்தான்.

இவனது குரல் கேட்டு முப்பது வயது மதிக்கத்தக்க பெண் ஒருத்தி வெளியே வந்தாள்.

'இவதான் செல்வியின்ரை அம்மாவா...? அவவுக்குப் பின்னால ஒரு புள்ளி நாய்க்குட்டியைத் தூக்கிக் கொஞ்சிக் கொண்டு

வாறதுஆர்...? செல்வியின்ரை தங்கச்சியா...? ஆனால் செல்வி... அவளெங்க...? என்ரை குரல் கேட்ட உடன ஓடிவந்திருப்பாளே... ஏன் வரேல்ல...?'

மனக்கிலேசத்துடன் அவன் அவளது அம்மாவைப் பார்த்து, "செல்வி?" என்றான்.

குலுங்கியவள், கண்களிலிருந்து நீர் சோர:

"தம்பிக்கு...?"

"செல்வியைத் தெரியும். என்னோடதான் படிக்கிறா...!"

ஆச்சரியம் தாளாத செல்வியின் அம்மா:

"இருக்காதே... அவள்...அவளைப் புதுக்குடியிருப்பில தவறவிட்டிட்டு... நாங்க இங்க வந்திட்டம் ராசா...அவள் இங்க எப்படி...?"

"புதுக்குடியிருப்பா...?தவறிப்போனாவா...?கடந்த சில மாதகாலமா எங்கட பாடசாலைக்கு வாறாவே...நீங்க தான் பள்ளிக்கூடத்தில சேர்த்து விட்டதாக வேற சொன்னவ..."

முட்டி வந்த அழுகையை நிறுத்த முயற்சித்த போதும் அம்மாவால்அது முடியவில்லை. குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

ஆதரவாகப் பார்த்தவன், அவளைப் பார்த்துக் கேட்டான்:

"அவவின்ரை பயிற்சிக் கொப்பியள்... புத்தகங்கள் ஏதாவது உங்களிட்டை இருக்கா...?"

"கொண்டு வந்த கொஞ்சச் சாமான்களோட அவை கிடக்கு ராசா...அவதான் வள்ளிபுனத்தில இருந்து வெளிக்கிடேக்க சூட்கேசில ஏதேதோ எடுத்து அடுக்கினவ...இரண்டு சூட்கேசுச் சாமான்...ஆனா ஒண்டைத்தான் எங்களாலை கொண்டு வர முடிஞ்சது."

உள்ளே சென்றவள், சில நிமிடங்களில் வெளியே வந்தாள். வந்தவள், அவனது கரங்களில் சில புத்தகங்களையும் இரண்டொரு பயிற்சிக் கொப்பிகளையும் குறுணிக் குறுணிப் பென்சில்களையும் வைத்தாள்.

கொப்பிகளை புரட்டிப் பார்த்தான். முதல் பக்கத்தில் பென்சிலால் முத்து முத்தாக அவளது பெயர் எழுதி இருந்தது.

"இதுகளை நான் எடுத்துக் கொள்ளட்டுமா...?" செல்வியின் தாயாரிடம் அவன் கேட்டான்.

"தேவைப் பட்டால் எடுத்துக் கொள்ளன்...."

புத்தகங்களையும் பயிற்சிக் கொப்பிகளையும் - ஏன் பென்சில்களையும் கூட அவன் வாங்கிக் கொண்டு புறப்பட்ட போது, அவள் ஓடி வந்து அவனை அணைத்தபடி "செல்வியை நீ பாத்தனியா...? இனிமேலும் பாப்பியா...?பாத்தால் இஞ்சை என்னட்டை வரச் சொல்லப்பு...!"

பதில் ஏதும் தராமல் கண்களில் நீர் மல்க நின்றவன், அவளைப் பிரிய மனமில்லாதவனாய், தளர்ந்த நடையோடு, பனங் கூடலை விட்டு வெளியே வந்தான். அவனுடன் செல்வியும் வருவ தான ஓர் உள்ளுணர்வின் உறுத்தல் அவனுக்கு.

திரும்பிப் பார்த்தான்; பார்த்த பொழுது, நிஜத்தில் அவள் வந்து கொண்டிருப்பது தெரிந்தது. நெருக்கமாக வந்த போது, அந்த அபூர்வ காட்டு மலர்களின் வாசனையும் அவளுடன் கூடவே வந்தது. அதன் வசப்பட்டு அதில் திளைத்தவன் அவளையே பார்த்த படி நின்றான்.

அவனது பார்வைக்கு, அவளது உருவம் இப்பொழுதும் தெளிவில்லாமலே தெரிந்தது.

'புதுக்குடியிருப்பில் இவளது கன்னத்தில் பார்த்த காட்சி களோடு தான் இவள்... இவள் தனது சுயத்தை இழந்து, முதன் முதலாக நீரின் நிறமாக மாறினாளா?'

'நான் யாரென்பதை கால முதிர்வு தான் உனக்குக் கற்றுத் தருமென்றாளே... அந்த மந்திரச் சொல்லும் இப்பொழுது இவளது அம்மாவைக் கண்டு பேசியதும் உண்மையாகி விட்டதே...'

'இவளது அம்மா கூறியது போல, புதுக்குடியிருப்பில் தான் இவள் காணாமல் போயிருக்கிறாள். இருந்தும், எனக்கும் என்னைச் சூழ உள்ளவர்களுக்கும் இவளால் எப்படி... எப்படிச் சிதைவுகளோடு கூடிய காட்சி ரூபமாக ஆகி விட முடிகிறது...'

'இது ஏன்... ஏன் இவள் இப்படி...?' என்று குழம்பியவன், அவளைப் பார்த்து வாஞ்சையுடன் கேட்டான்:

"நாளைக்குப் பள்ளிக்கூடம் வருவியா...? இரண்டு நாள் நீ வராதது எனக்கு எவ்வளவு கஷ்டமாப் போச்சு... கண்ணாடிப் புடையன் என்னை அடிச்சே கொண்டு போடும் போல கிடக்கு..."

"வருவன்... கட்டாயம் வருவன்... வாழ் நாள் பரியந்தம் உனக்கு இனிய துணையாக இருந்து, எல்லாத்திலும் கை கொடுக்கப் போவது நான் தானே ரகு..."

கூறியவளின் உதடுகளில் தவழ்ந்த சிரிப்பில் பல சாயல்களை அவன் கண்டான். அம்மாவைப் போல... ஆச்சியைப் போல அவள் இருந்தாள். அந்தச் சாயல்கள் எல்லாவற்றையும் விட, அவனுக்குத் தாம்பூலம் தந்த தேவி சரஸ்வதியின் சாயலே சற்றுத் தூக்கலாகத் தெரிந்தது.

"செல்வீ!" என்று பரிதவிப்புடன் கூவியவன், மீளவும் அவளைக் காணாதவனாய்த் துயருற்றான்.

தூரத்தில் அம்மா வந்து கொண்டிருப்பது தெரிந்தது. 'நேரமாகிவிட்டது என்ற பதைபதைப்புடன் அவள் வருகிறாளா...?' ஓடிச் சென்றவன், அம்மாவின் கால்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு விம்மினான்.

'எனக்கு வழிகாட்ட, என்னை அரவணைத்துச் செல்ல எத்தனை... எத்தனை தெய்வங்கள்...'

அழுகை, மெல்லிய சிரிப்பாக, அவனது உதடுகளை மருவி மலர்ந்தது.

•

மல்லிகை - 2011

## ஆசிரியரது ஏனைய சிறுகதைத் தொகுதிகள்

*மாற்றம் - 1980 ஜூன்*

*உலா - 1992 ஜனவரி*
யாழ் இலக்கிய வட்டம்
அகில இலங்கை சுதந்திர இலக்கிய அமைப்பு
வடகீழ் மாகாணசபையின் சாகித்திய அமைப்பு
இலங்கை சாகித்திய மண்டலம்
ஆகியவற்றின் பரிசில்களைப் பெற்றது.

*சட்டநாதன் கதைகள் - 1996 ஜூலை*

*புதியவர்கள் - 2006 நவம்பர்*
நாவேந்தன் விருது பெற்ற நூல்

*முக்கூடல் - 2010 பெப்ரவரி*
வடக்குமாகாண சபையின் சாகித்திய அமைப்பு
இலங்கை சாகித்திய மண்டலம்
தமிழியல்
ஆகியவற்றின் பரிசில்களைப் பெற்றது.



இவரைப்போலவே இவரது புனைவுகளும் நுண்ணுணர்வும், மென்மையும் உடையவை. பெண்கள், குழந்தைகள் - அவர்களின் உலகம், காதல், காமம், சாதி எனப் பல தளங்களில் இயங்குபவை. இவரது புனைவுமொழி தெளிவும் இறுக்கமும் எளிமையும் தனக்கேயான தனித்தன்மையும் உடையதாய் இருக்கும். சிறுகதையின் அமைப்பும் அவ்வாறே. கருத்தியல் தளத்தில் இப்புனைவுகள் வாழ்வின் மீதான ஈடுபாடு, சுகிப்பு, தனது நிலம், பண்பாடு, சக மனிதர்கள் என நேரிய தன்மை வாய்ந்த யதார்த்தப் படைப்புக்களாகத் திகழ்கின்றன. வாழ்வில் செய்யும் தவறுகளும் இழப்புகளும் பிரிவுகளும் இன்பவனுபவங்களுமே இவரது கலையாக்கங்களின் ஆதார சுருதிகள். இத்தொகுதியிலுள்ள சிறுகதைகளிலும் இவற்றை நாம் அவதானிக்க முடிகிறது.

ISBN 978-955-4676-42-8